

# கறிச்சோறு

சி.எம்.முத்து

# கறிச்சோறு

சி.எம்.முத்து

**அனன்யா**

8/37, பி.ஏ.ஒய். நகர்
குழந்தை இயேசு கோவில் அருகில்
புதுக்கோட்டை சாலை
தஞ்சாவூர் - 613 005.

**கி. ராஜநாராயணன்,**
"ராஜ பவனம்"
இடைசெவல் (தபால்)
627 716

பிரியமுள்ள சி.எம்.முத்து அவர்களுக்கு,
நலம்.

"கறிச்சோறு" கையெழுத்துப் பிரதி கிடைத்தது. அத சாவகாசமாக உட்கார்ந்து படிக்க வேண்டும் என்றே கொஞ்சநாள் கழிந்தது. வழக்கப்படி, 'மேலிட்டாக்கல' ஒரு பார்வை பார்க்கிறது உண்டு! சாப்பாட்டுக்கு முன்னாலெ ஒரு கொறிப்பு ருசி பாக்கிறதுபோல,

அப்படி இப்படி நாட்கள் என்னவோ அதிகமாகி விட்டது. நீங்கள் அங்கெ தவுதாயப்பட்டுக் கொண்டிருப்பீர்கள் என்றும் தெரியும். ப்ரகாஷ் அறிவார் நான் எவ்வளவுக்கு வேகமா வாசிப்பேன் என்று! அதென்னமோ அப்படி மெதுவுலேயும் மெுவாத்தான் வாசிக்கிறது, எழுதுகிறது, எல்லாமுமெ சிறுசிலிருந்தே அப்படி ஒரு பழக்கமாகி விட்டது.

சிலர் சாப்பிடுகிறதில் உள்ள வேகம் நம்மால் பின்பற்ற முடியாதது. ரயில்எஞ்சினின் எரிகலனுக்குள் கரி அள்ளிப்

போடுகிறது போல, ரொட்டியை எடுத்து அலமாரிக்குள் வைத்து மூடுவது போல இப்படி வேகங்களெல்லாம் உண்டு!

"பாக்குக் கடிக்கிற நேரத்துக்குள்ளே...." என்று பெண்டுகள் சொல்லிச் சிரிப்பார்கள்! அவர்கள் குறிப்பிடுகிறது 'வேற' காரியத்தை!!

அவர்கள் சொல்லுகிறதுலேயும் குற்றமில்லை; இப்படி வேகமாகமான ஆம்பிளைப்பிள்ளைகள் அதுலேயும் வேகமாத் தான் இருப்பார்கள். அது எப்படியும் போகட்டும்.

**"கறிச்சோறு" வளர்ந்திருக்கிற உருவத்தைப் பார்க்கிற போது, இதுஒரு குறுநாவல் இனம் என்று சொல்லி விடுவார்கள். அது எப்படியிருந்தாலும், உங்கள் மண்ணுக்கே உரித்தான, அதிலேயும் உங்களுக்கே என்றுள்ள ஒரு சொகமான நடையில் எழுதியிருக்கிறீர்கள்.**

**வாசக பயமில்லாமல் என்று விமர்சகர்கள் சொல்லு வார்கள்; ஆனது ஆகட்டும் என்று பேனாவை சும்மா போன போக்கில் விட்டுத் திருப்பியிருக்கிறீர்கள்.**

கிராமத்துக்கென்றே ஒரு 'அறியாமை' உண்டு (அறியாமை என்கிறது பொருத்தமான வார்த்தை அல்ல; ஒரு வெகுளித் தன்மை என்று சொல்லலாம்). இந்த வெகுளியத்திற்கு ஒரு கவர்ச்சியும், அப்படியே மனசை அள்ளும் தன்மையும் உண்டு.

நாடோடிப் பாடல்களை உண்டு பண்ணியவர்களிடமும் நாடோடிக் கதைகளை உண்டு பண்ணியவர்களிடமும் இதை நாம் வெகுவாகக் காணலாம். **அந்த நோடோடித் தன்மை உங்கள் எழுத்தில் நன்றாகவே வந்திருக்கிறது. இதைத் தப்பு சரி என்று யாராலும் சொல்ல முடியாது.**

நிறைய்ய எழுத்துகள் தமிழுக்கு வெள்ளம் வந்து பாய்வதுபோல பாய்ந்து கொண்டேயிருக்க வேண்டும் பெருக்கெடுத்து ஓட வேண்டும்.

பின்னால், காலம் எதை வைத்துக் கொள்ள வேண்டுமோ அதை தனக்கு வைத்துக்கொள்ளும்; தள்ள வேண்டியவைகளை தாட்சண்யமில்லாமல் தள்ளிவிடும்.

புதுசுபுதுசாக வந்து கொண்டிருக்கும் **மேலைநாட்டு வெளிநாட்டு நாவல் இலக்கியங்கள் பற்றி நமக்கு எனக்கும் உங்களுக்கும் - தெரியாது. முன்பு வந்தவை பற்றியும் கூட நமக்கு அதிகமாகத் தெரியாது. எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஈநம் எழுதிக்கொண்டே இருக்கிறோம்.** "கொக்கு வந்த நேருக்கும் கல்லெறிந்த சீருக்கும்" என்று ஒரு சொலவம் (சொலவடை) சொல்லுவார்கள். கொக்கு விழுந்தாலும் விழுந்தது; கல்லு விழுந்தாலும் விழுந்தது. ஏதாவது ஒண்ணு விழும்!

உங்களுடைய மொழியில், உங்கள் மக்களைப்பற்றி ஆனந்தமாக எழுதுகிறீர்கள். **கதை**சொல்லும் உங்கள் கலகலப்பு எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. **உங்கள் ஊர்ப் பாத்திரங்களை வேற எந்த ஊரில்க் கொண்டுபோய் நடுவை போட்டாலும், நட்டிவைத்தாலும் வளராது. இது அந்த ஊர்ச் செடி அங்கெதான் வரும்** மனுசாட்களையும் ஒரு மொழியிலுள்ள இலக்கியத்தையும் இப்படித் தனித்தனியாகப் பிரித்துச் சொல்லுகிறது ரொம்பப் பேருக்கு லயித்தைக் கலக்குகிறது. எதைஎதையோ நினைத்து அவர்கள் ரொம்பத்தான் பயப்படுகிறார்கள்.

அவர்களுடைய பயமெல்லாம் சோள தேசம், நாஞ்சில் நாடு, கரிசல்க்காடு நெல்லைச்சீமை, கொங்குநாடு என்று தனித்தனியாகப் பிரிந்து போய்விடுமோ என்கிற பதட்டம்; அப்புராணிகளுக்கு!

'பன்றி வேட்டையில் முறிந்த நாய்க்குக் கறிப் பானையைக் கண்டாலும் பயம்தான்' என்கிறது ஒரு சொலவம். பூக்களெல்லாம் ஒரே ஸைஸில் ஒரே நிறத்தில் ஒரே மணத்தில் பூக்க வேண்டும் என்று இந்த அப்புராணிகள் ஆசைப்படுகிறார்கள் ஆயிரம் வகைப் பூக்கள் இருப்பது அவர்களுக்கு ஏனோ ரொம்பச் சங்கடமாக இருக்கிறது.

முடிந்தால் இயற்கைக்கும் அவர்கள் மூக்கணங்கயிறு பூறுவார்கள். முடியாமலத்தான் லபோலபோ என்று அடித்துக் ரொகள்கிறார்கள்.

இந்தப் பண்டிதர்கள் என்பது மொழியிலும் இலக்கியத்திலும் மட்டுமல்ல களையைப்போல, சக்களத்திச் செடி போல எல்லாத்திலயும் நீக்கமற நிறைந்து காணப்படுகிறார்கள்; கடவுளுக்குப் பக்கத்தில் சைத்தான் போல வித்தியாசமாக எதைச் செய்து பார்த்தாலும் முதல் எதிர்ப்புக்குரல் கொடுப்பவர்கள் இந்தப் பண்டிதர்கள் தான். அவர்களுக்கு நெனைப்பு அவர்கள்தான் எல்லாத்தையும் கட்டிக்காக்கிறோம் என்று.

தேக்கம் அனாரோக்யமான ஒன்று. நாற ஆரம்பித்து விடும். தேங்கி நிற்கும் குட்டத் தண்ணீரைப்போல என்பது அவர்களுக்குத் தோன்றுவதில்லை. "வைக்கப் போர் காத்த நாய்" என்று ஒரு பிரயோகம் உண்டு. தானும் அந்த வைக்கோலைத் திங்காது தின்ன வருகிற மாட்டையும் திங்கவிடாது, முதலில் அந்த வைக்கோல்ப்போர் அதுக்கோ, அதனுடைய எஜமானனுக்கோ சொந்தமானதும் இல்லை!

"எறைஞ்ச நாயக்கர் பெரிய நாயக்கர்" என்பது போல எதிர்ப்புக் காட்டி ஒருபெயர் வாங்க வேண்டும். **ஒரு நிமிஷம் சும்மா இருக்க முடியாது அவர்களால்!** கடவுளோடு பக்தனைச் சேரவிடாமல்- சாமியைக் கண்ணாறப் பார்க்க விடாமல் மத்தியில் மறைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கும் வெத்துப் பூசாரிகள் இவர்கள்.

வாகரைக் கள்ளனோடு ஆறுத்துக்கட்டிக் கள்ளன் சம்மந்தம் செய்து கொண்டால் குடிமூழ்கிப்போகும் என்று பினாத்துகிறவர் களும் இந்தப் பண்டிதர்கள்தான். அதே சமயத்தில் இந்த ஜாதியப் பண்டிதர்கள் அறுத்துக்கட்டிக் கள்ளன் வீட்டில் தலைக்கட்டுவரி பெற்றுக் கொள்ளவும் அவன் வீட்டிற்கு வந்து உட்கார்ந்து இலைபோட்டு சம்பிரமமாகச் சாப்பிடவும் மட்டும் தயார் உச்சஜாதிப் பண்டிதனுக்கு கீழ்ச்சாதிக்காரன் வீட்டிலுள்ள பால், மோர், பொன்,

பெண் இதெல்லாம் ஆகும்; அந்த வீட்டில் தண்ணீர் மட்டும் குடிக்க மாட்டான்!

மொழியில் மட்டும் தனித்தமிழனாக வாழ நினைக்கும் இவர்கள் உணவிலும், உடையிலும், வாகனாதிகளிலும், பழக்க வழக்கங்கள் அனைத்திலும் சுத்தத் தமிழனாக வாழ்ந்து காட்டத் தயாரே இல்லை.

இவர்களைப்ப ற்றி நமக்கென்ன.

நம்முடைய துருத்தியை நாம் ஊதுவோம்.

நீங்கள் எழுதுங்கள் தொடர்ந்து உங்கள் எழுத்தை வாசிக்க நாங்கள் இருக்கிறோம். எல்லோருமாக.

வாழ்த்துக்களுடன்

**கி. ராஜநாராயணன்.**

**...எங்கயோ சம்பந்தா சம்பந்த மில்லாமல் தாவித் தாவிப் பறந்த மனசை அதன் மென்னியைப் பிடித்து திருகி நிறுத்துகிற மாதிரி நிறுத்தப் பார்த்து முடியாமல் தவிக்கிறார்...**

# கறிச்சோறு

## 1

"விசுவராயரே என்னகாலங்காத்தால குளியல் நடக்குது...? எங்காச்சும் ஊருபயணம் போறீங்களா?"

நடுங்கும் குளிரில் மயிர்க்கால்கள் சிலிர்த்துப்போக 'ஹ்ஹஹ்ஹ...' வென்று லேசான கனைப்புச் சத்தத்துடன் பற்கள் தாளம்போட அவசரமாய் ஒரு காக்காய் குளிப்பு குளித்துவிட்டு தண்ணீரிலிருந்தபடியே தலை உடம்பென்று துவட்டிக்கொண்டு கரையேரப் போகிற சமயத்தில் எதிர் பாராத விதமாய் விழுந்த அக்குரலைக்கேட்டு நிதானமாய் நிமர்ந்து பார்த்தார் முத்துக்கண்ணு விசுவராயர்.

உள் டிராயரை கமுக்கட்டியில் சுருட்டிவைத்துக் கொண்டு கால் அலம்பப் போகிற அவசரத்தில் கேள்விக்கு பதிலைக்கூட எதிர்பார்க்காத வண்ணம் கரையிலிருந்து லேசாய் துறைக்கு இறங்கிக் கொண்டிருந்தார் தருமையா நாட்டார்.

"இதாரு...தருமையாவா; அதான ஆர்ராதுன்னு பாத்தன்...! குளிக்கிறதுக்கென்ன விசேஷம் நெல்லுப் பட்டுல ஒரு மாப்ளையிருக்கறதா சேதி கெடச்சிச்சி நானும் பூரணியும் போயி பாத்துட்டு வந்துரலாம்னுதான்..."

எதிராளி இவர் சொசல்கிறதை காதில் பூரணமாய் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. சூத்துப்பட்டையளவுக்கு

வேட்டியை மேலே வழித்துக் கொண்டு 'ச்சளப்... ச்சளப்' பென்று தண்ணீரை அடித்து அலம்புகிறார். அலம்பி முடித்ததும் எந்திருந்து அப்படியே சூத்துக்குமேல் வழித்துவிட்ட வேட்டியை எடுத்துவிடக் கூட இல்லாமல் அந்த இடத்திலேயே தண்ணீரை லேசாய் ஒதுக்கிவிட்டு ரெண்டுவாய் தண்ணீரை அள்ளி கொப்பளித்து துப்புகிறார்.

கரையின் மேல் முத்துக்கண்ணுவிசுவராயர் 'கஷ்டமே' என்று நிற்கிறார். எதற்கு இவருக்காக நிற்க வேண்டுமென்று ஆத்திரம் வருகிறது. எட்டரை பஸ் வருகிறதற்குள் வீட்டுக்குப் போய் துணிகளை காயப்போட்டு விட்டு சாமி கும்பிட வேண்டும். சாப்பிட வேண்டும். தானும் கிளம்பி பூரணியை வேறு பயணப் படுத்தியாக வேண்டும். அவளைக் கிளப்புகிறது லேசுப்பட்ட காரியமா?... எல்லாம் இருக்கிற ஒரு மணி நேரத்துக்குள்.

தருமையா நாட்டாரை ஒதுக்கிவிட்டுப் போகிறது அவ்வளவு நல்லதில்லை, ஊர்ல பெரியமனுஷனா இருக்காரேங்கறதுனால அல்லசாமி; ஒரு நல்லது கெட்டதுக்கு முன்னுக்கு பேசுற மனுஷன். வேத்தாளுக்கு எந்த விதத்திலேயும் உட்டுக்குடுக்காம பேசுற மனுஷன். பெரிய நாட்டாம வீரய்யா நாயக்கருக்கு அடுத்தபடியா இவரை வச்சுக்கலாம். வக்கீல் மாதிரி சட்டாம்பிள்ளைத்தனமா பேசக்கூடியவர். ஆனாலும் வில்லங்கம் புடிச்ச மனுஷன் ஒரு சிக்கல் போட்டாருன்னா லேசுல எடுத்துட முடியாது. இப்ப போறக் காரியத்தைக்கூட இந்தாளு ஒரு நிமசம் நெனச்சுப் பாத்தாருன்னா விஷயம் சுளுவா முடிஞ்சிப் போயிரும். பின்னால ஒரு சண்டையில கிண்டையில 'ஓ பொண்ணுக்கு நாந்தான மாப்ளபாத்து முடிச்சி வச்சேன்'னு நரம்புல்ல நாக்கால நக்கல்பண்ணி காட்டுவாரு-

"சர்த்தான்" என்று தண்ணீருக்குள் நின்றபடியே உள்டிராயரை மாட்டிக் கொள்கிறார். எதிர்க்கரையில் ரெண்டு பெண்டு பிள்ளைகள் இவர் கோலம் பார்த்து நக்கல் பண்ணுகிறது தெரியாமல்.

நாட்டார் ஏதாவது சொல்லக்கூடுமோ என்பதற்காக இன்னமும் பொறுமையை இழந்தபடி நின்று கொண்டிருக்கிறார்

முத்துக்கண்ணு விசுவராயர். கரையில் பத்தடி தூரத்துக்கு தள்ளி பம்பல்விட்டு நின்று கொண்டிருக்கிற ஆலமரத்திலிருந்து காக்காய் ஒன்று எச்சமிடுவதற்காக க்கா-க்காவென்று கத்திவிட்டு எச்சமிட்டு பறந்து போகிறது.

'நல்ல வேளைக்கு மரத்துப்பக்கம் நிக்காம போனமே... நின்னுருந்தா எச்சம் மேலபட பயண் நின்னுபோயிருக்கும்'

சூரியக்கதிர்கள் காத்தாயம்மன் கோயில் பக்கமாய் நின்ற ஒத்தைப்பனைமரத்தில் பட்டு பளபளத்து சிரிக்கிறது.

ஒரு விடலைப்பயல் தணிவான கோயில் மதிலில் குதந்தி 'ம்மா...'வென்று அடித்தொண்டையில் கத்திச் சொல்கிறதை 'எதிரொலி'யில் ஒலிக்கக்கேட்டு சந்தோஷப் பட்டு கும்மாளி போடுகிறான்

காலையிலேயே சின்னையாக்கோனான் பத்துப்பதினைந்து எருமை மாடுகளை குளிப்பாட்ட ஓட்டி வருகிறான்.

"என்ன தெக்கு சீமய நாடிப்போறீங்க. நம்ப வாகரையில அங்கல்லாம் போகனுமுன்னா செத்த யோசிக்கணுமே?"

"அது ஒரு தெக்கு சீமையில்ல இன்னும் தெக்கப் போனாத் தான் யோசிக்கருக்கு... இப்பல்லாம் தெக்கு சீம வடக்கு சீமன்னு ஆரு பாத்துகிட்டுத் திரியிறா... பொண்ணுக்கு மாப்ளை மாப்ளைக்கு பொண்ணுன்னு கெடச்சா போறும்னு நெனைக்கிற காலமாப் போச்சில்ல..."

"ஆமா பள்ளன் ஆரு பறையன் ஆருன்னு தெரியாத காலத்துல மேச்சீம பாத்துகிட்டிருக்க வேண்டியதில்லதான்... என்னத்தருந்தாலும் நம்ப வாகரையில செத்த யோசனை பண்ணித்தான் போவவேண்டிருக்கு"

அவர் இப்படி குத்தலாய் சொல்வதற்கு காரணம் 'அங்கே போகாதே' என்றுதான்.

“நெல்லுப்பட்டு ஒண்ணும் காசில இல்ல, ந்தால சாலியமங்கலம் அங்கன ரயிலு ரோட்டத்தாண்டுனா சடையார் கோயிலு அந்தண்ட ஒரு தப்புடில நெல்லுப்பட்டு; மைலு கணக்குல வச்சுகிட்டாலும் இஞ்சேருந்து பத்து மைல தாண்டாது இதுக்குள்ள சாதிகொளம் பாத்துகிட்டு திரிய முடியுமா?... என்னமோ படிச்ச மாப்ளையாம் சேதி வந்துச்சி பாத்துட்டு வரலாம்னு ஆசை”

“பாருங்க பாருங்க அதப்பத்தியெல்லாம் ஆரும் ஒண்ணும் சொல்லப் போறதில்ல கள்ளனுக்கு. கள்ளன் என்னாத்த சாதிகொளம் பாக்கருக்கு... குடுக்கிற எடம் வகதொகயான எடமா சொத்து சொவம் பத்தருக்கா பையன் நல்லப்பையனா அப்புடிங்கிற வகையில பாத்தாப் போதும்”.

ரோட்டில் புடுபுடுவென்று சைக்கிள் போகிறது. அதைத் துரத்திக்கொண்டு போகிற மாதிரி ஒரத்தநாடு பஸ். பின்னால் ரயில் வண்டி மாதிரி புகை விட்டுக்கொண்டு வந்து நிற்கிறார் கோபால் குச்சிராயர். இவர் வேறு பேச ஆரம்பித்தால் விடமாட்டார். ஆசாமி எட்டரை பஸ் போய் ஒன்பதரை பஸ்ஸும் போய்விடும்.

இவரும் லேசுபட்ட ஆளில்லை நாட்டாரோடு கூட சேர்ந்து குளிர்காய்கிற மனுஷன் அவர் ஒன்னென்றால் இவர் ரெண்டென்கக் கூடியவர் ஊரில் முக்கால்வாசி வம்புக்கு காரணகர்த்தாவாக இவரைச் சொல்லலாம். ஒருத்தொருக்கொருத்தர் அறுத்து விடுகிறதில் படுகில்லாடி “வெளிய போயித்து வாறீங்களா?” என்று ஒப்புக்கு கேட்டுவிட்டு நடையைக் கட்டுகிறார். குளிரால் உடம்பு சிலிர்த்துக்கொள்ள பற்கள் தாளம் போடுகிறது.

“என்ன காலையில் குளிச்சிட்டுப் போறான் விசுவராயன்?” கோபால் குச்சிராயரின் கேள்வி இது.

“பொண்ணுக்கு எங்கயோ நெல்லுப்பட்டுவ மாப்ளையிருக்கறதா சேதி வந்துச்சாம் பாத்துட்டு வரலாம்னு போவப்போறாரு”

“ஒங்களக் கூப்புல்லையா?”

“ஒரு மூர்த்த ஓலை கீர்த்த ஓலைன்னு கூப்ட்டுருப்பாரு இப்ப எதுக்குன்னுருக்கலாம்”.

“ஆமா... தெக்க எதுக்கு போவணும்?” என்று வார்த்தையை அடக்கி கேட்கிறார்.

நாட்டாரும் அவரைப்போல் ரெண்டு பங்குக்கு வார்த்தையை அடக்கி, “நா சொல்லிப்பாத்தன்யா இந்தக் காலத்துல ஆரு அதெல்லாம் பாத்துகிட்டிருக்காங்கங்குறாரு”.

“ம்...சர்த்தான் இம்புட்டுக்கு ஒலகம் கெட்ட கேடாது இப்டி ஊர்ல ஒரொருத்தனும் நெனச்சிகிட்டு போறதுனாலதான் சூத்தெது வாயெதுன்னு தெரியாம கெடக்கு”

“சரிசரி... ஓங்கிட்ட பேச்சுல மாட்டிகிட்டா லேசுல வுடமாட்ட ஆள... பாலுல்லா மடிய ஒட்டக்கறக்குற மாதிரி நெஞ்சுல ஒரு வார்த்த வச்சிக்காத படிக்கு கறந்து புடுவ கறந்து... அடுத்தவன் வெவகாரம் நமக்கெதுக்குண்ணா... வுட்டுபுட்டு சூத்தாளம்பணும்னா அலம்பிட்டு போய்சேருங்க”.

“மவமாயிக்கி அடுக்காதுடா சாமி” என்று எதையோ பறிகொடுத்தவர் மாதிரி சொலலிவிட்டு வேட்டியை வழித்துக் கொண்டு தண்ணீரில் குந்த, தருமையா நாட்டார் கரையேறிப் போகிறார்.

ஈரவேஷ்டியுடன் கோயிலுக்கு முன்பதாகப் போய் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்த முத்துக் கண்ணுவிசுவராயரின் காதில் அவர்கள் பேசிக்கொண்டிருந்த செய்தி காதில் விழாமல் இல்லை. என்ன காலத்திற்கோ தருமையா நாட்டார் பேச்சுக்கு இடம் வைக்காமல் ஒதுங்கிக்கொண்டு விட்டார். கோபால்குச்சிராயர் பேச ஆரம்பித்தால் மொலு மொலுவென்று பிடித்துக் கொள்வார் ஆசாமி அந்தக்காலத்துலே என்று ஆரம்பித்து இந்தக் காலத்துலே சந்திரமண்டலத்துக்கு ஆள் போனானே அந்த சங்கதிவரை சொல்லி விட்டுத்தான் வாய் ஓய்வார். இப்பவும் என்ன எதிராளி துருப்புச்சீட்டை கண்டுகொண்ட மாதிரிக்கு பரபரத்துப் போகிறார். அவர் வீட்டுக்காரியம் எப்படியோ ஊர்காரர்களிடம் சங்கதி பரவப்

போகிறது. மத்தியான வெய்யில் நேரத்தில் ஆல மரத்து நிழலில் குந்தி சிறு கூட்டமே நடத்திவிட்டுத்தான் வாய் ஓய்வார். அவர் இஷ்டப்படி பேசித்தீர்க்கட்டும் இதற்கெல்லாம் என்ன தான் தீர்வை அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள்... சாதியப் பத்தி பேசிப்பேசி ஒருத்தனும் உருப்பட்டதில்லை. இப்படியாக நினைத்துக் கொண்டு மேலும் சாமி கும்பிடுகிறார் முத்துக்கண்ணுவிசுவராயர். கைகளென்னவோ சாமியை தொழுது கொண்டிருந்த போதிலும் மனசென்னவோ அவர்கள் பேசிக்கொண்ட சங்கதியிலேதான்.

எங்கயோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் தாவித் தாவிப் பறந்த மனசை அதன் மென்னியைப் பிடித்து திருகி நிறுத்துகிற மாதிரி நிறுத்தப்பார்த்து முடியாமல் தவிக்கிறார். சாமியை ஷேவிக்கிறதில மனசு லயிக்கவில்லை. எங்கோ சூண்யம் அப்பிக்கொண்ட மாதிரி அதன் அருவருப்பில் துன்புற்றுப்போக அவ்விடம் விட்டு நகர்கிறார்.

எதிரே குருக்கள் படுகிறார். அக்ரஹாரத்து மணம் கப்பென்று கொள்கிறது. ஈரம் சொட்டும் முடிந்த குடுமி. பட்டைபட்டையாய் விபூதி துலங்க பூக்குடலையும் பொங்கல் வாளியுமாய்.

"வாங்க சாமி, பூஜப்பண்ண வந்தாச்சா... ஆத்தா மனசு குளிரும்படி பூஜப்பண்ணுங்கய்யா... அவ மனசு குளுந்துருந்தாதான் இன்னிக்கு நா - போரக்காரியம் கைகூடும்... அவ மனசு வச்சுட்டா ஆருவந்து தடுத்துர முடியும்?"

சற்றுமுன்பு தருமையாநாட்டார் கோபால் குச்சிராயர் இருவரின் பேச்சுக்களின் மூலம் கொஞ்சம் தளர்ந்திருந்த முத்துக்கண்ணு குருக்களிடம் மேற்கண்ட வார்த்தை பேசியதும் மீண்டும் பழையபடி இருந்த உள்ளத்தெம்புடன் இருந்தார்.

வீட்டுக்கு போனதும் பூரணியைக் கூப்பிட்டார். அவள் அப்போதுதான் கொல்லையிருந்த குழாயடியில் குளித்துக் கொண்டிருக்கிறாள். கமலா தான் வீட்டிலிருந்தாள் அவள் முகம் ஏனோ உம்மென்றிருக்கிறது. நேத்தையிலிருந்தே அவள் முகமோ மனசோ சரியில்லை என்பதை முத்துக்கண்ணு உணராமல் இல்லை. அதற்கான காரணம் என்ன என்பது பற்றி அவர் கொஞ்சம்கூட

சிந்திக்கவில்லை. பூரணிக்கும் அவளுக்கும் ஏதாவது வாக்கவாதம் ஏற்பட்டிருக்கலாம் அதன் காரணமாக அவள் கோணங்கித் தனம் பண்ணிக் கொண்டிருக்கிறாளோ என்றுதான் நினைத்துக் ரொகண்டிருக்கிறார்.

"கமலா..., ஆயி..., அம்மா இப்பத்தான் பயிப்படியில குளிக்கிதா... எட்டர பஸ்ஸ புடிச்சாவணும்னு சொன்னன்... ஒண்ணன் எங்கம்மா?"

"மொத பஸ்ஸுக்கே கும்மோணம் போயித்துப்பா, வயலுக்கு பூச்சிமருந்து வாங்கியாரணும்னு சொன்னீங்களாமே அதுக்குத்தான்"

"அவன் இப்பவரமாட்டான் ராஸ்கல், டவுனுக்கு போனப்பய ஒரு சினிமா பாத்துபுட்டு ராத்திரிக்குத்தான் வருவான். ஏதுடா அம்மாவும் அப்பாவும் மாப்ள விஷயமா நெல்லுப்பட்டு போறன்னாங்களே... வூட்ல வயசுக்குவந்த பொண்ணு தனியாருக்குமே அப்புடிங்குற நாவகம் வந்துச்சா கம்னாட்டிக்கு...த்தூ...யா, மசுறு பூச்சி மருந்த நாளக்கி வாங்கி அடிச்சிகிட்டா வேணான்னா சொன்னிச்சி. சரிசரி ஒம்மாள சட்டுனு குளிச்சிட்டு வந்து கெளம்பச் சொல்லாயி. நீ சாமி கூடத்துல நல்ல வெளக்கேத்தி வையி... நாகொல்லக்கி போயி துணிய காயப் போட்டுட்டு வரட்டுமா?

"சரிப்பா"

கொல்லைப்பக்கம் போகிறார். பூரணி இப்போது தான் குளித்து முடித்திரக்கிறாள் வேப்பமரத்தில் அணில் ஒன்று கிளைக்கு கிளை தாவித்தாவி ஓடிக்கொண்டிருக்கிறது. வைக்கல்போரை ஒட்டி கட்டியிருந்த எருமை இவரைப் பார்த்ததும் "ம்மே... என்று கத்தி குரல் எழுப்புகிறது. வேலிப்படலில் துணிகளை காயப்போட்டு விட்டு வீட்டுக்கு வருகிறார்.

பூரணியும் குளித்துவிட்டு வீட்டுக்குள் வந்து விட்டாள். சாமி கூடத்தில் விளக்கேத்தப்பட்டிருக்கிறது. கமலா எதையும் கண்டுகொள்ளாத மாதிரி புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கிறாள்.

“கமலா...ஆயி, இஞ்சவாம்மா இப்பத்தானா பொயித்தவம் படிக்கிற நேரம்... எங்கள ஊரப்பக்கம் கெளப்பிவுட்டுபுட்டு என்னா பண்ணப்போற பொளுதுக்கும் பொஸ்தகம் படிச்சிகிட்டு இரேன் ஆரு கேக்கப் போறா” என்று சொல்லிவிட்டு விளக்கு மாடத்துப் பக்கம் திரும்பி இறந்துபோன தாய்தந்தையரை நினைத்து கும்பிடுகிறார். எல்லாம் பொண்ணுக்காரியமும் போறக்காரியமும் நல்லபடியாக நடக்க வேண்டுமென்றுதான்.

“பூரணி, சட்டுப்புட்டுனு கெளம்பு பஸ்ஸு வந்துரும் சாப்ட என்னாருக்கு?”

“இட்லிருக்கு சாப்டுங்கப்பா” கமலாதான் முந்திக் கொண்டு சொல்கிறாள்.

“தட்ல நாலு இட்லி எடுத்தாந்து கூடத்துல வையிம்மா புட்டு போட்டுகிட்டு பொறப்பபுடணும்”

“ஆயி, சீசாவுல இட்லிபொடி வச்சிருந்தன் எடுத்துவச்சி ஒரு கரண்டி எண்ண ஊத்தும்மா” பூரணி.

முத்துக்கண்ணு சாப்பிட்டு முடிக்கிறார் இப்போது கூட கமலாவின் முகம் சரியில்லை. என்ன கலக்கம் என்பதும் அவருக்குப் புரியவில்லை. கல்லாம் ஊருக்குப் போய் விட்டு வந்து விசாரித்து தெரிந்து கொள்ளலாம் என்று முடிவு செய்துவிட்டு கையலம்புகிறார். வாசல் குறட்டில் கீச்கீச்கீச் செனறு ரெண்டு சிட்டுக் குருவிகள் விளையாடிக் கொண்டிருந்தது முத்தத்து வழியாய் பறந்து போகிறது.

“பூரணி, கெளம்பிட்டியா... நா ரெடியாயிட்டன்... என்ன... இந்த மஞ்சபொடவத்தான் ஒனக்கு புடிக்குமா எப்ப வெளிய கெளம்புனாலும் இதயே கட்டிக்கிறியே... அந்த காப்பிக்கொட்டப் பொடவ ஓ கலருக்கு எடுப்பாருக்கும் அத யாங்கட்டமாட்டங்குற?. சாமி கும்புடப் போறியா?”

“இப்ப என்ன கெட்டுப் போச்சி இத அவுத்துப் போட்டுட்டு அத கட்டிக்கட்டுமா?”

“அதுக்குள்ள சூரியன் நடு உச்சிக்கு வந்துரும் இது கூட நல்லாத்தான் இருக்கு கௌம்பு”

“எனக்காவ சொல்லாதீங்க... ஒங்களுக்கு புடிச்ச அந்த காப்பிக்கொட்டப் பொடவைய....”

“அடடா.... தேவலாம் கௌம்புன்னா...

சற்றைக்கெல்லாம் இருவரும் கிளம்பிப் போகிறார்கள். தெருவில் சருனம் பார்த்துதான் புறப்பாடு நடக்கிறது. ஒத்தைப் பிராமணரோ, எண்ணெய் விற்பவனோ, விதவைகளோ யாராவது எதிரில் வந்தால் கண்டிப்பாக பயணம் தட்டித்தான் போகும் இதிலெல்லாம் முத்துக் கண்ணுரொம்பக் கண்டிப்பு.

மூன்று வீடு தள்ளி திண்ணையில் குந்தியிருந்த கோபால் குச்சிராயர் இவர்கள் புறப்பட்டுப் போகிறதைப் பார்த்து ஏளனமாய் சிரித்துக் கொண்டார். இனிமேல் தானே அவருக்கு வேலை.

திண்ணைவரை வந்து இவர்கள் தெருக்கோடியில் மறையும் வரை பார்த்துவிட்டு உள்ளே போனாள் கமலா. ஏனோ நெஞ்சு பொறுக்காதபடி திக்கென்றிருக்கிறது என்ன அடக்கியும் மனசடங்க வில்லை என்ன மறந்தும் நினைவு மறக்கவில்லை.

அவள் மனசு பதைத்துக் கொண்டிருக்கிறதற்கெல்லாம் காரணம் இல்லாமல் இல்லை. கொஞ்சநாளாய் அவள் மனசை பத்தாவது வீட்டில் குடியிருக்கிற சாம்பசிவத்திடம் பறிகொடுத்து விட்ட விஷயம் அவருக்குத் தெரியுமா என்ன?

அவனையே தன் வாழ்க்கைக்கு துணையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் தீராத மோகம் கொண்டிருக்கும் அவளுக்கு அப்பா அவளுக்காக மாப்பிள்ளை பார்க்க புறப்பட்டு போகிற விஷயம் இனிக்கவா செய்யும்?

சாம்பசிவம் அவளோடு எட்டாவது வரை ஒன்றாக படித்தவன் தான். இவள் ஒன்பதாவதுக்கு அடியெடுத்து வைக்கப் போகையில்தான் வயசுக்கு வந்தாள். அதற்கப்புறம் பள்ளிக்

கூடத்துக்கு முழுக்கு. இது இவளுக்கு மட்டும் நேர்ந்த கதியில்லை. அக்கிராமத்திலுள்ள எல்லா பெண்களுக்குமே இந்த மாதிரியான தலைவிதிதான். ஒரு பெண் வயசுக்கு வந்த பிற்பாடு கலியாணமாகும் வரை வெளி உலகை பார்க்கக்கூடாதென்பது ஊர் சம்பிரதாயம். இந்த சம்பிரதாய கட்டத்துக்குள் முடங்கிப் போனவள்தான் கமலாவும்.

சாம்பசிவம் பத்தாவதுக்கு மேல் படிக்கவில்லை. வயலுக்கு ஆள் வேண்டுமென்று இழுத்துப் போட்டுக் கொண்டு விட்டார் அவனது அப்பா. ஆள் எப்பவும் கொஞ்சம் பளபளப்பாக இருப்பான். வேலை செய்கிற நேரம் தவிர மித்த நேரங்களில் வெள்ளை சள்ளைக்கு குறைவில்லை. இதன் காரணமாக அவன்மீது மோகம் கொள்ள வில்லை இவள். ஏனோ அவன்மீது தன்னையறியாமலேயே வந்துவிட்ட ஒட்டுதல் அது.

'சாம்பு... சாம்பு' வென்று நாக்கு ருசிக்க இவள் தனிமையில் அவன் பெயரை எத்தனைமுறை சொல்லி சொல்லி ரஸித்திருக்கிறாள். அவனைத் துணையெனக் கொண்டு நவநாகரீகமாக உடை உடுத்தி பட்டணத்து வீதிகளில் ஒன்றாக அலைந்து திரிவதைப் போல் கனா கண்டிருக்கிறாள். தான் அவன்மீது கொண்ட மோகத்தையும் ஆசைகளையும் வெளிப்படுத்த இந்த நான்கு சுவர் என்கிற பாதுகாப்பான இடத்திலிருந்து கையாண்ட விதம் அவனிடமிருந்து படிக்கிறதுக்கென்று இரவல் வாங்கி வரச் சொன்ன கதைப் புத்தகத்தில் வெள்ளை பேப்பர் வைத்துக்கூட இல்லை புஸ்தகத்திலேயே நான் உங்களை விரும்புகிறேன் என்று எழுதி அடுத்த வீட்டுப் பையனொருத்தன் வசம் கொடுத்தனுப்பிய தந்திரம் - அவன் இவள் எழுதியிருந்ததை படித்துவிட்டு கொல்லைப்பக்கம் நின்று இவள் முகம் தெரியாதா என்று தவித்த தவிப்பு ஏங்கிய ஏக்கம்.

இதெல்லாம் கனாதான். கதைகளிலோ சினிமாக்களிலோ வருகிற நிஜமில்லை. தான் அவனை நேசிக்கிறோம் என்கிற விஷயம் அவனுக்கோ அவன் தன்னை நேசிக்கிறான் என்கிற விஷயம் இவளுக்கோ பூரணமாக உணர்த்த கண்ஜாடைகளும் நெஞ்சப் படபடப்புகளையும் தவிர வேறதையும் சாட்சியாகச் சொல்ல இல்லை.

அவன் எங்காவது காரியமாகப் போகிறபோது கமலா அவனைப் பார்த்த விதம் தெருக்கதவு மறைவுகளில் நின்றுதான் அவன்கூட தன்னைப்பார்க்கிறானா என்கிற விஷயத்தை அவன் தன் வீடு வரும்பொழுது லேசாகத் திரும்பி தன்வீட்டை நோக்கி உள்புறம் வரை பார்வையோட்டுவதிலிருந்தான், அவனைப் பார்த்த தானதும் பொசுக்கென்ற மறைந்து அவன் கண்பார்வைகளிலிருந்து தப்பி அவனை மட்டும் மறைவாக பார்த்து ரஸிக்கையில்- இவள் அவனது கண்களுக்கு தெரியாமல் போனதினால் ஏற்பட்ட சோகத்தை அவன் முகம் காட்டிவிட்டுப் போகும்

இது ஒருமித்த காதல் அல்ல-

பாம்பின் கால் பாம்பறியுமாம் - இது ஒரு ஜாதிப் பாம்பு அது ஒரு ஜாதிப்பாம்பு - ஆனாலும் என்ன, அந்த ஜாதிப்பாம்பின் கால்கள் எப்படியென்று இந்த ஜாதிப்பாம்புக்கு தெரியத்தான் தெரிந்தது. இது இவள் பெண் ஜாதிப்பாம்பு என்கிறதினாலா?

ஆண்களே நீங்கள் கோழைதான் இந்த விஷயத்தில் - தனி வழிப் போகிறவளை கபாலன்று பாய்ந்து அவள் மென்னியைப் பிடித்து கொலை பண்ணத் தெரியும் - அல்லது அவள் சட்டையைக் கிழித்து சித்ரவதை பண்ணமுடியும் அவளைக் கதறக்கதறக் கற்பழிக்க முடியும். பத்துப் பெண்கள் கூடினாலும் ஒரு ஆண் சமாளிக்க முடியும் இதெல்லாம் சரிதான்யா இந்த வீரம் யாருக்கு வேணும் நாய்க்கும் கூட வீரமுண்டு.

பெண் நம் மனசை எப்படி கவர்கிறாள்?... அடடா அந்த விந்தையே தனீ உலகமடா என் புத்திமானே-

மாலைநேரத் தென்றல் இதமாய் வீசுகிற மாதிரி சட்டையில்லாமல் ஈரமாயுள்ள மணலில் படுத்திருக்கிற சுகம்போல் மொட்டை மாடியிலோ வயல்காட்டிலோ ஒத்தையாய் குந்தி மோனத்தை ரஸிக்கையிலே எங்கோ தனீயாய் கக்ஹு வென்று ஒத்தைக் குரலெடுத்து பாடுமே குயில், அந்த சங்கீத மொழியைக் கேட்டிருக்கிறாயா என் கண்மணியே-அந்த ரிதம்போல் எப்போதோ ஒருமுறை யாரோ தேர்ந்த கலைஞன் ஒருவன் வாசிக்கும் புல்லாங்குழலை உன்னை மறந்து ரஸித்தாயல்லவா அந்த

இன்பம் போல் காலையிளம் தழுவித் தளும்பி நுங்கு நுரையிட்டு ஊர்ர்ர்ர்ந்து செல்லும் காவிரியின் பேரெழிலைப்போல் உன் நெஞ்சுக்குள் என்றென்றும் ஜாலக்குப்பண்ணி லீலைகள் பல புரிந்து ஜன்னலுக்குப் போட்டிருக்கிற திரைசீலை மெல்ல மெல்ல காற்றிலாடுகிற சந்தோஷம் மாதிரி உன்னுள் பாய்ந்து பரவி தண்ணீர் கண்ட பயிர்களின் கதிமாதிரி சந்தோருஷப் படுத்துகிறதே அதுதான் பெண்!!!

நீ இப்படி அவள் மனஸுக்குள் புகேன். பேசுகிறாயே ஆணுக்கு பெண்ணடிமையென்று. பலம்காட்டி அவளை மடக்கு படுத்துகிறதிருக்கட்டும் வரும் காலமெல்லாம் உன் பொற்காலம் தான் மென்மையாய் அவளுல் ஊடுருவி அவளை அடிமைப்படுத்து!

இப்படி சாம்பவிசம் இவளை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறான். சைடுசீவி சட்டைபோட்டு பவுடர் அடித்து முகஅழகுகாட்டி நீ வீதியில் போகையிலே உன்னை ஏக்கத்தோடு பார்க்கும் கண்களுக்கு துரோகம் பண்ண வேண்டாம் எரிக்கும் கண்களை அவித்துப்போட்டு தெரியாத கண்ணோடு சற்றே குனிந்து போ மெல்லப்பாயும் உன்மீது ரோஜாப்பூக்கள்!

இப்போது கமலாவின் நெஞ்சிலிருக்கிற பாரம் சாம்பசிவத்தைப் பற்றிய நினைவுகள்தான். சாம்பசிவம் இவள் நெஞ்சக்கூட்டுக்குள் அடைப்பட்டுப்போன நிஜம் அவர்களுக்குத் தெரியுமா என்ன?

தெரியும் பட்சத்தில் அப்பா அப்பாவாகவாயிருப்பார்? நினைக்கும்போதே இவளுக்கு நெஞ்சுவெடித்துவிடும் போலிருக்கிறது. இந்தக்காலை நேரத்திலும்கூட வியர்த்து கொட்டுகிறது. ‘எப்படி’ விஷயத்தை சாம்பசிவத்துக்கு தெரியப்படுத்துவேன் என்று மனசு பதறுகிறது. எல்லா விதமான கட்டுமானங்களையும் உடைத்தெரிந்துவிட்டு அவனை சந்திக்க வேண்டுமே, எல்லை மீறுவதற்குள்ளாக இதற்கொரு வழி செய்ய வேண்டுமே என்று மனசு துடிக்கிறது.

அதோ அதற்காகத்தான் இப்போது இவள் யோசித்துக் கொண்டிருக்கிறாள்.

**...நீங்க வந்தாரு குடி. ஒங்க ஊரு வடுவக்குடி அறுத்துக்கட்ற வூரு. எங்க ஊருக்கு பொளெக்க வந்த நீங்க எங்க மண்ணுலயே காலூனிப் போயித்தீங்க... ஒங்க வூரு காத்து கூட எங்கூருக்கு ஒதவாதுன்னு சொல்லிக்கி வாங்க...**

# 2

"சூரியன் நடு உச்சிக்கு வந்து ரொம்ப நேரமாய் விடவில்லை. ஸ்ஸ்ஸ்... அப்பா" வென்று சொல்ல வைக்கிற வெய்யல்.

வயல்காட்டில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்கள் வீட்டுக்கு போய்விட்ட நேரம். கொஞ்ச தூரத்தில் தெரிந்த கப்பிரஸ்தாவில் கூட சுத்தமாக மனுஷ நடமாட்டமில்லை. குடமுருட்டி வாய்க்காளினுள் குளித்துக் கொண்டிருந்த கமலா சாம்பசிவம் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்து சிலிர்த்துப் போனாள். ஒருவித நாணம் இழையோடி அவள் மேனியெங்கும் ஊறலாயிற்று.

அம்மடியோ-

வெய்யல் நேரத்தில் இளம் சூடாய் தகித்துக் கொண்டிருந்த தண்ணீர்கூட பொசுக்கென்று சில்லிட்ட மாதிரி ஒரு சிலிர்ப்பு. மயக்கத்தோடு அவனைப் பார்த்தாள். தன்னைக் காணவரும் ஆவலில் அவன் முகமெங்கும் மகிழ்ச்சியின் ரேகைகள் ஒடி புதிய தேஜஸையே உண்டாக்கி வைத்திருந்தன. கொஞ்சம் மங்கலான நிறத்தில் வேஷ்டியும் பழுப்பாய் ஒரு பனியனும் அணிந்திருந்தான். தலைமயிர் காற்றில் பறந்து கலைந்து காணப்பட்டது. முழுங்க சவரம் செய்யப்படாத முகமாயினும் பொலிவாகயிருந்தது. மாநிறமாக இருந்தாலும் உடற்கட்டுகள் அவன் வயசுக்கேத்த

கச்சிதமாய் பொருந்தியிருந்தன. கமலா பொங்கி வரும் நாணத்தை அடக்கமாட்டாமல் தண்ணீருக்குள் அமிழ்ந்து போனாள். உடம்பெங்கும் மிருதுவான சுகம் இழையோடி புதுத் தண்ணீரை எதிர்த்து கெண்டை மீனைப் போல் நீந்தித்துள்ளினாள் வாய்க்குள் நீரைவிட்டு பீய்ச்சித் துப்பினாள்.

அவன் அருகேவந்து அவள் நீந்திக் களிக்கும் அழகை சில கணங்கள் ரஸித்துவிட்டு சுற்றும் முற்றும் பார்வையோட்டினான். ஒருவரும் இல்லையென்பதை தீர்க்கமாய் முடிவு செய்துகொண்டு மெல்ல, "கமலா" என்று கூப்பிட்டான்.

அவள் சட்டென்று தன் நீந்தலை விட்டுவிட்டு கரைக்கு மேல் தனது தலை ஒருவருக்கும் தெரியாதபடிக்கு ரொம்பச் சமத்தாக "ம்" என்றாள்.

"இஞ்ச வாயேன்"

"எதுக்காம்?"

"சும்மாததான்"

"ம்ஹூம்"

"அட சும்மான்னா!"

"ம்ஹூம்"

"யா?"

"ஆராச்சும் பாத்துட்டா?"

"பாத்தா என்ன?"

"நல்லாச் சொன்னீங்களே எங்க அப்பாவுக்கு தெரிஞ்சா தலயச் சீவிபுடுவாரு சீவி"

"அப்படி பயந்த பொண்ணு எதுக்காவ என்னத்தேடி இஞ்ச வரணும்?"

"தப்புத்தான்"

"தப்புகூடத் தெரியுமா?"

"பின்ன என்னாங்க... எங்க அப்பாவும் அம்மாவும் எனக்கு மாப்ள பேச நெல்லுப்பட்டுக்கு போயிருக்காங்களே காரியம் முடியறது காட்டி நம்பளுக்குள்ள ஒரு நல்ல முடிவெடுத்துடணு மேன்னு வெக்கத்தை உட்டுபுட்டு இஞ்ச வந்தா..."

"சர்த்தான் ஓ மனசப் புரிஞ்சிக்ககூட எனக்கு சக்தியில்லப் பாத்தியா...? என்னமோ நீ கொல்லப்பக்கம் நின்னு குளிக்கப்போற தோரணையில என்னப்பாத்து கை காட்டலன்னா எனக்கெப்படி நீ இஞ்ச வாய்க்காகரைக்கு வருவன்னு தெரியும்"

"நா இஞ்ச வந்ததை ஆரும்பாத்தா அசிங்கமா நெனச்சி புடுவாங்களேங்குற பயத்தையுமுல்ல வுட்டுபுட்டு வந்துருக்கேன். நம்ப விசயம ஊருக்கு தெரிஞ்சிருந்தா வந்துருப்பனா?"

"ஆமா கமலா, இந்தூருக்கும் நெல்லுப்பட்டுக்கும் கொள்வன கொடுப்பன இல்லன்னு பேசி கேட்டிருக்கனே...?"

"ஆமா இது வாகர கள்ளனுங்க உள்ள சீம. தெக்க போவணுமுன்னா கொஞ்சம் யோசிச்சுதான் போவாங்க"

"அப்படின்னா ஒங்க அப்பா போறது?"

"இப்ப பொண்ணுக்கு மாப்ள கெடச்சா போறும்னு நெனக்கிற காலத்துல இதப்பத்தி அவரு பெருசா யோசிச்சிருக்கதாத் தெரியல ஊரு கட்டுமானத்த ஒடச்செறிஞ்ச மாறித்தான் கௌம்பிப் போயிருக்காரு"

"சாதியே இல்லன்னு கொடிபுடிக்கிற காலத்துல இன்னும் சாதிக்குள்ளயே சாதிபாக்கறது எத்தன அநாகரியமா இருக்குதுன்னு பாத்தியா?"

"இதப்பெருசா எடுத்துக்குறீங்களே... ஒங்ககுடிய பத்தி ஊர்ல அசிங்க அசிங்கமா பேசி கேட்டிருக்கனே",

"யா?"

"நீங்க வந்தாரு குடி. ஒங்க ஊரு வடுவக்குடி அறுத்துக்கடற வூரு. எங்க ஊருக்கு பொளைக்க வந்த நீங்க எங்க மண்ணுலயே காலூனிப் போயித்தீங்க.. ஒங்க வூரு காத்துகூட எங்கூருக்கு ஒதவாதுன்னு சொல்லிக்கி வாங்க"

"அப்புடின்னா நாங்க மட்டமா?"

"பின்ன இல்லியா?.. எங்க வாகரையிலல்லாம் அறுத்துக் கட்டிக்கிற பளக்கமுல்ல"

அவன் பெருமூச்சு விட்டான். தன் நெஞ்சக்கூட்டில் அடைகாத்து வைத்திருந்த முட்டை பொறிக்கு முன்னே 'கூமுட்டை' யான கதையாய் இது என்ன கூத்து?

"அப்ப நா ஒன்ன கலியாணம் பண்ணிக்கறதப் பத்தி நெனச்சிக்கூட பாக்க முடியாது போலருக்கே-"

"ம்... அதுக்குள்ள அப்டி முடிவு பண்ணிராதிங்க மச்சா நா நெனச்சிட்டா ஒங்களால என்னதான் முடியாது!"

"கமலா, ஒன்னோட இந்தமாறி துணிச்சலால தான் நா ஒமேல பெரிய நம்பிக்கையே வச்சிருக்கேன். கள்ளச்சாதியில பெருசான பொண்ணு இப்படி வாய்க்கா கரப்பக்கம் தனியா குளிக்க வந்து பாத்துருக்கமா?"

"இத ஒன்ன வச்சே நா ஒங்கமேல எம்புட்டு ஆச வச்சிருக்கேன்னு புரிஞ்சிக்க மாட்டீங்களா?"

இப்போது அவன் மௌனமாகவிருந்தான். அதன் சிறு இடைவெளியில் சுற்றுப்புறத்தில் யாராவது வருகிறார்களாவென்று பார்க்க வேறு தொடங்கினர்.

“கமலா, ஒங்க வூட்டுக்கு நம்ப காதல் சமாச்சாரத்தப்பத்தி ஏதாச்சும் அரசபுரசலா காதுல கீதுல வுளுந்துருக்குமா?”

“இன்னும் வுளுந்துருக்கறதா தெரியல”

“இப்ப அவசரப்பட்டு நீ ஆர்கிட்டேயும் வாவுட்ற வாணாம் தானா தெரியறப்ப தெரியட்டும்”

“தல மிஞ்சிப்போற சமயத்துல நானே சொல்லத்தான வேணும்?”

“ஆமா அப்ப எப்புடி வாயபொத்திகிட்டு சும்மாருக்க முடியும். ஏங்கமலா, அப்புடி ஒரு சூள்நெல வந்தா அருவா தடிக்கம்பு எல்லாத்தையும் எதுக்கறதுக்கு துணிச்சவேணுமே?”

“நம்ப ரெண்டு பேரோட மணத்தெம்புக்கும் முன்னாடி அதெல்லாம் தூள்தூளாப் போயிரும் பயப்படாதீங்க மச்சா”

“ஆமா இப்ப எதுக்கு என்ன இந்தப் பக்கம் வரும்படி கைகாமிச்ச?”

“அப்பா எனக்காவ மாப்ள தேடி பொறப்புட்டு போயிருக் குற சங்கதிய சொல்லத்தான் அவங்க முடிவெடுக்கறதுக்குள்ள நாம ரெண்டுபேரும் ஒரு முடிவு எடுத்துக்கணுமுல்ல?”

“ஆமா”

“மச்சா”

“ம்...

“எப்புடி பொயலடிச்சாலும் காத்தடிச்சாலும் என்னக் கட்டிக்கறதுக்காவ எயித்து நிப்பீங்களா?”

“நீ நிப்பியா?”

“தப்பிச்சுக்கப் பாக்காதீங்க... நா நிப்பேன்ங்குற சங்கதிய சொல்லத்தான் இஞ்ச வந்தன்”.

“ஒரு பொம்பல குட்டிக்கு இப்புடி வீறாப்புருக்கப்ப ஆம்பளப்பயலுக்கு அதுல பாதிகூட இல்லாமயாப் போயிரும்?”

“இந்த துணிச்சல மட்டும் என்னைக்கும் வுட்டுராதீங்க மச்சா”

“கமலா”

“ம்”

“இஞ்ச வாயேன்”

“யா?”

“ஒண்ணுமுல்ல”

“பின்ன?”

“முத்தம்”

“ச்சீ.. ஆசயப்பாரு இப்ப நா மாட்டன்”

“ச்ச.... அதுக்கில்ல ஒரு சேதி வா”

“மாட்டேன்”

“முத்தம்ன்னதும் பயந்துட்டியா சும்மாச்சொன்னன் கிட்டக்க வாயேன்”

“ம்ஹூம் அந்தச்சேதிய அங்கருந்தே சொல்லுங்க நா ஒண்ணும் செவுடு கிவுடு இல்ல”

“கிட்ட வான்னா”

"ஆராச்சும் பாத்துட்டா ஊரு நாறிப்போயிரும்"

"ஒருத்தரு முல்ல கிட்ட வா"

"இருங்க வர்றன்"

கமலா ஒரு வரட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பொசுக்கென்று வாய்க்காலினுள்ளிருந்து எழுந்தாள், மார்புக்கும் மேல் கட்டிய புடவையிலிருந்து நீர் கொட்டிக் கொண்டிருந்தது. புடவையினுள்ளிருந்த அவள் சிவப்புமேனி மதர்த்து செழித்திருந்தது. அவிழ்த்து விட்டால் தொடையில் விழுகின்றார் போன்ற கூந்தலை அள்ளிச் செருகியிருந்தாள். புல்லின் நுனியில் மினுக்கும் பனி நீரை போல் கூந்தலின் நுனியில் தண்ணீர் சிறுசிறு முட்டைகளாய் தேங்கியிருந்தது. செம்மண் கலரில் குடமுருட்டி வாய்க்காலின் இரு கரையையும் தழுவிக்கொண்டு புதுத்தண்ணீர் நுங்கும் நுரையுமாய் ஓடிக்கொண்டிருந்தது. இருகரையினையும் ஒட்டியிருந்த நாத்தாங்கால்களில் நாத்து பச்சைப்பாயை விரித்தமாதிரி பரவிக்கிடந்தது. நெட்டைப் பக்கம் 'வெங்காரி' பாய்ந்து கொண்டிருந்த வயல்களில் காகமும் பருந்தும் நாய்களும், நார்த்தங்குருவி தவிட்டுக் குருவி போன்றவைகளும் பூராண்களையும் பூச்சிகளையும் போட்டிபோட்டு தின்றுகொண்டிருந்தன. சேரிக்குழந்தைகள் மூங்கில தட்டுக்கூடையை கட்கத்தில் வைத்துக் கொண்டு சேர்படிந்து அழுக்காயிருந்த பாவாடையோடு மேலே சட்டையில்லாமல் சேத்தை கை கால் உடம்பு எங்குமாய் இளப்பிக்கொண்டு பழுப்பாய் ரொம்பக் காய்ந்து போய் பிசுக்குப் பிடித்திருந்த தலைமயித்தை விரித்துபோட்ட படிக்கு 'வாமடை' யிலிருந்த பொந்துகளில் சர்வ அலட்சியமாக கை நுழைத்து நண்டு பிடித்துக் கொண்டிருந்தனர். தூரத்தில் சில சேரிப்பெண்டுகள் ரொம்ப அழுக்காய் வெங்காரி பாயாத வயல்களில் சாணி பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். தினவெடுத்து திரிந்த ஒன்றிரெண்டு பொலி காளைகள் மேய்ச்சலை மறந்துவிட்டு வரப்பில் முட்டி மோதி கொம்பு நிறைய மண்ணை அப்பிக்கொண்டு திரிகிறதைப் பார்க்கையில் அதன் முகங்களில் ஏதோ ஒன்றுக்காய் அலைகிறவெறி தெரிந்தது. பசுக்கள் வாலை சுழற்றிக்கொண்டு சாதுவாக மேய்ந்து கொண்டிருந்தன.

கமலா தூரத்தில் நண்டு பிடித்துக் கொண்டிருந்த குழந்தைகளையும் சாணி பொறுக்கி கொண்டிருந்த சேரிப் பெண்டுகளையும் ஒரு பொருட்டாய் எடுத்துக் கொள்ளாமல் கரையில் துணி துவைப்பதற்கும் மஞ்சள் உரசுவதற்குமாய் பயன்படுத்திய கருங்கள் பாறையில் காலை வைத்து ஏறி தன்வீட்டு கொல்லைப் புறத்தை நோட்டமிட்டாள் யாருமில்லை என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்டு கரையில் ஏறும்போதுதான் கப்பிரஸ்தாவில் ராமநாதபுரத்து கீதாரிகள் கிடையாட்டத் திரட்டிக் கொண்டு ட்றியோ ...ட்றியோ... ஹே ஹேய்யாய்... ஹே... ய்யாய் ந்தரி..ஹேய் யாய்...லே முருவேசா... ந்தடே, ஆங்ட்டு ஈங்ட்டு பெராக்கு பாக்காம அந்த பள்ளையாட்ட ஒதுக்குடாலே. என்று சத்தம் போட்டுக்கொண்டு தடிக்கம்பை ரோட்டில் தட்டிய படிக்கு வடக்கிலிருந்து தெற்காய் போய்க்கொண்டிருந்தார்கள். ஆட்டு மந்தைகளைத் தொடர்ந்து ரெண்டு கட்டை வண்டிகள் சட்டிப் பாணை; ஓலைக் கூடை; ஓலைப் பாய் சுருட்டு; பித்தளை; அலுமினிய குண்டான்கள், உருளிகள், ஆட்டுக் குட்டிகளை அடைக்கும் ‘குட்டி கொடாப்பு’ இவைகளை வாரிச்சுமந்து கொண்டு ‘கடக்கடக்’ கென்று மெல்ல ஊர்ந்து போய்க் கொண்டிருந்தது. கட்டை வண்டிகளைத் தொடர்ந்து கட்டையான ஆனால் திடகாத்திர உடம்பாகவும் வாளிப்பாகவும் கறுப்பாகவுமிருந்த பெண்கள் தலை மயித்தை அள்ளிச் சொருகியபடிக்கு கொசுவத்தை பின் பக்கம் வைத்துக் கட்டி காதில் தண்டட்டி ஆட கனத்த ஜோடுகளோடு நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

கமலா அவர்கள் யாரும் தன்னைக் கவனித்து விடுவார்களோ என்ற பயத்தில் மறுபடியும் வாய்க்காலினுள் அமிழ்ந்து அவர்கள் தூரப்போனதும் எழுந்து சாம்ப சிவத்தை நோக்கிச் சென்றாள். சாம்பசிவம் வாய்க்கால் கரை மீதிருந்த கருவேல மாத்து நிழலில் குத்துக்காலிட்டு குந்தியிருந்தான். மெல்ல அவனருகே சென்றவள் மரததை ஒட்டி தயங்கியபடி நின்றாள்.

“ஏ நின்னுகிட்டிருக்க. இப்டி கீலத்தான் குந்தேன்”.

“ம்ஹூம்... ஈரத்தோட எப்டி குந்துறது?”

“நம்பளுக்கும் தெரியாம ஆர்வூட்டு கொல்ல பக்கமிருந்தும் ஆராச்சும் பாத்தா தெரியும்ல்ல?”

அவள் இதற்கொன்றும் கூறவில்லை. மௌனம் பிடித்தாள். சாம்பசிவம் பஸ் சப்தம் கேட்டு ரோட்டைப் பார்த்தான் ‘சரவணா ட்ரான்ஸ்போர்ட்’ கடகடவென்று ஓடி ஸ்டாப்பிங்கில் ரெண்டு கிழவிகளை உதிர்த்துவிட்டு சென்றது.

“கார்ல ஒங்க அப்பாதான் எறங்குராரான்னு பாத்தன்”

“ம்ஹூம் அதுவர நாளியாவும்”

“கமலா...

“ம்...

“ஓ மனசப்பத்தி என்னால ஒண்ணும் சட்டுனு புரிஞ்சிக்க முடியல”

“இதுக்குமேல என்னாத்த புரிஞ்சிக்கணும்ங்கறீங்க?”

“நீ எதுலயும் ஒரு புடியாருந்திட்டியன்னா நா ஒன்ன தவிக்க வுட்றமாட்டன்”

இப்போது கமலா சற்று எரிச்சலோடும் கோபத்தோடும் சாம்பசிவத்தைப் பார்த்தாள். தன்னைப்பற்றி இன்னும் அவன் சரியாக புரிந்து கொள்ளவில்லையே என்ற கோபம் நெஞ்சுக்குள் புரண்டது. அது நெஞ்சுக்குள்ளேயே அமிழ்ந்து போகக்கூட இல்லாமல் வார்த்தைகளில் வெளிப்பட்டது.

“நா புடியாருந்தவாசிதான் அப்பாவும் அம்மாவும் ஊருக்கு போன சமயம் பாத்து இஞ்ச வந்தன்... லாட்டி வயசுக்கு வந்த பொண்ணு இப்டி தனியா வாய்க்காலுக்கு குளிக்க வந்து அன்னிய ஆம்பளகிட்ட சரசமா பேசிகிட்டு நிப்பான? எதுக்காவ இஞ்ச குளிக்க வந்த மச்சா வூட்ல குளிக்க கொள்ள பைப்பு இல்லாமலாருக்கு?... என்னமோ நீங்க ஒங்கவூட்டு கொல்லப் பக்

நின்னு எனக்காவ கைகாமிச்சதப்பாத்து பொறுக்க முடியாம நானும் இஞ்ச வரும்படி கண்ண காமிச்சன்... இத முன்னாடியே புரிஞ்சிருந்தா எங்கிட்ட யா இந்தக் கேள்வியக் கேக்குறீங்க"

"சரி, இப்ப என்னா குடி முளுவிப் போச்சுன்னு ஏங்கிட்ட கோவிச்சிக்கற... ஓ கலியாண விசியமா ஓங்கப்பா என்னா முடிவெடுக்குறாருங்கறதப்பத்தி தெளிவா தெரிஞ்சுகிட்டு பின்னால நம்பளுக்குள்ள முடிவுக்கு வருவோம் சர்த்தான்?"

"அப்றமா இப்டி தனியா சந்திக்கிறாப்ல ஒரு சந்தர்ப்பம் எனக்கு எப்டி கெடைக்கப் போவுதுன்னு தெரியல"

"நீ மனசு வச்சுட்டா அப்டி சந்தர்ப்பம் தானாவே வந்துரும் ஆனா நீ மனசு வய்க்கணுமே"

இதற்காக அவள் கொஞ்சம் யோசிக்கிற மாதிரி இருந்தாள். அவன் சொல்கிறது நியாயம் என்றே அவளுக்குப் பட்டது. இந்த மாதிரி தனியான சந்திப்புக்களுக்கெல்லாம் அவளது சம்மதமும் ஒத்தகமும் இல்லாமல் எப்படி முடியும்?

"கமலா, நம்ப சங்கதியப்பத்தி ஒங்க வூட்ல ஆருக்காச்சும் தெரிஞ்சிருக்குமா?"

"அம்மாவுக்குத்தான் லேசா தெரிஞ்சிருக்கும்னு தோனுது ஆரு அதோட காதுல போட்டாங்கன்னு தெரியலை ஏங்கிட்ட அம்மா ஒண்ணும் இதப்பத்தி கேட்டுக்கலை. ஆனா அம்மா ஏங்கிட்ட ஒரு தினுசா நடந்துகிட்டு வர்றதப்பாத்தா இதுக்காவத்தான் இருக்கும்னு நா நெனைக்கிறேன்"

"ஒண்ணனுக்கு நம்ப சங்கதி எட்டிருக்குமா?"

"ம்ஹூம் அதுக்கொண்ணும் தெரிஞ்சிருக்காதுன்னு நெனைக்கிறேன். அப்புடியே அதுக்கு தெரிஞ்சிருந்தாலும் நமக் கொண்ணும் ஆபத்தில்லே. எங்கண்ணன் ரொம்ப போக்கிரியா ஊருக்கு தெரிஞ்சாலும் எங்க வூட்ட பொறுத்தவரைக்கும் அது ரொம்ப சாதுதான் ஏ விஷயத்துல அது ஏ மனசறிஞ்சு நடந்துக்கும்ங்

கறதுல சந்தேகமுல்ல... இந்த பாருங்க, நா ஒங்கள விரும்புற சங்கதிய அது காதுல போட்டா போதும் ஒங்கள குண்டுகட்டா தூக்கிட்டு வந்து எங்களுத்துல தாலிகட்ட வச்சுறும் அப்டிபட்ட மனசு அதோடது"

"அப்ப நீயே துணிஞ்சி ஒண்ணங்கிட்ட சங்கதிய சொல்லி புடேன்"

"ஏஞ்சாமி நா மாட்டன் தலயிருக்கும்போது வாலாடுமா?"

"தப்புதான் தல ஆடாதப்ப வால் ஆடித்தான தீரணும்?"

"வால ஆடவக்கிறது ஒண்ணும் பெருசுல்ல... நாளக்கி எல்லா காரியத்தையும் செய்யப்போறது எங்க அண்ண இல்ல அப்பா!"

"அப்ப ஒங்க அப்பாகிட்டயே துணிஞ்சி சொல்லி புடேன்"

"மச்சா, அம்புட்டு லேசா நீங்க நெனைக்கிறமாறி இந்த சங்கதிய அப்பாகிட்டயோ அண்ணங்கிட்டயோ சொல்ற அளவுக்கு எனக்கொண்ணும் துணுச்ச வல்லே, அப்டி துணிச்ச வந்து சொன்னாலும் எங்க அப்பா இதுக்கு ஒத்து வரமாட்டாரு"

"யா?...

"ஒங்ககிட்ட என்னாத்த படிப்புருக்குன்னு நெனைக்கலாம்... சொத்து சொவம் ரொம்பல்லையேன்னு யோசிக்கலாம் எல்லாத்தையும் விட நீங்க பொறந்த ஊரப்பத்தி நெனச்சி ஒங்களுக்கு என்ன குடுக்குறதுக்கு மறுக்கலாம்"

அவள் சொன்னதைக் கேட்டதும் அவனுக்கு நெஞ்சில் சுருக்கென்ற மாதிரியிருந்தது. மற்றவர்கள் நினைக்கிற அளவுக்கு தான் எத்தனை பின்னாலிருக்கிறோம் என்பதை நினைத்து வெட்கப் பட்டான்.

“கமலா, இதெல்லாம் ஏங்கிட்ட கொறச்சன்னு தெரிஞ்சிருந்தும் நீ எப்டி ஏ மேல ஆசப்பட்ட?”

கமலா இதற்கு ஏதோ சொல்ல வாயெடுத்தவள் அதைதொண்டைக்குழியிலேயே அடக்கிக் கொண்டாள். உண்மையில் கமலா அவனது அழகிற்கும் நல்ல குணத்திற்கும் தான் அவனைத் தேர்ந்தெடுத்தாளேத் தவிர அவளது படிப்பைப் பற்றியோ பொருள் ரீதியாவோ அல்லது குல ரீதியாகவோ கூட அவள் ஒன்றும் பெரிதாய்க் கருதவில்லை.

“சொல்லு கமலா... எதுக்காவ ஏ மேல ஆசப் பட்ட?” அவன் துருவினான்.

“படிப்பு, அந்தஸ்து சொத்துருந்தாதான் ஒருத்தர் வாள முடியும்னு நா நெனைக்கல ஒங்ககிட்டருக்குற தங்கமான கொணமே எனக்கு பெரிய சொத்துன்னு நா நெனச்சேன். எனக்கு புடிச்ச அளகு ஒங்ககிட்டருக்கறதால நீங்க தான் எனக்கு தோதானவர்னு நெனச்சி ஒங்கமேல ஆசப்பட்டன்”

“அளகும் கொணமும்ருந்தா என்னால ஒன்னவாள வச்சிர முடியுமா?”

“முடியும்னு நா நம்புகிறேன்”

“கமலா”

“ம்”

“ஒன்னோட இந்த புடிவாதக் கொணமும் ஒ அளகும்தான் எனக்கு புடிச்சது”.

அவள் சிரித்தாள். முத்தாய் பற்கள் மின்னல் காட்டின. அவன் கிறங்கிப் போனான்.

“கமலா”

“ம்”

"ஒங்கப்பா ஊர்லேருந்து வந்ததும் தகவல் சொன்னாத் தேவலை"

"யா?"

"அதுக்கப்றமா நம்பளுக்குள்ளாற ஒரு முடிவெடுக் கணும்ல்ல"

"அப்றமா இப்டி தனியா சந்திக்கிறாப்ல ஒரு தோது கெடைக்கப் போவுதுன்னு நா நம்பல. ஒங்களுக்கு சேதி சொல்லி அனுப்பணும்னா கூட தவுந்த மனுஷரு முல்லியே"

"ஒண்ணு செய்றியா?"

"சொல்லுங்க"

"ராத்திரியோட ராத்திரியா ஒங்கவூட்டு கொல்ல பக்கமா வந்து நிக்க முடியுமா?"

"ஒண்டியாவா?"

"ஆமா"

"காத்து கறுப்பு?"

"தலையில பூ வச்சிக்காம வா ஒண்ணும் அண்டாது"

"சரி மச்சா"

"அப்ப நா போவட்டா?"

"சட்டுனு போங்க ஆராச்சும் பாத்துட்டா வம்பா போயிரும்..."

சாம்பசிவம் மரத்தடியிலிருந்து எழுந்து வந்து அவள் கன்னத்தில் ஆசை பொங்க தழுவி முத்தமிட்டு விட்டு வாய்க்கால் கரையில் நடந்து போனான். அவன் தூரப் போய்விடடான் என்பதை முடிவு செய்த பின்னால் அவள் புடவைகளை அலசிப் பிழிந்துகொண்டு வீட்டுப் பக்கம் போனபோது மூங்கில் தோப்பு மறைவிலிருந்து ஒரு ஜோடி கண்கள் அவளையும் அவனையும் வெகுநேரம் வரை மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்ததை அவளோ அவனோ அறிந்தார்களா என்ன?

...இதற்குமேல் பேச்சுவரவில்லை. தெரு வில் ஆள் நடமாட்டம் உண்டாவென்று ஒரு தடவைக்கு ரெண்டு தடவையாய் முழியை ஊருட்டி நோட்டம் பார்க்கிறார். வீட்டுக்குள் தருமையா நாட்டார் மனைவி வேறு ஒட்டு கேட்பாளோ என்பதாகக்கூட நினைப்பு. பொம்பளை காதில் விழுந்த சங்கதி ஒரு இடத்துக்குள் தரிக்குமா ஏன்ன?...

# 9

மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சவுக்காசமாய் குட்டித் தூக்கமொன்றையும் போட்டுவிட்டு மனைவிக்காரி கொடுத்த பொரியரிசியை நறக்புறக்கென்று மென்று கழுநீர் மாதிரியான காப்பியையும் குடித்துவிட்டு தருமையா நாட்டாரை பார்க்க கிளம்பினார் கோபால் குச்சிராயர்.

அவருக்கு காலையிலிருந்து நல்ல இருப்பு இல்லை. நல்ல இருப்பு என்றால் அவர் உடம்புக்கு கிடம்புக்கு ஒன்றும் வந்துவிட வில்லை சாமி முத்துக்கண்ணு விசுவராயர் நெல்லுப்பட்டை நாடி பெண்பார்க்க கிளம்பி போன சங்கதி கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஊர்க்காரர்களை துச்சமாக எண்ணி எங்கே காரியத்தை செட்டில் பண்ணிவிட்டு வந்துவிடுவாரோ என்ற நடுக்கம் தீரவில்லை.

ஊருக்கு அவமானம் வருகிறது அப்புறமிருக்கட்டும் முருங்கை போத்து மாதிரி நெடுநெடுவென்று வளர்ந்து கிடக்கிற மூன்று பெண்களை கரையேத்த தனக்கு துப்பில்லையே என்று அவரையும் இவரையும் இணைத்து வேறு கேலி பேசுவார்கள் பாவிகள்.

பெண்களை பெத்துபோட்ட அப்பாக்கள் பொண்ணுக் காரியத்தை சட்டுபுட்டென்று முடிக்காவிட்டால் ஜனங்கள் லேசாகத்

தான் எடைபோட்டு விடுகிறார்கள். பெண்களை பெத்த தகப்பன்கள் அப்படி ஒரு காரியம் நடக்க முனையாமலா இருக்கிறார்கள் எல்லாம் தர்ம சங்கடம் தான் ஆணைப் பெத்தவன் அதிகம் ஆசைப்படும் போது பெண் எங்கே விலைபோகிறது? நல்ல மனுஷர்களய்யா நாம் பொண்ணுக்கு ஆணும் ஆணுக்கு பொண்ணும அவசியமென ஆய்விட்ட போது இதில் தரகு விலை சமாச்சாரம் இத்யாதி ப்ரச்சனைகளெல்லாம் எத்தனை அலட்சியமாக உள்ளே புகுத்திவிட்டோம்.

இந்த பெண்கள் மட்டும் உங்களுக்கிருக்கிற வீறாப்பில் எங்களுக்கும் முக்கால்வாசி இருக்கிறதென்று சொல்லி நாலு பயல்களிடம் 'ச்சொடேர்' என்று கண்ணடித்தால் போதும் எல்லாப் பையன்களும் சரிக்கு வந்துவிடுவார்கள் அப்புறம் எங்கே தரகு விலை- இத்யாதியெல்லாம்?

'ஒரு பெண்ணைப் பெத்தவன் சட்டுபுட்டென்று காலா காலத்தில் காரியம் பண்ணிவிட்டான் மூணு வயசுப் பொண்ணில் ஒன்னைக்கூட கரையேத்தக் காணுமே' என்று ஊரார் நக்கல் பண்ணத்தான் பண்ணுவார்கள் - இதை நடக்கத்தான் விடக்கூடாது - இது முத்துக்கண்ணு விசுவராயர் சம்பந்தப்பட்ட விஷயமென்றாலும் ஊர்க்காரன் என்ற முறையில் எத்தனை தூரத்துக்கு அபகீர்த்திகளை செய்ய முடியுமோ அத்தனைக்கு செய்யத்தான் வேண்டும் நெஞ்சிலுண்டான வக்கிரத்துடன் வீறாப்போடு துண்டை பலமாய் உதறி தோளில் கிடத்தினர். தருமையா நாட்டார் வீட்டை நோக்கி கால்கள் நடந்தன.

"அண்ணா..., தருமையாண்ணா...

"அண்ணா..... தருமையாண்ணா....

"ஆரது...?" உள்ளேயிருந்து கேட்ட குரல் சற்று இடைவெளிக்கு பின்தான்.

"நாந்தான் அண்ணாருக்காறா...?"

கொஞ்சமௌனம். சிசுசிசுப்புகூட லேசாய் காதில் விழுகிறது இந்த நேரத்தில் கிசுகிசுப்புக்கோ இத்தனை சத்தத்திற்கும் ஓடிவந்து கதவைத் திறக்காமல் இருப்பதற்கோ உள்ளே என்ன கூத்து பண்ணுகிறார்கள்...? புரியாமல் இல்லை. சின்ன வயசில் இவரும் அவரும் எத்தனை வேலி முறித்து தாண்டி போயிருப்பார்கள்? ஆனாலும் இந்த நாட்டானுக்கு அழுத்தம் சாஸ்திதான், இல்லாது போனால் இந்த நேரங்கெட்ட நேரத்தில் இப்படி கூத்தடிப்பாருண்டா? அவன் கொடுத்து வச்ச மனுஷன் புள்ளையில்லை பூச்சியில்லை என்ற திமிரில் ராப்பகல் கூட தெரியாமல் கொட்டமடிக்கிறானென்றால் அதற்கொரு வக்கணை வேணும் ம்... நானும் பெத்தேன்... மூணும் பொட்டை முட்டையிட வேண்டிய பருவத்தில் 'அடக்கொரல்' கத்திக் கொண்டிருக்கிறது வீட்டுக்குள்.

'இது நாட்டாரும் அவர் மனைவியும் சம்பந்தப் பட்ட விஷயம்-' நாம வேணுமானா முத்துக்கண்ணு விசுவராயன் வூட்டு கலியாணத்தை நடக்கவிடாம நிறுத்தப்பாக்கலாம் இப்படி சங்கதியை நிறுத்த முடியுமா என்ன?

கொஞ்சநேரங்கழித்து தருமையாவே வந்து கதவைத் திறந்தார். தலை கலைந்து காணப்பட்டது. அவர் என்றைக்குத் தான் வகிடெடுத்து சீவிப் பார்த்திருக்கிறார். எப்போது பார்த்தாலும் பரட்டைத்தலைதான். ஒரு ஊர் தேசத்துக்கென்று புறப்பட்டுப் போகிற சமயத்தில் மட்டும் அதிகப்படியாய் எண்ணெய் வைத்து வகிடெடுக்காமல் பாகவதர் கிராப்பு மாதிரி வாரிக்கொண்டு போவார். இன்றைக்கும் அப்படிதான், அதாவது கலைந்த நிலையில் கொஞ்சம் பம்பல் விட்ட நிலையிலிருந்து மாறி படிந்து கிடக்கிற மாதிரி இருக்கிறது.

'கரடியாய் இச்சமயத்தில் வந்தானே' என்ற கோபம் போலும்! வந்தாரை ஏ.... 'என்ன' ன்னு கூட கேட்க வக்கணையத்துப் போய் முகம் ரத்தமாய்ச் சிவக்க வெறித்துப் பார்க்கிறார். பார்வையே என்ன என்கிற வினாவையும் அதற்கும் பின்னால் கேட்கப் போகிற சகலவிதமான சங்கதிகளையும் ஒரு மொத்தமாக கேட்டுவிடுகிற மாதிரியிருக்கிறது.

...ம் எத்தனை பிரயாசை பண்ணி என்ன பலனைக் கண்டான் நாட்டான்?'' ஒரு மண்ணுமில்லை, அந்த அண்ணி வயித்தில் ஒரு பூச்சி புளுவு வைக்கவில்லை ஒருவிதத்தில் முயற்சி திருவினையாக்கும் என்று நினைக்கிறாரோ என்ன எழவோ தெரிய வில்லை ஆசாமி - எல்லாம் கர்மப்பலன்!

“தூக்கத்த கெடுத்துபுட்டேனா?... என்கிறார் லேசான சிரிப்புடன் தலையைச் சொறிந்தபடிக்கு.

நக்கல் பண்ணுகிறான் குச்சிராயன் என்று நாட்டாருக்கு புரியாமல் இல்லை. ‘ஆமாம்' என்று சொல்லி ஆளை அப்புறப்படுத்தி விடலாம் அது நல்லதில்லை பின்னால் நடக்கப்போகிற நல்லது கெட்டதுக்கெல்லாம் குச்சிராயன் துணை அவசியம் வேணும்.

“ஓ ஆயி ஒன்ன பெத்துப்போட்ட நிமுசத்துலேருந்து ஒனக்கு கெடுக்குற புத்தி ஒண்ணுதான் இதுல கெடுத்துபுட்டேனான்னு கேள்வி மசுரு வேறயா?'' என்று உரைக்கிற மாதிரியும், அதே சமயத்தில் அவர் கோபப் பட்டு விடாத மாதிரியுமாய்ச் சொல்கிறார்.

சுருக்கென்று நெஞ்சில் முள்தைத்த மாதிரியிருக்கிறது இது. முள் பலமாய் ரத்தம் வருகிற மாதிரிக்கு குத்தியிருக்கும் பட்சத்தில் சடாரென்று நாட்டாரின் மீது பாய்ந்து அவர் மென்னியைப் பிடித்து திருகி ஆத்திரம் தீர்த்திருக்கலாம். குத்தின முள் லேசாகப் பாய்ந்து தானே கழன்று கொண்டாய் விட்டது-இதிலெங்கே கோபம் வர இருக்கிறது. தப்பு தன்மீதுதானே என்று உணர்ந்தவராய் நிற்கிறார்.

“குந்துங்க'' இப்போது வார்த்தையில் முன்பிருந்த சூடு இல்லை.

அவர் திண்ணையில் குந்த எதிர்த்திண்ணையில் நாட்டாரும் குந்துகிறார்.

“என்ன சங்கதி இந்நேரத்துல?''

“ஒண்ணுமுல்ல முத்துக்கண்ணுவிசுவராயனப் பத்தி கொஞ்சம் பேசணும்னு வந்தன்”.

“தெரியும் அதுக்குத்தான் நீ வந்துருப்பன்னு”

“அண்ணா. நெல்லுப்பட்டுல இவுரு சம்பந்தம் கிம்பந்தம் போட்டுட்டாருன்னா அடுத்த வூருக்காரன் நம்பளப்பாத்து ஓ ஊரு ரோக்கிதி இம்புட்டுதானான்னு மூஞ்சில துப்பிப்புடுவான் துப்பி”.

“ந்தக் கவல சம்பந்தம் போடப்போறவனுக்கு இருக்கறதா தெரியலையே... நீ ஏ இதப்போயி பெருசா எடுத்துகிட்டு பேசுற?”

“பின்ன என்னண்ணா சங்கதிய கேட்டதிலிருந்து மனசு கொஞ்சமும் ஆறல்”

“எனக்கு மட்டும் என்னான்னு நெனச்சே அதே கவலதான் தெக்குசீமப்பக்கம் எவன் கொள்வன கொடுப்பன வச்சுக்குவான்... நெஞ்சுல மசுறு மொளச்ச கள்ளனெவனும் அப்புடி வளிக்கு போமாட்டான்”

“சரி இதுக்கு என்னா பண்ணனும்ங்கிறீங்க?... நெலம எல்ல கடந்து போயிட்டுன்னா ஒண்ணும் செஞ்சிக்க முடியாதே”

“அதப்பத்திதாய்யா நானும் யோசிச்சுப் பாக்குறன் எனக்கும் ஒண்ணும் மட்டுப்படல”

“ஒண்ணு செய்வமா?”

“என்னா?”

“முத்துக்கண்ணுவிசுவராயன் வந்ததும் ஊர்வ நாலுபேரு சேந்து நெல்லுப்பட்டுல சம்பந்தம் வச்சிக்கப் படாதுன்னு கண்டிச்சி சொல்லிபுட்டா என்னா?”

“அது ஏ இஷ்டம்னு நம்பள அவரு மடக்கிபுட்டா என்னா பண்றது?”

“வாகரையில இதப்பத்தி யோசிச்சுத்தான் செய்யணும்னு சொல்லிப்பாப்பமே”

“விசுவராயன் லேசுபட்ட ஆளுல்ல இருக்கவே இருக்குது கோர்ட்டும் வக்கீலும்னு பெராது குடுக்கப் போயிருவான்”.

“கோர்ட்ல என்னா சொல்லுவாங்க?”

“ஓரொருத்தரும் சாதியே இல்லன்னு கொடிபுடிச்சிக்கிட்டு அலையிறப்ப ஒங்களுக்கு சாதிக்குள்ளேயே சாதியான்னு பெரம்படி குடுத்து நாலு வருஷம் உள்ளாறருக்கவும் தீட்டிப்புடுவான்”.

“அப்புடியா சங்கதி?”

“ஆமாமா”

இருவரும் மௌனமாகிறார்கள். கோபால் குச்சிராயருக்கு விஷயம் சப்பென்று போகிறதே என்ற கவலை. மேலும் என்ன செய்யலாமென்று யோசித்துப் பார்க்க ஒரு விஷயம் தட்டுப்படுகிறது.

அது அரசபுரசலாக காதுக்கு வந்த சங்கதி... சத்தியமாய் கண்ணாறப் பார்க்கவில்லை. அவருடைய பெரிய பெண்தான் அந்த சங்கதியைப் பற்றி அவர் காதில் ஊதினாள். அது மெய்யோ பொய்யோ ஆண்டவனுக்கே வெளிச்சம்!

“அண்ணா இப்டி கிட்டக்க வாங்களேன்”

“யா?”

“இப்டி செத்த காதக் கொண்டாங்களேன்”.

இப்போதுகூட குச்சிராயர் ஒரு கணம் தயங்கினார். பெரிய பெண் நீலா சொன்னது உண்மையோ அல்லது பொறாமை காரணமாகச் சொன்னாளா என்ற விபரம் அவருக்கு பூரணமாய்த் தெரியவில்லை. அது உண்மையாக இருக்க வேண்டும் என்பதுதான்

அவரது ஆசை. இந்த அட்சரத்தை காத்தில் பறக்கவிட்டால் போதும், விசுவராயன் வீட்டில் யாரும் லேசில் கொள்ளவோ கொடுக்கவோ மாட்டான். அந்த தெக்கு சீமைக்காரர்கள் கூட கிட்ட நெருங்க மாட்டார்கள் துப்பிபுடுவார்கள். துப்பி, இந்த அளவுக்கு அவர் குடும்பத்தைப் பற்றி ஊர்சிரிக்க விட வேண்டுமாவென்று கூட அவருக்கு உள்ளாந்தரத்தில் தோன்றியது. பின்னால் இந்தச் செய்தியை பரப்பினவன் தான்தான் என்ற சங்கதி முத்துக்கண்ணு விசுவராயருக்கோ அவர் மகன் தங்கவேலுக்கோ எட்டினால் எலும்பை எண்ணி விடுவார்கள் எண்ணி.

அவர்களோடு எதிர்த்து சண்டையிட தனக்கு முடியாது. துணைக்கு கழியைத் தூக்கிக்கொண்டு ஓடிவர கைக்கு உகந்த ஆம்பிளைப்பிள்ளையும் இல்லை. பொடிசாய் ஒரு பயல் தத்தக்கா புத்தக்காவென்று நடப்பான். மித்தது மூணும் பெண்! நினைக்க நடுங்கினார். இப்போது சொல்வதா வேண்டாமாவென்று கூட நினைப்பு ஓடியது. சொல்ல வந்த சங்கதியை சொல்லாமல் விட்டால் தருமையா நாட்டார் வேறு என்னவோ ஏதோவென்று சந்தேகப் படுவார் ஆசாமி.

சரி தலைக்குமேல் வெள்ளம் போனபின் சாண் போனால் என்ன முழம் போனால் என்னவென்று துணிந்து விட்டார்.

இதற்குமேல் பேச்சுவரவில்லை. தெருவில் ஆள் நடமாட்டம் உண்டாவென்று ஒரு தடவைக்கு ரெண்டு தடவையாய் முழியை ஊருட்டி நோட்டம் பார்க்கிறார். வீட்டுக்குள் தருமையா நாட்டார் மனைவி வேறு ஒட்டு கேட்பாளோ என்பதாகக்கூட நினைப்பு. பொம்பளை காதில் விழுந்த சங்கதி ஒரு இடத்துக்குள் தரிக்குமா என்ன?

*"அண்ணி... யண்ணி....*

*"யண்ணி...............*

இப்போதும் கூப்பிட்டதுக்கு சப்தமில்லை. அண்ணி கொல்லைப்பக்கம் போய்விட்டாள் போலும்! பூஜை வேளையில் கரடியாக நுழைந்தால் யாருக்குப் பிடிக்கும்?

"யா அவள கூப்புர்றீங்க?" - நாட்டார்.

"ஒண்ணுமுல்ல தாவத்துக்கு கொஞ்சம் தண்ணி வேணும்".

உண்மையில் அவருக்கு தாகமில்லை. கதவுபக்கம் நின்று அவள் ஒட்டுக் கேட்கப்போய் அது ஊர்ப்பூராவும் பரவிவிடுமே என்ற கிலியில்தான் அவளை கூப்பிட்டுப் பார்த்து தன் சந்தேகத்தை தீர்துக் கொண்டது. இப்போது தெம்பு வந்திருந்தது. அவள் வீட்டுக்குள் இல்லையென்பதை உள்ளேயும் நோட்டம்பார்த்து தெரிந்து கொண்டு விட்டார்.

"தண்ணி வேணுமா... நா போயி...

"வாணாம் வாணாம்... அண்ணி வந்தா கொண்டாரச் சொல்வம் நீங்க குந்துங்க"

........சேரி....., சங்கதிய சொல்லுங்க"

"ஒண்ணுமுல்ல ....ஒண்ணுமுல்ல" வென்று கவட்டுத் தனமாய் சுற்றுமுற்றும் நோட்டம் பார்த்துக் கொண்டு விட்டு குரலை அடக்கி சன்னமாக சொல்கிறார், "விசுவராயன் பொண்ணும் அந்த சாம்பசெவமும் கொடமுருட்டி வாய்க்காபக்கம் குந்தி பேசிகிட்டிருந்ததை ஏ பெரிய பொண்ணு நீலா பாத்தாளாம்".

**...வூட்டுக்குள்ள தானியத்துக்கு ஒண்ணும் கொறச்சல்ல ஒரு பக்கத் துல கடலரிசி ஒடச்சி பட்டரையா கெடக்கு. இன்னொரு பக்கத்துல கம்பரிசி அடச்சி வெகுசா குமிச்சி கெடக்கு சோளரிசி மூட்ட வேற...**

# 4

"கமலா.....

அடுப்பில் ஏதோ காரியமாக இருந்த கமலா அப்பாவின் குரல் கேட்டு பரக்கபரக்க வந்தவள் தெருக் கதவைத் திறந்தாள். வெளியில் முத்துக்கண்ணு நின்று கொண்டிருந்தார். கருவக்கட்டை மாதிரி கறுத்தமேனி. ஆகிருதியான உடம்பு. வயசு அம்பதைத் தாண்டினாலும் கூட சுருக்கம் விழாத முகம். தாவங்கொட்டையை இடிக்கிற மாதிரி கனந்த மீசை. லேசாய் பழுப்பு தட்டிய ஒழுங்கில்லாத தலைமுடியின் பரந்த கோலம். கழுத்துக்கும் கீழ் நெஞ்சு மயிர் புஸு புஸுவென்று ஜிப்பாவைத் திமிறிக் கொண்டு எட்டிப் பார்க்கிறது. இடுப்பில் சற்று அகலமான வெளிநாட்டு வாரை அணிந்து அழகு காட்டிக் கொண்டிருந்தார். கணுக்கால் தெரிகிற மாதிரி தூக்கிகட்டிய கதர் வேஷ்டி, கழுத்தில் வளையமாகப் போட்டுக் கொண்ட கதர்த்துண்டு கையில் வைத்திருந்த பை முழுவதும் பூ பழமென்று நிரம்பியிருந்தது. அவருக்கும் பின்னால் அவர் மனைவி பூரணி நின்று கொண்டிருந்தாள். சற்றே கனத்த திரேகம். பௌர்ணமி நிலா மாதிரி முகம் பிரகாசமுற்றிருந்தது.

"இப்பத்தான் வாறீங்களாப்பா?" கமலா கேட்டாள்.

"ஆமாயி, சாலியமங்கலத்துல ஒரே நெரிசல். காரு கெடச்சது அபூர்வமாப்போச்சி. கார்ல ஊரு வர்ற வரைக்கும் நானும் ஒம்மாவும் நின்னுகிட்டுதான் வந்தம் அம்புட்டு கூட்டம். ஜனம்

மனுசர சக்கையா புளிஞ்சிருச்சி... ஏ அப்பா... சத்தேரி... இம்புட்டு நருளு எங்கேருந்து தான் பெருத்துச்சோ தெர்யல போ".

"அடுத்த காருக்குத்தான் வந்தா என்னப்பா?"

"ஒன்ன வூட்ல தனியாவுட்டுட்டு போறப்ப கூட்ட அங்கயும் உசுற இஞ்சையுமுல்ல வச்சிட்டு போவ வேண்டியிருக்கு சரிசரி ந்தா பைய வாங்கி உள்ளார வையாயி ஓ அண்ணனக் காணுமே எங்கப் போனான்?" கேட்டுக் கொண்டே பையை அவள் கையில் கொடுக்கும் போது லேசாய் அவர்மேல் வேர்வை கவுச்சி அடிக்கிறது.

"பருத்திக்கு பூச்சி மருந்து வாங்கிட்டு வரன்னு சொல்லி கும்மோணம் போனதுதான் இன்னும் வர்லப்பா"

"கம்னாட்டிப்பய வூட்ல வயசுப்பொண்ண தனியா வுட்டுபுட்டு ஊரு சுத்தப் போயிட்டானா களுதை. நாங்களும் நெல்லுப்பட்டு போயித்தோம் இவனும் கும்மோணம் போயித்தா என்னாச்சி கதை... கங்கருத்த புள்ளக்கி புத்தி வாணாம் த்தூ..." வென்று பலமாய் ஒரு வேகத்தோடு தெருப்பக்கம் காரித் துப்பிக் கொண்டே ஜிப்பாவைக் கழற்றினார். இப்போது முன் அடித்த கவுச்சி காத்தில் சற்று பலமாய் வீச கமலாவின் மூக்கு கோணிக் கொண்டது.

அவர் அதைப்பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பூரணி இதிலெல்லாம் சம்பந்தப்பட்டுக் கொள்ளாத மாதிரி நைசாய் உள்ளே போய் புடவை மாற்ற ஆரம்பித்திருக்கிறாள்.

"சரிசரி நீ உள் போ ஆயி நா கொல்லபக்கம் போயி மாடு கன்னப் பாத்துபுட்டு வாரேன்" என்று சொல்லிவிட்டு சென்றவர் வீட்டிற்கும் கிழக்கால் போய் வேலிப்படலைத் திறந்துகொண்டு மாட்டுகொட்டிலுக்குப் போனார். கொட்டியில் மாடுகன்றுகள் தாறுமாறாகக் கட்டப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு மாட்டுக் காரனைச் சத்தம் போட்டார். வைக்கல் போரை நாசம் பண்ணிக் கொண்டிருந்த கோனார் வீட்டுக்காளையை செங்கல்லை எடுத்து ஆத்திரம் தீர அடித்தார். தெருப்பக்கம் வந்து நடுத்தெருவில்

நின்றபடி குரலை சக்திக்கு எட்டிய வகையில் உயர்த்தி "ஊர்ல மாடு கட்றது நின்னு போச்சாடா கம்னாட்டி.... ராமுச்சூடும் பருத்திக் கொல்லையில் மாடு வெட்றதும் பவலு முளுக்கவய்க்கப்போர்ல மாடு வெறட்றதும்தான் வேலன்னு நெனச்சீங்களா நாசமத்துப் போறப்பயலுகளா இது என்னா நாயத்துலடா சேத்தி?" என்றுசத்தம் போட்டுக்கொண்டே மாட்டுக்காரனைக் கூப்பிட்டு, "எலேய்... இன்னம யாருவூட்டு ஆடுமாடும் நம்பகொல்ல கில்லக்கி வந்தா தாச்சணப்பாக்காம காலகீல வெட்டிப் போடுச் சொல்றன் அப்பத்தான் சொரணவரும் கம்னாட்டிக்கு" என்றவர் முகத்தில் கொஞ்சமும் கடுமையை நீக்க வழியில்லாதபடிக்கு வீட்டுக்கு போகும் போதுதான் வைத்த கண் வாங்காமல் தன்னையே சட்டெரிக்கிற மாதிரி பார்த்துக் கொண்டிருக்கும் கோபால் குச்சிராயரை காணுகிறார்.

கோபால்குச்சிராயர் தருமையா நாட்டார் வீட்டை விட்டு வெளியேறி வரும்போது ஏன் சட்டு புட்டுனு சங்கதியைப் போட்டு உடைச்சோம் என கவலைப்பட்டுக் கொண்டிருந்ததோடு, 'வீட்டுக்கு வந்த மனுஷன் வந்ததும் வராததுமா புடுக்கறுந்த மாதிரி கத்துறதப் பாத்தா போன காரியம் காயாப் போயிருக்கமோ?' என்பதாகவும் சிந்தித்த படிக்கு இருந்தார்.

விசுவராயர் என்ன முடிவெடுத்துக்கொண்டு வந்திருந் தாலும் அவர் பெண் செய்திருக்கிற காரியம் ஊராருக்கு தெரிந்தால் நாறிப்போய்விடும் நாறி பின் எங்கே ஐயா கலியாணம் காச்சி பண்ணுகிறது?

ரொம்பநாழிக்கு தெருவில் நின்று விசுவராயன் இன்னும் என்ன தான் சத்தம் போடப்போகிறான் என்பதை கேட்டுக் கொண்டிருக்க ஆசைதான் 'பயல் சூட்டோடு இருக்கிறான் இப்போதைக்கு வாணாம்' என்று தோன்றி விட்டது நைசாய் கிளம்பி வீட்டுக்குள் போய்விட்டார்.

தான் சத்தம் போட்டுக் கொண்டிருந்ததை கோபால் குச்சிராயர் தெருவில் நின்று பார்த்துக கொண்டு போனதை கண்ணாலும் அளவெடுத்து விட்டார் முத்துக்கண்ணு 'அவன் புத்தி அவனவுட்டுப் போவுமா' என்பதுதான் இப்போதைக்கு அவரைப் பற்றி நினைக்க முடிந்தது.

மேலும் அவர் தனக்குள்ளாகவே ஏதேதோ முணுமுணுத்த படி வீட்டுக்கு வந்தார். பூரணி கூடத்தில் பாயை போட்டு படுத்துக் கிடந்தாள். காரில் வந்த அசதியும் நடந்த அலைச்சலுமாக சேர்ந்து கொண்டு அவள் உடம்பை புரட்டி எடுத்தது.

முத்துக்கண்ணு குறுக்கு சுவத்தோரம் சாய்த்து வைத்திருந்த ஈஸிச்சேரை கூடத்தில் எடுத்துப்போட்டு சாய்ந்தார் அவருக்கும் தான் அசதி. சற்றைக்கெல்லாம் கமலா காப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

முத்துக்கண்ணு காப்பி குடித்துக் கொண்டிருக்கும் போது கமலா ஈஸிச்சேரை பிடித்தபடி பின்பக்கமாய் நின்று கொண்டிருந்தாள் அவர் காப்பியை குடித்து வெத்திலை போட்டு முடித்ததும் போய்வந்தக் காரியம் பற்றி ஏதும் சொல்லலாம் என்ற நப்பாசைதான் காரணம்.

அவள் நம்பிக்கை வீண் போகவில்லை. பொட்டலத்தைப் பிரித்து வெத்திலை போட்டு முடித்ததும் சொல்லலானார் முத்துக் கண்ணு, “நல்ல எடா(ம்)யி வூடு மச்சூடு. ரெண்ட்ரை வேலி நெலமிருக்கு ரெண்டு பையன் ஒரு பொண்ணு. வேற ஒண்ணும் பிக்கல் புடுங்கல் இல்ல பையனுவளும் எளப்பம் சளப்பமா இல்ல நல்ல சூட்டிகை யாருக்கானுங்க மூத்தவனுக்கு கலியாணம் ஆயிருச்சாம் மேச்சீமையில அதாம்மா திருப்பந்துருத்தியில தான் பொண்ணெடுத்துருக்காங்க நம்ப பாத்துட்டு வந்துருக்க பையன் பூண்டி வாண்டையாரு காலேசுல படிக்கிறாராம் பையனுக்கு அப்பா அம்மா ரெண்டு பேருமிருக்காங்க... ஒரு பொண்ணுக்கும் கலியாணமாகல... பொண்ணும் நல்ல பொண்ணு செவப்பா லச்சணமாருக்கு வகையா வந்தா ஒண்ணனுக்கே சிக்கிபுடலாம்னு வச்சுக்கயேன்...”

ஒனக்கு பாத்துட்டு வந்துருக்க பையன் நல்லாருக்கான் காலேசுல படிக்கிறதால கொஞ்சம் நம்பகிட்ட எதிர் பாப்பாங்க போலருக்கு. நம்பளையும் அவாளுக்கு புடிச்சிருக்கும்னு பேச்சுலருந்து தெரிஞ்சுகிட்டன். ந்த மாசத்துலயே ஒரு நல்ல நாள் பாத்துகிட்டு லட்டர் போட்டுட்டு பொண்ணூடு பாக்க வரச்சொல்லிட்டு வந்துருக்கன் என்றவர், அரைத்தூக்கத்திலிருந்த மனைவியை எழுப்பி, “ஏ... குடும்பத்துல கடங்கப்பி ஏதாச்சும் இருக்கான்னு விசாரிச்சுப்பாத்தியா?” என்றார்.

“ஒண்ணும் இருக்காதுன்னுதான் நெனைக்கிறன் வூட்டுக்குள்ள தானியத்துக்கு ஒண்ணும் கொறச்சல்ல ஒரு பக்கத்துல கடலரிசி ஒடச்சி பட்டரையா கெடக்கு. இன்னொரு பக்கத்துல கம்பரிசி அடச்சி வெகுசா குமிச்சி கெடக்கு சோளரிசி மூட்ட வேற”. சின்னவூட்ல நூறு மூட்டக்கி நெல்லடுக்கி கெடக்கு... கரும்புகூட போட்டுருக்காங்களாம் பொண்ணுதான் பேசிகிட்டிருக்கையில சொன்னுச்சி.

“ம்ம்...வளமான குடும்பம்தான் நம்ப பொண்ணுக்குத்தான் கொடுப்பனருக்கணும்” என்றவர், “ஆயி” என்று கூப்பிட்டார்.

“என்னப்பா?”

“தோ தா வந்தா முடிச்சிருவமா?”

கமலா இதற்கு ஒன்றும் பேசவில்லை. அப்பா எதிர்பாராத விதமாய் இப்படி ஒரு வினாவைத் தொடுப்பார் என்று அவள் சற்றும் எதிர்பார்க்காததால் திகிலடைந்த மாதிரி கூட ஆய்விட்டது. சாதாரணமாக இந்த மாதிரியான விஷயங்கட்கு எந்த தகப்பனும் பெண் அபிப்ராயம் கேட்டு ஒண்ணும் நடந்ததில்லை. என்னமோ கலிகாலம் என்று பேசிக்கொள்கிறார்களே... கலிகாலப் பெண் ணொருத்தியின் மனசெப்படியிருக்கும் என்று சோதனைப் பார்க்கிறாரோ அப்பா என்றுதான் நினைக்கத் தோன்றியது.

அவர் கேட்டதற்கு, ‘ஒங்க அயிப்ராயப்படி செஞ்சிருங்கப்பா’ என்று ஒரு சொல்லில் அடக்கிவிடக் கூடிய சங்கதியா அது?...! ஒரு பெண்ணின் அடி ஆா உணர்ச்சிகளை உலகத்தில் எந்த தகப்பன்தான் புரிந்து கொண்டு நடந்திருக்கிறார்கள் இதற்கு நான் மட்டும் விதி விலக்காயிர முடியுமா என்கிற மாதிரி நினைதது இப்படியும் யோசித்தாள்.

எல்லாம் ஏ அயிப்ராயப்படிதான் நடக்குமுன்னா ஒரு நிமுசத்துல நா சாம்பசிவத்தை காதலிக்கிறேன் என்ற சங்கத்தியைச் சொல்லி அவரையே எனக்கு கட்டி வச்சிருக்கப்பா என்ற அயிப்ராயத்தையும் சொன்னால் அந்த அயிப்ராயம் பூர்த்தி செய்யப் பட்டு விடுமா?... அதற்கு நேர் எதிரான கருத்தைத்தானே முன் வைக்கப் போகிறார் அப்பா.

அப்படியே துணிந்து சொல்லப்போக அப்பா தாம் தூமென்று குதிப்பார் ஆத்திரம் தீர கத்துவார் சாதிக்கெட்ட பயல் நம்ப குடும்பத்தில சம்பந்தம் வச்சிக்கறதா என்று காலுக்கு தலையும் தலைக்கு காலுமாக ஆடுவார். அவர் கூத்துபடிக்கு பார்த்தால் நினைவு தெரிந்த நாள் முதலாய் இந்த ஊர்க்காரர்கள் இவர்போய் மாப்பிள்ளை வீடு பார்த்து வந்திருக்கிற நெல்லுப்பட்டில் யாரும் கொள்வனை கொடுப்பவனை வைத்துக் கொண்டதில்லை இது இவருக்கு எந்த நியாயத்தில் சேர்த்தி? ஊர்க்காரர்களே இதற்கு அனுமதிக்கப் போகிறார்களா என்ன?

தன்னுடைய தவறையோ குற்றத்தையோ எந்த மனிதன் பூரணமாக ஒத்துக் கொண்டிருக்கிறான். அப்படி அவன் தானுணர்ந்து ஒத்துக்கொள்ளும் படியான காலம் ஒன்று வந்தால் இப்படியான ஏடாகூடங்களுக்கெல்லாம் வழியில்லை முரண் இல்லை. சூழ்ச்சி இல்லை தெளிவான வாழ்க்கை எல்லாருக்குமே...

தான் பார்க்கிற எந்த மனுஷனுமே சிக்கலுடையவர்களாத் தானே இருக்கிறார்கள்? தான் கதைகளிலோ வயசுக்கு வராதமுன் பார்த்த சினிமா கதாநாயகர்கள் மாதிரியோ யாரொருவர் நேர்மையாக இருக்கிறார்கள். நேர்மைக்காரரென்று ஒப்புக் கொண்டு பேசப்படுபவர்களிலேயே எத்தனை சிக்கல் கொண்ட மனிதர்களைப் பார்த்திருக்கிறோம்.

இந்தமாதிரி கமலா நினைக்க ஆரம்பித்தாள். அப்பா கேட்டதற்கு ஒன்றும் பதில் சொல்ல வில்லை. அப்பா இதற்காக வருத்தப்பட போவதுமில்லை நெஞ்சம் தவிக்கிற தவிப்பை விட்டுவிட்டு மௌனம் சம்மதத்திற்கடையாளம் என்பதாய் நினைத்து காரியம் பார்க்க கிளம்பி விடுவார் ஆசாமி.

எதையும் வாய்விட்டு சொல்லும்படிக்கு அவர் தன்னை எந்த துணிச்சல் கொடுத்து வளர்த்திருக்கிறார்? அம்மாவையும் என்னையும் தன்னுடைய அதட்டல் உருட்டல்களிலும் கோபத்தில் தாபத்திலுமாய்தானே மனம் சலித்துப் போகும்படிக்கு வளர்த்திருக்கிறார் - நானோ அம்மாவோ அண்ணனோ கூட கூறுவத அவர் எப்போது பூரணமாய் உணர்ந்து அங்கீகரித்திருக்கிறார்?

'பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்றுதானே அவர் இந்த வீட்டுக்குள் வாழ்ந்ததும் வாழ்ந்து கொண்டிருப்பதும்'

எல்லாவற்றையும் நினைக்க கசந்தது எப்பவும் போலத்தான் இப்போதும்.

"நீ பேசமாட்டாயி அப்டி நா ஒன்ன வளக்கல என்று அவர் தன் தவறை உணர்ந்து பேசும்போது கமலா அங்கு இல்லை. அவள் நினைப்பு முழுக்க சாம்பசிவத்தின் மீது தான் இப்போது,தன் கனவும் ஆசைகளும் நிறை வேற வேணுமே என்ற வருத்தம் ஒன்றில் ஆழ வேரூன்றிப் போனாள். தட்டாம்பூச்சியென மனம் சுழன்று சுழன்று பறந்தது"

அப்பா பேசறதப் பாத்தா நெல்லுப்பட்டு சம்பந்தம் வகையா வந்தா முடிச்சிடுவார் போலருக்கே.... தன் உணர்ச்சிகளும் தாபங்களம் சாம்பசிவத்தினிடத்தில் என்பதை அப்பாவுக்கு எப்படி உணர்த்துவது? இக்கவலை ஒன்றிலேயே மூழ்கிக்கிடந்த அவள் தீர்மானமாக சாம்ப சிவத்தைப் பார்த்து அப்பாவின் கருத்தையும் தனது முடிவென்ன என்பதையும் சொல்லிவிட துடித்தாள்.

சாம்பசிவம் தன்னிடம் சொன்ன மாதிரி இன்னைக்கு ராத்திரிக்கே கொல்லைப்பக்கம் வந்து நிற்பார் எப்படியும் சந்தித்து தன் முடிவென்ன என்பதையும் சொல்லிவிட வேண்டுமென்று வக்கிரம் கொண்டாள். ஒருத்தருக்கொருத்தர் ச்திக்க சந்திக்கத்தானே கருத்துகள் பலமாகி காதலும் வலுப்பெறும்.

தீவிரமான முடிவுடன் அடுப்படி பக்கம் சென்றிருந்த அவள் எப்போதோ எரிந்து அவிகிற நிலையில் கிடந்த விறகொன்றை மீண்டும் அடுப்புக்குள் திணித்து கண்ணெரிய ஊதியபோது அது குப்பென்று பற்றியெரிந்தது அவள் காதலைப்போல.

இப்போது சாம்பசிவத்தின் நினைப்பைத் தவிர கமலாவுக்கு வேறு எதுவுமே ஓடவில்லை. அவனைச் சந்திக்க வேண்டிய காலத்தையும் நேரத்தையுமே அவள் எதிர் பார்த்து காத்திருந்தாள்.

**...தன்னைப் போலவே அவனுக்கும் தன்னை சந்திப்பதில் எத்தனை நாட்டமிருந்திருக்கிறது என்று நினைத்து மகிழ்ந்தாள்...**

# 5

நிலா காய்ந்து கொண்டிருந்தது. கொல்லைப்புற மூங்கில் காட்டிலிருந்து மூங்கில்களின் சரசரப்பு காத்தில் மிதந்து வந்ததைத் தொடர்ந்து கீழக்கோடியில் தெரு நாய்கள் ஊளையிடுகிற சப்தம் கேட்கிறது. நிலவிருட்டின் மௌனத்தைக் கலைத்துக்கொண்டு ரோட்டில் எவனோ மயான காண்டத்தை உச்சஸ்தாயியில் பாடிக் கொண்டு போகிறான். நாத்தாங்கால் பக்கமிருந்து தவளைகள் கக்கக்ககக்கரா... க்ககக்கக்கரா...வென்று ஒரு சங்கீதம் போல் அடித்தொண்டையில் முனகிக்கொண்டிருந்தன. எங்கிருந்தோ அழும்பிள்ளையை அடக்கும் பொருட்டாக யாரோ ஆராரோ பாடுவது சின்னதாய்க் கேட்கிறது. வேப்பமரத்து உச்சங்கிளையில் உட்கார்ந்து கொண்டு ஆந்தையொன்று அலறிக் கொண்டிருக்கிறது. எதிர்ச்சாரியில் யாருடைய வீட்டிலோ தெருப்பக்கம் கவிழ்த்துப் போட்டிருந்த பெட்டைக் கோழியை கீரிப்பிள்ளையோ காட்டுப்பூனையோ பிடிப்பதற்கு முயன்று பெட்டை அடித்தொண்டையில் கத்தவும் அதைத் தொடர்ந்து கிழவனொரு வன் சத்தம் போடவும் கீரியோ பூனையோ பெட்டையை விட்டுவிட்டு ஓடிவிட்டது போலிருக்கிறது. அந்தகிழவனின் கத்தலைத் தொடர்ந்து அக்கம்பக்கத்திலிருந்தவர்களில் ஒரு சிலர் விழித்துக்கொண்டு சலசலப்பது தொடர்கிறது. கமலா கொல்லையின் நடு மத்திபமாக நின்று கொண்டிருந்த வேப்பமரத் தோரம் போய் மறைவாய் நின்று கொண்டிருந்தாள். அவளது

கண்கள் அடிக்கடி கொல்லைப்புற வேலிப்படலையே ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தது.

சற்றைக்கெல்லாம் வேலிப்படல் சரசரக்கும் சப்தம். சாம்பசிவம் தான் வந்து கொண்டிருந்தான். தன்னைப் போலவே அவனுக்கும் தன்னை சந்திப்பதில் எத்தனை நாட்டமிருந்திருக்கிறது என்று நினைத்து மகிழ்ந்தாள் கமலா, 'மச்சான்' என்று ஆசையோடு கூப்பிட நினைத்தவள் நாணம்கூட வார்த்தையை விழுங்கிக் கொண்டாள். 'அப்பா ஒரு வேளை தூக்கத்தை விட்டு எழுந்து வந்து விடுவாரோ' என்று பயமாக வேறு இருந்தது. கமலா வேப்ப மரத்துப் பக்கம் நிற்பதையறிந்து துரிதமாக அவளை நோக்கி நடந்து வந்தான் சாம்பசிவம்.

'கமலா, கொல்ல கடசிக்கு போயிருவமா?' அவன் வந்ததும் வராததுமாக கேட்ட முதல் கேள்வி இது தான்.

ஒரு இளம்பெண்ணை- அதுவும் தான் ஆசையோடு நேசித்துக் கொண்டிருக்கிற ஒருத்தியை இந்த அர்த்த ராத்திரியில், யாருமில்லாத தனிமையில் ஒருத்தருக்கொருத்தர் இறுகத்தழுவி இன்பம் புரிய நேர்ந்தாலும் தடையில்லை என்கிற சூழலில் இருவருக்குமான உணர்ச்சி அலைகள் வெள்ளமாய் கரைபுரண்டோட - அந்த சந்தோஷத்தை என்ன சொல்ல-

"வாணா ப்டியேருக்கட்டும்" இச்சூழலில் ஒரு பெண்ணுக் குறித்தான பேச்சோடு - எதுவும் கட்டை மீறி விடக்கூடாது என்கிற மாதிரி - தன்னுடைய பாதுகாப்புக்குதானே காவலாளியாய் நின்று பேசுகிறது அவனுக்கு கொஞ்சம் கசப்பாகவிருக்கிறது.

"ஒங்க அப்பா படுத்துட்டாங்களா?" இப்ப இந்தப் பக்கம் எந்திருச்சி வரமாட்டாங்களா? படபடப்போடு அவன் கேட்டான்.

"ம்ஹூம் அவுங்க ஊரு சுத்திட்டு வந்த அசதியில நல்லா தூங்கிகிட்டிருக்காங்க... அண்ணங்கூட திண்ணையில கொறட்ட வுட்டு தூங்குது".

"சரி; போனக்காரியம் என்னாச்சாம்?"

“நல்ல எடமாம் வகையா வந்தா முடிச்சிரலாம்னு நெனைக்... கிறாங்க... ந்த மாசத்துலயே ஒரு நல்ல நாளாப் பாத்து பொண்ணூடு பாக்கவும் வரச்சொல்லிட்டு வந்துருக்காங்களாம்”.

“இதப்பத்தி நீ என்னா நெனைக்கிற?”

“ந்த ராத்திரியில ஒங்கள சந்திக்கிறதுக்காவ எந்த பயத்தையும உட்டுபுட்டு வயசுப் பொண்ணு ப்டி தனியா நிக்கிறனே... இதுலேருந்து நீங்க என்னப்பத்தி என்னா நெனைக்கிறீங்க சொல்லுங்க மச்சா?” அவள் லேசான கோபத்துடன் இதைக் கேட்டாள்.

அவனுக்கு இதைக் கேட்டதும் தன்மீது அவள் எத்தனை பிரியம் வைத்திருக்கிறாள் என்று நினைக்க புல்லரித்தது. அப்படியே அவளைத் தழுவி முத்தமிட்டான் ‘கமலா கமலா’வென சற்று அமுங்கிய குரலுடன் அவள் காதுகளில் தேனை ஊற்றுவது போல் சொன்னான். அவள் அவன் பிடியில் சிக்கி இளமை தாபத்துடன் வேண்டும் வேண்டுமென உடல்கள் மனசுகள் எல்லாம் விரும்பிய விருப்பத்தில் பிடியை தளர்த்தவோ உதறிவிடவோ முயலாமல் மாறாக அவளும் அவனை இறுகத்தழுவி எல்லை மீறிய உணர்ச்சிகளுடன் அவளது இளமைகள் அவன் மார்புக் குழியில் நசுங்கிப்புரள-இமைகள் மூடிய கண்களுடன் நெடுமூச்சுகள் மட்டுமே ஆக்ரமித்துக் கொண்ட சூழலுல் சில நிமிஷங்கள் இன்பத்தால் கரைந்துதான் போயின.

“ஏ மச்சா?”

“ஒன்னோட தெம்பும் உறுதியுமிருந்தாலே எனக்கு முளுபலம் வந்தமாறி ஆயிரும்”.

“அப்டியா?”

“ஆமா கமலா... ஊரோட வெறுப்பு விருப்பு எல்லாத்தையும் ஓடச்செறிஞ்சிட்டு நா ஒன்ன அடஞ்சிற முடியும்ங்குற நம்பிக்கையும் எனக்கு வந்துரும்.. ப்பக்கூட நீ நெனைக்காட்டி ந்த ராத்திரியில ஒன்ன இத்தன நெருக்கமா அதுவும் தனியா என்னால சந்திச்சிருக்க முடியுமா?”

அவள் மௌனித்தாள். அவள் அவன் மீது கொண்ட பிரியத்தையோ-அல்லது உறுதியைப்பற்றியோ என்னத்தைப் பேசி அவனுக்கு தெம்பையோ உற்சாகத்தையோ அளிக்க முடியும் என்பதாக நினைத்தாள்.

அவன் உறுதியும் அவளுடைய உறுதியும் மட்டுமே இந்த உலகத்தில் ஒரு பின்னோக்கிய பார்வையை முன் செலுத்தும் பட்சத்தில் அந்த பலமிக்க ஆயுதம் பெண்ணிடம் மட்டுமே தானிருக்கிறது. ஆள் பலவானாகவிருந்து என்ன பயன்? உள்ளத் தளவில் பலகீனனாக இருக்கிறானே -அவன் உள்ளத்தளவிலும் பலவானாக ஆக்குகிற கருவி பெண்ணிடம் தான் உள்ளது என்கிற நுண்மையான சிந்தனை அவளுக்கு வந்துவிட்டால் யாரொருவர் மதம், சாதி சாதிக்குள் சாதி என்றெல்லாம் விகல்பம் கூறி பேச முடியும்?

கமலா எதைப்பற்றியோ யோசித்துக் கொண்டிருந்துவிட்டு ஒரு வக்கிரத்தோடு சொன்னாள், "ஏ உறுதியப பத்தி நீங்க ஒண்ணும் கவலப்பட வாணாம்" என்று ஒத்தைவரியில் பதிலைச் சொல்லி நிறுத்திக் கொண்டாள்.

"அந்த உறுதி உம்மையாருந்துட்டா நா ஒன்ன திருட்டுத்தாலி கட்டியாவது ஏ மனைவியாக்கிக்குவேன்" என்று உணர்ச்சியுடன் அவன் பேசினான்.

இது அவளுக்கு பிடிக்கவில்லை. ஒரு பெண்ணை அடைய எவ்விதமான திருட்டையும் செய்ய ஆண் முயலலாமென்றால் இந்த சகாப்தத்தை மாற்றியதாக எப்படி பொருள் கொள்ள முடியும் என்பதாக அவள் நினைத்தாள். அவன் தான் பேசியதற்கு ஏதும் பதிலை எதிர்பார்க்கலாமோவென்று அவளுக்கு புரிந்தும் அவள் பேசவில்லை. கால்விரல்கள் தரையைக் கீறின. சாம்பசிவம் அவளிடம் எந்த மாதிரியான பதில் வருகிறது என்பதையறிய அவளையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். கமலா மேலும் எதையோ யோசித்துக் கொண்டிருப்பவளே போலிருந்தாள். ரொம்ப நேரம் வரையிலும் அவள் மௌனமே சாதித்துக் கொண்டிருந்ததால் அவனே தொடர்ந்து கேட்டான்.

"இதுக்காவ பயப்புர்றியா கமலா?"

இப்பவும் அவள் பேசவில்லை. மேகக் கூட்டங்கள் நிலவை மூடிக்கொள்ள கங்கணம் கட்டிக் கொண்டிருந்ததால் இருள் அப்பிக்கொள்ளலாயிற்று. சில் வண்டுகளின் "ங்ஙீ..." வென்ற ரீங்காரம் இனிய சங்கீதம் போல் ஒலித்து கொண்டிருக்க இனியும் மௌனத்தை நீட்டிக்க விரும்பாதவளே போல் அவள் சொன்னாள், "திருட்டுத்தாலி கட்டணுங்கற வேலய வுட்ருங்க மச்சா ஆம்பள இப்டி வெக்கமுல்லாம் பேசறது எனக்கு கொஞ்சங்கூட புடிக்கல. எங்க அப்பா ஆசக்கி ஒன்னா என்னய பெத்து வளத்துருக்கப்ப ஏ கலியாணத்த ரொம்பசெறப்பா நடத்திப பாக்கணும்னு ஆசப்பட்டு கிட்டிருக்காங்க அவுங்க ஆசயில மண்ணத்தூவிபுட்டு நாம ரெண்டு பேரும் ஓடிப்போயி கலியாணம் பண்ணிக்கறதுங்கறது சுத்த மானங் கெட்டத்தனம்"

"பின்ன ஒங்க அப்பாரு எதுப்பையும் ஊரோட எதுப்பையும் நாம ரெண்டுபேரும் எப்டி சமாளிக்கமுடியும்?"

"ஒரு பொண்ணு நெனச்சுட்டா ஒலகத்துல முடியாததுன்னு ஒண்ருக்கா?"

அவன் இதற்கு ஒன்றும் பேசமுடியாமல் மௌனமாயிருந் தான். ஒரு பெண் இப்படிபட்ட விஷயங்களில் எத்தனை உறுதியாகவும் கட்டுப்பாடுடனும் இருக்க முடிகிறது என்று நினைக்க புல்லரித்தது. பெண்ணொருத்தி ஆணுக்கும் பின்புலத்தில் கட்டுக்கோப்புடன் உறுதிதளராமல் இருந்துவிட்டால் இச்சமுதாயத்தில் என்ன விந்தையெல்லாம் செய்யலாம் என்று நினைத்து சந்தோஷித்தான்.

கொஞ்ச தூரத்தில் வேலிப்படல் சரசரக்கும் சப்தம்!

நிலாவொளியில் கண்களை கூர்மை படுத்திக்கொண்டு சப்தம் வந்த திசையை நோக்கினான் சாம்பசிவம். தலையில் கனந்த முண்டாசுடன் சுருட்டைப் புகைத்துக்கொண்டு தடிக்கம்பை தரையில் தட்டியபடிக்கு வந்து கொண்டிருந்த மனுஷ உருவம் முத்துக்கண்ணுதான் என்பதை அவனால் ஊர்ஜிதப் படுத்திக்

கொள்ள முடிந்தது. வந்தவர் நேரே வைக்கோல் போரடிப்பக்கம் போய் "ஹாய் ஓய்" யென்று அதட்டல் போட்டுவிட்டு மாடு ஒன்றும் இல்லாததால் கொஞ்சம் மேற்கால் திரும்பி கொல்லையின் பின்புற படலை நோக்கி வந்து கொண்டிருந்தார். சாம்பசிவம் பதறிப் போனான், "கமலா, வர்றது ஒங்க அப்பாதான் நல்லா தூங்கிகிட்டிருக்காங்கன்னு சொன்னிய பருத்திக் கொல்லைய வுட்டு புட்டு அவுங்களுக்குத் தூக்கம் வருமா? நா அவுங்க இஞ்ச வர்றதுக்குள்ள பருத்திக்கொல்ல வளியா ஓடிப்போயிர்றேன் நீ இப்படி மூங்கிகுத்துப்பக்கம் மறஞ்சி நின்னு அவுங்க பருத்திக் கொல்லப்பக்கம் போனதும் வூட்டுப் பக்கம் போயிரு" என்று சொல்லிவிட்டு அவளின் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் ஓடிப் போய் வேலிப்படலை ஒரு வேகத்துடன் திறக்கையில் வேலி திறக்கும் சரசரப்பு அவர் காதுக்கு எட்டி மாடுதான் நிற்கிறதென்கிற வேகத்தில் ஓடினவர் மேலும் ஓடமுடியாமல் கையிலிருந்த கழியால் விட்டெறிந்து அடித்தார்.

அடித்த வேகத்தில் கழி அவன் கால்களில் பட்டு அவன் தன் நிலையறியாமல் "ம்மா..." வென்று குரலெழுப்பி விட்டு வலியையும் சட்டை பண்ணாமல் அவன் பருத்தி வயலில் சரியான தடம் புரியாமல் தாறுமாறாய் ஓடி மறைந்தான்.

முத்துக்கண்ணு விசுவராயர் ஓடினது மாடோ அல்லது வேறு மிருகமோ இல்லையென்றும், அது மனிதன் தான் என்பதையும், கத்தினவனுடைய குரலைக்கொண்டு அது சாம்பசிவத்தின் குரல்தான் என்பதையும் கூட கணத்தில் உணர்ந்து கொண்டு விட்டார்.

சாம்பசிவம் இச்சமயத்தில் கொல்லைப்பக்கம் வந்துவிட்டு எதற்காக ஓடுகிறான்? அவருக்கு சந்தேகம் தட்டியது காலையில் மாப்பிள்ளை வீடு பார்க்க நெல்லுப் பட்டுக்கு கிளம்பிக் கொண்டிருந்த போது கமலாவின் முகம் சரியில்லையே அவளுக்கும் அவனுக்கும் ஏதாவது... இப்படி நினைப்பில் ஊன்ற அந்த நினைப்பு அவருக்கு பிடிக்கவில்லை.

சாதிக்குள்ளேயே பெண் கொடுக்ககொள்ள லாயக்கில்லாத சாதியென்று அவனது குலத்தைப்பற்றி ஊர்ப் பேசிக்கொள்ளும்

விந்தைகள் தெரிந்தும், அவளுக்கு அவனிடம் பிரியம் இருக்குமா எனன?

"நா தப்பா நெனைக்கிறேனோ... அப்படி ஒரு நெனப்போ, ஆசையோ கமலாவுக்கு கனவுலக்கூட வரக்கூடாதே கடவுளே கனவுலக்கூட வரக்கூடாதே கடவுளே" நெல்லுப்பட்டுக்கு மாப்பிள்ளை வீடு பார்க்க போனதற்கே தருமையா நாட்டாரும் கோபால் குச்சிராயரும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள் இப்படி கதையென்றால் மூஞ்சியில் துப்பிப்புடுவார்கள் துப்பி.

அவருக்கு மேலும் பருத்திக் கொல்லையிலிருக்கப் பிடிக்கவில்லை. மாடு கன்று ஏதும் நிற்கிறதாவென்று மேலோட்டமாய் ஒருதரம் பார்த்துவிட்டு வீட்டைநோக்கி வேகமாக வந்தவர் அப்போதுதான் கொல்லைப்புற கதவு அடித்து சாத்தப்படும் சப்தம் கேட்டு ஆரது... என்று சற்று அதட்டும தொனியில் கேட்டார்.

"நாந்தாப்பா" சற்று சன்னமான குரலில் உள்ளிருந்து சொன்னவள் கமலாதான்.

அவருக்கு இப்போது சுத்தமாய் சந்தேகம் இல்லை. எல்லாம் தெளிவாக இருக்கிறது. நினைப்பில் சிக்கலில்லை காலையில் நெல்லுப்பட்டு போனபோது கமலாவின் முகம் சரியில்லாமலிருந்ததற்கும் சாம்பசிவம் இந்நேரத்தில் கொல்லைப் பக்கம் வந்துவிட்டு ஓடுவதற்கும், இவள் கொல்லைப்புற கதவை சாத்துவதற்கும் சம்பந்தம் இல்லாமலா இருக்கிறது?

"நம்பளுக்குத் தெரியாமலேயே இப்படி அக்குரும மெல்லாம் நடக்கிறதா?" நினைக்க கசப்பு உண்டாகிறது மட்டுமில்லை இந்நேரத்தில் ரெண்டுபேரையும் ஒத்துப் பார்த்திருந்தால் கடித்து துப்பியிருக்கலாம் என்பதாக வருகிறது ஆத்திரம். தனக்குள்ளாகவே பற்களை நறநறக்கிறார்.

இதமாய் வீசும் வேப்பமரத்து காத்துக்கூட அக்கினியாய் தகித்து உடம்பை வியர்வையால் தெப்பலாக்குகிறது அடிவயிற்றிலிருந்து எங்குமாய் திகுதிகுவென்று எரிய வேறு செய்கிறது.

கண்ணால் பார்க்காமல் காதால் கேட்காமல் இப்படி நிகழ்ச்சியை வைத்து எப்படி முடிவெடுப்பது? பூனை வரவும் உறி அறுவவுமான கதையாகவா அர்த்தம் கொள்வது?

மனசை நெஞ்சை தேற்றப் பார்த்தும் எதுவோ துடிக்கிறது. பிறத்தியாரிடத்தில் சொல்லி ஆறுதல் படக் கூடிய சங்கதிகூட இல்லையே இது என்ன பண்ணுவது?

வேகமாய் தெருப்பக்கம் வந்தவர் ஆத்திரத்துடன் கணைத்துக் கொண்டு படுக்கைக்குப் போனார்.

இன்றைக்கு ராத்திரி முச்சூடும் அவருக்கு தூக்கம் எங்கே வரப்போகிறது?

இதோ பக்கத்து திண்ணையில் குறட்டையடித்துக் கொண்டு நிம்மதியாக தூங்குகிறவன் மகன் தங்கவேலுவல்லவா?

அவருக்கு அவனைப் பார்க்க ஏக்கமாகக் கூடத் தானிருக் கிறது.

**...இவ்வளவு பெரிய நஞ்சை வெளியே அகற்ற முடியாமல் நெஞ்சுக்குள்ளேயே போட்டு அடைத்து வைத்திருக்கிறதுக்கெல்லாம் காரணமென்ன? ஒரு சாதிக்குள் எத்தனை சாதிகள் எத்தனை பிரிவுகள்...**

# 6

ராத்திரி முழுக்க அவருக்கு தூக்கமில்லை என்பது நிஜம். லேசாக தூக்கம் வந்து கண்களை மூடுகிற தறுவாயில் கூட திடுக்கிட்டார்போல் அரண்டு எழுந்து உட்கார்ந்து கொள்வார். அர்த்தமில்லாமல் நெஞ்சு பதறுகிறதே என்று நினைத்துக் கொள்வார். பொட்டலத்தைப் பிரித்து வெத்திலை போட்டுக் கொள்வார். பக்கத்தில் வைத்திருக்கும் சொம்புத் தண்ணீரை எடுத்து வாய் கொப்பளிப்பார். மீண்டும் வெத்திலை போடு படலம் துவங்கும்.

தங்கவேலு குறட்டையடித்து கொண்டு தூங்குவான் அவனைப் பற்றி நினைத்துக் கொள்வார், "ரெண்டாங் கட்டிப் பயல் மூணு கழுதை வயசாயி என்ன பெரோஜனம் இதெல்லாத்தையும் கண்டுக்க அவனால முடியுமா? சொன்ன வேலயும் செய்றது கெடையாது சினிமா நெப்பு ஒண்ணுதான் பயித்தியக்காரப்பயல் ப்டியும்ருப்பானா கம்னாட்டி?"

தனக்குள் ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தை கமலாவிடம் எப்படி கேட்பதென்கிற பிரச்னை அவருக்குள் அதிகமானபோது அவர் நிதானமாய் சிந்திக்கத் தொடங்கினார். சாம்பசிவம் கமலா இருவரையும் ஒன்றாக சேர்ந்து அவர்கள் பேசிக் கொண்டதையோ அவர்கள் நெருக்கமாக இருந்ததையோ பார்க்காதபோது அவள் அவனுடன் தொடர்பு வைத்திருக்கிறாள் என்பதை எப்படி கணக்கிடுவது? ஓடின உருவத்தைப் பார்க்காமல் குரலை மட்டும்

வைத்து அது சாம்பசிவம் தான் என்பதை எப்படி அறிவது? பேச்சுக்குரல் என்றால் அது இன்னார் குரல் என்பதை நிர்ணயம் பண்ணிவிடலாம் "ம்மா" வென்ற குரலில் எப்படி அவன் தானென்று நிச்சயமாய்...

அவருக்கு குழப்பமாகவிருந்தது. தங்கவேலு எழுந்து ரோட்டுப்பக்கம் போய்விட்டான். கமலா தான் காலை காப்பி போட்டுக் கொண்டு வைத்தாள். கமலாவின் முகத்தில் ஏதாவது மாறுதலிருக்கிறதா என்பதை லேசாக நோட்டம் விட்டார். அவள் எப்போதும் போலிருந்ததை வைத்து தான் அர்த்தமில்லாமல் சந்தேகப்படுகிறோமோ என்பதாக நினைத்துக் கொண்டார். காப்பியைக் குடிக்க ஆரம்பித்தபோது தருமையாநாட்டார் அவர் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவர் இந்நேரத்தில் எதற்காக வருகிறார் என்பதை கணத்தில் புரிந்துகொள்ள முடிந்தது முத்துக்கண்ணுவிசுவராயரால்... நேத்தைக்கு சாயந்தரமே அவர் வருவாரென்று எதிர்பார்த்ததுதான் ஏனோ விடிந்து வருகிறார் ராத்திரி முச்சூடும் ஆசாமி தன்னைவந்து சந்திக்கிறதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாரோ என்னமோ?

"வாங்க மச்சா"- இது முத்துக்கண்ணு.

லேசான கனைப்புச் சத்தத்துடன் "வர்றன்" என்று சொல்லிக் கொண்டே திண்ணையில் போய் குந்தினார். சற்று ஒடிசலான உருவம்தானென்றாலும் சிவப்பு நிறம் அக்குறையை மறைத்து வைத்தது. கட்டிய தலைமுண்டாசைக் கூட அவிழ்க்கவில்லை அப்படியேதான் குந்தியிருந்தார். தொந்தியில் பட்டைபட்டையாய் சுருக்கம் கோடாய் நெளிந்து கிடந்தது.

"ஆயி..., காப்பிருந்தா மாமாவுக்கும் கொண்டாந்து குடேன்" என்று உள்ளே பார்த்து சொல்லிவிட்டு அவர் கேள்வியையோ அல்லது பேச்சையோ ஆரம்பிக்கிற துக்கும் முன்னால் இவரே பேச ஆரம்பித்தார்.

"நேத்து நெல்லுப்பட்டு போனனா"-

"ஆமா அதப்பத்தி தெரிஞ்சிகிட்டு போலாம்னு தான் வந்தன் சாயரச்சையே வரணும்னுநா ஆச நீங்க வூர்லேருந்து வந்ததும் தருபுருன்னுருந்தாப்லருந்துச்சி அதான் வல்ல சரி போனக்காரியம் என்னாச்சி மச்சா நல்ல எடம்தானா?"

இதற்கொன்றும் விசுவராயர் ... வடியாய் பேச ஆரம்பிக்க வில்லை. நாட்டாருக்கான காப்பி வருகிறதாவென்று மீண்டும் ஒருமுறை உள்ளே பார்த்து ஆச்சா வென்று குரல் கொடுத்துவிட்டு தெருவைப் பார்த்தார்.

தெருவில் போட்டிருந்த கோலத்தை நாலைந்து காக்காய்கள் கூடி கலைத்து சிதைத்து அரிசிமாவை கொத்திதின்று கொண்டிருந்ததைப் பார்க்க சகிக்காமல் ச்சூ... வென்று கையைத் தட்டி விரட்டினார்.

"ஒரு பொம்பள சாமத்துலயே எந்திரிச்சி கஷ்டப் பட்டு போட்ட கோலத்த ந்தக் காக்காய்ங்க எத்தன சுளுவா அளிக்கிது பாருங்க மச்சா".

"கோலம் கலையறதப்பத்தி கவல. அதுங்களுக்கு ... பசி பெருசாருக்கு"

இதற்குள் காப்பியை பூரணி கொண்டுவந்து வைக்க நாட்டார் காப்பியைக் குடிக்க ஆரம்பித்தார். இந்த காக்காய் கோல விவகாரமெல்லாம் அவருக்கு புரியாமல் இல்லை. புரிந்ததாய் காட்டிக் கொள்ள இஷ்டப்படவில்லை.

"சரி சொல்லுங்க... போனக்காரியம் என்னாச்சி?"

"நல்ல எடம்தான்".

"என்னாய்யா நல்ல எடம் நல்ல எடம்னு பெருசா பீத்திருக்கிற... தெக்குச்சீமைக்காரனப் போய் நல்ல எடம்னு ஒங்களால எப்டி சொல்ல முடியுது? சொத்து சொவமெல்லாம் எப்டி?"

முத்துக்கண்ணு விசுவராயருக்கு அதற்குமேல் பேசப்பிடிக்க வில்லை. தெற்கத்திக்காரர்களை இளப்பமாகவும் உதாசீனப் படுத்தியுமாய் பேசுகிற இவருக்கு அவர்கள் கொத்து சுகங்களை கேட்டுத் தெரிந்துகொள்ள அத்தனை கரிசனம் எதற்கு என்பதாய் நினைத்து "அப்டியெல்லாம் எதிர்பாத்தமாறி ஒண்ணுமுல்லே" என்று சற்று கோபமாகவே பதிலைச் சொல்லிவிட்டு மேலும் அவருடன் பேசப் பிரியமில்லாமல் திண்ணையிலிருந்து எழுந்தவர் "வயலுக்கு போவணும் பயல் பூச்சிமருந்து வாங்கிகிட்டு வந்துருக்[redacted]யிலுக்கு முன்னாடி போய் அடிச்சிபுடணும்... ந்தா தங்கவேலும் வந்துட்டான். எலே தம்பி, காப்பிய சாப்ட்டுட்டு 'பெரையர' எடு பூச்சிமருந்த அடிச்சிட்டு வந்துருவம்" என்றார்.

"ஒண்ணு சொல்லிபுடுறேன் கொஞ்சருங்க... நீங்க தெக்குச்சீமய் நாடிப்போறது நம்பூரு ஜனங்களுக்கு கொஞ்சமும் புடிக்கலே... ஊருக்குள்ள நேத்து முழுக்க அதப்பத்திதான் பேச்சாருந்துச்சி... இந்த விசியத்த ஒங்க காதுல போட்டுட்டு போவணும்னுதான் இப்ப வந்தன்.. எதுலயும் நெதானிச்சி செயல்பட்டா தேவல மச்சோ"

"நா ஒண்ணும் நெதானிச்சி செயல்படணும்னு அவசியமுல்ல மச்சா... ஏ பொண்ணுக்கு எனக்கு புடிச்சமான சம்பந்தத்த தேடிப் போறதுக்கு ஊரான் அயிப்ராயத்தை கேட்டுத்தான் நடக்கணும்னு ஒண்ணும் அவசியமுல்லே இது ஏ சொந்தப்பெரச்னை"

"இப்டி எடுத்தெறிஞ்சி பேசுறது நல்லாயில்லை மச்சோ... ஊரப்பகச்சிகிட்டு ஒங்களாலஒண்ணும் பண்ணிர முடியாது. நீங்க தெக்கு சீமப்பக்கம் சம்பந்தம் போடப் போறதை ஊரு ஜனம் மொத்தமும் ஊரோட கௌரவம்னுதான் எடுத்துகிட்டிருக்கு".

"அப்டியா சங்கதி... நா தெக்குச்சீமையில ஏ பொண்ணுக்கு சம்பந்தம் போடாம தூங்கப் போறதுல்ல மச்சா... முடிஞ்சா பாருங்க என்று சொல்லிவிட்டு வேகமாய் துண்டை உதறி தோளில் போட்டவர். தங்கவேலு பெரேயர தூக்கிகிட்டு மருந்து டப்பிய எடுத்துகிட்டு பருத்திக்கொல்லக்கி வாடா" என்று கிளம்பிப் போய்விட்டார்.

நாட்டார் அவர் கோபப்பட்டு போகிறதை பார்த்துக் கொண்டேயிருந்தார். அவரை போபப்படுத்த வேண்டும் என்பது தானே நாட்டாரின் திட்டம். அந்தத் திட்டம் நிறைவேறி விட்டதில் அவருக்குத் திருப்தியிருந்த போதிலும், அதை முகத்தில் காட்டிக் கொள்ளாமலேயே, “தங்கச்சி, டம்ளரை எடுத்துகிட்டு போயி உள்ளார வையி” என்று சொல்லிவிட்டு படியிறங்கி நடக்க ஆரம்பித்தார்.

இத்தனையையும் கதவு மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்த கமலாவுக்கு வயிற்றில் புளி கரைத்தது. லேசாக அழக்கூட ஆரம்பித்து விட்டாள்.

ஒரு பெண்ணைப் பெத்து கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கி அவள் வயசுக்கு வந்து ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்கிற வரை இத்தனை குறுக்கீடுகளா? சாதீய விஷயங்கள் இத்தனை அழுத்தமாய் ஒரொருத்தர் நெஞ்சத்திலும் ஆழ வேரூன்றிப் போனதற்கு அடித்தளமான காரணமென்ன என்பதற்கு அவளால் பொருளபுரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வளவு பெரிய நஞ்சை வெளியே அகற்ற முடியாமல் நெஞ்சுக்குள்ளேயே போட்டு அடைத்து வைத்திருக்கிறதுக்கெல்லாம் காரணமென்ன? ஒரு சாதிக்குள் எத்தனை சாதிகள் எத்தனை பிரிவுகள் ஒரு பிரிவுடன் இன்னொரு பிரிவு ஒட்டால் உறவு கொள்ளாமல் - அப்படியே உறவு கொள்பவர்களை கெடுத்து நாசமாக்கி அந்த நச்சுப்பயிரை மேலும் மேலும் உரம்போட்டு வளர்க்க அது எந்தப் பலனைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்?

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அழாமலிருக்கவும் முடியவில்லை.

“நீ ஏண்டி ப்ப அளுவுற ஒனக்கு அதுக்குள்ள என்னா மசுறு வந்துச்சி?” என்று பூரணிகூட சற்று கடுமையாய் கேட்கிற அளவுக்கு ஆய்விட்டது கதை.

அம்மாவிடம் என்ன பேசுவதென்று தெரியாமல் அழுகிறதை தற்காலிகத்திற்கு நிறுத்திவிட்டு லேசான சேருமலுடன் கண்களை கசக்கியபடி நின்று கொண்டிருந்தாள் கமலா.

“பாலக்குடிச்சிபுட்டு பாதவம் நெனைக்கிற ஊரானுக்கு மத்தியில நாம்ப எப்டிதான் சம்பந்தம் போட்டு சாலை ஏறப் போறமோ தெர்யலயே” அவள் இப்படி புலம்பிக் கொண்டிருக்கிற வேளையில் காய்கறிகூடைக்காரி சத்தம் கொடுத்தாள்.

“ம்மோவ்... கத்திரிக்கா கொத்தரங்கா பாவக்கா வெண்டிக்கா; கூடய எரக்கட்டா?”

“நீ வேறக்கா சமயம் பாத்து கத்துற ப்ப காயில் லாமத்தான் கொறச்சலாருக்கு இஞ்ச”.

“என்னாம்மா ம்புட்டு கடுசு காத்தாலயே ஐயா வசாங்களா?”

“ஒனக்கு வேற வதிலு சொல்றதுக்கு நம்பளால முடியாதுக்கா நல்ல நேரத்துல எடத்தக் காலிபண்ணு”

அவள் ‘ம்’....மென்று இளக்காரமாய் சிணுங்கி விட்டு மறுபடியும் தெருவிலிறங்கி “கத்திரிக்கா, கொத்தரங்கா” யென்று குரலெழுப்ப ஆரம்பித்தாள்.

“நெல்லுப்பட்டு சம்பந்தத்த ஊரு காரனுங்களுக்கு தெரியாம கம்முனுருந்துதான் முடிக்கணும் ல்லாட்டி ஊரானுவளே சேந்து கெடுத்துபுடுவானுங்க போலருக்கே” இப்படி முணுமுணுத்தவாறு அடுப்படிப் பக்கம் காரியம் பார்க்க கிளம்பினாள் பூரணி.

கமலா இப்போது சாம்பசிவத்தை நினைத்துக் கொண்டாள். காலையில் கொல்லைப்பக்கமாய் நின்றோ ரோட்டுப்பக்கம் போகிற போதோ நைசாக பார்த்து விட்டுப்போகிறவனை காலையிலிருந்து பார்க்க முடியவில்லை. அவரை அப்பா கம்பை விட்டெறிந்து அடித்தது காலிலோ உடம்பிலோ பலமாக பட்டு விட்டதோ என்பதாக வேறு நினைத்து குழம்ப ஆரம்பித்தாள்.

அவன் ‘ம்மா’ வென்று அலறித்துடிக்க இவள் நெஞ்சில் பட்ட அடியாக அது விழுந்ததை இப்போதும் உணர்ந்து பார்க்கிறாள்.

கணத்தில் அப்பாவின் பார்வையிலிருந்து தப்பி மூங்கில்களின் மறைவிலிருந்து ஓடிவந்து கொல்லைப்புற கதவைத் திறந்து மூடும்போது அப்பாவின் ‘ஆரது’ குரலில் இவள் நடுங்கித் தான் போனாள். அப்பா தன்னையும் கவனித்திருப்பாரோ என்றும் நினைக்கத் தோன்றியது. ராத்திரி முழுக்க இவளுக்கும் கூட தூக்க மில்லைதான் ‘அவருக்கு அடி பலமாக விழுந்ததோ என்ற நினைப்பும் அப்பாவின் சந்தேகத்திற்கு ஆளாகி விட்டோமோ என்ற நினைப்புமாய் அவளைத் தூங்கவிடவில்லை. அவருக்கு ஒண்ணும் ஆயிருக்கக்கூடாது தாயே’ என்று மானசீகமாய் வேண்டிக் கொண்டதை நினைத்து இப்போதும் கூடகரிசனப்பட்டுக் கொண்டாள்.

எது எப்படியிருந்த போதிலும் அப்பாவுக்கும் ஊர்க்காரர்களுக்குமாய் தன்னுடைய கல்யாண விஷயங்கள் காரணமாய் ஏற்பட்டிருக்கும் ப்ரச்னைகள் புயலென வீசத் தொடங்கினாலும், தான் சாம்பசிவத்தையே மணப்பதென்பதை இப்போது கூட தீர்மானமாகவும் வக்கிரமாகவும் நினைத்து பெருமூச்சு விட்டாள். இதற்காக ஊராருடனும் தாய் தந்தையருடனும் எப்படி எதிர்த்து போரிடப்போகிறேம் என்பதை நினைக்க நடுக்கமாக இருக்கத்தான் இருந்தது. கமலாவுக்கு.

**அவனுக்குப் புரியவில்லை, தனக்கு விஷயம் தெரியக் கூடாது என எல்லோருமே மறைக்கப் பார்க்கி றார்கள் என்பதை மட்டும் அவர் களின் தோரணைகளை மதிப் பிட்டு புரிந்து கொள்ள முடிந்தது.**

# 7

தருமையா நாட்டாருக்கு முத்துக்கண்ணு விசுவராயர் பேசிய பேச்சுக்களோ செயல்களோ கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பது ஒரு பக்க மிருந்த போதிலும் விசுவராயர் இக்காரியத்தில் முழுமுச்சாக இறங்கும் பட்சத்தில் அது இந்த கிராம்திற்கு ஏற்படக் கூடிய அவமானம் என்பதாக கருதினார். அதைத் தடுக்கும் பொருட்டாக அவரே கிராம முக்கியஸ்தர்களென்றிருக்கிற பெரிய வீட்டு நாயக்கர் போன்ற சிலரைச் சந்தித்து விசுவராயரின் திட்டத்தைப் பற்றியும் அவரின் செயல்பாடுகள் குறித்தும் ஒன்றுக்கு இரண்டாக திரித்து செய்திகளை பரப்பிக் கொண்டிருந்தார்.

இன்னொரு பக்கத்தில் கோபால்குச்சிராயரும் இதுமாதிரியான காரியங்களைத்தான் செய்து கொண்டிருந்தார். இவ்வூர் இளைஞர்களைக்காட்டி தமது கிராமம் எத்தனை புனிதமானது என்பதாகவும், ரொம்பவும் லௌகீகமான கிராமம் என்பதாகவும், ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவைகளில் எந்த கிராமத்திற்கும் குறைச்சலில்லாத கிராமம் என்பதாகவும், சில சீர் கெட்ட தாறுமாறாக முறையில்லாமல் திருமணக்காரியங்கள் நடத்திக் கொண்டிருக்கும் கிராமத்தார்கள் தமது கிராமத்தில் சம்பந்தம் கொள்ளும் பட்சத்தில் இந்தக் கிராமமும் ஏற்கனவேயே கொண்டிருந்த புனிதத்தன்மையை இழந்து விடும் என்பதாகவும் சொல்லி தமது கிராமத்திற்கு விசுவராயரால் ஏற்படப்போகும் மாசை தடுக்க முன்வர வேண்டும் என்பதை ஒரொருத்தர் காதுகளிலும் ஊதிக் கொண்டிருக்கிறார்.

ஒரு சாதிக்குள்ளேயே இப்படிப்பட்ட பிரிவுகளும் பிளவுகளும் விதவிதமாய் இருக்கிறதென்று குச்சிராயர் சொல்லித்தான் அவர்களுக்கு புரிந்தது. இதைப்பற்றி இவ்வளவு நாட்களாய்த் தெரிந்து கொள்ளாமல் போனோமே என்பதாகக் கூட அவர்கள் கவலைப்படத் தான் செய்தார்கள். அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் ஒரு சாதியினர் மற்றொரு சாதிக்காரர்களிடம் உறவு முறை வைத்துக்கொள்ளக் கூடாது என்பதைத்தானே தவிர சாதிக்குள்ளேயே சாதிபார்க்கிற சங்கதிகளையல்ல.

உதட்டோரத்தில் அரும்புகட்ட ஆரம்பித்திருக்கிற இளைஞர்களுககு தான் கல்யாணம் பண்ணக்கூடிய பெண் எப்படியிருக்க வேண்டும் என்பதிலேயும் அவளுடன் எங்கெல்லாம் சுற்றித்திரிய வேண்டும் என்பதிலேயும் தான் கனாக்கள் இருக்குமேத் தவிர சாதீய விஷயங்களில் அல்ல.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்ருக்கிற நமது இளைஞர்களுக்கு அப்பாக்களோ-அம்மாக்களோ ஊரார்களோ கட்டுப்பாடு விதிக்காத பட்சத்தில் அவர்கள் சாதிவிட்டு கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூட தயார்தான், ஆனால் தருமையா நாட்டார் கோபால் குச்சிராயர் போன்ற பிரகிருதிகளால் போடப்படுகிற முட்டுக்கட்டை அவர்களின் இளமை வாழ்க்கையையே நாசமாக்கிவிடுகிற உண்மையை அவர்கள் எங்கே அறிந்தார்கள்?

பெண் பார்க்க லட்சணமாக இருந்தால் போதுமென்று நினைக்கிற இளைஞர்களின் மத்தியில் இப்படிப் பட்ட நச்சுக்கள் உடே புகுந்து அவர்களின் மனசையே மாற்றிவிடுகிற உண்மை ஒரொருத்தருக்கு புரிந்தும் கூட அதை எதிர்க்க வேண்டுமென்ற திராணி இன்னும் இந்த இருபதாம் நூற்றாண்டு கண்ட இளைஞனுக்கு வரவே இல்லை.

ஒரு நல்ல மருந்து மனிதனின் திரேகத்தினுள் புகுந்து வேலை செய்ய நேரமாகிறது. ஆனால் நச்சு அப்படியில்லை உட் கொண்டவுடனேயே அதன் குணத்தைக்காட்ட தொடங்கி விடுகிறது இப்படித்தான் நல்ல விஷயங்களோ சிந்தனைகளோ செயல்களோ சுலபத்தில் மனிதனைப் போய் அடைவதில்லை. ஆனால் தீய விஷயங்கள் அவனை லபக்கென்று பிடித்துக்

கொள்வதற்கு மனிதனுடைய பலஹீனங்களும், விசித்திரமான கற்பனைகளும், குணங்களுமே காரணமாக அமைந்து விடுகிற உண்மையை எத்தனை பேர் அறிந்து வைத்திருக்கிறார்கள்?

இப்போது கோபால்குச்சிராயர் சொன்ன சங்கதிகளுக் கெல்லாம் இளைஞர்கள் பூம்பூம்மாடு மாதிரி தலையைத்தான் உலுக்கினார்களேத் தவிர ஒருத்தராவது அது தவறான தென்று சொல்ல முன் வரவில்லை.

கோபால் குச்சிராயருக்கு பெருமிதமாக இருந்தது இளைஞர்களை இத்தனை சீக்கிரத்தில் வசப்படுத்தி விட்ட தந்திரத்தை எண்ணித்தான். இனி பயமில்லை முத்துக் கண்ணு விசுவராயரை யார் நீ - எந்த ஊர் நீ என்று கேட்டு விடலாம்.

குளத்தங்கரை ஆல மரத்தடியில் இளைஞர்களுக்கு மத்தியில் அவர் குட்டி பிரசங்கம் போல் உரை நிகழ்த்தி முடிக்கையில் சாம்பசிவம் அங்கு வந்தான். என்ன கூட்டம் கூடிக்கிடக்கிறதே என்று பார்க்கத்தான். அவனைப் பார்த்த நிமிஷத்தில் அத்தனைபேர் வாய்களுமே அடைத்துப் போய் விட்டது.

அவனுக்குப் புரியவில்லை, தனக்கு விஷயம் தெரியக் கூடாது என எல்லோருமே மறைக்கப் பார்க்கிறார்கள் என்பந்தை மட்டும் அவர்களின் தோரணைகளை மதிப்பிட்டு புரிந்து கொள்ள முடிந்தது.

மேலும் அவன் அங்கு நிற்க விரும்பதாவன் போல குளத்துப் பக்கம் போனான். தண்ணீரில் கிடந்த எருமைகள் தலையை முக்குவதும் வெளியே எடுத்து பெருமூச்சு விடுவதுமாக இருந்தன. குளத்திலிருந்த அல்லிப்பூக்கள் முக்கால் இதழ் விரிப்புடன் மூடுவதற்கு தயாராக இரந்த மத்தியான நேரம். அவன் வேஷ்டியை அவிழ்த்து கரையில் வைத்து விட்டு உள்சராயோடு குளத்துக்குள் இறங்கினான்.

கோபால்குச்சிராயர் இதற்குள் வாலிபர்களின் காதுகளில் என்ன ஊதினாரோ எல்லோரும் கலைந்து போனார்கள்.

குச்சிராயரின் தோள்பட்டையில் ஆலமரத்திலிருந்து ‘ச்சொதக்’ விழுந்தது. எந்த எழவு காக்கயோ எச்சமிட்டு பறந்தோடிப் போனது.

இவர் அதற்காக அசிங்கப்பட்டுக்கொண்டு கழுவ குளத்துப் பக்கம் போனார். கெண்டைக்கால் தண்ணீரில் நின்று எச்சத்தை ஒருவித அருவறுப்புடன் கழுவிக் கொண்டிருக்கும் போது சாம்பசிவம் குளத்தை விட்டு கரையேறி வந்து கொண்டிருந்தான்.

சாம்பசிவத்திடம் என்னமோ சொல்லும் பொருட்டாக வாயெடுத்தார் சுற்றி யாராவது இருக்கிறார்களா வென்று நோட்டம் பார்த்தார். ஒருத்தருமில்லை.

“சாம்பசிவம்...”

அவன் திரும்பி அவரைப்பார்த்தான். கூப்பிட்ட தோரணையை வைத்து அவர் தன்னிடம் ஏதோ ரகசியம் சொல்லப் போகிறார் என்பது புரிந்தது.

“யா மாமா...?”

“ஒண்ணுமுல்ல... இப்டி கிட்ட வாயேன்”

“யா மாமா?”

“ஒரு சங்கதி கேள்விப்பட்டன் நெசமான்னு தெரிஞ்சிக்கணும்”.

“என்னா மாமா?”

“ஒன்னப்பத்திதான்”

“என்னப்பத்தியா?..... அப்படி என்னா மாமா கேள்விப் பட்டீங்க?”

“ஒண்ணுமுல்ல... ஒண்ணுமுல்ல...” என்று சொல்லிக் கொண்டே அவன் கிட்டே வந்தார். அவர் எப்பவோ குடித்த

சுருட்டின் நாத்தம் வயித்தைக் குமட்டியது. அறுவறுப்பை முகத்தில் காட்டிக் கொள்ளாமல் கொஞ்சம் தள்ளியே நின்று, "ஒண்ணுமுல்லன்னா என்னாமாமா" என்று மீண்டும் கேட்டான்.

"அப்றம் சொல்றன...."

"இப்பவே சொல்லியிருங்க மாமா ல்லாட்டி தலவெடிச்சிரும் போருக்கு"

மீண்டும் அவர் சுற்று முற்றும் பார்த்து விட்டு குரலை ரொம்பவும் அழுத்திச் சொல்கிறார். "நீயும் நம்ப விசுவராயரு பொண்ணு கமலாவும் கொடமுருட்டி வாய்க்கா கரையில குந்தி பேசிகிட்டிருந்ததை ஏ பெரிய பொண்ணு நீலா மூங்கி குத்து மறவால நின்னு பாத்து கிட்டிருந்ததா ஏங்கிட்ட வந்து சொன்னுச்சி... உம்மையா தம்பி?"

"அச்சச்சோ.... அத ஒங்க பெரிய பொண்ணு நீலா பாத்துருச்சா! மாமா மாமா... நீங்க நல்லாருப்பீங்க, அந்த ரகசியத்த ஆர்கிட்டயும் சொல்லிராதீங்க மாமா...

"நா சொல்லமாட்டன்"

"இப்ப நம்ப ஊரு பையனுங்களைவச்சி என்னமோ பேசிகிட்டிருந்தீங்களே இதப்பத்திதானா மாமா?"

"அட ஏப்பா... நீ ஒண்ணு தட்டுக்கெட்டத்தனமா பேசிகிட்டு. இதப்போயி அவங்ககிட்ட சொன்னா ஒன்ன சும்மாவுட்றுவாங்களா? வந்தாருகுடிபயலுக்கு அம்புட்டுத் துமுருன்னு ஒன்னய நசுக்கி புடுவானுவோ நசுக்கி தெரிஞ்சிக்க" என்று சொல்லிவிட்டு நாங்க வேற கதையில்ல பேசிகிட்டிருந்தம் அத நீ ஒண்ணும் தெரிஞ்சிக்கவாணாம் என்றார்.

இப்போது நான்கைந்து எருமைமாடுகளை ஓடடிக் கொண்டு கணேசக்கோனார் குளத்துப்பக்கம் வந்தார். தலையில் முண்டாசு. சவரம் செய்யப்படாத லேசாய் சுருங்கியமுகம் மாநிறத்திற்கும் சிவப்புக்கும் இடைப்பட்ட நிறம். சற்றேகீச்சுக் குரல்

வேஷ்டியை சூத்து தெரியவழித்து கோவணமாக கட்டியிருந்தார். முதுகில் வழிய வழிய வேர்வை.

"குச்சிராயரு என்னா மருவப்பிள்ளைகிட்ட பேசிகிட்டிருக் காரு... பொண்ணக் குடுக்குரேங்கறாராடா பேராண்டி?"

"ல்ல தாத்தோவ்... மாமா சம்மதிச்சாலும் பொண்ணு எங்க சம்மதிக்கப் போவுது"

"யாண்டா சம்மதிக்காது... ஆளு ஜோருபாரா இல்லன்னா?"

"இல்ல தாத்தா" அவன் தலையைச் சொறிகிறான்.

"நீ ஒண்ணுடா மயிராண்டி. கையவச்சி சூத்துக் களுவத் தெரியாத செறுக்கிவோளுக்கு மாப்ள அம்புட்டா பத்தாது. எப்ப எப்பன்னு இருப்பாளுவோடா... எதுக்க நிக்கிற மமாமனாருக்கு அத இத வாங்கிக்குடுத்து நைசு பண்ணி வையிடா... ஒரு பொண்ணு என்னா மூணு பொண்ணையுமே கட்டி வச்சிருவாரு".

"அதுக்கில்ல தாத்தோவ். நாங்க வந்தாருகுடி... ந்த ஊருக்கு பொளைக்க வந்தோம்... அறுத்துக்கட்ற ஊர்ல பொறந்துட்டதால எனக்கு பொண்ணு தர யோசிப்பாரு"

"அப்டியா குச்சிராயர...?"

"ஆமாண்டி மயிரு... கோனான்ல இப்டி வளக்கம் சளக்கமுல்ல... கள்ளன்ல்ல ஒவ்வொண்ணையும் நோண்டி நோண்டி பாக்கணும் தெரியுமா?"

"அப்புடி கோனானப்பத்தி லேசா நெனச்சிராத குச்சிராயர... எடையன்ல்ல எத்தனவக தெர்யுமா கள்ள எடயரு... சாம்பாரு எடயரு... சோளிய எடயரு... பொண்டுவமேச்ச எடயரு,கவுருகட்டி எடயரு...இன்னுஞ் சொல்லட்டா...?"

"ஐயய்யோ நிறுத்துய்யா கோனாரே... இம்புட்டுருக்கா, நா கோனான் குடியிருக்க ஊர்லருந்துகிட்டு இதக்கூட தெரிஞ்சிக்கா மருந்துட்டன்.

கணேசக்கோனார் மேலும் ஏதோ பேச வாயெடுத்தவர் எருமைமாடுகள் தண்ணீருக்குள் இறங்கிப் போய் விட்டதைப் பார்த்து "ஹேரியாவ்...ஹே...ஹே...எல...ஹேரியாவ்" என்று மாட்டை அடக்கிக் கொண்டே தண்ணீரில் இறங்கி மாடுகளோடு போய்க்கொண்டிருந்தார். இப்போது குச்சிராயர் சுத்தமாய் பேசவந்ததைக்கூட மறந்து விட்டார்.

"சரி. நீங்க வாங்க மாப்ள... அவுருகெடக்காரு... நா சொன்ன சங்கதியப்பத்தி முத்துக்கண்ணு விசுவராயனுக்குத் தெரியுமா?"

"அதப்பத்தி எனக்கொண்ணும் தெரியாது மாமோவ்"

"நீ இப்ப சொன்னபாரு வந்தாரு குடின்னு.... அவுரு அந்த எடத்த நெனச்சித்தான் ஒனக்கு கமலாவக் குடுக்கத் தயங்குவாரு ...ந்த விசயத்துல நீ நல்லா யோசன பண்ணிக்க. ஏஞ்சொல்றன்னா விசுவராயரு நெல்லுப்பட்டுக்கு மாப்ள பாக்கப்போன சங்கதியே ஊர்ல ஆருக்கும் புடிக்கல ஒரே கரச்சலாருந்துகிட்டிருக்கு... நடுவுல இப்புடி சங்கதின்னா விசுவராயரே ஒத்துக்கிட்டாக்கூட ஊரு ஒத்துக்காது".

"கமலாவ என்னால மறக்கமுடியாதே மாமா"

"அதுக்கு என்னாத் தம்பி பண்ண முடியும்? மறந்துட்டுருக்க வேண்டியதுதான்... ஊர்ல கட்டுசட்டுன்னு ஒண்ணுருக்கப்ப நீ நடுவாந்தரத்துல வந்து கூத்துக்கட்டி அடிக்கணும்னா முடியுமா? ஓ ஊரப்பக்கமே போயி பாத்து ஒரு பொண்ண கிண்ண கட்டிக்க் இந்தச் சேதிய நா வெளியில உடல நீ போ மாப்ள".

கனத்த மனசோடு சாம்பசிவம் போய்விட்டான் குச்சிராயருக்கு ஏதோ ஒரு திருப்தி நெஞ்சினில் உண்டாகி விட்டது மாதிரி இருந்தது. எப்படியோ கமலாவுக்கு கல்யாணம் நடக்காமலிருந்தால் சரியென்று நினைத்தும் ஒரு வழியாக சாம்பசிவத்தை சரி பண்ணிவிட்டதாக நினைத்தும் வீட்டுப்பக்கம் நடக்க ஆரம்பித்தார்.

வீட்டில் பெரியபெண் நீலா இல்லை. ஏதோ அவளிடம் சொல்வதற்காக கொட்டில் பக்கம் தேடினார். கொட்டிலிலும் இல்லை வைக்கல் போரடியில் மூங்கில் குத்துப் பக்கம் எங்கும் இல்லை, வாய்க்கால் பக்கம் குளிக்கப்போய் விட்டாளோ என்ற சிந்தனையில் மீண்டும் வீட்டுப்பக்கம் வருகையில் பயித்தம்பொக்கு மறப்பில் அவர் வீட்டு பண்ணைக்காரனின் பிடியில் அவர் பெரிய பெண் நீலா சிக்கித் திணறுவதைக் கண்டபோது அவர் எண் சாண் உடம்பும் நடுங்கித்தான் போனது.

நீலா... வென்று ஆக்ரோஷமாய் கத்தியே விட்டார். அவர் கத்துவதைப் பார்த்த பண்ணைக்காரன் நீலாவை விட்டுவிட்டு போயே போய்விட்டான்.

அவர் நிலைகுலுங்கி நின்று போனார். நீலா வீட்டுக்குள் ஓடிவிட்டாள்.

**...அன்றைக்கு ராத்திரி கொல்லைப் பக்கம் நடந்த சம்பவத்திற்கும் கமலாவின் மூஞ்சி சரியில்லாமல் இருக்கிறதற்கும் தொடர்பிருக்குமோ வென்று உள்ளாந்தரத்தில் கவலைப்படத்தான் செய்தார்...**

# 8

ஊரில் ஒரே கசமுசா. எல்லாம் விசுவராயர் வீட்டு சங்கதியைப்பத்தித்தான். அது ஏதோ குளத்துக்குள் போட்ட கல்லாகத்தான் இருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருந்தார் முத்துக்கண்ணு விசுவராயர். ஆனால் அது கல்லை குளத்துக்குள் விட்டெறிந்த மாத்திரத்தில் அலை சிறுசாகி மெல்ல மெல்ல பெரிசாக வருமே அது மாதிரிதான் இருந்தது.

என்னமோ நெல்லுப்பட்டில் சம்பந்தம் போடப் போனது ரொம்பப்பாவம் போலவும் அல்லது கேவலம் போலவும் எல்லாரும் அநாகரிகமாய் பேசிக் கொண்டிருக்கிறார்போல் தெரிகிறது. இவர் அன்றைக்கு தருமையா நட்டாரிடம் ரொம்ப வீருப்பாக பேசிவிட்ட போதிலும் உள்ளுக்குள் கொஞ்சம் கிலிதான்.

இவரும் கூட இந்த சாதிசமாச்சார உள் விஷயங்களைப் பார்ப்பதில் ரொம்ப அக்கரை உள்ளவர் தான் ஏனோ அவர் மாப்பிள்ளை பார்த்து விட்டு வந்திருக்கிற இடம் தெக்குசீமை என்பதைத் தவிர அது அறுத்து மறுகல்யாணம் பண்ணும் கிராமமில்லை என்பதாகவும் இந்தக் காலத்தில் மேச்சீமை கீச்சீமை தெக்குசீமையென்று பார்க்க வேண்டாமே என்றுதான் நினைத்து செயல்பட்டார். அது இத்தனை விபரீதமாய் சட்டைப்போடத் தெரியாத பயல்களெல்லாம் வாய் வைத்து பேசக்கூடிய அளவுக்கு பெரிசாகப் போகும் என்று அவர் நினைக்கவே இல்லை.

இது அவருக்கு வருத்தமாக இருந்தது. இப்பக்கூட குடிமுழுகிப் போய்விட வில்லை, மாப்பிள்ளை வீட்டுக்காரர் களிடம் கொள்கிறேன் கொடுக்கிறேன் என்று வாய்வைத்து பேசிவிட்டு வந்து விடவில்லை. நிலமை சிக்கலாகுமோ என்று பயந்தே அவர்கள் வீட்டில் ஒரு வாய் காப்பியோடும் வெத்திலைசீவல் சமாச்சாரங்களோடும் மட்டும் வைத்துக் கொண்டு வந்துவிட்டார். மாப்பிள்ளை வீட்டுககாரர்கள் லெட்டர் போட்டு வந்தால் 'இப்பக்கி கலியாணம் நடத்த தோதுப்படாது' என்று ஒத்தை வரியில் கடுதாசி எளுதிப் போட்டு விடலாம்.

இந்தப் பயல்களுக்கென்ன அத்தனை கொளுப்பு... அந்த நாய்ங்க வூட்டு சங்கதியப்பத்தி. இஞ்ச ஆரு வாவச்சி பேசிகிட்டிருக்கா ஏ வூட்டு சங்கதிய பூதக்கண்ணாடி வச்சி பெருசா பாக்குற அளவுக்கு என்ன முத்திப்போய் கெடக்கு என்று நொந்து கொண்டார்.

தங்கவேலுப்பயல்கூட "அனாவசியம் இல்லப்பா... ஊரானுங்க எத்தினிபேரு படதெரண்டு வந்தாலும் கவலப் படாதீங்க நா பாத்துக்குறள் ஆறுலயும் சாவு நூறுலயும் சாவு அதப்பத்தி நா நெகுர் பண்ணல நம்பவூட்டு பொண்ணுக்கு கல்யாணம் பண்றதப் பத்தி இவுனுங்க ஆருப்பா பேசுரத்துக்கு?" என்று வீறாப்பாய் சொன்னபோது அவர் நெஞ்சு பாரம் சற்று இறங்கினது மாதிரி இருந்தது. "அவர்கள் என்ன கேட்டாலும் கொடுத்து விட்டு சம்பந்தத்தை முடித்து விட்டால்தான் என்ன" என்று கூட தோன்றிவிட்டது.

ஊரை எதிர்த்து காரியம் பண்ணினால் ஊர் ஒதுக்கி வைக்கும் அவ்வளவு தான் அதைப்பற்றி கவலை இல்லை. ஆனால் கமலாவின் முகம் கொஞ்சநாளாய் சரியில்லாமல் கிடக்கிறதே அது எதற்கு? இதுதான் அவருக்கு தெரியாத புதிராக இருக்கிற சமாச்சாரம்.

அன்றைக்கு ராத்திரி கொல்லைப்பக்கம் நடந்த சம்பவத்திற்கும் கமலாவின் மூஞ்சி சரியில்லாமல் இருக்கிறதற்கும் தொடர்பிருக்குமோ வென்று உள்ளாந்தரத்தில் கவலைப்படத்தான் செய்தார். அது உண்மையாயிருக்கும் பட்சத்தில் இவர் உடம்பினுள் ஓடும் எல்லா நரம்புகளையும் அறுத்துப் போட்டுவிட்டது மாதிரியல்லவா இருக்கும்.

பூரணியிடம் அப்படியிருக்குமோ இப்படியிருக்குமோ வென்று கமலாவுக்குத்தெரியாமல் பொடிவைத்து பேசிபார்த்தும் குடைந்துபார்த்தும் அவள் ஒன்றும் விட்டுக்கொடுத்தாக இல்லை "நம்ப பொண்ணு அந்தத் தரத்துக்கு போயிடமாட்டாங்க" என்று பெருசாக பீத்திக் கொண்டாளேத்தவிர அவளுக்கும் உண்மையில் உதைப்புதான். எந்தப்புத்தில் எந்தப்பாம்பிருக்குமென்று யார் கண்டார்கள்?

அவள் நேத்தோ முந்தாநாளோ குளத்துப்படித் துறையில் குளித்துக்கொண்டிருக்கும் போது ரெண்டொரு பெண்டுகள் அரசபுரசலாக கமலா சாம்பசிவமென்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்களேத் தவிர ஒன்றையும் சரியாக காதில் வாங்கிக் கொள்ளமுடியவில்லை. இவள் இருக்கிறதைப் பார்த்து 'கப்சிப்' பென்று வாயை மூடிக்கொண்டு விட்டார்கள். நாட்டார் பொண்டாட்டி அவர்களிடம் ஏதோ இவள் இருக்கிறதைக் காட்டி வாய் அமர்த்தி விட்டாள், அந்த சமாச்சாரத்தை முத்துக்கண்ணுவிடம் தெரிவித்துவிடலாமா வென்று பூரணிக்கு தோன்றிய மாத்திரத்தில் வார்த்தை நுனிநாக்குவரை வந்து ஏனோ உள்வாங்கிக் கொண்டது.

முத்துக்கண்ணு கேட்டதும் பொறுமையாக இருக்க மாட்டார். லபோதிபோ வென்று கத்துவதோடு குதிக்கவேறு ஆரம்பித்துவிடுவாள். தர்மசங்கடமாய்போய் விடும்.

கமலாவின் மீது அவருக்கு சந்தேகம் விழுந்தது விழுந்தது தான்.

என்னமோ அவர் வீட்டுக்குள் ஏதோ குழப்பவாதி யொருத்தர் ராக்ஷியபரிபாலணம் பண்ணிக் கொண்டிருக்கிற மாதிரி எலலாருக்குமே உம் மூஞ்சிதான். ஒருத்தருக்காவது மனசு தெளிவாயில்லை. ஒரொருத்தரும் ஒவ்வொன்றை நினைத்து குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் காப்பிகுடிக்கிற நேரத்தில் சாப்பாடு. சாப்பிடுகிற நேரத்தில் காப்பி. படுக்கிற நேரத்தில் விழிப்பு, விழிக்கிற நேரத்தில் உறக்கம் என்னமோ காலை மேலே வைத்துக் கொண்டு தலையால் நடக்கிற சங்கதி மாதிரி.

இன்றைக்கு, காலையில் சூரியன் புறப்பட்டு வெய்யில் சுள்ளென்றடித்தும் இவர் வீட்டு தெரு சாணி கரைத்து கோலம் போடாமல் நாரசமாய் கிடக்கிறது. மேலண்டைப்பக்கம் ஆட்டுப் பட்டியில் புழுக்கையும் ஆட்டுக்கவுச்சியும் நாறித்தொலைக்கிறது. புள்ளை கொட்ட கையில் குடாப்பிலிருந்து கோழிகளை இன்னும் மேச்சலுக்கு விடவில்லை. அதுகள் வேறு குடாப்புக்கள் கொக் 'கொக் கொக்கரக்' கென்று சன்னஞ்சன்னமாய் குரலெழுப்புகின்றன. காளைமாடுகள் கட்டுத்தரையிலிருந்து மறு இடம் பாய்ச்சிக் கட்டாததால் அசைப்போட்டுக்கொண்டு மூத்திரம் விடாமலும் சாணிபோடமலும் படுத்துக்கிடக்கின்றன. வேப்பமரத்தில் கட்டியிருந்த சுருட்டெருமை பால்கறக்க யாரும் வராததால் ம்மே... ம்மே வென்று பலமாய் கத்துவதும் கட்டுச்சங்கிலியில் கொம்பை வைத்து தேய்ப்பதும் மூத்திரம் விட்டுவிட்டு காலால் தரையைக் கீறி அசிங்கப்படுத்துவதுமாயிருக்கிறது.

விசுவராயர் தெருப்பக்கம் உறங்கிப்போய் குந்தியிருக்கை யில் பண்டாரவடை பாய் ஒருத்தர் என்ன ஐயா காலம் காத்தால ஒறக்கம் புடுச்சி குந்திட்டீங்க? என்று கேட்டவர் பதிலைக்கூட எதிர்ப்பார்க்காத படிக்கு கிழக்கால சைக்கிளில் வேகமாய் பறந்து போனார்.

ராவுத்தர் காலையில் எந்திரித்து குளித்தாரோ என்னமோ முகம் கழுவி டீ குடித்து சட்டையை மாட்டிக் கொண்டு ஏழெட்டு மைல் தூரத்திலிருந்து சைக்கிளில் வயல்பார்க்க வந்து விட்டார்.

அவருக்கிருக்கிற உற்சாகத்தில் கால்பங்கு கூட இல்லையே என்று அவர் உறக்கம்பிடித்து குந்தியிருக்கையில் தங்கவேலு 'வயல்பக்கம் போகட்டுமா' என்கிறமாதிரி மம் புட்டியை தோளில் வைத்துக்கொண்டு அப்பாவையே பார்த்துக்கொண்டிருக்கிறான். அவர் ஒன்றும் காரியம் சொல்ல இல்லாததால் நின்று நின்று அலுத்துப் போன அவன் கால் கடுத்துப்போயும் எரிச்சல் பட்டும் மம்புட்டியை திண்ணை எரவாணத்தில் மாட்டி வைத்துவிட்டு வீட்டுக்குள் போகிறான்.

கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்கப்படா தென்பார்கள். இவர் அதைவிடப் பெரிசாக ஏதோ ஒன்று கவிழ்ந்த

மாதிரிக்கு கன்னத்தில் வைத்த கை எடுக்காதபடிக்கு குந்தியிருந்தார். எதற்கும் அசங்காத கட்டை, இப்பவும் பத்தாள் எதிர்த்து வந்தாலும் முண்டாதட்டி மோதும் வலிமையுண்டு. தூங்குமூஞ்சிமரம் மாதிரி எந்தக் காத்துக்கும் புயலுக்கும் அசங்காத கட்டை தான். என்ன செய்கிறது குடும்பத்தில் ஏற்படக்கூடாத கறையொன்று ஏற்படுகிற பட்சத்தில் அல்லது ஏற்படுகிற மாதிரி சூழல் இருக்கிற பட்சத்தில் கவலைப்படாதிருக்கமுடியுமா?

அப்படித்தான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார். விசுவராயர். தன்னுடைய முடிவில் ஊராருக்காக தளர்ந்து போய்விடுவோமோ என்று நினைக்கிறபோது அவரது முரட்டு மனம அதற்கு கொஞ்சமும் இடம் தராதபடிக்கும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. எந்த இடர் வந்தாலும் ஒரு கை பார்த்து விடுகிறதென்று ஒரு வெறியுடன் எந்திரிக்கப் போகையில் தான் ரெங்கப்பிள்ளைக்கோனார் இவரை நோக்கி வேகமாய் வந்து கொண்டிருந்தார்.

‘இந்நேரத்துல இவரு எதுக்காக வர்றாரு’ என்று விசுவராயருக்குத் தோன்றியது. ஊரே ஒன்று தான் ம்ட்டும் தனி என்றிருக்கிற நிலைமையில் இவர் வருகிறாரென்றால் காரணமில்லாமல் இல்லை என்பதை தீர்மானமாகப் புரிந்து கொண்டார் விசுவராயர்.

‘சோழியன் சிண்டு சும்மா ஆடாதாம்.... ஏதோ தன்னிடம் நல்லத் தனமாகப்பேசி தன் உள் மன நிலைகளை அறிந்து ஊராரிடத்தில் சொல்லி ‘ரெங்கப்பிள்ளை நல்லப் பிள்ளை’ என்று சபாஷ் வாங்கப்பார்ப்பார். அதிலே அவருக்கு ஒரு தனீ இன்பம் மற்றப்படிக்கு அவர் ஒன்றும் பெருசாய் சாதிக்கப்போகிற விஷயம் ஒன்றுமில்லை.

நாட்டாரோ குச்சிராயரோ பெரிய வீட்டு வீரய்யா நாயக்கரோ இவரைத் தூண்டி விட்டு தான் எந்த மட்டில் இருக்கிறோமென்று ஆழம் பார்த்து வர அனுப்பியிருக்கலாம்.

ரெங்கப்பிள்ளைக் கோனாரைப் பற்றி இவருக்குத் தெரியாதா என்ன? இவரும் அவரும் ஒன்றாக பள்ளிக்கூடம்

படிக்கிறபோது இவரது பெயர் 'முத்து' என்கிற 'முத்துக் கண்ணு' அவரது பெயர் 'ரெங்கு' என்கிற ரெங்கன். 'ரெங்கா ரெங்கா' 'முத்து முத்து' என்று ஆசையோடு கூப்பிட்டு கூப்பிட்டு நாக்கு வலித்தது அந்தக் காலம். அவருக்கு கலியாணமாகி ரெண்டு மாசத்திற்கப் புறம் தான் விலாஸத்தில் சிறு மாறுதல் ஏற்பட்டது 'ரெங்கன்', 'ரெங்கா', 'ரெங்கு' என்றெல்லாம் கூப்பிடுகிறது ரொம்ப அசிங்கமாக இருக்கிற தென்றெண்ணியோ என்ன எழவோ ரெங்கு என்கிற 'ரெங்கன்' 'ரெங்கு கோனாரானார்' இவர் பெயரிலும் கூட கலியாணத்திற்கப்புற் தான் கொஞ்ச மாறுதல் ஏற்பட்டது சாதாரணமாய் 'முத்து' 'முத்துக் கண்ணு' என்றிருந்த அவர் 'முத்துக்கண்ணுவிசுவராயர்' ஆனார். 'விசுவராயர்' என்பது கள்ளர் இனத்தில் ஒரு பட்டப்பெயர். சாதாரணமாய் சொல்வார்கள், கள்ளன்ல்ல உள்ள பட்டப்பேரை எண்றதுக்குள்ள ஒரு மரக்கா நெல்லை அளந்து போட்டு எண்ணிப்புடலாம் இவருக்கு இன்றளவும் நிலைத்த பெயர் இதுதான். ஆனால் 'ரெங்கு கோனார்' கதை அப்படியில்லை, அவர் கொஞ்சம் சம்பாதிக்க ஆரம்பித்து காசுபணம் உண்டான பிற்பாடு செல்வாக்கு அதிகரித்தது. நில் நீச்செல்லாம் ஏதுதடபுடல். இந்த சூழலில் அந்த கோனார் அசிங்கமாக இருக்கிற தென்றோ, அநாகரிகமாக இருக்கிறதென்றோ, சுத்துவட்டாரங்களில் தரக்குறச்சலை ஏற்படுத்துகிற தென்றோ, அல்லது தான் கோனார் என்று புதுசாக பழகும் பெரிய மனிதர்களுக்கு தெரியாதிருக்கட்டு மென்றோ, அல்லது கொஞ்சம் மேலேத்தாவி தன் காசுக்கேத்தப்படி ஓசத்தியாக இருக்கட்டுமென்றோ அது நாள் வரை, 'ரெங்கு கோனாராயிருந்தவர் கோனாரை' வெட்டி விட்டு பதிலாக பிள்ளை என்ற பட்டத்தை ஒட்டிக் கொண்டு ரெங்கப்பிள்ளையானார் பதினேழு வருஷகாலமாய் அவரிடத்தில் வாசம் பண்ணிக் கொண்டிருந்த 'புதன் திசை' அவரைவிட்டு போனதுக்கப் புறம அவரிடத்திலிருந்த காசு பணம் நிலம் நீச்செல்லாம் குறைய ஆரம்பித்தது. இந்தக் குறைவுக் கெல்லாம காரணம் நடுவில் வந்த 'பிள்ளை' காரணமோ என்று குழம்பிப் போனார். இடையில் அவர் சாதிக்காரர்கள் வேறு 'நீயெல்லாம் சரியான சாதிக்கோனான் இல்லடா' என்று காரித்துப்ப ஆரம்பித்தார்கள். பிள்ளையை விட்டுவிடலாமா என்று யோசித்துப் பார்த்தார். முந்திப்பழகிய பெரிய மனுசரெல்லாம் நக்கல் பண்ணி விடுவார்களோ என்று பயமிருந்தது. அவர்கள் ஏளுசத்திற்கும் ஆளாகப் பிரியமில்லை. 'ந்த ஆடு மேக்கிப்பயல் சொல்றான்னு

விட்றதாவது... என்று நாக்கைக் கடித்துக் கொண்டு சொல்லிக் கொள்வார். அப்போதெல்லாம் தானும் அந்த 'ஆடுமேக்கி' வம்சம்தான் என்பது தெரிகிறதில்லை. பின்னொரு நாள் அவர் திண்ணை திண்டில் சாய்ந்தபடிக்கு சரியாக யோசித்துப் பார்க்கையில் 'தன் சாதியை தானே தாக்குறைச்சல் படுத்திக்கறது எத்தனை அசிங்கம்' என்றுணர்ந்து 'பிள்ளை'யையும் விட மனசில்லாமல் சுத்தமாய் 'ரெங்கப்பிள்ளைக்கோனார்' என்று பேர் வைத்து தன்னை தெம்புண்டாக்கிக் கொண்டார். இன்றளவும் இதில்தான் ஐக்கியம்.

எந்த மனுஷனுக்கு சாதிப்பித்துஇல்லை. இவர் கள்ளர் வம்சத்தில் இருக்கிற மாதிரி அதாவது 'தெக்குத்திக்கள்ளன்' 'வடக்குத்திக்கள்ளன்' 'மேற்குத்திக்கள்ளன்' 'கிழக்குத்திக்கள்ளன்' 'வாகரைக்கள்ளன்' "பட்டிக்கள்ளன்' இந்தமாதிரிக்கு இவருடைய கோனாரிலும் பல நீட்டல்கள் பிளவுகள் பறப்லவுண்டு. அடே அங்கே போவானேன் மாடு உரிக்கிறானே 'பறையன்' அவனில் கூட பற்பல பிரிவுண்டென்று 'வெட்டிச்சி' சொல்லக்கேட்டிருக்கிறார் அவர் பள்ளனில் 'வடக்குத்திப்பள்ளன்' 'தெக்குப்பள்ளன்' இல்லையா என்ன? இந்த சாயுபு கெட்ட கேட்டுக்கு எத்தனி பிரிவுடா சாமி. கிருஸ்தவரில் கூட 'கள்ளர்கிருஸ்தவர்' 'பள்ளர்கிருஸ்தவர்' 'நாடார்கிருஸ்தவர்' 'நாயக்கர் கிருஸ்தவர்' ஐயரில், ஐயர், ஐயங்கார், குருக்கள், தேசிக படடாச்சாரியார், 'வடகலை' 'தென்கலை' அந்தக்காலத்தில் தெரியாமலா பாடினான் பாட்டு,

கள்ளர் மறவர் - கனத்ததோர்
அகம்படியர் மெல்ல மெல்ல வந்து
வெள் ளாளரானார்.

ஆமாம் இந்த வேளாங்குலத்தில் கூட சைவ வேளாளர், சோழிய வேளாளர், கார்காத்த வேளாளார்.... அடே மனுஷா நல்ல புத்திமானடா நீ. மனுஷ இனத்தில் சாதி என்ற முத்திரைக்குத்தி நொறுங்கிப்போன கண்ணாடி துண்டுகள் மாதிரி எத்தனை சில் பண்ணியிருக்கிறாய்?

விசுவராயருக்கு சற்று வருத்தம் சாதியை சாதியாய் நினைக்காமல் சாதிசாதியாய் பிரித்துவிட்டார்களே என்று.

“வாங்க ரெங்கப்பிள்ளை” இது விசுவராயர். கோனாரையும் சேர்த்து சொல்லிவிட அவருக்கு ஆசைதான் கொஞ்சகாலமாய் இப்படியே கூப்பிட்டு பழகின நாக்குக்கு அப்படி வர மறந்து விடுகிறது.

“வர்றன் மச்சான்” வரும்போதே ஹ்ஹஹ்ஹா வென்று அவருக்கே உரித்தான நொண்டிச் சிரிப்போடு வந்தார். அந்தச் சிரிப்புக்கெல்லாம் அர்த்தம் அவருக்கே வெளிச்சம்.

“குந்துங்க... என்ன காலையிலங்காட்டி?”

“வரப்புடாதா... வந்தா ஒரு லோட்டா காப்பிக்கு செலவுன்னு நெனக்கிறீரா?”

“அடநீங்க ஒண்ணு மச்சா ...கறக்க வேண்டிய மாட்டக் கறக்கக்கூட நம்பவூட்டு ஜனத்தாள முடியாம நாதியத்துக்கெடக்கு இஞ்ச நீங்க வேற காப்பிக்கு நாக்கத் தூக்கிகிட்டு வந்துட்டீர்...”

“நாநெறையா குடிச்சிட்டன் நீங்க வேணும்னா வாங்க மச்சா நம்பவூட்ல நெறையா குடிக்கலாம்”

“அட பேச்சுக்குச் சொன்னய்யா நீங்க குந்துங்க துள்ளி ஓடிற வாணாம் வந்த சமாச்சாரமென்னா?”

“என்ன மச்சா பீடா போறீங்க... கேக்குற கேள்வியப்பாத்தா வந்தமா குந்துனமா சங்கதிய சொன்னமா எந்திரிச்சி போனமான்னு இருக்கணும் போலல்ல கேக்குறீங்க?”

“ஆமாய்யா ஊரு அபடி ஆயித்து. ஒனக்குத் தெரியாதாகட்ன வூட்டுக்குத்தான் ஆயிரம் பணிக்குச் சொல்லுவானுவ... அவவன் சூத்துல ஆயிரம் களம் பீருக்கு ந்த நாயிங்க ஏ வூட்டு சங்கதியப் பத்தி பேசிகிட்டு திரியிதாம். படுவாங்கள கொளுத்திபுடுவன் கொளுத்தி”

“கோவிச்சுக்காதீங்க... ஆத்தலாதானா பேசுங்க... ஊரு பேசிகிட்டிருக்க சங்கதியெல்லாம் காதுக்கும் எட்டத்தான்

செஞ்சிச்சி... நீங்க ரொம்ப ஐதியமானவரு... ஆச்சாரம் கீச்சாரம்னு அதியமா பாக்றவரு அப்படிபட்ட நீங்களே எகன கெட்டுப்போனா ஊரு வா வச்சிப்பேசாதா... ஊரக் குத்தம் சொல்றீங்க?''

"பேசட்டும் நல்லாபேசட்டும்... அவவன் சூத்துக் குள்ளருக்கறதையும் நெனச்சி பேசணும்... ஓ முதுகு ஒனக்குத் தெரியுமா?''

"தெர்யாது''

"அப்புடித்தாய்யா எல்லாம்... நெல்லுப்பாட்டுக்கு நா மாப்ள பாக்கப்போனது வாஸ்தவம்தான்... ல்லேன்னு சொல்லல... அதுக்குள்ள ஆரும் பேசிக் கீசி கொண்டுடல கொடுத்துடல... அதுக்குள்ள ந்த சங்தியப்பத்தி ஆரும் ஊர நாறடிக்க வாணாம்''.

"நீங்க அந்த எடத்துக்கு போனதே ஆருக்கும் புடிக்கலமச்சா... அதனால தான் எல்லாரும் பேசும்படியாச்சி''.

"சரிய்யா அந்த எடத்துல எம்பொண்ண குடுத்து புட்டா ஏங்குடும்பத்த ஒதுக்கி வச்சிருவாங்க இன்னும் கொஞ்சம் மிஞ்சிப் போனா ஊரவுட்டு தொரத்தி புடுவாங்க அம்புட்டுத்தான்?''

"ந்தக்காலத்துல அப்பிடியெல்லாம் ஆரும் லேசுல செஞ்சிர முடியாது மச்சா நீங்க கோர்ட்டு கீர்ட்டுன்னு போனியள்ன்னா ஒங்கப்பக்கம்தான் தீருப்பாவும்னு எல்லாருக்கும் தெரியும்... கெவுருமுண்டே இதுக்கெல்லாம் ஜாதகமாருக்கப்ப நீங்க ஊருக்காவப் பாக்கத் தேவையில்ல... இர்ந்தாலும் ஊரோட மொறையென்னா தரையென்னான்னு ரோசிச்சுப் பாத்துப் போனா போறும் அம்புட்டுத்தான்''

"அதுக்கு நா ஏம்பொண்ணுக்கு மாப்ள பாக்காமருக்கணும் அம்புட்டுத்தான...?''

"அட நீங்க ஒண்ணு மச்சா அப்டி எந்தக் குருட்டு பயலும் சொல்லுவானா... மாப்ள பாக்றத்த இப்டி நம்ப வாகரையா பாத்துத்

தான் பாருங்களேன்... பொண்ணுக்கு மாப்ளையா அம்புடாமப் போயிரும்"

"அத நாசுக்கா சொல்லிப்புடுங்க... இப்டி ஆளாளுக்கு கண்ணுவச்சி மூக்குவச்சி பேசறதுதான புடிக்கல"

"ஒங்க அயிப்ராயப்படி செஞ்சிரலாம் கோவிச்சிக்காதீங்க மச்சா... இன்னம அந்த நெல்லுப்பட்டு சம்பந்தம் விஷயமா ஒண்ணும் பொறுப்பு எடுத்துக்க வாணாம்" என்று ரெங்கப்பிள்ளைக் கோனார் சொல்லிக்கொண்டிருக்கும் போது சாம்பசிவம் சட்டை யில்லாத உடம்போடு தலைமுண்டாசுடன் தொறட்டிக் கம்பை தோளில் வைத்தபடி ஆட்டுக்கிடா ரெண்டை ஓட்டிக்கொண்டு மேற்கால் போய்க் கொண்டிருந்தான்.

சட்டென்று ரெங்கப்பிள்ளைக்கோனார் அவன் பக்கமாய் திரும்பி, "என்னாத் தம்பி ஆடு மேய்க்கப் போவுதா?" என்று அனாவசியமாய்ப் பேச்சுக்கொடுத்தார்.

அவனும் பாராமுகமாய், "ஆமாமா" என்று சொல்லிக் கொண்டே போகையில், 'என்னாத்தம்பி கெடாக்குட்டி ரெண்டையும் வெலவச்சி குடுத்துருவீங்களா?' என்று கேட்டார்.

அவன் அந்தக்கேள்விக்கான பதிலைச் சொல்வதற்காக சற்று நின்றான். ஆடுகள் மேற்கால் போய்க்கொண்டேயிருந்தன. "ல்லப்போவ்... இது விக்கிர கெடால்லே ஏங்கலியாணத்துக்கு ஊரு விருந்தன்னிக்கு கறிச்சோறு போடணுமல்ல அதுக்குத்தான் வளக்குறேன்"

"அப்டியா சங்கதி...ப்பவே கெடா ரெண்டும் நெய்ப்பசையேறிக் கெடக்கு முத்திப்போறதுக்குள்ள பொண்ணக் கிண்ணப்பாத்து கலியாணத்த முடிச்சிபுடு... அப்பத்தான் கறி வாய்க்கு சாப்ட நல்லாருக்கும்"

"ஆமப்போவ்...பொண்ணப்பாக்குறதுக்கு காரு ரயிலேறி தேடியாப் போவணும்...?..." என்று அவன் சொல்லிக் கொண்டிருக் கும்போதே மேற்கால போய்க் கொண்டிருந்த ஆடுகள் ரெண்டும்

யார் வீட்டிலோ காயப் போட்டிருந்த நெல்லில் வாய்வைக்கப் போக, நெல் காவலுக்கிருந்த கிழவியொருத்தி... "எலே... ஆட்ட வந்து ஓட்டுடாலே..." என்று வேகமாய் சத்தம் போடவும் அவன் பேச்சை விட்டு விட்டு ஆடு விரட்ட ஓடிப்போனான்.

"பயல் எத்தன துமுறா பேசிட்டு போறான் பாத்தீங்களா மச்சான்... வந்தாரு குடிப்பயல் நல்லா நம்ப ஊர்ல வேரு ஊனிகிட்டான். நம்ப ஊருக்கு வந்த பிறபாடு கையில ரெண்டு காசும் உண்டாயிப்போச்சி... ஒர்த்தர சட்ட பண்றதுல்ல... பகச்சிக்கிறது முல்லே... நல்லப்பயல் இவுனுக்கு பொண்ணுதான் ஆரு தரப்போறான்னு தெர்யல... கெடையாட்லேருந்து தனியா ஒதுங்கிப் போன வலிக்கன் குட்டிமாறி தன் சாதி சனத்து கிட்டேருந்து ஒதுங்கி வந்தப் பயல் அவன் வலியிலதான் ஒரு பொண்ணக்கிண்ண பாத்து முடிக்கணும்... கலியாணத்துக்கு கறிச்சோறு போட்டான்னா நீங்களும் சாப்ட வந்துருங்க மச்சா கெடாவப் பாத்தீங்களா... எப்டி நெய்ப்பச் ஏறிக்கெடக்கு. எலும்பு எம்புட்டு ருசியாருக்கும் தெர்யுமுல்ல" சொல்லும் போதே நாக்கில் நீர். சப்புக்கொட்டிக்கூட காட்டினார்.

விசுவராயர் இதெல்லாவற்றையும் காதில் வாங்கியும் வாங்காதது மாதிரியுமாயிருந்தார். அவருக்கு இப்போதிருந்த மனக்கசப்பில் மேலும் கசப்பேற்றிக்கொண்ட மாதிரியிருந்தது. அவர் சாம்பசிவத்தைப் பற்றி ஏற்கனவேயே நினைத்திருந்த நினைப்பிற்கும், கமலா அவன் குரல் கேட்டதும் கதவை லேசாய் திறந்து எட்டிப்பார்த்தற்கும், ரெங்கப்பிள்ளைக்கோனாரின் கேள்வி ஒன்றுக்கு, பொண்ணப் பாக்குறதுக்கு காரு ரயிலேறிப் போவணும் என்றதற்கும் எத்தனைப் பொருத்தம்? மனத்தில் மீண்டும் சூண்யம். இப்போதைக்கு ரெங்கப்பிள்ளையை இடத்தைவிட்டுக் கிளப்பி விட்டால் தேவலாம் போலிருந்தது.

"சரி மச்சா, வேல கெடக்கு... பொளுது இம்புட்டாயும் இன்னும் ஒரு வேல நடக்கல" என்றார். அவர் இப்படிச் சொன்னது அவரை சீக்கிரத்தில் எழுப்பிவிடத் தான்.

"அப்டியா... பாருங்க பாருங்க மனசுல கலக்கம் ஒண்ணுத்தையும் வச்சிக்காம அந்த நெல்லுப்பட்டுக் காரங்க

லெட்டர் கிட்டர் போட்டா தட்டிக் களிக்கிற வளியப்பாருங்க... பின்ன வரட்டா மச்சா" என்று சொல்லிக்கொண்டே எந்திரித்தார்.

"செத்தருந்தா மாடு கறந்து காப்பிபோட்டு தரச் சொல்றன் குடிச்சிட்டுப் போங்களன்?"

"ல்ல மச்சா நீங்க சாப்டுங்க" - அவர் போய் விட்டார்.

விசுவராயருக்கு, இன்னமும் சாம்பசிவம் சொல்லி விட்டுப் போன சங்கதி நெஞ்சில் பலமாய் அடித்துப் போட்டுவிட்டுப் போனது மாதிரியிருந்தது. அவனுடைய அந்தப் பேச்சு தனக்காகத்தானோ என்பதாக நினைத்துக் கொண்டார்.

**...முருங்கைப் போத்து மாதிரி நெடுநெடுவென்று அவள் மட்டும் தானா வளர்ந்து கொண்டிருந்தாள் கூடவே அவளது வயசுமல்லவா வளர்ந்து கொண்டிருந்தது...**

# 9

கோபால்குச்சிராயர் இருக்கிறாரே ஆசாமி ஒருத்தொருக் கொருத்தர் சிண்டுமுடிந்து விடுகிறதிலோ அறுத்து விடுகிறதிலோ பொரணி சொல்கிறதிலோ பலே கில்லாடி தான். அடுத்தவரின் மானம் போகுமே அவர்களின் கௌரவம் பாதிக்குமே என்பது பற்றியெலலாம் கொஞ்சமும் கவலைப்படுகிற ஜென்மமில்லை அது. ஒருத்தரை சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிற ஜென்மம். ஆனால் அவர் மானம் பறிபோகிற போது அதைப் பற்றி கவலைப் படாதிருக்க முடியுமா என்ன?

அவர் மானம் இன்றளவும் அவரைப் பொறுத்த வரை பறிதான் ப்போய்விட்டதேத் தவிர பிறத்தியாருக்கு இன்னும் வெளிச்சமாகவில்லை. வெளிச்சமாகிற சூழ்நிலையும் இல்லை. அதனால் இன்னும் தனது மானம் ஊராரிடத்தில் சீல் உடைக்கப் படாததாக இருக்கிறதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்.

அவரது பெரிய பெண் நீலா அவரது வீட்டு பண்ணைக் காரன் கேசுவிடம் சல்லாபித்த விஷயங்களை அத்தனை எளிதில் மறந்துவிட முடியுமா என்ன?

அந்தப்பண்ணைக்காரன் கேசு அந்த நிகழ்ச்சிக்கப்புறம் சேரிக்குள் இருக்கிறதாக அவருக்கு படவில்லை. எங்கேயோ ஓடிப்போய் விட்டான் போலத் தெரிந்து கொண்டிருந்தார். சம்பவத்தை அவர் நெஞ்சு பூரணமாக மறக்கிறவரை அவன் இனி ஊரில் தலைகாட்டப் போகிறதில்லை. அப்படி அவர் கண்ணில்

தண்டுபடும் பட்சத்தில் அவன் உடம்பு சல்லி சல்லியாகிவிடும் என்பது நிஜம். அவனை அடிப்பதற்கு அவருக்கு ஒரு சாக்கு கிடைக்காமலா போகப்போகிறது?

இப்போதெல்லாம் அவர் பெரிய பெண் நீலாவுடன் முகம் கொடுத்து பேசுவது அநேகமாய் நின்றே போய்விட்டது. கண்டித்தாலோ ஆத்திரப்பட்டு அடித்தாலோ ஊருக்கு வெளிச்சமாகிவிடும். ஊருக்கு வெளிச்சமாகி விட்டால் அவர் நாண்டுகிட்டு சாக வேண்டியது தான் எதற்குத்தான் ஆளாகுவது?

நீலா அப்படித்தரத்துக்கு போகிறவளில்லைதான். வீடு உண்டு வாசல் உண்டென்று அடங்கி ஒடுங்கி இருந்தவள்தான். அவள் வயசுக்கு வந்து பத்துவருஷ காலத்தில் எந்த ஆம்பிளையும் அவள் கட்டியிருந்த புடவையைக்கூட கண்ணால் பார்த்தவர்களில் லைதான் அப்படி ஒரு ஒடுக்கம் அப்படி ஒரு பதுவிசு.

ஆனால் அவளுக்கு வயசு ஆகஆக அவளுடைய இளமைகளுக்கு தீனிபோட முடியாதென்கிற சூழலில் அவள் என்ன செய்வாள்?

முருங்கைப் போத்து மாதிரி நெடுநெடுவென்று அவள் மட்டும்தானா வளர்ந்து கொண்டிருந்தாள் கூடவே அவளது வயசுமல்லவா வளர்ந்து கொண்டிருந்தது. அவளுக்கும் கீழ் ரெண்டு பெண்கள் வயசுக்கு வந்து கல்யாணத்திற்கு ரெடியாகி விட்டதே அவள் என்ன பண்ணுவாள் பாவம்.

இந்த புத்தி பெத்த அப்பனுக்கு இருந்திருந்தால் அன்று அவர் பார்த்த காட்சி ஏற்பட்டிருக்குமா என்ன? யாரை நொந்து கொள்வது பெத்த பெண்ணை நொந்து கொள்வதா? அவளுடன் சல்லாபித்த பண்ணக்காரனை நொந்து கொள்வதா? இதுநாள் வரைக்கும் அவளது கலியாணத்தைப் பற்றி துளியும் நினைக்காமல் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கும் தன்னை நொந்து கொள்வதா? ஆரை நொந்து என்ன பிரயோஜனம் நடந்த கதை நடந்த கதை தான் அவளுக்கும் அவனுக்கும் எத்தனைநாள் உடந்தையோ என்னவோ- அவள் வயிற்றில் பூச்சி புழு தரித்திருக்கிறதோ என்ன கண்றாவியோ-

மனுஷ மனம் ஒத்திருந்தால் எல்லாருக்கும் நல்ல படியாகவே நடக்கும். அங்கே அழுக்கு ஏற்படுகிற பட்சத்தில் தானே பொருளாதார சிக்கல்களும் பிறசிக்கல்களும் வந்து தொலைக்கிறது.

அவர் பெரியபெண் நீலா இத்தனை வயசிலும் கரையேறாமல் இருந்ததற்கு அவரது பொருளதார பாதிப்புதானே முழுக்காரணம். அது மட்டும் ஒத்திருந்தால் அவர் இன்றைக்கு மூன்றொ நான்கோ பேரன் பேத்திகளுடன் விளையாடிக் கொண்டு தானிருப்பார்.

குச்சிராயருக்கு அந்த சம்பவத்திற்கு பிறகு வீட்டிலிருக்கப் பிடிக்கவில்லை. மனைவியுடன்கூட என்ன என்றால் என்ன என்று கேட்பதுடன் தான் வைத்துக் கொண்டிருக்கிறார்.

முத்துக்கண்ணு விசுவராயரின் வீட்டு கல்யாணப் பிரச்சனைகளைப் பற்றி யாருடனும் அநேகமாகப் பேசுகிறதையே நிறுத்திக் கொண்டு விட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

தருமையா நாட்டாருக்கு இது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருந்தது. "ஏய்யா அந்த சங்கதியப்பத்தி ப்ப பேசறதையே நிறுத்திப் புட்டீர் புளிச்சிப்போச்சா? என்று கேட்டவர், நெருப்புக்குச்சி பத்தவச்சிட்டு அணஞ்சிப்போயிரும் பொற எரியிற பொருளுங்க தான் ஒவ்வொன்னா பத்தி பத்தி எரிஞ்சிகிட்டே வரும்ய்யா அந்த மாறிருக்கு ஓங்கதை" என்று அலுத்துக் கொண்டார்.

ரெண்டொரு வாலிபர்கள் கூட அவரிடத்தில் இதே மாதிரிக்கு கேட்டு சங்கடப்பட்டுக் கொண்டார்கள்.

"அந்த சாம்பசிவம் பயல் ரெண்டு ஆட்டு கெடாக்குட்டி வளக்குறான் பாருங்க அது எதுக்குத் தெரியுமா அவங்கல்யாணத்துக்கு ஊரு விருந்தன்னிக்கி கறிச்சோறாக்கிப் போடப்போறானாம் ரெங்கப்புள்ளக்கோனாரு சொன்னாரு".

"ஆமா போட வேண்டியதுதான்... அவன் கூப்ட்டா நாமளும் போயி சாப்ட்டு வரவேண்டியது தான்"

“அவன் கட்டப்போறப்பொண்ணு ஆருன்னு தெரியுமுல்ல விசுவராயரு பொண்ணு கமலாய்யா...! நீங்கத்தானே அந்தப் பொண்ணுக்கும் சாம்பசிவத்துக்கும் தொடுப்புருக்கறதா சொன்னீங்க?”

“ஆமாத்தம்பி, ப்ப அந்தக்கதை நம்பளுக்கு எதுக்கு நாளக்கி பொண்ணக் கட்டிகிட்டா கட்னவனும் கொடுத்தவனும் ஒன்னாப் போயிருவான் இதுல நாமத்தான் தனியா பிச்சிகிட்டு நிக்கனும்” என்று நைசாய்ப் பேசி நழுவப் பார்த்தார்.

அவரின் இந்தப்போக்கு அங்கிருந்த எல்லாருக்குமே ஆச்சரியத்தை அளித்தது. குச்சிராயரின் இந்த மாறாட்டத்திற்கான அர்த்தத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. சாம்பசிவமோ, அல்லது முத்துக்கண்ணு விசுவராயரோ அவரிடத்தில் ஏதாவது சொல்லி அல்லது மருந்து மாயம் ஏதாவது போட்டு மயக்கியிருப்பார்களோ என்பதாக நினைத்துக் கொண்டார்.

ஒரு பலூனை எடுத்து தன் இஷ்டத்துக்கு ஊதிப் பெரிதாக்கி வைத்திருக்கும்போது அது தன்னகத்தே எத்தனை நாழிகைக்கு காத்தை உள்ளடக்கிக்கொண்டு பேசாமலிக்கும்? ஏற்றி விட்ட காத்து வெளியேறும் சூழலிருந்தால் அதன் வழியாய் கசிந்து பலூன் தானடங்கி போகும் அல்லது அளவுக்கு மீறி காத்தை உள்செலுத்தும் பட்சத்தில் படாரென்று வெடித்து பலூனே நாசமாகிப் போய்விடும்.

இந்தக் கதைதான் முத்துக்கண்ணு விசுவராயருக்கு நேர்ந்தது. கோபால் குச்சிராயராலும் தருமையா நாட்டாராலும் ரெங்கப்பிள்ளை கோனார் - பெரிய வீட்டு நாயக்கர் - மற்றும் ஊர்ப் பெரியவர்களாலும் பெரிதாய் ஊதி விடப்பட்ட சங்கதி பெருசாய் உப்பி வெடித்துச் சிதறி மெல்லமெல்ல விசுவராயரின் காதுகளை வருடிப்பார்த்தது.

காலையில் குளத்துப்பக்கம் அவர் குளிக்கப்போகையில் தான் அந்தச் செய்தி காதில் விழுந்தது.

ரெண்டு பொடிப்பயல்கள் தான் அந்தச் செய்தியை பரப்பி வைத்தார்கள்.

அள்ளாத பண்டம் குறையாது சொல்லாத வார்த்தை வராது என்கிற மாதிரி அந்தப் பிஞ்சுப்பயல்கள் பேசிக் கொள்கிற படிக்கு அவர் வீட்டு சங்கதியை யாரோ பேசியிருக்கிறார்கள்.

"நம்ப கமலாக்கா சாம்பசெவத்த கல்யாணம் பண்ணிக்கப் போகுதாம்டா" இவ்வளவுதான் அவர்கள் பேசிக்கொண்டது. ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம் என்கிற மாதிரி மேலும் ஊரில் அதைப்பற்றி என்னவெல்லாம் பேசிக்கொண்டிருந்திருப்பார் களென்பதையெல்லாம் அவரால் யூகித்துப் பார்க்க முடிந்தது.

அன்றைக்கு ராத்திரி பருத்திக் கொல்லையில் நடந்த சம்பவத்திற்கும், கொஞ்ச நாட்களாய் கமலாவின் முகம் சரியில்லா மலிப்பதற்கும் பூரணி எதையோ தன்னிடத்தில் மறைத்து மறைத்து பேசுகிறதற்கும் அந்த சாம்பசிவமே நடுத்தெருவில் ரெங்கப்பிள்ளை கோனாரிடம், பொண்ணு பாக்க காரு ரயிலேறியா போவணும் என்று சொன்னதற்கும் ஊரில் பலர் தன்னைப் பார்த்தும் பார்க்காதது மாய் குசுகுசுவென்று பேசிக் கொள்கிறதற்கும் என்ன அர்த்தம்?

சாம்பசிவத்திற்கும் கமலாவிற்கும் ரகசிய தொடர்பிருக்கிற தென்கிற உண்மையை அவர் பூரணமாக உணர்ந்து கொண்டார். பயல்களை அதுபற்றி அவர் ஒன்றும் கேட்டுக்கொள்ளவில்லை. விடுவிடுவென்று குளிக்கப்போகிறதையும் விட்டு விட்டு வீட்டுக்கு வந்தார்.

"குளிக்கலையா?" என்று பூரணி கேட்டபோது, "ஆமா குளிச்சி என்னாத்த கண்டுச்சி" என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு, ஈஸிச்சேரை கூடத்தில்போட்டு படுத்துக் கொண்டார், வந்த காப்பியைக் குடிக்கவில்லை, வெத்திலை போடவில்லை சாப்பாடுகூட வேண்டாமென்று விட்டு விட்டார்.

வயல்காரியமும் ஒன்றும் ஆகவில்லை. பண்ணைக் காரன் பந்தல் காலைப் பிடித்தபடிக்கு ஒத்தைக்காலில் நின்று நின்று அலுத்துப்போய் அவர் வேலையொன்றும் சொல்லாததால் வீட்டுக்குப் போய்விட்டான். தங்கவேலுப் பயலைக்காணோம் டவுனுபக்கம் போய்விட்டான் போல.

“ஏங்க வயிறு பசிக்கலையா?... வயிறேதும் மந்தமாருக்கா?.. கொஞ்சம் மோராவது போட்டு பெசஞ்சி சாப்டுங்களேன், என்று பூரணி கேட்டபோது அவர் ‘போடு’ என்றும் சொல்லவில்லை போடாதே என்றும் சொல்ல வில்லை கண்விழிகள் ரெண்டும் எட்டித்தெறிக்கிற மாதிரி குதிக்கப் பார்த்தது. அப்படி அவர் பார்த்த பார்வைக்கு பொருள், ‘என்னடி பூரணி, மனுஷன் நொந்து கெடக்கேன் இப்ப சாப்பாடா கேக்குது... இஞ்ச நிக்காதே எட்டிப் போடிகளுதே...’ என்பதுதானே பொருள்.

பூரணி குறிப்பறிந்து எட்டிப்போய்விட்டாள். கொல்லைக் கதவோரம் போய் அணவாய் சாய்ந்தபடிக்கு கமலாவிடம் ஏதோ ஜாடையாக கை காட்டினாளேத் தவிர அவளால் ஒன்றையும் சரிவர விளக்கிச் சொல்ல முடியவில்லை. கமலாவுக்கும் கூட அப்பா ஏன் ஆத்திரமாகவும் மூஞ்சை கடுமையாகவும் வைத்துக் கொண்டிருக்கிறாரென்று தெரியவில்லைதான்.

அந்தநேரத்தில் தபால்காரன் ஒரு கவரைக் கொண்டுவந்து அவர் கையில் கொடுத்து விட்டுப் போனான்.

அவர் தபாலை கொஞ்சநேரம் வரையிலும் உற்று பார்த்தபடிக்கு இருந்தாரேத் தவிர, அதை உடனடியாக கமலாவைக் கூப்பிட்டு பிரித்து படிக்கச் சொல்லத்தோன்ற வில்லை சாதாரணமாக அவருக்கு எந்தக் கடுதாசி வந்தாலும் அதைப் படிப்பவர்கள் கமலாவாகவோ தங்க வேலுவாகவோ தானிருக்கும். அவர் அந்தக் காலத்தில் ஐந்தாவது வரைக்கும் படித்திருக்கிறாரென்றாலும் கூட அந்தப் படிப்பு திக்கித்திணறி கையெழுத்துப்போடத்தான் ஒத்துவருகிறதேத் தவிர அடுத்த படிக்கு எதையும் சரளமாக படிக்கிற பிரயோஜனப்படவில்லை.

லெட்டரைப் படிக்க யாரிடம் கொடுக்கலாம் என்பது தான் இப்போது அவருடைய குழப்பமே. தங்கவேலு ஊரில் இல்லை. கமலாவினிடத்தில் கோபம். சிந்தனையில் ஆழ்ந்தவாரே தெருவைப் பார்க்கிறார்.

அப்போது பார்த்து தெருவில் யாரோ ஒருத்தன் போக அவனைக் கூப்பிட்டு லெட்டரை படித்துக் காட்டச் சொன்னார்.

அவன் லெட்டரைப் படிக்கிறான்.

உயர்திரு,

முத்துக்கண்ணு விசுவராயர் அவர்கள் திவ்ய சமூகத்திற்கு நெல்லுப்பட்டு முருகையா காளிங்கராயர் நமஷ்காரத்துடன் எழுதிக் கொண்டது. நலம் நலமறிய நாட்டம் தாங்கள் என் பையனை உங்கள் பெண்ணுக்கு பார்த்து விட்டு போனதிலிருந்து நாங்கள் ஒரு தடாலும் எழுத வில்லையே என்று கோபம் கொள்ள வேண்டாம். அது இது நாள் வரைக்கும் எங்களுக்கு சௌக்கியப்படாமலிருந்து விட்டது. பையன் இன்னும் மேலே படிக்கணும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறபடியால் குழப்பமாக இருக்கிறது. அவனை ஒரு வழியாய் சரிகட்டி வைத்திருக்கிறோம். நீங்கள் அது விஷயமாய் என்ன முடிவெடுத்து வைத்திருக்கிறீர்கள் என்று ஒன்றும் தெரியவில்லை. நாங்கள் ஒரு நாளைக்கு பெண்ணைப் பார்க்க வேண்டும் அதற்கு நாங்கள் எங்கள் குடும்பத்தாருடனும் எங்கள் இஷ்ட பந்துக்களுடனும் அவ்விட் வருவோம். அப்படி நாங்கள் வந்தால் சுமார் இருபது பேர்கள் வரைக்கும் இருக்கும், எங்கள் குடும்பம் பெரிய குடும்பம் ஆனபடியால் கூட்டம் வருகிறதை தடுக்க முடியாது. பெண் பார்த்துவிட்டு வந்த பிற்பாடு பெண் எங்களுக்கு பிடித்துப்போய்விட்ட தென்றால் பவுன் சாமான் செட்டு மத்தப்படி செய்வினை போன்ற விஷயங்களைப் பேசிக்கொள் வோம். நாங்கள் ஆனிமாதம் பதிமூன்றாம் தேதி வெள்ளிக்கிழமை காலை பத்துமணி சுமாருக்கு அவ்விடம் வந்து சேருகின்றோம் மற்றவை நேரில்.

இப்படிக்கு
**முருகையா காளிங்கராயர்,**

இவ்வளவுதான் அந்தப் பொடியன் கடிதத்தில் படித்த விஷயம். லெட்டரைப் படித்து முடித்ததும் அந்தப் பையன் அவரை விநோதமாகப் பார்த்தான். ‘அந்த எடத்துல சம்பந்தம் வச்சிக்கப் போறீங்களா தாத்தா?’ என்கிற மாதிரி பார்த்துவிட்டு பறந்து போய்விட்டான்.

அவர் ‘இம்புட்டு பயலுக்கு கூட நக்கலப்பாரேன்’ என்று முணுமுணுத்த படிக்கு இருந்தார்.

அந்தப் பையன் லெட்டரைப் படித்துக் கொண்டிருக்கும் ம்போதே பூரணியும் கமலாவும் அவற்றையெல்லாம் காதால் கேட்கத்தான் செய்தார்கள். அப்பா லெட்டரை ஏன் தன்னிடம் கொடுத்து வாசிக்கச் சொல்லவில்லை என்று கோபத்துடன் நினைத்துக் கொண்டாள், இப்போது அவளுக்கு புரிந்தது கோபம் தன்னிடத்தில் தான் என்று,

கொஞ்சநேரம் மௌனத்திலேயே பொழுது கரைந்து கொண்டிருக்கிறது. யாருக்கு என்ன பேசுகிற தென்றே தெரியவில்லை. விசுவராயருக்குத்தான் பெரிய குழப்பம். ஊரை எயித்து கலியாணத்துக்கு ஒத்துக் கொண்டாலும் கூட புதுசாய் ஒன்று முளைத்திருக்கிறதே அதற்கென்ன வழிவகை செய்கிறது என்ற கவலைதான் அவரை இப்போது பூரணமாக அப்பிக் கொண்டிருக்கிற விஷயம், நெத்திப்பட்டையைத் தேய்த்துப் பார்த்தும் ‘ஹ்ூம் ....ஹ்ூம்...’ மென்று பெருமூச்சுத்தான் விடமுடிகிறதேத் தவிர குழப்பத்திற்கு என்ன வகை செய்கிறதென்று தோன்றவே இல்லை.

அப்பாவின் மனநிலைகளை அறிந்தோ என்னமோ கமலாவே அவருடன் வலியக்க பேச்சுக்கொடுக்கலாமா வென்று யோசிக்கிறாள். என்ன கிள்ளியா முழுங்கி விடப் போகிறார் என்றபடிக்க நினைப்பு போகிறது, ஒரு துணிச்சலுடன், ‘அப்பா’ வென்று நைச்சியமாகக் கூப்பிடுகிறாள்.

இப்போது அவர் பேசவில்லை, ஈஸிசேரிலிருந்த படியே தலையைமட்டும் திருப்பி லேசாய் அவளைப்பார்த்து விட்டு மறுபடியும் பழைய நிலைக்கு ஆய்விடுகிறார்.

“அப்பா....

"அப்பா....

"அப்போவ்.....

"என்ன ப்ப பெருசா கவலபுடிச்சி கெடக்கு...? பொண்ணு கூப்புர்றது காதுல உளுவலையா? அப்புடி என்ன காதுல ஒண்ணும் கேக்கா தபடிக்கு ஈயத்தை காச்சி ஊத்திருக்கு.... பெருசாத்தான் பேச மாட்டங்குறியோ" பூரணிக்கு எங்கிருந்துதான் வந்ததோ இந்த ஆத்திரம் பொசுக்கென்று அவர் மூஞ்சை முறித்துக் கொள்கிற மாதிரிக்கு வார்த்தை பேசினாள்.

"ஒர்த்தரும் ஏங்காதுக்குள்ள ஈயத்தை காச்சி ஊத்தல ஓ மவத்தான் அப்புடி ஊத்த வச்சிருக்கா... ஓ மவபண்ணி வச்சிருக்க காரியம் ஒனக்கு நல்லாருக்கான்னு நீயே கேளு"

"அப்புடி என்னாத்த அவ ஆரும் ஊர்ல ஒலகத்துல பண்ணாதத பண்ணிபுட்டாங்குறீங்க?"

"அப்புடி கேளுடி மவராசி... அதப்பத்தி என்னான்னு அவளையே தனியாவுட்டு கேளு தெர்ஞ்சிப்ப... இது நாலுபேரு அறிய சத்தம்போட்டு பேசுற சங்கதியில்ல ஊரே நாறிக்கெடக்கு ன்னம நாந்தான் நாண்டுகிட்டு சாவணும்".

இப்போது பூரணி ஒரு வெறியுடன் கமலாவின் அருகில் சென்று அவள் தலைமயிற்றைப் பிடித்து குலுக்கு குலுக்கி, "அவுரு நாண்டு கிட்டு சாவுற அளவுக்கு அப்புடி என்னாத்தடி நீ பெருசா தப்பு பண்ணிபுட்டு வந்துருக்கே சொல்லுடி செறுக்கி... சொல்லுடி..." சொல்லிக் கொண்டே மேலும் மேலும் அவள் மயித்தைக் குலுக்குகிறாள். அவள் கண்களுக்கு எங்கிருந்து தான் அந்த சிவப்பு வந்ததோ... சட்டென்று குலுக்கலைவிட்டபடி பொங்கிப் பொங்கி அழுகிறாள்.

விசுவராயர் இத்தனைக்கும் கல்லாய் இருக்கிறார். பூரணியை தடுத்து நிறுத்த அவருக்கு தெம்பு பத்தவில்லை. ஆனாலும் வார்த்தைகள் மட்டும் அவரிடத்திலிருந்து நெருப்புத் துண்டங்களாய் அவளைத் தாக்குகின்றன. இருவரிடையேயும் வார்த்தைகள் தடிக்கத்தடிக்க அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் அவர் வீட்டில் கூடிப்போய் விடுகின்றனர்.

இது அவருக்கே கஷ்டமாகப் போய்விட்டா போலிருக்கிறது. 'ஏன் இப்படி கூட்டம் கூடுகிற அளவுக்கு நடந்து கொண்டு விட்டோம் என்று உள் மனசு கூசுகிறது, தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது இனி சாண்போனால் என்ன முழம் போனால் என்ன' வென்று வக்கிரம் உண்டாகவும் செய்கிறது. இரு நிலைகளுக்குள் சிக்கித் திணறுகிறார்.

கமலாவுக்கு ஆத்திரம் ஒருபுறம். நெஞ்சு வேதனை ஒரு புறம் மனப்பாரம் ஒரு புறம் சாம்பசிவத்தின் மீது வைத்திருக்கிற ஆசை ஒருபுறம் எதையும் விடமுடியாத நிலையிலும் உண்மை ஒருநாள் வெளிவந்து தானே தீர வேண்டும் என்ற வெறியினாலும் துணிச்சலுடனும் இறுமாப்புடனும் சொல்லுகிறாள். "அப்டி ஒரு தப்பும் நா நீங்கள்ளாம் நெனக்கிற மாதிரி ஒண்ணும் பண்ணி புடலே சாம்பசிவத்தை நா மனசுல நெனச்சிபுட்டேன் அம்புட்டுத்தான்" இவ்வளவுதான் அவளால் சொல்ல முடிந்தது. சொல்லிவிட்டு கோ வென்று அழுகிறாள். குலுங்கி குலுங்கி மாய்கிறாள்.

கூடியிருந்த கூட்டம் என்னமோ கேட்காததை, கேட்கக் கூடாததை கேட்டுவிட்டபடி அதிர்ச்சியில் திளைக்கிறது. ஓரொருத்தருக்கும் கண்கள் அகல அகல விரிகின்றன. "இதென்ன அக்குருமம்" என்று இதுநாள் வரையிலும் குசுகுசுத்தவர்கள் வெளிப்படையாய் சொல்கிறார்கள்.

"ஏம்மா, சாம்பசிவத்தை மனசுல நெனைக்கிற அளவுக்கு ஒனக்கு ஆரு குடுத்தா எடம்? அப்புடி தரத்துக்கா ஒன்ன நா வளத்தன்? ஒந்தாயி ஒன்ன மார்மேல தூக்கிபோட்டுகிட்டு பாலூட்டி வளத்ததெல்லாம் நீ இந்த கதிக்கு ஆளவத்தானா? நல்ல வேளையா ந்த சங்கதி தங்க் வேலுக்குத் தெரியாது... அவனுக்கு தெர்ஞ்சிருந்தா ந்நேரம் சாம்பசிவத்தை வெட்றதுக்கு அருவாள தூக்கிகிட்டுல்ல

நிப்பான்... ஏற்கனவேயே நா ஒன்ன நெல்லுப்பட்டுல கட்டிக் குடுக்கப் போறேன்னு ஊரு அல்லோல கல்லோல பட்டு கெடக்கு இந்த லெட்சணத்துல வந்தாரு குடிப்பயலோட ஒனக்கு சிநேகிதம்ன்னா ஊரே நம்பக்குடும்பத்த தூத்திதிரியுமேடி பாவி...ப்ப நா என்னா பண்ணப்போறன்" என்று சொல்லிக் கொண்டே தலையில் மடோ மடேர் என்று அடித்துக் கொண்டவர் இடுப்பு வாரைக் கழற்றி அதை ஒரு சுழற்றலுடன் சுழற்றிக் கொண்டே ஈஸிச்சேரை விட்டு எழுந்துபோய் கமலாவின் பக்கம் நெருங்கிய மறுவிநாடி.

'பளிச் ...பளிச்...பளிச்' சென்று விழுந்த அடிகளை தாங்கிக் கொள்ளத் திராணியில்லாமல் ஐயோ அம்மா... ஐயோ அம்மா... என்று துடிக்கிறாள் கமலா.

பூரணிக்கு இந்த நேரத்தில் என்ன செய்கிறதென்று தோன்றாமல் தலையில் அடித்தபடிக்கு அவளும் அழுகிறாள்.

இதற்குள் கூடியிருந்த கூட்டம் அவர் அவளை அடிப்பதை சகிக்காமல் அவர் கையிலிருந்த வாரை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு அவரை வீட்டுக்குள்ளிருந்து வெளியே இழுத்து வருகிறார்கள்.

அவர் அப்படியும் கூட ஆத்திரம் தீராமல் தன்னை முண்டவிடாமல் பிடித்துக் கொண்டிருந்த அத்தனை பேரையும் ஒருபலம் கட்டி உதறி தள்ளி விட்டு கமலாவை நெருங்கி வாரால் அடிக்கிறார். அவள் கதறுகிறாள் கதறவும் தெம்பில்லாமல் செருமுகிறாள். இப்பவும் கூட்டம் ஒரு பாய்ச்சலாகப் பாய்ந்து அவர் அப்படி ஒரு பாகத்தைச் செய்ய மனம் இடம் கொடுக்காமல் அவரை மீண்டும் ஒரு பலத்தோடு அவரை பின்னுக்கு தள்ளுகிறது.

பூரணி ஒரு வெறியோடும் ஆனாலும் தாய்மனத்தின் தாங்கிக் கொள்ளமுடியாத சோகத்தோடும் அந்த சோகம் சோகமென தெரியாதபடி ஆழமாய் பதுங்கிக் கொண்டு 'வெறி' என்ற உணர்வும் ஆத்திரமும் கொப்பளிக்க கத்துகிறாள்.

"அவர உடுங்க... அவர் பெத்த பொண்ண அவரு கையாலேயே கொன்னுடட்டும் ஆரும் தடுக்க வாண்டாம் அவர உடுங்க...."

யார் காதிலும் அந்தத் தாயின் குரல் கேட்ட தாய்த் தெரியவில்லை விசுவராயரை வெளியே இழுத்து வந்து திண்ணையில் குந்த வைக்கிறார்கள்.

சற்றைக்கெல்லாம் ஒரு பெரும் களேபரம் நடந்து முடிந்து விட்டது.

புயலுக்குப்பின் அமைதி என்கிற மாதிரி அந்த வீடு இப்போது 'கல்' போட்ட மாதிரியிருக்கிறது.

கமலா மூலையில் படுத்தவள் படுத்தவள்தான் அவள் குலுங்கல் சப்தம் மட்டுமே வீட்டினுள் தெறித்து சிதறுகிறது. பூரணி வெறுந்தரையில் படுத்துக் கிடக்கிறாள். அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீர் கோடுகள் படிந்து காய்ந்து போய் கரை அப்பிக் கிடக்கிறது.

முத்துக்கண்ணு விசுவராயர் ஒண்ணுத்தையும் பார்க்கப் பிடிக்காமலோ சகிக்காமலோ எங்கோ வெளியே கிளம்பிப் போய் விட்டார். அவர் போகும்போதே நெல்லுப்பட்டிலிருந்து வந்த லெட்டரை சுக்கல் சுக்கலாக கிழித்துப் போட்டு விட்டுத்தான் போனார்.

**...குச்சைப் பிரித்துக்கொண்டு சொந்த ஊருக்குப் போனால் அங்கே என்ன பெருமையாய் வைக்கப் போகிறார்கள். துப்பு கெட்ட களுத ஓடுகாலி களுத என்கிற பட்டத்திற்கெல்லாம் சொந்தக் காரனாய் விட வேண்டும்...**

# 10

விசுவராயர் வீட்டு சங்கதி கமலா சாம்பசிவம் காதல் விஷயம் எல்லாம் பூதக்கண்ணாடியில் வைத்து பெருசாக்கப்பட்டு ஊர்ஜனங்கள் ஒன்றை மூன்றாக்கி மூன்றை பத்தாக்கி வாய்க்குவாய் இஷ்டத்துக்கு பேசிக் கொண்டிருக்கிற தருணத்தில் தான் சாம்பசிவத்தின் நெஞ்சு தணலில் வெந்த புழுவின் நிலையானது. ஐயோ எப்படியிது ஊருக்கெல்லாம் தெரியும்படி.. என்று யோசித்து யோசித்து மண்டை உடைந்ததுதான் மிச்சம். குழப்பத்திற்கு பதில் கிடைக்கவில்லை.

'விசுவராயர் பொல்லாதவராச்சே... அந்தப் பூவைப்புடம் போட்டு விடுவாரே ஆசாமி' என்கிறபடிக்கெல்லாம் நினைத்து அடிப்பட்ட காயத்திற்கு என்ன சிட்சை செய்கிறதென்று வைத்தியன் தடுமாறுகிற மாதிரி அவன் தடுமாறிப்போனான். அவனது வீட்டார் கூட அவன் மூஞ்சியில் காறித்துப்பாத குறைாய் பேசினார்கள்.

சாம்பசிவத்திற்கு இது பிடிக்கவில்லை. தன் வீட்டாரே தன்னைப் பற்றியும் தன் குடும்பத்தைப் பற்றியும் கௌரவ குறைச்சலாப் பேசுவதை கேட்கச் சகிக்கவில்லை. தன் குடும்பத்தை கீழாகவும் இந்த ஊர்க்காரர்களைப் பற்றி மொத்தமாகப் பேசும் போது மேலாகவுமாய்ப்பேசி தன் குல கௌரவத்தை சிதிலப் படுத்துவது அவனுக்கு நன்றாகப் படவில்லை. ஊர் ஜனங்களுக்கு பயந்து கொண்டு இப்படி பேசுகிறார்களா என்பதாய் கூட சந்தேகப்

பட்டுப் போனான். குடும்பத்தாரின் இப்படிப்பட்ட பேச்சுக்களைக் கேட்டுத்தான் ஊர்க்காரர்கள் இன்னும் டை்யெடுத்து வராமலிருக்கிறார்களோ என்பதாகக் கூட கணக்குப் போட்டான்.

காலையில் எந்திரித்ததிலிருந்தே இவனுக்கு மனசு சரியில்லை. இரவு தூக்கமில்லாதது உடம்பில் சோம்பலையும் பலஹீனமான ஒரு நிலையையும் உண்டு பண்ணியிருந்த போதிலும் கூட மேலும் தன்னுடைய காதலுக்கும் அது நிறைவேறுவதற்குமாக தான் என்ன முடிவெடுக்கிற தென்கிற கவலையே இவனை முழுசுமாய் அப்பிக் கொண்டிருந்தது.

நேத்தையிலிருந்தே ஊர் ஜனங்கள் அவனை ஒரு மாதிரிக்கு பார்க்கிறார்கள். தூ வென்று முகத்தில் காறித் துப்புகிற மாதிரிக்கு இருக்கிறது அது.

'அப்படியென்ன உலகத்தில் யாரும் செய்யாத செய்யக் கூடாத தப்பைச் செய்துவிட்டோம்' என்று உருகிப்போனான். ஓரொரு சமயங்களில் தலையை கிள்ளியா போட்டுவிடுவார்கள் என்பதாகவும் நினைத்துக் கொள்கிறான்.

ஆனாலும் தன் காதல் பிரச்னை ஊரார்கள் பேசும் படியாக வெளியில் தெரிந்த அதிர்ச்சியில் அவனால் ஒன்றையும் தீர்மானமாக முடிவெடுக்க விடவில்லை.

ரோட்டுப்பக்கம் போகலாமென எந்திரித்தான்.

பள்ளையாட்டுக்குட்டி கனைக்கிற மாதிரிக்கு அடித்தொண் டையை வரட்டிக்கொண்டு ஒரு சப்தம். நிமிர்ந்து பார்க்கையில் தான் எதிரே நிற்பவர் தருமையா நாட்டாரெனத் தெரிகிறது.

மீண்டும் அதே கனைப்புச் சப்தத்தை கொஞ்சம் அதிகப் படியாய் எழுப்பி முடித்துவிட்டு, "தம்பி ரோட்டுப் பக்கமா?" என்று கேட்கிறார். குரலிலேயே நக்கல் தெரிகிறது.

'ஆமா என்கிறான் இவன்",

"எதுக்கு?" என்று மறுபடியும் பாய்கிறது கேள்வி

இவனுக்கு பயமாக விருந்தது. உண்மையில் இவன் இந்த ஊருக்கு பிழைப்பதற்காக குடியேறி வந்த நாளாய் இப்படி அவர் பேசிப்பார்த்ததில்லை ஏன் இப்படி பேசுகிறார் - எதற்காக இப்படி பேசுகிறார். இவருக்கும் நமக்கும் ஏன்ன சம்பந்தம்? - இவருக்கோ மற்றவருக்கோ நாம் என்ன கெடுதல் செய்திரக்கிறோம். இவரும் இந்த ஊர்க்காரர்களும் தன்னை எடுத்து விடுகிற மாதிரியோ - நாராய் கிழித்துப்போட்டு விடுகிற மாதிரியோ பார்க்கிறார்களே எதற்காக?

குழப்பம் தலையைச் சுற்றுகிறது. அந்தக் காலையிலும் வியர்த்துக் கொட்டுகிறது. ஆனாலும் எதிரே நிற்கும் மனிதர் ஓர் வம்புக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு விட்டார் போல் தெரிகிறதே-

"வெளிய போறன் மா...

"ச்சீ நாய... நா ஒனக்கு மாமனாடா எந்த வெதத்துலடா மொற வச்சி கூப்புட்ட கூப்புர்ற நாக்க ஒட்ட அறுத்துப்புடுவன்".

"இல்ல மா...மா...

"நக்கலாடா களுதே... த்தூ....

"இப்புடித்தான ஓங்கள கூப்புட்டு பளக்கம் சட்டுனு மொறைய மாத்தச்சொன்னா முடியுமா?"

"தாயிளி... நெஞ்சுல குத்துனன்னா நெஞ்சு உள்ளாரப் போயிரும்" என்று நாக்கைத் துருத்திக் கொண்டு அடிக்கிற மாதிரி பாய்கிறார்.

"என்ன அடிக்கணும் போலருந்தா அடிச்சிப் புடுங்க... இப்பிடியெல்லாம் பேசாதீங்க"

"நா ஏதுக்குடா படுவா ஒன்ன அடிக்கிறன் அங்க ரோட்டுப் பக்கம் தங்கவேலு அடிக்கிறத்துக்கு காத்துகிட்டிருக்கான்

அருவாளும் கையுமால்ல நின்னுகிட்டிருக்கான் சட்டுனு போ... கையில ஒன்னுமுல்லாம போவாதடா கம்பு கிம்புருந்தா தூக்கிகிட்டு போ... அப்பத்தான நீயும் எயித்தடிப்ப"

'சொரக்' கென்று நெஞ்சுக்குள் பயம் குடிகொண்டு நடுக்கம் கொள்கிறது. எப்பேர்ப்பட்ட துஷ்டக் காரனாக விருந்தாலும் முரட்டுக்காரனாக விருந்தாலும் எதற்குமே அஞ்சாத அஞ்சா நெஞ்சத்தினனாக விருந்தாலும் கூட ஒரு கணத்துக்காவது கதிகலங்க வைக்கிற வார்த்தையல்லவா அது. உண்மையில் சாம்பசிவம் நடுங்கித் தான் போனான்.

"அப்புடி ஒண்ணும் ஒலகத்துல ஆரும் செய்யாத தப்பை நா செஞ்சிபுடல..."

"த்தூ... பலவட்ற நாய.. நாக்குல வார்த்த வச்சி ஒண்ணும் பேசாதடா... பேசுற நாக்க அறுத்துப்புடுவேன் ...அறுத்துக்கட்ற கள்ளச்சாதியில புள்ளயா பொறந்து புட்டு வாகரக் கள்ளன் வூட்ல ஒறவு வச்சிக்கத் துணிஞ்சியே எம்புட்டு நெஞ்சளுத்தமிருக்கும் ஒனக்கு? ன்னேரம் என்னப்பெருத்த கூட்டாளின்னா ஒன்ன இம்புட்டு நாளிக்கி உசுரோடயா வச்சிருப்பன் துண்டு துண்டால்ல வெட்டி போட்டிருப்பன் இம்புட்டு நாளிக்கு நீ மரமாட்டம் நிக்கிறியன்னா முத்துக்கண்ணு விசுவராயன் நெஞ்சு மயிர ஒட்ட நறுக்கிகிட்டதாலதாண்டா நாய... அவனுக்குத் தான் ரோஷம் அத்துப் போச்சுன்னா எங்களுக்குமா போயிரும்.. எல... நாங்க வாகரக்கள்ளண்டா... வாகரக் கள்ளன்" என்று நாக்கைத் துருத்திக் கொண்டு முழியைப் பிதுக்கிக் கொண்டு சொல்கிறார்.

"ஒண்ணும் தலமிஞ்சிப் பண்ணிப்புடல மாமா குத்தமா நேனச்சிக்காதீங்க... கூப்புட்ட பளக்கத்தை சட்டுனுவுட முடியலை"

"சரிடா என்ன ஒண்ணும் பண்ணிப் புடலங்குற... நாளக்கி அந்தப் பொண்ணு வாயும் வயிறுமா நிக்கிறப் பயல நீ என்னா பண்ணிருப்பன்னு தெரியப்போவுது"

"அந்த அளவுக்கு ஒண்ணும் மிஞ்சிப் போயிரல... பளக்கத் தோடதானிருந்தோம்"

"என்னாட மசுறு பளக்கம் விசுவராயரு குடும்பத்த நாறடிக்கறத்துக்குத்தானா ஒன்ன இந்தூருல குடிவச்சோம்?"

"என்னால ஒண்ணும் பெருசா நாறிப்போவலை நீங்கதான் ஆளாளுக்குப் பேசிப்பேசி நாறவச்சிருவீங்கப் போலருக்கு".

"துமுரடியா பேசாதடா ஓங்கி ஒதவுட்டா ஒம்போது குட்டிக் கரணம் போடுவ"

"துமுராபேசல... உம்மையில நானும் அதும் பாத்துகிட்டோம் பேசிகிட்டோம் கதை இம்புட்டுக்கு மேல போயிரல"

"இன்னம ஒண்ணும் ஒன்ன ஊர்ல குடிவய்க்கப்புடாது ..ரெண்டு நாள்ள குச்சிய பிரிச்சிகிட்டு ஊரவுட்டு கெளம்பிப் போயிர்ரா... இதுதான் மரியாதிக்கி அடையாளம்.. ஒடம்ப புண்ணாக்கிக்காம போயிச்சேருடோய்" என்று சொல்லிவிட்டு அத்தோடு போய் விட்டார் தருமையா நாட்டார்.

சாம்பசிவம் மௌனமாக விருந்தான். நெஞ்சினில் அலையடித்தது. ஒரு இளைஞனுக்குரிய கோபமெல்லாம் அவன் நெஞ்சுக்குள்ளேயே ஆர்த்து அடங்கி அமுங்கிப் போய்விட்டன. அவர் சொல்கிறமாதிரி தான் ஒரு அந்நிய குடும்பம் போல் இந்த ஊரில் வாசம் பண்ணுகிறவரை அவர்கள் சொல்கிறதற்கும் பேசுகிறதற்கெல்லாமுமாய் மண்டியிட்டு சாகவேண்டியதுதான் எதிர்த்து பேசப்போனால் ஊரே திரளும் பக்கத்து பக்கத்து ஊரார்கள் கூட படையெடுத்து வருவார்கள் தானும் தன் குடும்பத் தாரும் எம்மாத்தரம்?... ஒரு கையா ஓசை வைக்கப் போகிறது.

குச்சைப் பிரித்துக்கொண்டு சொந்த ஊருக்குப் போனால் அங்கே என்ன பெருமையாய் வைக்கப் போகிறார்கள். துப்புகெட்ட களுத ஓடுகாளி களுத என்கிற பட்டத்திற்கெல்லாம் சொந்தக் காரனாய் விட வேண்டும். அங்கயும் குந்த குச்சியோ மனையோ

இல்லை பங்காளிச் சண்டையில் எல்லாவற்றையும் விற்று விட்டு உரை விட்டு கிளம்பி வந்தவர்கள் தானே?

இவனுக்கும் நாட்டாருக்கும் சற்று கனமாக வாய்த்தடிப் புண்டான தகனால் தெருவில் பத்து பேரளவுக்கு கூடி வேடிக்கைப் பார்த்தார்கள் 'ஒண்டிக்காரப்பயலை என்ன பாடு படுத்துகிறது' என்று கூட யோசித்தார்கள். கூடினவர்கள் யாரும் இவனிடம் அனாவசியமாய் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை. தருமையா நாட்டாரே பேசினால் சரி என்று விட்டுவிட்டார்கள்.

முத்துக்கண்ணு விசுவராயரும் கூட தெருப்பக்கம் இரைச்சல் கேட்டு திண்ணைக்குறட்டோரம் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார். தருமையா நாட்டார் தனக்கு உள்ளாந்தரத்தில் ஆகாதவராக இருந்தாலும் சொந்த பந்தம் ஊர்க்காரன் என்கிற முறையிலெல்லாம் விட்டுக் கொடுக்காமல் பேசினது பெருமையாகவும் பூரிப்பாகவும் இருந்த போதிலும், உள்ளாந்தரத்தில் ஊரார் மத்தியில் தன் மானத்தை வெளிச்சமாக்கு கின்றார் என்றே பட்டது.

ஒருவாறாய் கோபத்தை நெஞ்சில் அடக்கிக் கொண்டு திண்ணையில் குந்தியவர் தெருவில் பேச்சு ஓய்ந்து போயிருக்கிற இந்த சமயத்தில் அனாவசியமாய் தலையை வெளியே காட்டி வீண் வம்பை விலைக்கு வாங்க வேண்டாமே என்று நைசாய் நழுவி வீட்டுக்குள் போய் விட்டார்.

சாம்பசிவம் இன்னமும் கலங்கிய கண்களுடன் தெருவில் நின்று கொண்டிருந்தான். வருவது வரட்டுமென்று ஒரு முடிவோடு ரோட்டுப்பக்கம் நடக்க ஆரம்பித்தவனின் கால்களை தடுத்து நிறுத்தியது. அவனது தாயின் குரல்தான், "இப்ப எதுக்குடா ரோட்டுப் பக்கம் போற?"

"போம்போதே கூப்டாதம்மா...?"

"கலைட்டரு உத்தியம் பாக்கப்போற சகுனம் தட்டிப்போச்சாக்கும் வூட்டுக்கு வாடா?"

"நா வல்ல"

"யாண்டா"

"ஏ தலையச் சீவிப்பாக்கணும்னு ஆருக்கும் ஆசருந்தா சீவிப் பாக்கட்டும்"

"நீ எனக்கு ஒரு மவனாச்சேடா, ஒன்ன அவுங்க வெட்டி சாச்சுபுட்டா ஏ வுசுற கூட்ல கெடக்குமா..."

"அதுக்காவ நா பயந்துகிட்டே எத்தினி நாளைக்கும்மா வூட்ல அடஞ்சி கெடக்க முடியும்... போற எடத்துக்கு போவாமலோ வர்ற எடத்துக்கு வராமலோ இருக்க முடியுமா?"

"வீம்பு பண்ணாம ஊட்டுக்கு வாடா சாம்பசெவம் அப்பறம் போயிருக்கலாம்".

"நீ போம்மா வூட்டுத்குள்ள பெரிசாபேசிகிட்டு நிக்காம"

அவன் போய்க்கொண்டேயிருக்கிறான், அம்மா மரமாய் நிற்கிறாள்.

திண்ணைக்குறட்டோரம் முளைக்குச்சடித்து கட்டியிருந்த ஆட்டுக்கிடாக்கள் ரெண்டும் உடம்பை விரைத்துச் சிலுப்பி பெருசாய் கனைத்துக் கத்துகிறது...

"டேய் சாம்பசெவம் ...போவதடா...ஆடு சிலுப்புது போவா தடா...ஐயோ சொல்றத கேக்காம போறான பாவி... ந்த ஊருக்குள்ள ஆரும் ஏம் புள்ளய ஒண்ணும் செஞ்சிபுடாதீங்க... அப்புடியே ஏம்புள்ள ஆரும் செய்யாத குத்தத்தை செஞ்சிருந்தாலும் என்னா தண்டன வேணுமுன்னாலும் குடுங்க ஏத்துக்குறோம்... கூட மண்ண தலையில வெட்டி வச்சி ஊர கோளி வரச்சொன்னாலும் வர்றோம்... ஏம் புள்ளய உசுரோட ஒண்ணும் பண்ணிபுடாதீங்க..." என்று அவள் வாயிலும் வயிற்றுலுமாய் அடித்துக் கொண்டு கதறுகிறது யார் நெஞ்சைத்தான் உலுக்கவில்லை.

தாயின் அரற்றலை காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல முரட்டுத்தனமாய் தெருவில் நடந்து போகிறான் சாம்பசிவம்.

அவன் தெருவில் போய்க் கொண்டிருப்பதை வாசல்வரை வந்து எட்டிப்பார்த்த வயசுப் பெண்களுக்கு சாம்பசிவத்தின் மீது கருணைதான் பிறக்க ஆரம்பித்ததேத் தவிர எரிச்சல் வரவில்லை. பாவம் அவர்கள் - தங்களுக்கும் முன்னால் அவர்கள் கண்களுக்கே தெரியாதபடிக்கு விரிக்கப் பட்டிருக்கும் வலையைத் திமிறிக் கொண்டு சாதிச்சாத்தானோ அவர்களுக்குள்ளேயே இருக்கிற பெரிய சாத்தானோ - இன்ன பிற குட்டிப்பிசாசுகளோ தீவினையோ அறுத்துக்கொண்டு உள் நுழைய முடியாதபடிக்கு எழுப்பப் பட்டிருக்கிற மதில்சுவர் என்று பொடியாகும் என்று கனவு கண்டு நொந்து நொந்து நொந்தேச் செத்து உயிர்வாழ்கிற மனிதப்பிசாசுகளிடை என்ன மார்க்கம் கிடைக்கப் போகிறது இதற்கெல்லாம்?

பெண் நினைத்தால் மதில்சுவர் நொறுங்கலாம். வலுவாகக் கட்டப்பட்டுள்ள வலை அறுத்தெறியப்படலாம். பூகம்பம் பிரளயம் எதுவும் நிகழலாம் தான் ஆனால் அப்படியெல்லாம் செய்ய முடியாதபடிக்கி அவர்களுக்கு முன்னால் முட்டாக கிடக்கிறதே என்ன அது?

அவர்களும் கூட இந்த முரட்டுத்தனமான சித்தாந்தத்திற்குப் பழகி அநாகரிகமான செயல்களுக்கு அடிமைப்பட்டுவிட்ட தினாலா? அது உண்மையென்றால் இச்சமூகத்தில் அழுகி நாத்தமெடுத்து குமட்டிக் கொண்டிருக்கும் குப்பைகள் மேலும் மேலும் சேரத்தான் சேரும். ஒரு வர்க்கம் அந்த அழுகல் குப்பைகளை மேலும் மேலும் சேரவிடாதபடிக்கு துள்ளி எழுந்து செயலாற்றுகிறவரை இச்சமூகத்தில் யாருக்கும் யார் யாருக்கும் கதிமோட்சமே இல்லை தான்.

சாம்பசிவம் தலையை குனிந்தபடி தெருவில் நடந்து கொண்டிருந்தபோது அநேகமாக தன் உயிரின் மீதிருந்த ஆசையை விட்டொழித்திருந்தான் என்பதுதான் வாஸ்தவம்.

துணிந்தவனுக்கு துக்கமில்லை என்பார்களே அது மாதிரிக்கு தீமையைக் கண்டு அஞ்சுகிற இவன் அதை எதிர்த்து போராடுகிற மனப்பக்குவம் தனக்கு இன்னும் ஏன் எழாமலிருக்கிற தென்பதறிந்து வெட்கப்பட்டான். தீமை எதுவானாலும் அவைகளை வலுவுடன் எதிர்த்து போரடினால் வெற்றிகிட்டும் என்ற சிந்தாந்த உண்மை வெளிச்சம் அவன் மனக்கண்ணுக்கு தெரிந்த போதிலும் கூட அவன் ஏனோ செயலிழந்தவனாக ஊமை மனத்தினனாய் நடந்து கொண்டிருந்தானென்றால் தன்னால் ஒரு பெண் பாதிக்கப்பட்டு விடுவாளோ அவள் குரல்வளையை நெறித்து கொன்று போட்டு விடுவார்களோ என்ற பயமெல்லாம் தான் காரணம்.

அது அவளுக்கு நிகழக்கூடாது. கமலா- அவன் கண்மணி அவளைப் பற்றி என்ன வெல்லாம் கற்பனை பண்ணித் திரியும் அவன் நினைத்திருப்பது தனக்கு எந்த தீவினை வந்தாலும் அவளுக்கு ஒரு பாதகமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பது தானே!

இந்த களே பரங்களுக்கிடையில் கமலாவை எப்பாடு பட்டாவது ஒரே ஒரு முறை பார்த்துப் பேசிவிட்டால் போதுமென்று தோன்றியது. அது சாத்தியம் தானா என்று அவனுக்கே நம்பிக்கை வரவில்லை.

இதோ முத்துக்கண்ணு விசுவராயர் வீட்டுத் தெருப்பக்கம் வரை வந்து விட்ட அவனது நெஞ்சம் முன்னைக் காட்டிலும் ஏனோ வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டது. கண்களில் இருள் சூழ்ந்ததுபோல் திக்பிரமையுற்றுப் போனான்.

தலையைத் தூக்கி அவள் வீட்டுப் பக்கமாய் பார்வையோட்டி அவளை காணுகிற ஆவலை எது தடுக்கிறதென்று புரியவில்லை.

எதுவும் நிகழலாமோ என்கிற பயத்தில் நடக்கும் போது துணிச்சலென மனசுக்குள் - அது வரட்டுத் துணிச்சலென தானே உணர்ந்தும் சின்னச்சின்ன அரவங்கள் வட அவனை உலுக்கி எடுத்து விடுகிறது. காற்றாட நடக்கும் போதும் உடம்பு வியர்வையில் குளிக்கிறது. மயிர்க்கால் விரைத்து சிலும்பி நிற்கிறது.

இப்போதிருக்கிற மனத்திற்கு விசுவராயரோ, அந்த தங்கவேலுவோ அருவாளையோ கடப்பாறையையோ எடுத்து வந்து மண்டையில் போட்டு ஒரேடியாக இவனைக் கொன்று போட்டு விட்டால் கூட தேவலாம் போல் தானிருக்கிறது பயம் சூழ்ந்த நேரங்களில் உலவும்போது மனசு என்னமாய் கனத்து செத்து மடிகிறது?

அவன் மரணத்துக்குப்பின் அவர்களின் குலக் கௌரவம் ஊர் கௌரவமெல்லாம் ஒன்பது தென்னை மர உயரத்துக்கு கொடிகட்டி பறக்கட்டும் பறக்கிற கொடி நிழலில் சோகங்களும் கொடுமைகளும் அழுக்குகளும் அசிங்கங்களுமே இருப்பதாய் உணர்ந்து தொலைக்கிற காலம் எப்போது வரும்?

தலையை குனிந்த படிக்கு சிவனே வென்று நடந்து, கொண்டிருக்கிற சாம்பசிவத்தை கூப்பிட்டு நிறுத்தி அத்தான் என்ன இது பாராமுகம் ஒங்க கமலுவைப் பார்த்துப் பேசிப்போகக் கூடாதா? என்று கமலா சொல்லக்கூடாதா? - என்ன இது மனசுக்குள் இப்படியொரு திடீர் நப்பாவை புரண்டு வாட்டுகிறது -

குபீரென்று அந்த நினைப்பின் கணத்தில் உடம்பெங்கனும் சந்தோஷங்கள் சூழ்ந்து பயங்களை புறத்தே தள்ளிவிட்டது போலான பிரமையில் அவன்.

இந்த நினைப்பு எதற்கு வந்தது? இப்படியும் கூட நடக்குமா என்ன? அசிங்கமாய் சிரித்துக்கொள்ள மனசு சுண்டிப்போகிறது.

கோயில் - குளம் - சின்ன சுப்பிரஸ்தா இவைகளைத் தாண்டி ஒரு வழியாய் ரோட்டுப் பக்கம் வந்துவிட்டான் சாம்பசிவம். ரோட்டுமதகில் தங்கவேலு குந்தியிருந்தான். தருமையாநாட்டார் சொன்னமாதிரி அருவாள் சங்கதிகளுடன் அல்ல - வெற்றுடம்பில் அழுக்காய் ஒரு துண்டை மட்டும் பேருக்குப் போட்டுக் கொண்டு குந்தியிருந்தான். சாம்பசிவத்தைப் பார்த்ததும் அவன் களவரமுற்றதாகவோ தேடின எதிராளி வந்துவிட்டது போல் உண்டாகும் ஆத்திரக்காரனாகவோ கொலையாளியாகவோ அவன் கண்ணாக்குப்புலப்படவில்லை.

அதற்கெல்லாம் நேர்முரனாய் மென்மையே தனக்குச் சொந்தம் என காட்டுகிறவனாய் ரொம்பச் சாதாரணமாக இறுக்கம் கொள்ளாத முகத்தோடு குந்தியிருந்தான். மாறாக சாம்பசிவத்தைப் பார்த்ததும் அவன் கண்களுக்குள் ஓர் பரவச ஒளியேறி சிரித்துக் குலுங்கியதுதான் வாஸ்தவத்திலும் வாஸ்தவம்.

இப்போது தங்கவேலுவைப் பற்றி நினைக்க ஆரம்பித்தான் சாம்பசிவம்.

ஊரிலிருக்கிற மத்த மத்த இளைஞர்கள் மாதிரி அடாதுடியான ஆளில்லை அவன். தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருக்கிறவன். அடுத்தவர் பிரச்னைகளில் வலிய ஈடுபட்டு அதனால் ஏற்படும் மனக்கிலேசங்கள் சச்சரவுகள் போன்றவற்றை முழுக்க விரும்பாதவன்.

அப்பா முத்துக்கண்ணு விசுவராயரிடத்தில் கொஞ்சம் பயந்த நிலையில் வாழ்பவன். அவருடைய கண்டிப்பால் தான் அவன் இந்த ஊர்க்காரர்களிடத்தில் சற்று வேத்து மனுஷனாக இருக்கிறானோ என்று சாம்பசிவம் ஒரொரு சமயங்களில் நினைத்துப் பார்ப்பதுண்டு.

தன்னிடத்தில் அதிகப் பழக்கமில்லை பார்த்தால் கொண்டால் சிரித்துக் கொள்ளவும் என்ன என்றால் என்ன என்று கேட்டு விட்டோ அல்லது 'என்ன' என்ற ஒத்தை வார்த்தையை சொல்ல அச்சப்பட்டு சிரித்துக் கொண்டோ போகிற பேர்வழி. ஒரு வம்புதும்புக்கான ஆளில்லை. 'தருமையா நாட்டார் சொன்ன மாதிரி அரிவாளை எடுத்துக் கொண்டு சினம் கொண்டு திரிகிற ஆசாமியு மில்லையே' என்று நினைத்துக் கொண்டான்.

தங்கவேலுவிடம் தானாக பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாமா என்று தோன்றியது சாம்பசிவத்திற்கு. இப்போது தானாக அவனை ஒன்றும் கூப்பிடவேண்டாமே என்று நினைத்துக் கொண்டே நடந்தபோது பின்னால் 'மச்சா... என்று குரல் ஒலித்து அதிர்ந்து திரும்பினான்.

கூப்பிட்டவன் யாருமில்லை தங்கவேலுதான்!

'காலம் முழுமையும் அப்படியே அவன் அழைக்க தனக்கு கொடுப்பினை வேண்டுமே' என்று ஒரு கணம் நினைத்துக் கொண்டான்.

காலையின் மணம் மற்றாய் மறையாத வேளை.

வாழ்க்கையின் முழுச்சந்தோஷமே பறந்து திரிதலில் தான் என்கிற மாதிரிக்கு பறவைகள் அந்தரத்தில்,

தூரத்தில் எட்டுமணி டவுன்பஸ்ஸின் ஹாரன் ஒலி.

ரோட்டோரங்களில் ஓரிருவர் வேஷ்டியை வழித்துக் கொண்டு ஓரத்தில் குந்தியபடி.

லேசாய் வீசும் காற்றின் கோபத்திற்கு ஆட்பட்டு மரக் கிளைகளில் படர்ந்திருந்த பனித்துளிகள் நுனுங்கி நுனுங்கி கீழே ஜாலவித்தைப் புரியும் அழகு.

மெல்லத் துலங்கி மெல்லமெல்லவே சீறிப்பாய்ந்து முழுமுகத்தில் பற்பல அம்புகளை செருகியப்படி பார்க்கும் கண்களையெல்லாம் நாணிக்கொள்ளச் செய்யு சூரியப் பந்து கீழ் வானத்தில்.

அடி நெஞ்சுக்குள் கோபங்களும் சினமும் பொங்கி ஆர்ப்ரிக்க மனசுடன் நடந்து கொண்டிருந்த அவனுக்குள் அந்த 'மச்சா' இறங்கி ஜால வித்தைப் புரிந்தது. கணத்துக்குள் உலக சந்தோஷமே தன்னை குடி கொண்டு விட்டது போலான மயக்கத்தில் இப்போது அவன்.

தன்னுள் அப்பியிருந்த பயமெல்லாம் போயே போய் திரும்பியவன் லேசாய் சிரித்தான்.

எப்போதும் இவன் குரலுக்கு அவன்தான் சிரிப்பவன்.

மாறுதல் எப்போது இல்லை?

'அணு' என்று சொல்கிறார்களே அந்த சின்ன துளி நேரத்தில் கண்களுக்கோ கற்பனைகளுக்கோ எட்டாத, உலகில் எத்தனையோ கோடி கோடி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு, நிகழ்ந்து கொண்டும் தானிருக்கின்றன.

மனசுமுழுக்க கமலாவைப் பத்தின சுமைகளுடனும் அவளைப் பத்தின நினைப்புகளுடனும் இருப்பது எத்தனை சுகானுபவம் தருகிறது. நினைப்பே கமலவாய் வடிவம் கொள்ள வண்ணத் தாரகைகள் நெஞ்சினில் ஜாலவித்தை காட்டுகின்றனதே.

நெருக்கடியிலும் 'கமலா'வென்று அழுத்திச் சொல்லிக் கொள்கின்றான்,

சிரித்துக்கொண்டே மதகில் குந்தியிருந்த தங்க வேலு எந்திரித்து இவன் கிட்டே வருகிறான்.

"ஒங்களோட கொஞ்சம் தனியா பேசணும் வாங்க போவோம்" என்று சொல்லிக்கொண்டே அவன் எதிர்பார்க்காத விதத்தில் சடாரென்று தோள்மேல் கை போட்டுக் கொள்கின்றான். சாம்பசிவத்திற்கு இது வியப்பாகவும் அதே சமயத்தில் பயம் கொள்ள வைக்கிறதாகவுமிருக்கிறது.

ஏன் இப்படி தங்கவேலு என்றுமில்லாத வழக்கமாய் நடந்து கொள்கின்றான். நினைக்க குப்பென்று வியர்த்துப் போகிறது.

பதுங்கிப் பாய்கிற புலி ஜென்மமோ?

என்ன நினைக்க - எதை நினைக்க

"ஊரில் ஒத்தைக் குடும்பமாய் இருந்து கொண்டு யாரை நான் எதிர்க்கப் போகிறேன்?"

பெருங்காத்தில் சிக்கிக்கொண்ட கன்று மரம் மாதிரி என்ன சித்திரவதை இது?

பண்ணின குற்றத்திற்கு தண்டனையாய் சாகடித்து விட்டால் கூட தேவலாம் போலிருக்கிறதே -

ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு மிக அன்னியோன் யமாய் தெற்கால் போகும் அழகை ரசித்துக் கொண்டிருக்கிற கண்களில் கோபால் குச்சிராயருடையதும் என்பதை இங்கே சொல்லத்தான் வேண்டும்.

ரோட்டோரத்தில் வேஷ்டியை வழித்துக் கொண்டு சுருட்டை சுவைத்தபடி குத்தியிருந்த குச்சிராயர் அதற்கு மேல் வந்தக் காரியத்தை முற்றாய் முடிக்கப் பிரியமில்லாமல் சட்டென்று எழுந்து பார்வையால் அவர்களைச் சுட ஆரம்பித்தபோதுதான் சூத்துப்பட்டைக்குமேல் வழித்து விட்டிருந்த வேஷ்டி அவரறியாமல் கீழே நழுவிக்கொண்டிருக்கிறது.

***...சலனப்பட வைக்கிறவன் மனிதன். சந்தோஷப்பட வைக்கிறவன் மனிதன் துன்பப்பட வைக்கிறவன் மனிதன் துக்கப்பட வைக்கிறவன் மனிதன். மனிதனே பற்பல உருக்கொண்டு பற்பலவான நிறங்களுடன் வேஷங் கட்டி வித்தைகாட்டி...***

# 11

“ஸ்பஸ்டங்கமான நீரினுள் எத்தனையோ கோடி அலைகள்” என அறிஞர்கள் சொல்கிறபடி தங்கவேலு இத்தனை விஷயாதியா என்று புல்லரித்துப் போனான் சாம்பசிவம்.

ரொம்பத் தெளிவான மனநிலைகளுடன் அவன் கூறியது அத்தனையும் உண்மையான ஊருக்குச் சொல்ல வேண்டிய ஒட்டி வைக்க வேண்டிய வாசகங்கள். வாகரைக் கள்ளனென்று மார் தட்டிப் பேசிக்கொண்டிருக்கிற கள்ளரிலிருந்து சின்னவீட்டு கள்ளர்வரை ஒவ்வொருவர் உள்ளத்தைப் பற்றியும் குணாதிசயங்கள் பற்றியும் அவர்கள் யாருக்கும் தெரியாது என்று நினைத்துக் கொண்டு தெரிந்தே வைத்திருக்கும் உறவுகளைப் பற்றியும் கூட கதைகதையாய்ச் சொன்னான்.

தருமையா நாட்டாருக்கு ஐந்துவப்பாட்டியாம். ஐந்து பேருமே கீழ்ச்சாதிக்காரர்கள் தானாம். மூத்தவப் பாட்டிக்காரி சாகும்போது ரொம்ப அவஸ்தைப்பட்டுத்தான் செத்தாளம். லேசில் சாவுவராமல் அவளைச் சேர்ந்தவர்களை ரொம்ப அவஸ்தைப்படுத்தி விட்டாளாம். கடைசியில் தொண்டைக் குழியில் ஓடிக்கொண்டிருக்கும் துடிப்பு தருமையா நாட்டாரின் ஆசை நினைவுகள் தான் என அறிந்து கொண்ட பெரியவர் ஒருத்தர் அவரை எப்படியாவது அழைத்து வந்து அவர் கையால் அவளுக்கு உயிர் தண்ணீர் விட்டால் கஷ்டப்படாமல் செத்துவிடுவாள் என்றாராம் அதைக்கேட்டவர்கள் ஓடிவந்து ரகசியமாய் தருமையா

நாட்டாரிடம் சொல்ல, அவரும் ரொம்ப ரொம்பத் தயங்கி ராத்திரி வேளையில் அவள் வீட்டுக்குப் போய், "பொட்டு நா ஓ ஐயோ வந்துருக்கன்" என்று அவள் காதில் விழுக்கிறபடிக்கு ஓங்கி குரல் கொடுத்து சொல்லி அவள் வாய் அகற்றி அவர் கையால் பால் விட "க்கேவ்" என்ற பெருத்த கேவல் ஒலியுடன் கண்களை ஒரே ஒருமுறை உருட்டி உருட்டி அவரை விழித்துப் பார்த்து விட்டு கண்களை மூடினபோது தருமையாநாட்டார் அழுத அழுகையை ஊர்க்காரர்கள் சொல்லிச்சொல்லி சிரித்துக் கிடந்த சங்கதியை லேசில் மறந்து விடமுடியாதாம்.

சாதியென்றும் சாதிக்குள் சாதியென்றும் மார்தட்டிப் பேசுகிற தருமையாநாட்டாரின் கதை இதுமட்டுமல்ல இன்னும் எத்தனையோ என்று பேசிய தங்கவேலு, "மனுசருல என்ன சாதி கெடக்கு" என்று கவுச்சி அடிச்சார்போல் பேசவும் ஆரம்பித்து விட்டான்.

அவர்கள் இருவரும் வெகுநேரம்வரை தனிமையில் குந்த பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் ரோட்டுப் பக்கம் தனியாய்ப் பேசிக்கொண்டிருக்கிற சங்கதியை கோபால்குச்சிராயர் முத்துக்கண்ணு விசுவராயரிடத்தில் சொல்லி அவரும் ரோட்டுப் பக்கம் வந்து விட்டார்.

"நம்பவூட்டு மானம் கொலச்ச மயிரானோட என்னடா பேச்சு பேசுற" என்று எகத்தாளமாய் கத்திக் கொண்டே வந்தவரின் கொட்டத்தை அடக்குவது போல. "சும்மா நிறுத்துங்கப்பா" என்று ஒத்தை வார்த்தையில் அடக்கி விட்டான் தங்கவேலு.

விசுவராயர் அதற்கப்புறம் அங்கு நிற்கவில்லை, குலைந்த வேளையில் மேலும்மேலும் குலைந்து கொண்டிருந்தால் நன்றாயிருக்காதென்று தோன்றிவிட்டது போல மறுபடியும் வீட்டுப் பக்கம் நடையைக் கட்டி விட்டார். தங்கவேலு வீட்டுக்கு வந்தால் மித்த ஆத்திரத்தை தீர்த்துக்கொள்ளலாம் போல விட்டு விட்டாரோ என்னவோ.

விசுவராயரின் வருகையால் பயந்து போயிருந்த சாம்பசிவத்தைப் பார்த்து தங்கவேலு சொன்னான், "கவலப்

படாதீங்க மச்சான்... வூட்டுக்குப் போயி எப்படியாச்சும் அவர சரிகட்டிப்புடுறேன் நீங்க ஊர்க்காரனுங்க பூச்சிக்காட்டுக்கெல்லாம் பயப்புடாம தைரியமாருங்க".

சாம்பசிவம் தங்கவேலு போனதற்கப்புறமும் வீட்டுப் பக்கம் போகப்பிரியமில்லாமல் தனிமையில் குந்தியிருந்தான்.

நெஞ்சினில் பயம் ஒருபக்கம் இருந்தபோதிலும் மனசு கொஞ்சம் லேசாகி இருக்கிற மாதிரியிருந்தது.

தங்கவேலு ஒருவன் மட்டும் தனக்கு துணையிருந்து விட்டால் போதும் இந்த ஊரைப்போல் பத்து ஊராரை அடக்கிக் காட்டலாம். இப்போது அவனுக்கு துணைபோலிருக்கிற தங்கவேலு அப்பா பேச்சையோ ஊரார் பேச்சையோ கேட்டு மாறிவிடுவானோ என்பதாகவும் நினைத்த போது தைரியமிழந்தான்.

சாரிசாரியாய் நடவுப் பெண்கள் வயல்பக்கம் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களின் நடையும், கண்களில் புரிந்த பாவனைகளும் - சிரிப்பும் அவனது இள நெஞ்சை சற்று கிளுகிளுப் படையவே செய்துவிட்டன.

"ஐயா, என்ன தனியாகுந்தி ரோசனையில இருக்கீங்க?"

"சும்மா தான்"

"சும்மான்னா...?"

"நக்கல் பண்ணாத பூவு ரொம்ப நொந்து கெடக்கன்"

"என்ன நோவு அதுக்காட்டியும்?"

"நடப்போற ஒனக்கு என்ன கேள்வி இதெல்லாம்?"

"மூஞ்சி வாடியிருக்குன்னு கேட்டா...

"போ பூவு"

“அதென்னாங்க... விசுவராயரய்யாவூட்டு பொண்ணுக்கும் ஒங்களுக்கும் முடுச்சிப்போட்டு ஊர்ல பெருசால்ல பேச்சு நடக்குது... என்னாக்கதை?”

“அம்புட்டுக்கு சேதி வந்துருச்சா?”

“பின்ன தெர்யாமலா கேக்கோம்... எப்ப கலியாணம்?”

“தேதி வச்சொடனே ஒனக்கு தனியா சேதி சொல்லி அனுப்புறேன் காலத்தக் கடத்தாம சட்டுனு நடவுக்கு போ புள்ளே”

“போறோம் கலியாணத்துக்கு கறிச்சோறு போட்டா எங்களுக்கும் உண்டுல்ல?”

“கறிச்சோறுதான புள்ள என்ன பெரமாதம்... கல்யாணமே நடக்காட்டி கூட வலிக்கனாட்டுகறிய ஓ ஒண்டிக்கே ஆக்கி போடச் சொல்றன் போறுமுல்ல?”

“இப்ப குஷியில அப்புடி சொல்லிபுட்டு கறிச்சோறன்னிக்கி எங்கள கண்டுக்காம புதுப்பொண்ணு முந்தானையில்ல புடிச்சிருச்சி வயக்காரன் வைவான்”

“போறம்... விசுவராயரய்யாவூட்டு பொண்ண ரொம்பத்தான் நெனைக்காம வேலயப்பாருங்க”.

“ம்ம்...

அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். வாழபுக்கையில் ஒரொருத்தருக்கும் ஏற்படுகிற சில நிமிஷ சந்தோஷம் இது. நெஞ்சினில் எத்தனை சுமையிருந்த போதிலும் அந்த சுமைபாரம் தெரியாமல் மறந்து விடுகிற சந்தோஷம், பேச்சம்பிட்டால் போறும் ஆளையே அசத்தி விடுவார்கள். அந்த கணங்களில் நெஞ்சு சலனமுற்றுப் போய் விடுகிறது.

சலனப்பட வைக்கிறவன் மனிதன். சந்தோஷப் பட வைக்கிறவன் மனிதன் துன்பப்பட வைக்கிறவன் மனிதன் துக்கப்

பட வைக்கிறவன் மனிதன். மனிதனே பற்பல உருக்கொண்டு பற்பலவான நிறங்களுடன் வேஷங்கட்டி வித்தைகாட்டி திரிகிற போது பாதிக்கப்படுகிறதும் பாதிக்கப்பட வைக்கிறதும் மனிதனே என்ற உண்மை புலப்பட்டும் கீழ்த்தரமான எண்ணங்களிலும் செயல்களிலுமாய் இறங்கி சிக்குவதும் சிக்கவைப்பதும் மனிதனே, நடப்பவைகட்கும் நடக்க முடியாதவைட்கும் மனிதனே காரணகர்த்தா இவை எல்லாவற்றையும் நினைக்க சாம்ப சிவத்திற்கு சிரிப்புத்தான் மண்டுகிறது.

நடவுப் பெண்கள் தொலைதூரம் சென்று விட்டார்கள் போல. இன்னமும் இவனுக்கு குந்தியிருக்கப் பிடிக்க வில்லை. ஒருவழியாய் மனசில் சுமையில்லாத சுமைகளுடன் எந்திரித்து வீட்டுப்பக்கம் நடக்க ஆரம்பிததான்.

முத்துக்கண்ணு விசுவராயருக்கு கோபம் மூக்கில்-கண்கள் ரெண்டும் ரத்தம்போல் ஜொலிக்க மூக்கை விரைத்துக் கொண்டு கத்துகிறார்.

இப்போது அவர் முன்ஜாக்கிரதையாக அத்தனை ஆத்திரத்திலும் தெருக்கதவை அடைத்துவிட்டுத்தான் கத்த ஆரம்பித்திருந்தார்.

அவர் எத்தனைதான் தெருக்கதவை அடைத்து விட்டு கத்தின போதிலும் குரல், அடைப்பட்ட கதவையும் திரிக்கொண்டு வெளியே வந்து குதிக்கிறது போவோர் வருவோர் காது கொடுத்து கேட்க வசதியாய்.

கூடத்தில் பூரணி தூணோரம் சாய்ந்தபடி நின்று கொண்டிருக்கிறாள். தன்வீட்டுப் பேச்சை ஊர்பேச ஆய்விட்டதே என்று ஒரேயடியாய் கவலைபிடித்துக் கிடக்கிறாள் அவள். இரக்கிற கவலை போதாதென்று இந்த மனுஷன் வேறு கத்துகிறது வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுகிற மாதிரியிருக்கிறது. ஒரேயடியாய் வேகம் தட்டுகிறது இருக்கிற அவமானத்துக்கு தானும் மகளுமாய் அரளி விதையை அரைத்துக்குடித்து விடலாமா என்றுமிருக்கிறது.

அனாவசியமாய் பேச்சுக்கு ஒரு தடவை காரிக் காரித் துப்பிக் கொண்டிருக்கிறார்.

கொல்லைப்புற நடையிலிருந்து தயங்கித்தயங்கி விசும்பல் ஒன்று மெல்லிசாய் கேட்கிறதே அதுதான் கமலா. இந்தப் பூனையும் பால் குடிக்குமா வென்று பத்தாயத்துப் பக்கம் பதுவிசாய் நிற்பவன் தங்கவேலு.

முத்தத்து மூலையில் அடக்கொரல் கத்தும் பெட்டையொன்று முத்தத்திற்குள்ளேயே சுற்றிசுற்றி வருகிறது.

"வீச்சாத்தேவன் மவளே, நம்பகுடும்பமானம் இம்புட்டுக்கு ஆனத்துக்கப்புறமும் ஓ மவன் அந்த மயிராண்டியோட சங்காத்தம் வெச்சுகிட்டு ரோட்டுப் பக்கம் குந்திருக்கான்... இவன உசுரோட வுட்டு வைக்கலாமா?"

"ஏண்டா வெக்கங்கட்டப்பயல ஊர்ல ஒரொருத்தன் அறுத்துகிட்டு வாங்கறதுக்குள்ள கட்டிகிட்டு வந்துடுறான் நீ என்னமோ அவந்தலய துண்டாடறதுக்குப் பதுலா சங்காத்தம் வச்சிட்டிருக்க?" பூரணி கேட்டாள்.

"தருமையா நாட்டான் சொன்னாப்ல என்னமோ அவன வெட்ட அருவாளத்தான் தீட்டிகிட்டு நிக்கிறாங் கானாட்டின்னு தெருவுல போனபப்பயல நானும் சும்மா வுட்டு வச்சன் ல்லாட்டி இஞ்சயே துண்டாடிருப்பன் இந்த மயிராண்டி என்னடான்னா அவன வெட்டாம வுட்டு புட்டு வெக்கங்கெட்டு வந்துருக்கான் இப்ப"

"ஏப்பா ஒங்கமவ வயித்த தூக்கிகிட்டு வாந்தி யெடுத்துட்டான்னு மானம் தாங்காம அந்தப்பயல வெட்டச் சொல்றீங்களா?" தங்கவேலு கேட்டான்.

"ல்லடா அப்புடி போறவல்ல ஏ மவ விசுவராயன் ஒத்தனுக்கு முந்தான விரிச்சுத்தான் பூரணி அந்த பொண்ணப் பெத்தா ஓ அம்மா வீச்சாத்தேவன் வூட்டு பொண்ணு; அந்த வளில வந்தவடா ஒந்தங்கச்சி"

"பின்ன எதுக்குப்பா மனசப்போட்டு அலட்டிக்கிறீங்க?"

"சும்மாவாடா அலட்டிக்கறேன். இன்னிக்கு ஊரு ஜனம் அத்தனையும் நம்மவூட்டு கதையத்தான வாவச்சி பேசிகிட்டிருக்கு.. நாம ஆருவூட்டு சங்கதியாச்சும் பேசிக்கறமா?"

"பேசணும்னா நாளுபூரா முந்திகிட்டு பேசலாம்பா எதுக்கு குப்பைய கெளரிகிட்டுதான்னு பேசாமருக்கு அம்பட்டன் குப்பையக் கெளறக் கெளற மயிரும் மட்டையும் தானருக்கும்".

"அந்த ரோக்கிதி தெர்யாத பயலுவ நம்பவூட்டு சங்கதிய வாயிக்கு வாயிபேசி நம்பவூட்டுக்குள்ளார ஒரு கொலகில உளுவணும்னு பாத்துகிட்டிருக்கானுவ"

"அந்த அளவுக்கு நீங்க எதுக்குப்பா வுடுறீங்க... கள்ளனுக்குள்ளேயே என்னாத்த சாதிகொளம் பாக்கருக்கு பேசாம அந்த சாம்பசெவத்துக்கே நம்ப தங்கச்சிய கட்டிவச்சிட்டா என்னா?"

"த்தூ... நாயே... என்னா கேள்வி சட்டுனு கேட்டு புட்ட; பூரணி, ஓ மவன் சொல்றத்த கேட்டியா...? இந்த நாயிதான் நா செத்தத்துக்கப்பறம் ந்த ஊருக்குள்ளருந்து குப்பகொட்டி எரிக்க போவுது...ம்புட்டு வளந்து ஒரு மயிருக்கும் பெரோசனமுள்ளயே.. கள்ளனுன்னா எத்தன வகருக்குன்னு தெர்யுமாடா... வாயிக்குள்ள நாக்குருக்குன்னு செத்த நாளிக்குள்ள பேசிபுட்ட பேச்சு..."

"தெர்யலப்பா... கள்ளனுன்னா எல்லாரும் ஒன்னுதான்னு நா இருக்கன்".

:ஏ மாமுனா ஒம்மாள எனக்குகட்டி குடுக்கறதுக்கு எம்புட்டு ரோசன பண்ணுனாருன்னனு ஒம்மாள கேட்டு தெரிஞ்சிக்கடா, பூரணி, நீ சும்மாருக்கப்ப அந்தக் கதய ஓ மவங்கிட்ட சொல்லி வையி... பித்துக்குளிப்பயல் கள்ளன்னா எல்லாரும் ஒரு சாதின்னு நெனச்சிகிட்டு கெடக்கான் எலே... கத்தரிக்கான்னா எல்லாம் கத்திரிக்காவாதுடா... நாட்டு கத்திரிக்கா... சீமகத்திரிக்கா வெள்ள கத்திரிக்கா... நீட்ட கத்திரிக்கா... குண்டு கத்திரிக்கா அப்புடிதா ஒரொரு காயிலயும் மிதிபாவ சீமபாவ... மொந்தக்கா... பூவங்கா

இப்பிடி எடுத்துப்பாரு... ஒலகத்துல எல்லாத்திலேயுமே இப்பிடி தாண்டா".

"ஏப்பா பாவக்காய அது என்னா பாவக்காயாருந்தாலும் பாவக் கான்னுதான சொல்றம் அத வுட்டு புடலயே?"

"அத உடாட்டி என்னாடா சீமபாவ மிதிபாவன்னு பிரிச்சிதான வச்சிருக்கான் அத எடுத்துபுட்டு ஆரு சொல்றா? ஏண்டா, நீ இப்ப சுத்தி வளச்சி பேசிகிட்டு நிக்கிறது ஒத்தங்கச்சிய சாம்பசிவத்துக்கு கட்டிகுடுத்துடலாம்னுதான சொல்ல வர்ற?"

"ஆமாப்பா அதுல என்னா தப்புருக்கு?"

"நாம்ப வாகரகள்ளன் அறுத்து கட்டி வம்சத்துல பெயண்ணு குடுக்குறதோ எடுக்குறதோ நம்ப வளக்கத்துல்ல அப்புடி மீறி குடுத்தா சீமபாவயையும் மிதிபாவயையும் ஒன்னா கலந்த மாறி ஆயிப்போயிரும் ரெண்டு காயையும் ஒன்னா கலந்து கொளம்பு வச்சா அந்த கொளம்பு ருசிக்கா துடா இது தெரிஞ்சுக்காம பேசாத"

"ஏப்பா இப்புடியெல்லாம் மொறசற வச்சிருக்க நீங்க எதுக்கா வப்பா நம்ப பொண்ணுக்கு மாப்ள தேடிதெக்கு சீமப்பக்கம் போனீங்க... நம்ப வாகரயில தெக்க போறதுன்னா கூட யோசிப்பாங்களாமே..."

"ஆமாப்பா யோசிக்கிறது உண்டுதான் பொண்ணுக்கு பருச பணம் வச்சி கட்டிகிட்டிருந்த காலத்துல குண்டு சட்டியிலதான் குதுர ஓட்டிகிட்டிருந்துச்சி... இப்ப பொண்ணுக்கு அத இத செஞ்சி கட்டி குடுக்கணுமேன்னு பயந்துகிட்டு ஏதோ பொண்ணுக்கு மாப்ள கெடச்சா போறும்னு அங்க இங்க போயி நோட்டம் பாக்க வேண்டி ஆயிப்போச்சி"

"அப்ப ஒங்க வாகர தடுக்கலயாப்பா?"

"ஏண்டா தடுக்கல... ஊரபய அத்தனபேரும் அதபத்திதான் பேசிகிட்டு திரிஞ்சான்... நாந்தான் இவனுங் களப்பத்தி கவலப்படாம மீறிப்போனன்".

"அது மாறி இதுலயும் மீறுங்கப்பா நல்லாருக்கும்"

"எதுலடா?"

"கமலாவ சாம்பசெவத்துக்கு...

அவர் அவனை முற்றுமாய் பேசவிடவில்லை, த்தூ ..நாயே என்னா பேச்சு பேசவர்றே என்று காரித்துப்பினார். அவர் அவனை அடிக்காத குறைதான் பாக்கி.

"அப்புடி ஒண்ணும் நாம தரங்கெட்டுப் போயிடலடா அந்தப்பயலுக்கு நம்ப பொண்ண குடுக்கணும்னு ஒண்ணும் அக்குசு மசுருல்ல நம்ப பொண்ணுக்கு ஊர்ல ஒலகத்துல மாப்ளயும் கெடைக்காம போப்போறதுல்ல வாயப்பொத்திகிட்டு சும்மா கெட"

"எல தம்பி, இருக்கிற வம்பு பத்தாத்துன்னு நீ எதுக்குடா இப்ப போயி அவுரு வாய கிண்டிகிட்டு கெடக்க ...அவுரு பெரிய நைடதம் படிச்ச வரு நீ சின்னப்பய ஓஞ்சேதி ஏக்குமா?" நடுவாந்தரத்தில் குறுக்கிட்டவள் பூரணிதான்.

"அப்ப நம்பவூட்டு சேதியப்பத்தி ஊரு ஜனம் பேசிகிட்டு நிக்கட்டும்ங்கிறியாம்மா?... எல்லாத்துக்கும் சட்டுனு ஒரு முடிவு எடுத்துட்டா ஊரு அமுங்கிப் போயிரும்ல்ல"

"எப்டி நீ முடிவெடுத்தாலும் ஊரொண்ணும் அமுங்காதுடா கௌம்பிகிட்டுதானிருக்கும்... பேசுறவன் பேசிகிட்டு தானிருப்பான் தூத்துறவன் தூத்திகிட்டி தானிருப்பான்"

"இப்புடியே ஆளாளுக்கு பேசிகிட்டிருந்தா நம்ப வூட்டு பொண்ணோட கதி என்னாவறதும்மா?"

"அதப்பத்தி ஒப்பாருக்கு கவலருந்தா சாதிகொளம் பாத்து கிட்டிருப்பாரா... நானும் பேசக்கூடாதுன்னுதான் இம்புட்டு நேரமும் வாயப்பொத்திகிட்டு கெடக்கேன்..."

"என்னாம்மா சொல்றத்தத சொல்லு"

"ஒப்பாரு ஒண்ணும் சாதிகொளம் பாக்கலடா... அப்புடி பாக்குறவராருந்தா தெக்கு சீமப்பக்கம் அடியெடுத்து வச்சிருப்பாரா? ....இப்புடி பேசறதெல்லாம் ஊருமதுப்புக்குத்தான் மனசுக்குள்ள ஒரு கருமாதியுமுல்லே பொண்ணகுடுக்குற எடம் மாடிமச்சாருக் கணும் சம்மந்தி வீமஞ்சூரனாட்டம் வெறப்பு சறப்பாருக்கணும்... பொம்பளையும் சூத்துப்பெருத்தவளா களுத்து நெறையா நகநட்டு போட்டவளாருக்கணும்னு பாக்குறாரு..."

"ஏம்மா... அவுங்க அப்புடிருந்தா இவுருக்கென்னா?"

"பேமாளிப்பயலே இதுகூடவா தெர்யாம கெடக்க வர்ற சம்மந்தி ஜனம் ஒரு சபையில கிபையில வந்து குந்துனா நெரக்க சரக்கருக்கணும்பாரு அதுக்காவத்தான்"

பூரண இப்படி பேசியது முத்துக்கண்ணுவிசுவராயருக்கு இருக்கிற ஆத்திரத்தை மட்டுப்படுத்துவது மாதிரியிருந்தது. குளிர்ச்சியாய்ப்பேசி ஆளை மடக்கி விடுவாள் போலிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டார்... ஆனாலும் பூரணி இப்படி பெற்ற மகனிடம் போய் தன் உள்ளாந்தரத்தில் உள்ளதை சொல்ல வேண்டாம்... அவனும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம் என்றுதான் தோன்றியது. பொறுமையால் இருக்கப் பிடிக்காமல் சொன்னார்.

"என்ன பேச்சு தாண்டி போயிகிட்டிருக்கு... வாயப் பொத்தப் போறீங்களா இல்லியா... எலே, ஒனக்கு என்னடா மயிரத் தெரியும் வாயப்பொத்திகிட்டு வயவேலருந்தா போயிப்பாருடா போடா... பெரிய மனுஷனாட்டம் பேசவந்துட்ட இப்பத்தான் ஏம் பொண்ணுக்கு எங்க மாப்ள பாக்குறதுன்னு எனக்குத் தெரியும் வாய ஒண்ணும் கிண்ட வாண்டாம் போங்க போங்க" என்று கடுமையாய் சொல்லிவிட்டு இனிமேலும் இந்த இடத்திலிருந்தால் பேச்சு வளருமென்று தெரிந்துகொண்டு வெளியேறிப் போய்விட்டார்.

அவர் போனதுக்கப்புறம் பூரணி தங்கவேலுவிடம் சொன்னாள். "தம்பி, ஊரு ரெண்டுபட்டா கூத்தாடிக்கு லெங்குசுன்னு ஊர்ல அவவன் ஒப்பார எடுத்துப்புடுற மாதிரி பாத்துகிட்டிருக்கான் நீ வேற அவருகிட்ட சண்ட கிண்ட போட்டுகிட்டு சச்சரவு உண்டாக்கிக்காதடா... ஒந் தங்கச்சி தலயெளுத்து எப்புடியோ அப்புடி நடக்கட்டும் என்று சொல்லிவிட்டு சொல்லும்போதே வந்த ஆத்திரத்தை அடக்கவும் முடியாமல் அழுதும் விட்டாள்"

இதுவரையில கொல்லைப்புற நடையில் குந்தியிருந்த கமலா எழுந்து கூடத்துப்பக்கம் வந்தாள். யம்மா, எதுக்காவ இப்ப நீ பெருசா அளுவ ஆரம்பிச்சிட்ட ஆரு செத்துகெடக்கான்னு ஒப்பாரி வக்கிர மவ செத்தொடனே குந்திகிட்டு அளுவேம்மா.

"கமலா என்னாப்பேச்சு பேசுற?... ஓ மனசுல உள்ளது இன்னது தான்னு சொல்லிபுடு பாரத்த எறக்கி வய்க்க ஒண்ணருக்கான்"

"ஏம் மனசுல ஒண்ணுமுல்லம்மா... நீங்க எல்லாருமா தான் ஏ மனசுக்குள்ள என்னமோருக்குன்னு நெனச்சுக்குறீங்க"

"பொய் சொல்லாதடி... ஒன்னோட வாயி சொல்ல முடியாத்த ஓ மொவம் சொல்லிபுடுது... சொல்லு, மனசுக்குள்ள என்னா வச்சிருக்க?"

"ஏ வயசுல ஓ மனசுல நீ என்ன வச்சிகிட்டிருந்தியோ அதத்தான் இப்ப நா வச்சிகிட்டிருக்கன்"

"கமலா...!"

"மனசுல வர்ற ஆசைக்கு சாதிகொளம் தெரியாம போச்சும்மா தெரிஞ்சிருந்தா இத்தன கொளப்பம் வந்துருக்குமா... ஏந் தல ஊரானுங்க மத்தியில உருளுமா... நம்பவூட்டு பேச்ச ஊரானுங்க பேசுவாங்களா? ஒரு தப்பும் பண்ணாதவம்மா ஓ மவ. ஒனக்குத் தெரியாது என்னபப்பத்தி ...பாலாபோன ஆசவந்து அந்த

சாம்பசெவத்த நெனைக்க வச்சிருச்சி ப்பத்தான் ஏ நெனச்சேன்னு மங்கிச்சாவுறன்".

"தம்பி... இதுக்கு ஒரு வளி பண்ணுடா?"

"பேசாம தங்கச்சிய அளச்சிகிட்டு போயி... அந்த சாம்ப செவத்துக்கு கோயில்ல கீயில்ல வச்சி கட்டி குடுத்து புடுவோமாம்மா...?"

"ஒப்பாரு நாண்டுகிட்டு செத்துருவாருடா...

"ல்லாட்டி ஓ மவ சாவாளேம்மா?"

"ஆரும் சாவவேணாம் நா சாவுறேன்... நம்ம வூட்டுக்குள்ள ஒரு சாவு வந்தாதான் ஊரு பேசுறத்த நிறுத்தும்"

"மூணுபேரும் சேந்து முடிவு பண்றது ஆரு சாவு றதுன்னாம்மா என்னா வறமொற வச்சிருக்கானுங் கம்னாட்டிங்க சாதியாம் மயிருசாதி" என்று கடுப்பாய் கத்தினான் தங்கவேலு. அவனுக்கு மேலும் என்ன பேசுகிறதென்றோ இதற்கு என்ன தீர்வு செய்கிறதென்றோ புரியவில்லை. தான் செய்யப்போகிற செயலையோ, அல்லது முடிவையோ அப்பாவோ, அம்மாவோ, ஊர் ஜனமோ ஏற்பார்களா என்று தான் குழம்பினான்.

ரொம்ப நேரம் வரைக்கும் அவனுக்கு ஒன்றும் மட்டுப் படவேயில்லை. சிந்திக்க சிந்திக்க மண்டைதான் வலித்ததேத் தவிர ஒரு முடிவும் எடுக்கத் தெரியவில்லை. ரொம்பத்தான் குழம்பிப் போயிருந்தான்.

பூரணி அடைக்க அடைக்க அழுது கொண்டிருந்தாள். ஏனோ அவள் கமலாவை அடிக்கடி வெறுப்பாகப் பார்ப்பதும் முறைப்பதும் கூட தங்கவேலுக்கு பிடிக்க வில்லை, மகளிடம் கருணை காட்டவேண்டிய தாயே இப்படியிருப்பது அவனுக்கு ஒரு விதத்தில் எரிச்சலை உண்டாக்கியது. இன்னமும் அங்கே நிற்கப் பிடிக்காமல் வெளியேறிப் போனான்.

**ஏ என்ன செய்வேன் ஏதுசெய்வன்**
**ஏ ஆயவனே மணி வண்ணா**
**ஏ எனக்காரும் நல்ல துணையுமுல்லே**
**ஏ என்ன ஆதரிப்பார் ஆருமுல்லே**

# 12

கோபால்குச்சிராயர் கல்லாய் குந்திவிட்டார்.

எதை விதைக்கிறோமோ அதைத்தானே அறுவடை செய்ய முடியும் ஊருக்குள் வினையையும் சூதையுமே விதைத்துக் கொண்டிருந்த கோபால்குச்சிராயர் நல்லதையா அறுவடை செய்துவிடப் போகிறார்? அவர் இத்தனை நாளுமாய் விதைத்த விதைப்பு பயிராகி செழித்து முற்றிப்போய் இதோ அறுவடைக்கு வரக்கூடிய சூழ்நிலைக்கு வந்து விட்டிருக்கிறது.

அவர் பெரிய பெண் நீலா ஆறுமாசமாகவோ ஏழு மாசமாகவோ முழுகாமலிருக்கிறாள். அவர் எதிர்பார்த்ததுதான். இப்போது ஊர் வாய்கள் அத்தனையும் மெல்லுகிற அளவுக்கு சங்கத்தி முற்றிப் போயிருக்கிறது.

அவள் வயிறு பெரிது ஆக ஆக ஏதோ சுட்டிகிட்டியாக இருக்குமென்று ஊர்வாயை அடைத்துப் பார்த்தார்கள். அடைப்பு சரியில்லைபோல், அணையை திமிரி உடைத்துக் கொண்டு வருகிற வெள்ளம்போல அவள் வயிறும் எடுத்துக் கொண்டிருந்த வாந்தியும் கற்பமுற்றிருக்கிறாள் என்பதை ஊராருக்கு வெளிச்சம் போட்டு காட்டி கொடுத்து விட்டது.

அவளை கற்பமுறச் செய்தவன் யார்?

இது ஒன்றுதான் ஊரில் எல்லாருக்குமாய் இப்போது எழுந்திருக்கிற கேள்வி.

கோபால்குச்சிராயரின் மூஞ்சியில் காறித்துப்பாதவர்கள் இல்லை.

நீ யெல்லாம் ஒரு மனுஷனாடா ந்த அளவுக்கு வுட்டுகிட்டி ருப்பானா ஒரு பய மூதேவி மூட்டப்பாத்து நாலு குத்துவிடடு அங்கயே துண்டாடி வெட்டாத்துல கட்டி வுட்றுக்கறதுல்ல மீச வச்சிகிட்டு குந்திருக்கான் கம்னாட்டி.

பெரியவர் சிறியவர் என்ற பேதங்களையெல்லாம் கடந்து அவரை அபிஷேகம் செய்து கொண்டிருந்தார்கள் ஊரார்கள். அப்படியாவது ரோஷம் தாங்கமுடியாமல் நீலாவோ அல்லது அந்த குடும்பமோ தற்கொலை செய்து கொள்ளாதா என்ற நப்பாசை தான் காரணம்.

ஒருத்தரால் ஊருக்கு அவமானம் என்று வருகிற போது அந்தக் குடும்பத்தையே அழித்துவிட்டால் இருக்கிற குடும்பங்கள் கெடாது ஊரின் அவமானமும் காப்பாத்தப் பட்டு விடும் இதுதான் இந்த கிராமத்தாரின் நம்பிக்கையும் விருப்பமுமோ என்னவோ?

ஊரின் ஒதுக்குப்புறத்தில் குடியிருந்து வருகிற செங்கான் வைத்தியனை நம்பியது மோசம் போயிற்று என்று நினைத்துக் கொண்டு தலையில் தலையில் மடேர் மடேர் என்று அடித்துக் கொள்கிறார் கோபால்குச்சிராயர்.

நீலா ஒரு மாசமாகவோ ரெண்டு மாசமாகவோ முழுகாமலிருக்கிறாள் என்று அவர் மனைவி ரகசியமாய் அவர் காதில் போட்ட போது அவருக்கு இடியே விழுந்து விட்டது போல்தான் இருந்தது. எண்சாண் உடம்பும் நடுங்கிப் போனார்.

அவரது பெரியபெண் நீலா தன்வீட்டு பண்ணைக்காரன் கேசுவிடம் சல்லாபம் வைத்துக் கொண்டிருந்த விஷயத்தை அவர் மனைவி மங்களத்திடம் சொல்லித்தான் வைத்திருந்தார்.

விபரீதமாய் ஒன்றும் ஆகிவிடாது என்று தான் நினைத்துக் கொண்டிருந்தார்கள் அவர்களும். ஆனாலும் அன்றைய தினத்திலிருந்து நீலாவை நடத்தியவிதம் ஒரு அன்னிய பெண்ணைப் போலத்தான்.

“விர்மன் அவ தலையில் வந்து எளுதுனத ஆரு வந்து மாத்தப் போறா... இவகதி இப்புடி ஆயிப்போச்சே” என்று வாயிலும் வயிற்றுலுமாய் அடித்துக் கொண்டாள் மங்களம்.

“சரிடி... நடந்தது நடந்துபோச்சி பெருசா சத்தம் போட்டு ஊரக்கூட்டி புடாத ஆவவேண்டிய சோளியப்பாக்கணும்”.

“என்னங்க சோளிபாக்கப்போறீங்க... ந்த நாயி கதை எப்புடி போனாலும் மித்த ரெண்டு பொட்டைங்களும் எடுபடணுமே?”

“அதுக்குத்தாண்டி ஓ பெரிய மவள செங்கா வூட்டுக்கு அளச்சிசிகிட்டு போயி வைத்தியம் பண்ணனும்”

“அவ பெருசான குட்டியாச்ச எப்புடிங்க அங்கல்லாம் அளச்சிகிட்டு போவீங்க?”

“வாயிவலி வயித்துவலின்னு சொல்லித்தான் அளச்சிகிட்டு போவனும் என்னா பண்றது விர்மன் எளுதிப் புட்டானே”

“சிர கொல்லப்பக்கமா கையெளுத்து மறையிர நேரத்துக்கு கூட்டி கிட்டு போங்க”

“என்னாங்க ஆறாவது கண்டுகிட்டு கேட்டாக்கா அவுளுக்கு வயித்துவலி கட்டிகிட்டின்னு சொல்லி வையிங்க செங்காங்கிட்டயும் சொல்லி வையிங்க”

“சரிடி போடி மூதேவி... பொண்ணு வளக்குற ரோக்கிதி மசுறுல புத்திசொல்ல வந்துட்ட ப்பத்தான்”.

நீலாவை அழைத்துக்கொண்டு செங்கான் வீட்டுக்கு போனபோது செங்கான் வைத்தியன் காத்தவராயன் படத்திற்கு ஊதுபத்தி கொளுத்தி வைத்து உடுக்கடித்துக்கொண்டு காத்தவராயன் கதையை பாட்டாய் பாடிக்கொண்டிருந்தான்.

பாட்டு உருகி உருகி வழிந்து கொண்டிருந்தது. சிம்னி விளக்கின் மங்கல் ஒளியில் பிழம்பாய் அவன் தெரிந்தான். அவனைச் சுற்றிலும் அவன் வளர்க்கிற நாய்க்குட்டிகளும் பூனை குட்டிகளும் பாட்டு கேட்டுக் கொண்டிருந்தான. தலையை விரித்துப் போட்டுக்கொண்டு ஆவேசமாய் உடுக்கை தட்டி எழுப்பிக் கொண்டு கணீரென்று பாடுகிறான்.

ஏ என்ன செய்வேன் ஏதுசெய்வன்
ஏ ராயவனே மணி வண்ணா
ஏ எனக்காரும் நல்ல துணையுமுல்லே
ஏ என்ன ஆதரிப்பார் ஆருமுல்லே
ஏ இந்த பாவி நல்ல காத்தோராயன்
ஏ என்ன கற்பளிக்க் வந்தானய்யா
ஏ என்ன செய்வேன் ஏது செய்வன்
ஏ எளய கன்னி ஈஸ்வர னாலே

ஏ அம்பா(ள்) நல்ல ஆதரவும்
ஏ செவனு நல்ல பாதத்துக்கே
ஏ அந்த பாத பூஜ செய்ய நல்ல
ஏ நாங்க பொஷ்பம் நல்ல எடுக்க வந்தோம்
ஏ அந்த நேரத்துல காத்தோராயன்
ஏ என்னோட துயிலடாய எடுத்துக் கொண்டு

பாட்டின் ஒலியில் இரவின் மௌனத்தை உடைத்துக் கொண்டது போல் ஆய்விடுகிறது. யாருடைய சோகத்தையோ யார் யாருக்கோ பாட்டில் தெரியப் படுத்துவது போலிருக்கிறது. இரவுக்கும் சோகத்திற்கும் சொந்தமென அவன் பாடல் உச்சஸ்தாயியில்-

பற்களை கடிக்கிறான் - ‘டா டீ... டூ ட்டு... டீ... டை என்று உளறி கொட்டுகிறான். காளீ ...மாகாளீ... என்னப் பெத்த தாயே,

வந்து நீ கத சொல்லு, என் நேசன் காத்தவராயன் கதையை வந்து நீ எடுத்துச் சொல்லு-'

சடாரென்று அடித்துக் கொண்டிருந்த உடுக்கின் குரல் வளையை கயிற்றோடு கயிறாய் நெறித்து பற்களை கடிதது 'ஹ்ஹா ஹ்ஹா' வென்று சீறி உருட்டி உருட்டி விழித்து உடுக்கின் நுனியைக் கடித்து கீறீச்சிட்டு ஊதுகிறான், மீண்டும் யார் மீது கோபம் போலவோ அதனை ஆவேசத்துடன் தட்டுகிறான். ஆனாலும் அந்த உடுக்கு அவனது ஆவேத்திற்கும் மிரட்டலுக்கும் கட்டுப்படாதது போலவும் அதன் மேன்மையை விட்டுக்கொடுக்காதது போலவும் அதன் ஒலி நயம் பிம்பிம் பிம்பிம்... பிம்பிம் பிம்பிம் என்று தெறித்து சிதறுகிறது.

இருளிலும் சிம்னி விளக்கின் மங்கிய வெளிச்சத்திலும் அவன் தலையெங்கே கைகெளங்கே கால்களெங்கே என்று கண்டு கொள்ள முடியாத படிக்கு அவனது உருவம் இருக்கிறது. எலும்பும் தோலுமாய் ரொம்ப ஒடுங்கிப் போன உருவம். லேசான சிவப்பும் கறுப்புமாய் கலந்த நிறம். பஞ்சடைந்த கண்கள் பெண்களுக்கிருக் கிறதைப் போன்று நீண்ட நரைத்துப் போன தலைமுடி, எப்போதும் குங்குமப்பொட்டு துலங்கவும் வாயில் வெற்றிலை குதப்பலுடனும் தான் அவன் இருப்பான்.

மனைவியோ மக்களோ இல்லாத ஒத்தைப்பிராணி அவன், கடைசிக்காலம் வரை காளியின் பக்தனாகவே வாழ்ந்து விடவேண்டும் என்ற தீராத ஆசையில் கல்யாணமே பண்ணிக் கொள்ள வில்லை. வைத்தியன் மூலம் வருகிற வருமானத்தை தனக்குப் போக நாய்களுக்கும் பூனைகளுக்கும் எலி மூஞ்சிறு போன்ற இத்யாதிகளுக்குமே செலவழித்து வருகிறான். எந்த நேரம் அவனைப் பார்த்தாலும் ஐந்தாறு நாய்களுடனும் பூனைகளுடனும் தான் பார்க்க முடியும்.

அவனது குடிசையைப் பார்த்தால் அதில் அவன் எப்படி ஜீவனாம்சம் பண்ணுகிறான் என்று தான் தோன்றும் ரொம்ப பிய்ந்த குடிசை அது. மழையு வெயிலும் தாரளமாகவே ஆக்ரமித்துக் கொள்ளும்படியானது. அடுப்படியோரத்தில் தான் பாம்புப் புற்றும்

கரையான் புற்றும், குடிசை முழுக்க இடிந்து மண் முட்டு முட்டாய் கிடக்கும் சுவரும், அகல அகலமாய் வெடிப்போடிய சுவரும் அழுக்கு துணிமூட்டைகளும் சட்டியும் பானையும் தகரக் குவளையும் ஆலமினிய பாத்திரங்களும் அதனுடன் அவனுமாய் இருப்பான். எப்போது பார்த்தாலும் குடிசையினுள் ஏதாவதொரு புடம்போட்டு வைத்திருக்கிற மருந்து வாசனை அடித்துக கொண்டேயிருக்கும்.

அந்த ஊராரின் உடம்பு நோவுகளுக்கெல்லாம் அவன்தான் வைத்தியன். அவனால் முடியாதது தான் ஆஸ்பத்திரிக்கு போகும். வைத்தியத்துடன் சோழி உருட்டி குறி பார்ப்பதும், செவ்வாய் வெள்ளியில் திரு நீறு போடுவதும் பேய் பிசாசு ஓட்டுவதும் பக்கத் தொழில்கள்.

மாலையும் இரவும் கலந்த சாம்பல் பூத்த நேரத்திலேயே அவன் உடுக்கை அடித்துக் கொண்டு பாட ஆரம்பித்துவிடுவான். பாடுவதெல்லாம் கதையைக் கொண்டு அவனே இட்டுக் கட்டிய பாட்டுக்களாய்தான் பெரும் பாலுமிருக்கும், ஒரு நாளைக்கு நல்லதங்காள் கதை, இன்னொரு நாளைக்கு அல்லி அரசாணி, வேறொரு நாளைக்கு சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, வள்ளித் திருமணம் அரிச்சந்திரன் மயானகாண்டம் இப்படியாக நீண்டு கொண்டே போகும்.

கோபால்குச்சிராயரும் நீலாவும் ஆள் ரொம்ப உச்சத்திலிருக் கிறானென்று வெளியே நிற்கிறார்கள். அந்த சோகப்பட்டு அவர்களையும் தாக்காமல் இல்லை. இருகூரும் குடிசையினுள் போய் குந்துவதற்கு இடம் போதாது ஆதலினால் வெளியேயே குந்தித்தான் வைத்தியம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வழியாய் செங்கான் கதையை முடித்துக் கொண்டு உடுக்கையை கீழே வைக்கிறான். இப்போது அவனை துலங்க பார்க்க முடிகிறது. கன்னா பின்னாவென்று சிதைந்து காணப்பட்ட அவன் இப்போது பார்க்க செங்கான் வைத்தியனாகத் தோன்றுகிறான்.

"வைத்தியர....

"ஆரது...?"

"யார் தெர்யல...?"

"பெரிய்யாவா  கூட ஆரு பெரியாயியா...

"ஆமாண்டா ஆமா"

"அப்புடியே குந்துங்க பெரிய்யா... ஆயிக்கி என்னா பண்ணாது வயித்தெளவா?"

"ஆமாண்டா வயித்துலதான் எளவு கிட்டவா சொல்றன்"

அவன் கிட்டே வருகிறான் தலைமுடி இன்னும் விரித்துப் போட்ட நிலையில் தான்.

"என்ன பெரிய்யா?"

"இவ ஒடம்பு தெனவெடுத்து எவங்கிட்டயோ போயி படுத்து எந்திரிச்சி வந்துட்டாடா செங்கான்... அது இப்ப என்னடான்னா வயிறு கனத்துப்போச்சி கையப் புடிச்சிப்பாரு முத்திருக்கா கொண்டிருக்கான்னு"

அவன் அவளது கையைப் பிடித்து நாடி பார்க்கிறான்.

"எலே செங்கான், அது இத பண்ணி கரச்சிபுடுடா ஒனக்குள ன்னா செலவனானாலும் தரேன்".

"எத்தன மாசாமாயி முளுவாமருக்குற?" அவன் நீலாவை கேட்கிறான். அவள் பதில் சொல்ல வில்லை அழுகிறாள்.

"ஆர்ரா அந்த எளவையெல்லாம் கண்டா. என்னமோ ரெண்டு மாசமாதான் முளுவாம குந்திருக்குன்னு வூட்ல சொன்னிச்சி"

“நா காளிய கும்புர்ரவனாச்சே பெரிய்யா உண்டான கருவ கலைக்கிறது பாவமாச்சே”

“ஆவத்துக்கு பாவமுல்லடா செங்கான்... நீ பாவத்தப் பாக்கப் போன ஏ மானத்த நடுத்தெருவுல நின்னுகிட்டு வெல பேசுவானுங்க”

“என்னய காளி சும்மாவுட மாட்டா பெரிய்யா”.

“என்னடா பெரிய காளி”.

“அப்புடி இன்னொருவாட்டி நாக்குல பல்லு போட்டு சொல்லிப்புடாதீங்க பெரிய்யா கண்ண அவிச்சிப்புடுவா... இந்தா பாருங்க நெதம் நாவுலயும் பவல்லயும் மளயிலயும் வெய்யில்லயும் இஞ்சதான உருண்டு கெடக்கன்... ஒரு பூச்சி பொட்டு தீண்டிருக்குா... இல்லாட்டி ஒரு சீக்கு செவாப்புதான் வந்துருக்குமா... காளி சக்தியுள்ள காளி... மருந்து குடுத்தாகூட காளி காப்பாத்தி புடுவா”

“எலே நா பதச்சி வந்திருக்கன் காளியப்பத்தி பேசுகிட்டிருக்க... எத்தன செலவானாலும் தாண்டா வூரு பய என்ன வுட்டுவய்க்க மாட்டான்”

“இதுக்கெல்லாம் பெருசா கவலப்பட்டுகிட்டுருக்காதீங்க பெரிய்யா வூர்ல ஒலகத்துல நடக்குற சங்கதிதான்”.

“வூர்ல ஒலகத்துல நடக்குறது ஏ வூட்லயுமா நடக்கணும்... பாவிபுள்ள மோசம் பண்ணிபுடுச்சிடா செங்கான்”.

“பதட்டப் படாதீங்க பெரிய்யா... காளிமேல பாரத்தப் போட்டுபுட்டு மருந்து செஞ்சிதரேன்”.

“எவ்வளவுடா பணம் வேணும்?”

“கையிலருக்கத குடுத்துட்டு போங்க பெரிய்யா”

“ந்தா அம்பதுரூவாருக்கு வச்சிக்க சரியாபபேச்சுன்னா இன்னம் அம்பதுரூவா தர்றன்”

“சரி பெரிய்யா ஆய்ய அளச்சிகிட்டு பத்தரமா போங்க”.

அவரும் நீலாவும் எழுந்து வந்தபோது ரெங்கப் பிள்ளை கோனார் எதிர்பட்டார்”

“என்னாங்குற இந்நேரத்துல மவள அளச்சிகிட்டு வைத்தியன் வூட்டுக்கு போயிட்டு வர்றீங்க?”

“ஆமா வயித்துவலின்னு சொன்னிச்சி அதான் அளச்சிகிட்டு வந்து காமிச்சிட்டு போறன்”.

“வைத்தியன வூட்டுக்கு வரச்சொன்னா வந்து பாத்துபுட்டு போறான் நீங்க எதுக்காவ பெருசான பொண்ண கூட்டிகிட்டு இஞ்ச வந்தீங்க?”

“இந்நேரத்துல கூப்ட்டா வருவானோன்னுதா நானே ஆய்ய அளச்சிகிட்டு வந்தன்”.

“சரிசரி முள்ளுகிள்ளு கெடக்கும் பத்தரமா நானே ஆய்ய அளச்சிகிட்டு வந்தன்”.

“சரிசரி முள்ளுகிள்ளு கெடக்கும் பத்தரமா அளச்சிகிட்டு போங்க”.

அவர்கள் வயலிலும் வாய்க்காளிலுமாய் இறங்கி நடந்து போய்க்கொண்டிருந்தார்கள் ரெங்கப்பிள்ளை கோனாரைப் பார்த்தது சுத்தமாய் அவருக்கு பிடிக்கவில்லை யார் கண்ணிலும் படாமல்தான் போய்விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தார் ‘சனியன்மாறி குறுக்க வந்து தொலஞ்சானே ‘ என்று நினைத்துக் கொண்டவர், ‘இவன் ஆர்கிட்டயெல்லாம் சொல்லி மானத்த வாங்க போறானோ’ என்ற கிலியில் நடக்கும்போதே கால்கள் பின்ன ஆரம்பித்து விட்டன. மனசும்கூட தளும்பத்தான் ஆரம்பித்துவிட்டது.

அவர் நினைப்புபடியே தான் ரெங்கப்பிள்ளை கோனாரும் நடந்து கொண்டார்.

ரெங்கப்பிள்ளை கோனார் கோபால குச்சிராயரிடம் பேசிவிட்டு பத்தடி தூரம் கூட நடந்திருக்கமாட்டார் ரோட்டோரத்திலிருந்து ஆரு ரெங்கப்புள்ளையா? என்று சன்னமாக குரல் கேட்டது.

இருட்டில் துழாவி குரல்வந்தை திக்கை நோக்கினார் சுருட்டு நாத்தத்துடனும் நரகல் நாத்தத்துடனும் ஒரத்தில் ஒதுங்கி குந்தியிருந்தவர் தருமையா நாட்டார்தான்.

"ஆமா நாந்தான் மச்சா"

"ஆர்கிட்டயோ பேசிகிட்டியிருந்தியவள ஆரது?"

"கோவாலுகுச்சிராயரு செங்கான் வூட்டுக்கு பொண்ண கூட்டிகிட்டு வந்து காமிச்சிட்டு போறாரு அதான் பேசிகிட்டிருந்தன்"

"என்னா பொண்ண கூட்டிகிட்டு இஞ்ச வந்தானா?!"

"ஆமா"

"என்னடா சூத்துவா கெட்டதனமாருக்கு... மவள எதுக்காவ ந்தநேரத்துல இஞ்ச கூப்ட்டுட்டு வந்தான்?"

"வயித்துவலியாம்"

"இருக்கட்டும் அதுக்காவ வைத்தியன் வூட்டுக்கு மவள கூட்டிகிட்டு வரணுமா?"

"அதாங்கேட்டன் எதுக்காவ அளச்சிகிட்டு வந்தீங்கன்னு".

அவர் எழுந்து ரோட்டுக்கு வருகிறார். ஏதோ ஒரு பஸ் வெளிச்சத்தை வாரி இறைத்துகொண்டு வருகிறது. கூசுகிற வெளிச்சத்துக்கு பயந்து இருவருமே முகம் திருப்பி கொள்கிறார்கள். பஸ் அவர்களை கடந்து போகிறது.

"கம்னாட்டி என்னா மயிர அள்ளி கட்டபோறோம்னு வேகமா மனசன் மேல வுட்டடிச்சிர்ராப்ல ஓட்டிகிட்டு போறான் பாரு"

"காரோட்றப்பய எள்வடடாருப்பான் அதான் ஓட்டிகிட்டு போறான் புளியமரத்தப்பக்கம் வுட்டடிக்கிறப்பதான் வலிமயிரு தெரியும்"

ரெண்டுபயல் குடித்துவிட்டு வருகிறான். வாயில் இன்னப் பேச்சுதான் என்றில்லை பெண்ணின் உறுப்புகளைச் சொல்லி சொல்லி பினாத்திக் கொண்டு போகிறார்கள். அவர்கள் தூரத்தில் போய்விடடதற்கப்புறம் சொல்கிறார், கம்னாட்டியளுக்கு குடிச்சி புட்டா வாயிவக்காகூட தெர்யலபாரு... திங்கிறப்போ மட்டும் சோறு எது பிய்யி எதுன்னு தெரியாமயாப் போயிருது.. குடுத்தா செவுலக் கட்டி கிய்யா கத்து கத்துவான். சரிய்யா ரெங்கபுள்ள, குச்சிராயன் மவள கூட்டிகிட்டு வந்துட்டு போறத்தப்பாத்த சந்கேம் தட்டுதுய்யா சுருட்டை அதன் முனையை அனைக்காமல்கூட ஓரத்தில் தூக்கி வீசுகிறார்.

"ஒமருக்கு எப்பதான் சந்தேகம் இல்லா மருந்துச்சி சொல்லுங்க பாப்பம் நின்னா சந்தேகம் ஒக்காந்தா சந்தேகம் நடந்தா சந்தேகம்"

"அதுக்கில்லடி மயிரு... ஆர்கிட்டயும் படுத்துகிடுத்து அந்த மூதேவி வாயில வியத்துல புள்ளகிள்ளய வாங்கிபுட்டாளோன்னு தான் பயப்புர்றன்".

இருவரும் நடக்கிறார்கள். தருமையா நாட்டார் வாய்க்கால் துறை வந்ததும் போய் கழுவிவிட்டு வருகிறார்.

ரெங்கப்புள்ள எதுக்கும் நீ கொஞ்சம் ஆராஞ்சிப்பாரு... இந்த காதுல வாங்கி அந்த காதுல வுட்றாம்

"சரிமச்சா நீங்க போங்க"

"யா நீ வூட்டுக்கு வல்லியா?"

"ல்ல உம்மகுண்டு தண்ணிபாச்சணும் போயி சருக்கய பாத்துபுட்டு வர்றன் ஆரும் அணைய தொறந்து கிறந்து வுட்றுவான்"

"சரிசரி சட்டுனு போயித்து வந்துரு"

தருமையா நாட்டார் தெருவுக்குப் போகிற பாதையில் இறங்கி நடக்கிறார். மனசில்விழுந்த சந்தேகம் சந்தேகம் தான்... அதற்கு விடை தெரியாமல் மட்டும் அவர் தூங்கப் போகிறதில்லை.

தருமையாநாட்டார் சந்தேகப் பட்டது வீண் போகவில்லை. அவர் சந்தேகப்பட்ட மாதிரிதான் எல்லாமும் நடந்து கொண்டிருக் கிறது. கோபால்குச்சிராயரையும் நீலாவையும் செங்கான் குடிசைப் பக்கம் அதற்கப்புறம் பத்து பதினைந்து தடவைக்கு மேல் பார்த்து விட்டார்.

"என்ன மச்சா இன்னுமா மவளுக்கு வயித்துவலி தீரல?" என்று குத்தலாகவும் கேட்டுவிட்டார்.

குச்சிராயர் அந்த நிலமையிலும் விட்டுக் கொடுக்காமல், "ஆமா மச்சா வயிறு வீங்கிகிட்டே வர்றத்தப் பாத்தா கட்டி கிட்டியாருக்குமோன்னு பயப்புர்றன்"

"வீங்குற வயிறு கட்டிக்காவருந்தா பரவால்லய்யா வைத்தியங்கிட்ட பாத்துகீத்து கரச்சிபுடலாம் வேற எதுக்காவயும் வீங்கிடப்புடாது பாரு".

இப்போது குச்சிராயர் பேசவில்லை. அவரது மௌனம் நாட்டாரின் சந்தேகத்தை வலுப்படுத்தி விட்டது.

செங்கான் மருந்து வேலை செய்யவில்லை போல. நாள் ஆக ஆக நீலாவின் வயிறு வீங்கிக் கொண்டிருந்தது. தானேத் தவிர கறைந்த பாட்டைக்காணோம் "என்னடி பண்றது மங்களம்?" என்று வீட்டில் குந்தி ஒப்பாரி வைக்கவே ஆரம்பித்து விட்டார் குச்சிராயர்.

"செங்கா மருந்து பலிக்கலைங்க... ப்ப நாம என்னா பண்றது... அந்தப் பாவி அளிக்கிற மருந்த குடுக்குறேன்னு கற்பத்த வளக்குற மருந்த குடுத்தானோ என்ன எளவோ தெரியல".

"ஆமா மங்களம் ப்பத்தான் நாவகம் வருது... நா காளிய கும்புர்றவன் கருவ கலைக்க மாட்டேன்னு சொல்லிபுட்டு ஏம் புடி வாதத்துக்குத்தான் ஒத்துகிட்டான் ... உம்மையில அவன் கலைக்கிற மருந்தத்தான் குடுத்தானோ ல்லாட்டி நீ சொல்ற மாறி கற்பத்த வளக்குற மருந்த குடுத்தானோ தெரியலையே"

"ப்ப என்னாங்க பண்றது ஆனகதை ஆயிப்போச்சி இவ வயிறும் முத்திப்போச்சி... இதுக்காவ இவுள கொன்னுப்புட முடியுமா? அந்த வைத்தியங்கிட்டதான் சண்டக்கி போ முடியுமா.. ஊரு நாறில்லப் போயிரும்"

"அவள கெடுத்தப் பயல் நம்ப சாதிக்காரப் பயலாருந்தா கூட அத இதப் பண்ணி கெடுத்தப்பயலுக்கே கட்டி வச்சிப் புடலாம்... இவன் பண்ணக்காரப் பயலாச்சேடி... என்னாப் பண்ணப்போறேன்?"

அவர் தலையில் வைத்த கையை எடுக்கவே இல்லை.

இதோ இப்போது ஊர் சிரிக்கிறது.

முத்துக்கண்ணு விசுவராயரின் குடும்பத்தில் ஒரு சின்ன தப்பு நடந்ததற்காக அவர் வீட்டுக்குள் ஒரு சாவையோ அல்லது கொலையையோ ...அல்லது நடக்கவேக் கூடாத அசம்பாவிதங் களையோ எதிர்பார்க்கிற இந்த ஊரார்கள் முத்தையா குச்சிராயரையோ அல்லது அவரது குடுபத்தாரையோ விட்டு வைக்கப்போகிறார்களா என்ன?

கொலையே செய்யாமல் கூட கொலை செய்து விடுவார்கள் போலிருக்கிறதே... பார்க்கிற பார்வையும் பேசுகிற பேச்சையும் யாரால் தாங்கிக் கொள்ள முடிகிறது...?

'ஏம் பொண்ணுக்கு மானம் ரோசம்ன்னு ஒண்ணுருந்தா இந்நேரத்துக்கு தூக்குமாட்டி செத்துருக்கணும்... மூதேவி அதவுட்டு புட்டு மூலையில குந்தி அளுதுகிட்டிருக்கா' இப்படி மனசுக்குள் நினைத்து மறுவி மங்கிச் சாகிறார்.

ஊராரின் பேச்சுக்களையும் செயல்களையும் பார்த்து தாங்கிக் கொள்ள முடியவில்லை தான்... அதற்காக உயிரையா விட்டுவிட முடியும்?

வீட்டுக்குள் நடந்த அசம்பாவித்திற்கும் ஊரார் பேசுகிற பேச்சுக்களுக்கும் யாரும் காரணமே இல்லை தான் முளைக்கப் போட்ட விதைதான் முளைத்து பயிராகி செடியாகி மரமாகி விருட்சமாய் விரியக்கிடக்கிறதென்று நினைத்துக் கொள்கிறார் இப்போது.

**...ஊர்லதான் சொல்லுவானுங்களே... கால்ல பீங்குறதுக்குள்ள தலையில பீன்னு அதையெல்லாம் நீங்க ஒண்ணும் காதுல வாங்கிக்க வாணாம் அப்புடி துணிச்சக் காரப்பய ஒண்ணும் நம்பப் பயஇல்ல...**

# 19

முத்துக்கண்ணுவிசுவராயருக்கு ராத்திரி முழுக்க சரியான தூக்கமில்லை. கமலா சாம்பசிவம் ரகசிய சந்திப்பினாலும் அதைப் பற்றி ஊரார் பேசுகிற பேச்சுக்களினாலும் ரெண்டுநாட்களாய் தங்கவேலு சாம்பசிவத்திற்கே கமலாவைக் கட்டிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு திரிவதினாலும் சதாநேரமும் மூலையில் குந்தி ஓயாமல் அழுது புலம்பிக் கொண்டிருக்கும் கமலாவினாலும் ரொம்பவும் நொந்து போயிருந்த விசுவராயர் காலையில் கோபால்குச்சிராயரின் பெரிய மகள் நீலா கல்யாணமாகாமலேயே முழுகாமலிருக்கிறாள் என்ற கதையையும் கேட்டு இடிந்துதான் போய்விட்டார்.

அவருடைய பழைய கவலைகளுடன் 'கமலாவும் கற்பவதியாக இருப்பாளோ' என்ற கவலையும் புதியதாய் பற்றிக் கொள்ள ஆரம்பித்து விட்டது. கமலாவோ தங்கவேலுவோ வீட்டில் இல்லாத சமயத்தில் பூரணியை நச்சுப்படுத்த ஆரம்பித்து விட்டார்.

"நம்ப பொண்ணு அப்புடி வலிக்கு போறவ இல்லீங்க... ஏதோ ஓர்த்தன்மேல ஆசப்பட்டுட்டாங்கறதுக்காவ அவங்கிட்ட படுத்து எந்திரிச்சிருப்பான்னு கனவுலகூட நெனச்சிடாதீங்க... அப்புடி சட்டுனு போயிர்றவல்ல ஏம்பொண்ணு".

"இந்த மாசத்துக்கு ஆயி வூட்டுக்கு தூரமுன்னு ஒதுங்குச்சா நாங்கூட சரியா அலமலப்புல கவனிக்கல"

"அவ வூட்டுக்கு தூரமாயி இன்னும் பத்து நாளு கூட ஆவுலியே அதுக்குள்ளயா ஒரு ஆம்பளைக்கி மறதி வரும்?"

"பூரணி... நா ஆம்பள கேக்கப்புடாது இருந்தாலும் ஏ நெஞ்சோட பதப்பானது கேக்குறேன்... ஆயி தூரமாருந்தப்ப மொவம் சுண்டிருந்திச்சா... துணியில கிணியில தீட்டு கீட்டு பட்டுருந்துச்சா?"

"ஏங்க நீங்களே ப்டியெல்லாம் சந்தேகப்படறீங்க".

"கோபால் குச்சிராயனோட மவக்கதையைக் கேட்டும் நா ப்டியெல்லாம் சந்தேகப்படாம இருக்க முடியுமா பூரணி? ஊரு துப்புற துப்பப்பாத்தியா... நானாருந்தா ந்த உசுற இன்னுமுட்டும் வச்சிகிட்டிருக்க மாட்டன்...ப்ப என்னாடான்னா அக்காடான்னு குந்திப்போயிட்டான் எனக்கு தீம்புபண்ணுனவனோட கதையப் பாத்தியா?"

"சரி நாம அதப்பத்திபேசி இப்ப ஆவப்போறது ஒண்ணுமுல்லீங்க ஆருவூட்டு கதை நாலூரு சிரிக்கும் படியா நாறிக்கெடக்கு"

"மவள பெத்தவ நீதான பெத்தவளே இதுக்கு ஒரு முடிவு பண்ணு ஓ வளி நா வர்றன்"

"சீக்கிரமா நம்ப வாகரையிலேயே ஒரு மாப்ளய கீப்ளயப் பாத்து கமலாவுக்கு கல்யாணத்த முடிச்சி வச்சிருங்க".

"நம்ப வாகரையில மனசுக்கு புடிச்ச மாப்ளையா ஒண்ணும் கிட்டத்துல இருக்காப்ல தெரியலையே"

"அந்த அண்ணன் தருமையா நாட்டாருகிட்டயே போயி சொல்லுங்க நல்ல எடமா ஒரு மாப்ள பாக்கச் சொல்லி".

“போயும் போயும் அவங்காலலத்தானா நாம போயி உளுவுணும்?”

“தலக்கி மிஞ்சி போறத்துக்கு முன்னாடி காரியம் முடியணும்னா வேண்டாதவங்க காலாருந்தாலும் உளுந்து தான தீரணும்... இதுக்கெல்லாம் போயி கெவுரத பாத்துகிட்டு திரியவாணாம்”.

“சரி நீ சொல்ற நா காலங்காத்தால போயி அவரப் பாக்குறேன் ரெண்டுபேரும் கம்பகிம்ப தூக்கி அடிச்சிகிட்டமா புடிச்சி கிட்டமா... ஏம்பூரணி, நம்ப பய ஆய்ய அந்த சாம்பசிவம் பயலுக்கு கட்டி வச்சிரணும்னு திரியிறானாம்ல்ல ஒனக்குத் தெரியுமா?”

“ஆரு சொன்னா?”

“ஊருக்குள்ள தான் பேசிகிட்டு திரியிறானுவோ”.

“ஊர்லதான் சொல்லுவானுங்களே... கால்ல பீங்குறதுக்குள்ள தலையில பீன்னு அதையெல்லாம் நீங்க ஒண்ணும் காதுல வாங்கிக்க வாணாம் அப்புடி துணிச்சக் காரப்பய ஒண்ணும் நம்பப் பயஇல்ல...”

“ந்தப்பாரு பூரணி... நம்பப்பய இதுல பெரயாசப் பட்டான்னு தெரிஞ்சா ஓம்புள்ள ஒனக்கிருக்கமாட்டான் தெர்ஞ்சிக்க”

“ம்பிட்டுக் கோவம்ல்ல வர்து அவந்தங்கச்சி நல்லாருக்கணும்னு அவனுக்கு நெனப்புருக்காதா?”

“இருக்கட்டும் அதுக்காவ சாதிகெட்டப்பய வூட்லல்லாம் போயி கொள்வன கொடுப்பன வச்சுக் கணும்னு ஒண்ணும் அக்குசு வந்துரல”.

“சரி ப்ப ஏங்கிட்ட ஒண்ணும் மொடச்சி கிட்டு நிக்காம சொன்னதப்போயி பாத்துகிட்டு வாங்க... அந்த அண்ணங்கூட காலையில ஒரண்டியும் போயிருக்காது வூட்லதானிருக்கும்”.

*"சரி போறன் தொல்லப்படுத்தாத மனுசர... ஆயி...ஆயி...*

*"ஏ ஆய்ய கூப்புர்றீங்க?"*

*"ஒண்ணுமுல்ல... சும்மாத்தான் ...ஆயி ஆயி...*

*"ஏங்க...?"*

*"இந்தப் பயலக்காணுமேன்னு தான் கூப்ட்டன்"*

"அதுக்காவ அவளக் கூப்ட்டு...? வூட்ல குந்திருக்கவளுக்கு அவன் எங்கப்போனான் வந்தான்னா தெரியும்?"

"தெரியாமயா கூப்புர்றன்... இந்த மசுறல்லாம் ஒனக்குத் தெரிஞ்சிருந்தா ஏ ஓம்பொண்ணு அடுத்தப்பயலப் போயி பாக்கப் போறா...."

"சரி கேட்டது தப்புத்தான்...ப்ப ஆருகிட்ட இருக்க கடுப்பையெல்லாம் தீத்துக்கணும்னு பாக்குறீங்க நா ஒண்ணும் அம்புட மாட்டன் ஒங்க மவளையே கூப்ட்டு சண்டப்போடுங்க" சொல்லிவிட்டு கனவேகமாய் அடுப்படிப் பக்கம் போய்க் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்திற்குள்ளேயே அவள் முகம் கறுத்துப் போய் விட்டது போல் தோன்றியது.

"ஆத்துரத்துல ஒண்ணு சொல்லிரப்புடாது... இவுளுக்கு எப்புடிதான் செம்மத்துக்கு மூக்கு மேலகோவம் வருமோ... ஒங்க கோவம் வந்து ஆர என்னாடிப் பண்ணும்... இந்தப்பயலக் காணுமே... கொடில சட்ட வேட்டியெல்லாம் கெடக்கே எங்க போயிருப்பான்னு கூப்ட்டு கேக்கப் பாத்தா ஏங் கூப்புர்ற... எதுக்கு கூப்புர்றன்னு கேள்வி மசுறு கேக்குறா... போங்கடி நாற நொள்ளியோளா"

திடீரென்று வந்த ஆத்திரம் ஏற்கனவேயே நெஞ்சுக்குள் பொங்கிப் பொங்கி வழிந்து கொண்டிருக்கிற ஆத்திரம் எல்லாமாகச் சேர்ந்து அவர் மனசை புண்ணடையச் செய்து விட்டன. பூரணி மேல்

'ச்சீ' யென்று வந்தது 'இவள்லாம் என்ன மனுஷி' என்று வந்தது... 'இந்தப் பயலை இன்னும் காணுமே' என்றும் வந்தது. ஓரிடத்தில் நிலை கொள்ள முடியவில்லை குறுக்குக்கும் நெடுக்குக்குமாய் அலை பாய்ந்தார். இப்போது அவரது கண்கள் தங்கவேலுவைத் தேடின. ரொம்ப நேரம் வரையிலும் அவனை எதிர்பார்த்து காத்திருந்தார். வாழ்க்கையில் இதுநாள் வரை அவனுக்கென்ன அவசியம் என்று யோசித்துப்பார்த்தார். கொக்கியாய் கேள்விகள் நெளிந்தனவேத் தவிர பதிலொன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவரால் ஊருக்குள் 'புகைச்சல்' அதிகமாய் எழும்பியிருக்கிற இத்தருணத்தில் அவனில்லாதது வருத்தமாகத் தானிருந்தது. இப்போது பக்கத்தில் அவனில்லா பொழுதுகள் அவரது நெஞ்சத்தில் பதட்டத்தையே உண்டுபண்ணிக் கொண்டிருந்தன.

இருப்புக் கொள்ளவில்லை. தெருவுக்குகூட வந்து நின்று பார்த்தார் அவன் வரவில்லை மாறாக கோபால் குச்சிராயர் பெண் நீலா கற்பவதியாயிருப்பதைப் பற்றி தான் ஊரார் பேசிக் கொண்டிருக்கிறார் போல காதில் விழுகிறது. ஊரில் இருக்கிறவர்களுக்கு ஓய்ச்சலாய் குந்தியிருக்கிற போது பேசவிஷயம் வேண்டும் அதுவும் இப்படிப்பட்ட விஷயங்கள் அம்பிட்டால் போதும் திண்ணைக்குத் திண்ணை குந்தி பிலுபிலுவென்று பேசித் தீர்த்து விடுவார்கள்.

ஏனோ இது அவருக்கு பிடிக்காதது மாதிரியிருந்தது. விரக்தியாகவும் இருந்தது. 'பயலக்காணுமே' என்று முணுமுணுத்துக் கொள்கிறார் மீண்டும் வீட்டிற்குள் வந்தார். உடம்பு அசதியும் மன அசதியும் அவருக்கு களைப்பைத் தந்தன. ஈஸிச்சேரை கூடத்தில் போட்டு தூங்க ஆரம்பித்து விட்டார் நல்லத்தூக்கம்.

விழித்ததுமே பூரணியைக் கூப்பிட்டு அவர் கேட்ட கேள்வி 'பய வந்துட்டானா' என்றுதான். அதற்கு அவள் 'ல்லே... என்று பட்டும் படாமலுமாய் பதில் சொல்லி விட்டு மூஞ்சை ஒரு மாதிரியாய் இளுத்துக் கொண்டு போய் விட்டாள். அவளுடைய ஆத்திரம் இன்றைக்கு பூராவதுமாக இருக்க வேண்டாமா?

சட்டென்று கோபத்தையெல்லாம் மறந்து விடுவது ஆம்பிளைகள் தான். பெண்கள் எல்லாவற்றையும் நெஞ்சக்குழியில் போட்டு புதைத்துக் கொண்டு நேரம் வரும்போது முகத்தில் காட்டுவார்கள் இந்த விதிவிலக்கிலிருந்து பூரணி வேறுபட்டு போய் விடப் போகிறாளா என்ன?

கமலாவும் கூட சாம்பசிவத்தைப் பற்றிய நினைப்புகளை உதறிவிட்டு அண்ணன்காரனைப் பற்றி கவலைப்பட ஆரம்பித்திருந்தாள். ‘என்னோட கல்யாணத்துக்காவத் தான் மெனக்கடுமோ என்று நினைத்தபோது மனசுக்குள் சிறிது வெளிச்சமும் பரவசமும் ஏற்பட்டன. மறுவிநாடியே ஊர்ரெண்டு பட்டு கிடக்கிற கிடப்பில் நமக்கென்ன இன்னும் இந்த பொல்லாத ஆசை’ என்றும் தோன்றியது.

அவளும் தான் ஒருவாரகாலமாய் எப்படியாவது எந்த சந்தர்ப்பத்திலாவது ஒரே ஒருமுறை சாம்பசிவத்தை சந்திக்கவோ பார்க்கவோ முடியுமாவென்று கடும் பிரயாசை எடுத்துக் கொண்டும் முடியவே முடியாமல் போய் விட்டது.

ரெண்டு பேரும் பழக ஆரம்பித்திருந்த அந்த நாட்களிலேயே இருவரும் சந்தித்தது பேசியது என்பதெல்லாம் வெகு அபூர்வமாய் தானிருந்தது. இப்போது இருவரது பிரச்னைகளுமே ஊருக்குள் பெரும் புகைச்சலை உண்டாக்கியிருக்கிற இச்சூழலில் சந்திப்பைப் பற்றி எப்படி யோசிக்க முடியும்? அதுவும் வயசுக்கு வந்த பிற்பாடு கல்யாணமாகிறவரை வீட்டைத்தவிர வேறு உலகம் தெரியாத பெண்ணொருத்திக்கு இது எப்படித்தான் சாத்தியப் படப்போகிறது?

ஊரார்கள் அவள்மீதும் அந்த சாம்பசிவத்தின் மீதும் ஒரு குறியாய் தானிருக்கிறார்கள். எங்காவது இண்டு இடுக்கு கிடைத்தால் கூட அவர்கள் சந்திக்காமலிருந்து விடுவார்களா என்று கண்கானிப்பதில் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். அப்பா இந்த விஷயத்தில் கண்கொத்தி பாம்பு மாதிரி ரொம்பவும் குறியாக இருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். ராத்திரி முச்சூடும் அவருக்கு தூக்கமே வருவதில்லை. எப்போதும் ஒரு ராத்திரிக்குள் நாலு ஐந்து தடவைகள் கொல்லைப்பக்கம் எழுந்து போகிறவர்

இப்போதெல்லாம் பத்துதடவை இருபது தடவைக்கு மேல் கூட எழுந்து போய் பார்க்கிறார், ஏதாவது சின்ன சப்தம் எழும்பினால் கூட "ஆரது" என்று கூப்பாடு போடவே ஆரம்பித்து விடுகிறார். கமலா வீட்டுக்குள் படுத்திருக்கிறாளா என்பதை ருசுப்படுத்திக் கொள்வதற்காக "ஆயி..." என்று அர்த்த ராத்திரியிலும் எழுப்பி பேசிவிட்டுத்தான் மீண்டும் படுக்க ஆரம்பிக்கிறார்.

இப்படிப்பட்ட வலுவான சூழல்களில் சாம்ப சிவத்தை எப்படி சந்திப்பது? ஏக்கங்களும் அவனைப்பற்றிய நினைவுகளும் கனவுகளும் அவளுக்குள்ளேயே எழுந்து எழும்பி அடங்கி நீத்தும் கூட போய்விடுகிறதே

தங்கவேலு தன்னைப்பற்றி ரொம்ப அக்கறை எடுத்துக் கொண்டு அப்பாவையும் ஊராரையும் எதிர்க்கத் துணிந்திருப்பது அவளுக்கு ஒரு நம்பிக்கைய்ய வரவழைத்திருந்த போதிலும்கூட இதனால் ஊராரால் அண்ணனுக்கு ஏதும் ஆபத்து வரக்கூடுமோ என்பதையும் யோசித்து தான் வைத்திருந்தாள். அப்படியாப்பட்ட ஊர்தானே இது... அசந்தால் போதும் ஆளையே காணாமல் செய்து விடுவார்கள்! இப்போது அவள் யோசித்த மாதிரியே அண்ணனைக் காணுமே அப்பாவிடம் அம்மாவிடம் சொல்லாமல் கொள்ளாமல் போனாலும் என்னிடம் சொல்லாமல் அது வெளியே பொறப்பட்டு போவாதே என்று உள்ளாந்தரத்தில் சஞ்சலம் கொண்டாள். நேந்து எங்கேயோ போய் விட்டு வந்து சுழற்றிக் கொடுத்த கடிகாரம் அந்த மஞ்சள் பெட்டியிலதானே இருக்கிறது... எங்காவது ஊரு தேசத்திற்கு போனால் கொண்டால் விரும்பி போட்டுச் செல்லும் கட்டம் போட்ட சந்தனக்கலர் சட்டையும் பட்டு வேஷ்டியும் கொடியில் கிடக்கிறதே இதையெல்லாம் போடாமல் கொள்ளாமல் எங்கே போயிருக்கும்...? ஊருக்குள் தான் எங்காவது சுத்திக்கொண்டு திரிகிறது என்றாலும் இந்நேரம் வீட்டுக்கு வந்திருக்க வேண்டுமே... காலைச்சாப்பாடு முடிந்து... மத்தியான சாப்பாடு முடிந்து சாயந்தரமும் வந்து விட்டதே... அண்ணன் எங்கே? நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை வந்தது. பூரணி கவலை பிடித்து அழவே ஆரம்பித்து விட்டாள் விசுவராயர்தான் அவர்களை ஒரு வழியாய் அசமடக்கினார்.

“ஏண்டி இப்புடி அளுது சாயிறீங்க... மூணுமாச பப்பாகாணம போச்சுன்னா... கங்கறுத்தப்பய எங்காச்சும் போயிருப்பான் சுத்தி புட்டுதான் வரட்டுமே...” இப்படி அவர் சொன்னாரேத் தவிர அவர் நெஞ்சு பள்ளத்திற்குள்ளும் ஒரு கவலை இருக்கத்தான் இருந்தது.

‘ஊரு இருக்கிற இருப்பில் எவனாவது வெட்டி கிட்டி வய வாய்க்கப்பக்கம் போட்டிருப்பானோ’ என்றும் சந்தேகம் வருகிறது. முகத்தில் ஏற்பட்டுப் போயிருக்கிற சந்தேகக்குறியை கெட்டிக்காரத் தனமாய் மகளுக்கோ மனைவிக்கோ காடடிவிடாமல் அந்த சாயந்தர நேரத்திலும் வயல் வாய்க்கால் என்று போய் ஒரு அலசு அலசிப் பார்த்துவிட்டு வந்து இதோ ஓய்ந்துபோய் குந்திவிட்டார்.

“ஆயி... எனக்கு ரவச்சாப்பாடு வேண்டாம்மா... நீயும் அம்மாவும் சாப்புட்டுட்டு ஒண்ணனுக்கு கொஞ்சம் எடுத்துவச்சிட்டு படுங்க தண்ணி கிண்ணி போட்றவாணாம்.. பய எங்காச்சும் சுத்திகித்திபுட்டு வருவான்” என்று சொல்லிவிட்டு படுக்கைக்கு வர ஆரம்பித்தார்.

ராத்திரி சாப்பாடு சாப்பிடததாலும் மனசிலிருந்த பலவிதமான கவலைகளினாலும் அவருக்கு தூக்கம் வரவில்லை. அடிக்கடி தங்கவேலு வந்துவிட்டானா என்பதையும் எழுந்து எழுந்து பார்த்துக் கொண்டார். எப்போது பொழுது விடியும் விடியும் என்றிருந்தது அவருக்கு.

**ஒருமுறை பார்த்தால் போதுமோ இன்னொரு முறை பார்த்தால் என்ன குறைந்துவிடும் என்று இப்படி விரைத்துக் கொண்டு போகிறார்?**

# 14

காலையில் படுக்கையிலிருந்து எழுந்ததும் வழக்கமாக தங்கவேலு படுத்திருக்கும் கீழண்டைத் திண்ணையைப் பார்த்தார். அவனுடைய பாயும் தலையணையும் எரவானத்தில் சுருட்டி வைத்தபடி இருந்தது. அவன் வரவில்லை. வந்ததற்கான அறி குறியுமில்லை. பூரணி காப்பி கொண்டுவந்து கொடுத்தாள். அதை விஷம்மாதிரி குடித்துவிட்டு அவனைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். பூரணியிடம் அன் வராததுபற்றி ஏதும் கேட்கத் தோன்றவில்லை. தனக்குத்தானே பயலுக்கு என்னமோத் தெரியலையே என்று முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார். காலையில் காட்டியும் வயல் வேலைக்காக வந்து நின்ற பண்ணைக் காரனிடம் தங்கவேலுவைப்பற்றி விசாரித்தார். 'பாக்கலை' என்று ஒரேயடியாய்ச் சொல்லிவிட்டான். கமலாவைக் கூப்பிட்டார்.

"ஆயி... ஆயி....

"யாப்பா...

"காப்பி குடிச்சிட்டு இஞ்ச செத்த வந்துட்டுப் போயேன்."

"காப்பி குடிச்சிட்டன் எதுக்கு கூப்ட்டீங்க?" கேட்டுக் கொண்டே அவரருகே வந்து கொண்டிருந்தாள் கமலா.

"என்னாயி... ஒண்ணனக்காணுமே... சாப்டாம கொள்ளாம எங்க சுத்திகிட்டு நிக்கறான்னு தெரியலையே... கையில காசுகீசு வச்சிருந்தானாயி...?"

"தெரியலப்பா"

"இத்தினி நாளும் அவன் எங்க வந்தான் எங்க போனான்னு நா கவலப்பட்டதே இல்லாயி...ப்ப என்ன டான்னா அவன் எங்கப் போயிருப்பான்னு கவலையாருக்கு".

"என்னாலதானப்பா இத்தினியும்?"

"ஆமா என்று சொல்கிற மாதிரி மௌனமாயிருந்தார். அவள் சொல்கிறதில் என்ன தப்பு? வீடு ஊர் எல்லாம் இத்தனை அல்லோல கல்லோலப்பட்டு கிடக்கிற தற்கெல்லாம் காரணம் அவளில்லாமல் வேறு யாராம்?"

"சரி நாம்போயி... தருமையா நாட்டாரப் பாத்துட்டு வரன் அதுக்குள்ள ஒண்ணங்கிண்ணன் வந்தான்னா வூட்லயே இருக்கச் சொல்லாயி... வந்ததும் எங்காச்சும கௌம்பிடப்போறான்".

"சரிப்பா"

அவர் எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு தருமையா நாட்டார் வீட்டுப்பக்கம் புறப்பட்டு போகிற சமயத்தில் சாம்பசிவம் எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்தான். அவரைப் பார்த்ததும் அவனறியாமல் ஏற்பட்ட திகிலுடன் தலையை குனிந்தபடி நடந்தான் அவன் முகம் கல்லாய் இறுகிப்போன மாதிரியிருந்தது சட்டையில்லா உடம்பு அவன் முன்னைக்காட்டிலும் அதிகமாய் இளைத்துப் போயிருப்பதையும் காட்டியது. ஒரேயடியாய் ஆள் 'ஓ' என்றல்லவா ஆய்விட்டான் என்று நினைத்துக் கொண்டே நடந்தார்.

வீட்டு நெருக்கத்தில் அவன் வந்தபோது கமலாவும் அவனை கவனித்து விட்டதினால் அவன் பார்க்கட்டுமே என்று ஒருகணம் தயங்கி வாசற்படியில் அழகு காட்டினாள் ஷணத்தில்

இருவர் பார்வைகளும் ஒன்றுடன் ஒன்ற மோதி தூளானது. அந்த ஷணங்களில் இருவர் நெஞ்சுமே திக்கென்று ஆயிற்று. ஏதோ இத்தனை நாளும் நினைத்து நினைத்து நெஞ்சுக்குழியில் போட்டியிருந்த விஷயங்களும் நினைப்புக்களும் வாய்முளைத்து பேச ஆரம்பித்துவிட்டது போல பட்டது. அமுங்கிப் போயிருந்த உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்கிற மாதிரி என்ன வேதனை இது? அப்பா தூரப் போய்விட்டார் என்ற துணிச்சலிலும் அப்போது பார்த்து தெருவில் ஆள் நடமாட்டமில்லை என்ற துணிச்சலிலும் சட்டைபோடாத அவன் முதுகு தெருக்கோடிப்போய் மறையும் வரை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள் கமலா.

'ஒருமுறை பார்த்தால் போதுமோ இன்னொரு முறை பார்த்தால் என்ன குறைந்துவிடும் என்று இப்படி விரைத்துக் கொண்டு போகிறார்?' முகத்தில் ஏன்தான் இத்தனை பயமோ துணிச்சல்பத்தாத ஆம்பிளை எதற்காக ஒருத்தியின் மனதை நோகடிக்க வேண்டும்?

'ஆள் துரும்பாய் இளைத்துப்போய் விட்டாரே... உடம்பில் பசையே இல்லாமல் என்ன உடம்பு அது? தலையையும் பல்லையும் காட்டிக்கொண்டு ஒரு ஆம்பிளை இப்படியாக இருக்க வேண்டும்?'

உடம்பில் சூடு நெஞ்சில் ஈரம் மனசில் ஒளி இவற்றையும் மீறி என்ன பாடுபடுத்துகிறது இந்த ஏக்கமும் சோகமும்.

அண்ணனை காணோமே என்று பட்ட கவலையெல்லாம் எங்கு போனதோ தெரியவில்லை.

ஒலிக்கும் வளையும் - குலுங்கும் கொலுசும் மீறின சிரிப்பும் அம்மாவை பயமுறுத்தியது

என்ன வந்தது இப்போது இவளுக்கு..? எதைக் கண்டு இப்படி பொங்கிப் பொங்கிப் போகிறாள்? அம்மாவின் மனசில் கேள்விகள்.

நெளிந்த கூந்தல் முடிச்சுடன் அவிழ குபுக்கென்றொரு வாசனை பரவ மீண்டும் அந்த கொலுசும் வளையும் குலுங்கிச் சிரிக்க கமலா எத்தனை அழகாய்...

அம்மாவின் ஏக்கம் கணத்தில் நீள அழகு கமலா அடுப்படி போனாள்.

அங்கே தஞ்சம்கொள்ளும் போதுதானே அவனையே நினைத்துக் கொண்டிருக்க முடிகிறது.

கனவு சிதறியது வெளிச்சத்தில், ஊராரும உலகத்தாரும் ஈட்டிகளை வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கின்றனர் அவள் நெஞ்சை குறிபார்த்து.

மீண்டும் அந்த கனவு உடைய திகிலுடன் அம்மா தூணில் சாய்ந்து,

“அடடடட.... வாங்க மச்சா வாங்க... என்ன ப்டி காலையில. ஏய்.... மச்சான் வந்துருக்கு எப்பவும் இஞ்சல்லாம் வந்ததுல்ல காப்பி கீப்பிருந்தா கட்டுனு எடுத்துகிட்டு வா”

தருமையா நாட்டாருக்கு இத்தனை உற்சாகம் எப்படித்தான் வந்ததோ தெரியவில்லை. இத்தனை ஆச்சரியத்தோடும் அதிசயத் தோடும் ஒருத்தரைக் கூப்பிடுவதற்கு அவருக்கு எப்பவோதான் நேர்ந்திருக்கும். இன்றைக்கு வந்த உற்சாகம் அதிசயததிலும் அதிசயமாய் முத்துக்கண்ணு விசுவராயர் அவர் வீடுதேடி வந்திருப்பதுதான்.

அவர் இப்படியெல்லாம் யார் வீடுகளுக்கும் அனாவசிய மாய் போனது வந்தது இல்லை. எதோ தேவை திருநாள் என்றால் தலையைக் காட்டிவிட்டு வந்துவிடுவார் மித்த மித்த நேரங்களில் வயலிலும் வீட்டிலும்தான்.

அவர் இப்போது எதற்காக வந்திருப்பார் என்பதையும் உற்சாகத்தின் இடையிலும யோசிக்கவே செய்தார். அடிநெஞ்சில்

அவரறியாமல் மூண்ட பயம் தெரியக்கூடாத ரகசியமொன்று அவருக்கு வெளிச்சப் பட்டுப்போயிருக்குமோ என்பதால்தான் அத்தனை சீக்கிரத்திற்கு இது ஒன்றும் தெரிந்திருக்க நியாயம் இல்லையே.. பின் எதற்காக வந்திருப்பார்?

சந்தேகக்குறி முகத்தில் தேங்க எதிர்த்திண்ணையில் குந்துகிறார்.

"என்ன... து.. வூட்டுக்கு வந்த விருந்தாடிய வுட்டு புட்டு நா காப்பியக் குடிக்கிறதா நல்லாருக்க கூத்து ஒரு வாகர கள்ளனோட மொறசறயா இது... நல்லா பேசுறீங்களே பேச்சு... ஆர் வூட்ல, சட்டுனு ஒண்ணனுக்கு காப்பிருந்தா எடுத்துகிட்டு வா".

காப்பி வருகிறது குடித்து வைக்கிறார்.

"ஒண்ணுமுல் இந்த மாசத்துலயே ஆயி கண்ணா லத்த முடிச்சிட்டா தேவலை நாள வளத்துகிட்டு போறதுல ஒண்ணும் பெரோசனமுல்லியல்ல".

"ஆமா... அந்த நெல்லுப்பட்டு சம்பந்தம் என்னாச்சி?"

வச்ச கொள்ளிய வச்சுபுட்டு என்னயே என்னாச் சுன்னு திருப்பி கேட்டா என்னா மச்சா வதுலு சொல்றது...? தெக்கப் போனா கேவலம் வடக்கப்போனா கேவலம் மேற்க போன கேவலம் கெளக்க போனா கேவலம்.... குண்டு சட்டிக்குள்ளயே குதுரய ஓட்டிகிட்டிருக்கணுங்கறீங்க நம்பளால ஒண்ணும் ஊரு பொல்லாப்பு வேண்டாம்னுதான் நெல்லுப் பட்டு சம்பந்தத்த நானே முறிச்சிகிட்டேன்.

"அதுவரைக்கும் சரி... ஊருக்குள்ள கெளம்பிருந்துச்சே ஒரு பொகச்சல் அதுக்கு என்னா வளி பண்றதாருக்கீங்க..?"

"ஏதோ சின்னவயசு துமுருல ஒத்தருக்கொருத்தர் பாத்துருக்கலாம் கொண்டுருக்கலாம்... எள வெட்டுல நீங்க எத்தன பேரப்பாத்துருப்பீங்க... நாந்தான் எத்தன வேலி ஏறிகுதிச்சன்...

ஊர்ல ஆருக்கு தெரியாது இந்த கதை ... இதெல்லாத்தையும் பேசி ஆவப்போறது என்னா மச்சான்?''

"ஒங்கப்பையன் கூட அந்த வந்தாரு குடிப்பயலுக்கே தங்கச்ச கட்டி வச்சிடணும்ன திரிஞ்சிகிட்டுருக்காணாம்ல்ல?''

"ஆமா... எனக்கும் சங்கட்டமாதாருக்கு. நேத்தையிலிருந்து பயல வேறக் காணும் அதுல வேறகவல புடிச்சி கெடக்கன்''.

இப்போது நாட்டார் பேசவில்லை. தங்கவேலுவைப் பற்றி ஆழமாய்க்கேட்டு விடுவாரோ பூதம் வெளிப்பட்டு விடுமோ என்று பயந்தார். அவனை ஒரு வழியாய் அடக்கி வைக்க ராவோடு ராவாய் நாட்டாண்மைக்காரர்களும் பெரிய வீட்டு நாயக்கரும் தானுமாய் போட்ட திட்டம் நல்லபடியாய் முடிந்திருக்கிற தருணத்தில் முட்டைக் குள்ளிருக்கிற குஞ்சு வெடித்து வெளிப்பட்டு விடுமோ என்று பயந்தார். தங்கவேலுவப்பற்றி பேச்சு வருகிற போதெல்லாம் ஜாக்கிரதையாகவே பேசினார். ஏன் இப்படி புடி கொடுக்காமல் வழுக்கிக்கொண்டு ஓடுகிறார் என்று விசுவராயர் சந்தேகப்படவும் செய்தார். வந்த வேலை ஆக வேண்டுமே என்று சந்தேகக்குறியை முகத்தில் காட்டாமல் காரியப்பேச்சில் குறியாயிருந்தார்.

"ஒங்க மவனுக்கு சாதிகொளத்தப்பத்தி என்னாத் தெரியும் சின்னப்பயல் அது இதுன்னு நட்டுவம் பேசி எகன மொகனயா ஒண்ணு செஞ்சி ட்டா நம்பத்தெருப் பொண்ணுவளே நாறில்ல போவும்... ஆர் வருவா வாக ரக்கி... பயலுவளுக்குத்தான் ஒரு பொண்ணு குட்டின்னு வெளியப்போயி பாக்க போமுடியுமா சொல்லுங்க மச்சா...?''

"எனக்கும் இது புடிக்கல மச்சான்... ஆரம்பத்துலயே அந்த வந்தாரு குடிப்பயல இஞ்ச குடி வச்சிருக்கப் புடாது... வச்சதுனால தான இந்த கதி''

"பொளைக்க வந்தவன் பொளச்சிட்டு போவட்டுமேன்னு நெனச்சோம் இந்த அளவுக்கு ஆவும்ன்னா நெனச்சம்''ப்ப என்னடான்னா செத்த நா செருப்படி பட்ட மாறி தெக்கப்போறான் வடக்கப்போறான் மூச்சு வரக்காணும்.

"பயலுவளும் மெரட்டி வச்சிருக்காணாம்ல்ல?"

"ஆமா.. எங்கயும் ஓட ஒண்ட எடம் இல்லாத தால இஞ்சயே ஊர நல்லது பண்ணிகிட்டு திரிஞ்சிகிட்டு கெடக்கான்... ல்லாட்டி இந்நேரம் குச்சயே பிரிச்சிகிட்டு குடிய கெளப்பிகிட்டு போயிருப்பான்... அந்த நா கத எதுக்கு இப்ப ஆவுற கதய பேசுங்க".

"ஒங்களுக்கும் எனக்கும் கொஞ்ச கோவதாபமிருக்கு".

"ஆமா ஒங்க வூட்டு வேலிய பிரிச்சி ஏ வூட்டு எடத்துல நீங்க கட்டுனதுக்கா ல்ல ஏ வூட்டு வேலிய பிரிச்சி ஒங்க வூட்டு எடத்துல நா கட்டுனதுக்கா ... ஊரோட மொறசற கெட்டுடப்புடாதுன்னுதான் ஆளுக்கு ஆளு பேசுச்சு... ந்த ரோக்கிதியில கோபால்குச்சராயன் பொண்ணு ஆரு கூடயோ படுத்து புள்ளய வாங்கிகிட்டு நிக்கிறா... ப்ப என்னாடான்னா ஊரோட கெவுரத சந்திசிரிச்சி நிக்கிது... ஆரு நாண்டு கிட்டு செத்தா".

"ஆமா மச்சா... இந்த ஊரு தோன்றுன நாளக்கி இப்புடி அக்குருமமெல்லாம் நடந்ததுல்லதா... அவங்கிடட படுத்தவன் ஆருன்னு கண்டு ஒதச்சாத்தேவலை"

"குப்பயக் கிண்டக்கிண்ட நாறித் தொலைக்கு மேன்னுதா பொட்டிக்குள்ளயே மூடி வச்சிருக்கு... இப்ப ஏ அதக் கிண்டி மச்சா... ன்னமும் இந்த புண்ணு ஆற்ர வர அவுரு வூட்ட ஒதுக்கி வச்சாச்சி. வர்ற மாசிமாசத் திருளாவுல தேரு அவுரு வூட்டெதுக்க நிக்காது... சூடம் சாம்புராணியோ தேங்காயோ ஒடைக்கப்புடாது ராத்திரி கூடி நாட்டாமக்குள்ளயே பேசி முடிவெடுத்தாச்சி".

"சர்த்தான்" என்று சொல்லிவிட்டு மௌனமாகி விட்டார் விசுவராயர். நெஞ்சுக்குள் லேசாய் ஆத்திரம் மூண்டது. மூண்டு என்ன பண்ணுவது இவர் சொல்லி என்ன நடக்கப் போகிறது... என்னமோ தெரிஞ்சோ தெரியாமலோ நடந்த ஒரு காரியத்திற்கு இத்தனை பெரிய தண்டனை யென்றால் ஓரொருத்தன் சாதிவிட்டு சாதிப்போய் வப்பாட்டி வைத்துக் கொண்டானே அவனுக்கெல் லாம் என்ன தண்டனை கொடுப்பது... இதற்கெல்லாம் தண்டனை

கொடுக்க ஆரம்பித்தால் ஊருக்குள் ஒரு சிட்டுக் குருவி இருக்காது... த்தூ....

"சரிமச்சான் ஊரோடக் கதய பேச ஆரமிச்சா பேசிகிட்டே போவலாம்... அந்தக் கதையெல்லாம் நமக்கு வாண்டாம். நீங்க நமக்காவ ஒரு காரியம் செய்யணும்"

"செஞ்சா போச்சு...

"நம்ப வாகரையிலேயே ஒரு மாப்ளயப்பாத்து ஆயிக்கி கட்டி வச்சிட்டாத் தேவலை"

"ப்பத்தான் மச்சானுக்கு புத்து வருது"

"ல்லாட்டி என்னயுமுல்ல ஒதுக்கி வச்சிருப்பீங்க...

"கில்லாடியா பேசாதீங்க...

"நானா பேசுறன் இஞ்ச ஆருக்கும் பயித்தியம் புடிக்கலை... நல்லாத்தானிருக்கோம்"

"சரி நெஞ்சுல குத்தாம செய்ற காரியத்த் சொல்லுங்க...

"பங்குனியில கல்யாணம் முடிஞ்சிரணும் தையில மூர்த்த ஓல முடிஞ்சிடணும் வகையா ஒரு எடம் ஆப்டுமா?"

"கையில வெண்ணருக்கு நெய்யிக்கி அலைய வாண்டாம் நம்ப வாகரக்குள்ளயே ஒரு பையனிருக்கான் நல்ல குடும்பத் துப்பையன்... வெவசாயம்தான் பாத்துகிட்டு வறான் சொல்லிக்கிறாப்ல நெலபல மிருக்கு வூடும் நல்ல வூடு முன்னால ஒட்டு பின்னால மச்சி அவுங்க கொண்டுருக்க கொடுத்துருக்க எடமெல்லாம் கூட வாகரக்குள்ள தான் நம்ப தோதுக்கு வரும் சிக்கிப் புடுவமா?"

“வகையா வந்தா சிக்கிப்புடுங்க... நம்பவூரு திருளாக்குள்ள நிச்சியத்த முடிச்சிபுட்டா கல்யாணத்த பங்குனியில வச்சிக்கலாம் எப்ப திருளா?”

“மாசி பதினஞ்சி...

“அப்ப சரி இன்னிககி நல்ல நாளுங்கூட சொன்ன எடத்த போயி பாத்துபுட்டு வந்துர்றீங்களா?”

“அதங்காட்டி எனக்கு வேற வேலயச் சொல்லுங்க மச்சா”.

“சட்டுனுகுளிச்சிட்டு பொறப்புட்டு வாங்க செலவுக்கு பணம் தாறன்”.

“ஏ; மச்சானுக்காவ நா செலவு பண்ணிகிட்டு போவப்புடாதா தா... பண்ணுனா கொறஞ்சி போயிருவனா?”

“நம்பளால ஆருக்கும் தொல்ல வாணாம்... ஏங்காரியமா போறப மச்சானுக்கு நா செலவு வய்க்கலாமா வந்து வாங்கிட்டு போங்க மச்சா”

“சரி சரி...

“வாகரக்குள்ள ஆரும் கொலம் கோத்துரம் பாக்குற வேலயில்லாமப் போச்சி... செய்வினைய பேசிகிட்டு நிச்சயத்த வச்சிரணும்”.

“தயி இருவதுல நிச்சியம்தான் ஆவ வேண்டிய சோளியப்பாருங்க மித்தத நா பாத்துக்குறேன்”.

“சரி சரி...

அவர் வீட்டுக்கு புறப்பட்டார். ஒரு காரியம் முடிந்த மாதிரியிருந்தது. மனசு லேசாக ஆய்விட்டது போலவுமிருந்தது. தங்கவேலுவைப் பற்றிய கவலையுமிருந்தது.

அப்போது வீரய்யாநாயக்கர் வீட்டு திண்ணையிலிருந்து குந்தியபடி கவனித்துக் கொண்டிருந்த ரெங்கப்பிள்ளைகோனார், "என்ன மச்சா.. சூரியன் என்னக்கிமுள்ளாம இன்னிக்கி மேற்க உதிச்சிடுச்சா... தருமையாமச்சா வூட்டுக்கு விசுவராயரு வந்துட்டு போறாரு..." என்றார்.

"ஆருகண்டா... ஏய்யா ரெங்கபுள்ள, தங்கவேலுப் பயல கடத்தி வச்சிருக்குறது ஆருக்கும் தெரியாதுல்ல" என்று குரலை அழுத்திக் கேட்கிறார் நாயக்கர்.

"அதொண்ணும் தெரியநாயமுல்ல... வேற எதுக்கு வந்துட்டு போறாரோ தெர்யலை"

"எல்லா கூத்தையும் தருமையாநாட்டான் ராவோடு ராவா வந்து சொல்லிப்புடுவான் கம்முனு வாய பொத்திகிட்டு போய்யா நீ"

அவரையும் மீறி 'ஹ்ஹேஹ்ஹே... எனறு சிரிப்பு வருகிறது. அந்த சிரிப்பில் தொனித்த நய்யாண்டியும் நமுறும் விசுவராயருக்கு கேட்டுத்தானிருக்கும்.

***மனிதன் ஜால வித்தைக் காரனடா... மந்திரக்காரனவன் - மண்ணை அள்ளு வான் சர்க்கரையாக்குவான் - சர்க்க ரையை மண்ணாகவும் ஆக்குவான். களிமண்ணை எடுத்துப் பிசைந்து கழுதை செய்பவன் அதையே நொடியில் அழித் துவிட்டு குதிரையாக்கிக் காட்டுவான்.***

# 15

தருமையாநாட்டார் போன சுருக்கில் கல்யாண காரியத்தை கச்சிதமாய் முடித்துக்கொணடு வந்துவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். ஆள் இந்தமாதிரி விஷயத்திற்கெல்லாம் கொஞ்சம் ராசியான மனுஷன் ஆயிற்றே என்ன பேசினாரோ ஏது சேனாரோ என்ன பொடிபோட்டாரோ அவர் பேசிய பேச்சில் மாப்பிள்ளையின் தகப்பனார் மயங்கியேப் போய்விட்டார் விசுவராயர் "சரியாவந்தா நீங்களே தாம்பலதத மாத்திக்குடுத்துட்டு வந்துருங்க" என்று சொல்லியிருந்தாலும்கூட அதையும் செய்துவிட்டு வந்திருப்பார்.

அது நல்லதில்லை என்று தோன்றினதினாலோ என்னமோ மாப்பிள்ளையின் தகப்பனாரிடம் சொன்னார் நாட்டார், பொண்ண நீங்க ஒரு தரம் போயிப்பாத்துட்டு வந்தாத்தேவலை.

"அவுங்க மாப்ளய பாக்கவாண்டாமா?"

"பாத்துகிட்டாத்தான் தேவலை... பின்னால ஒண்ணுன்னா கொண்டவுங்க குடுத்தவுங்கன்னு போயிரும்"

"தையி இருவதுல நிச்சயித்த வச்சிரணும்னு நீங்க சொல்றதால நாளைக்கே நாங்க பொண்ண வந்து பாத்துபுட்டு வந்துடறோம்"

"பேஷா வாங்க".

விசுவராயரிடம் வந்து விஷயத்தைச் சொன்னபோது அவருக்கு சந்தோஷமாயிருந்தது. பூரணிக்கும் சம்மதம் தான். எப்படியோ பொண்ணு கரையேறினால் சரி

அடுப்படியில் குந்தி அழும் கமலாவின் அழுகையைப் பற்றியோ இந்த சமயத்தில் இல்லாத தங்கவேலுவை பற்றியோ யாரும் கவலைப்பட்டதாய்த் தெரியவில்லை. அவனிருந்தால் இந்த சம்பந்தத்தை தட்டிவிடுவானோ என்று பயமும் இருந்தது. அவன் இல்லாதது வருத்தமாகவும் இருந்தது.

சூட்டோடு சூடாய் விசுவராயரேப் போய் பெரிய வீட்டு நாயக்கர் ரெங்கப்பிள்ளைகோனார் - கணேசக் கோனார் - கோபால் குச்சிராயர் வீட்டிலும் கூட நாளை மாப்பிள்ளை வீடு பார்க்கப் போகும் செய்தியை சொல்லிவிட்டு வந்து விட்டார்.

எல்லாருக்குமே அவரின் இந்த புதிய நடிவடிக்கைகள் ஆச்சிரியத்தையும் அதிசயத்தையும் உண்டுபண்ணியிருந்த போதிலும் தன் பெண்மீது விழுந்துள்ள களங்கத்தைப் போக்கத் தான் ஊரைக்கொண்டாட வந்திருக்கின்றானோ என்று குத்தலாகவும் பேசினார்கள்.

ஒருவழியாய் பெண்பார்க்கும் படலம் மாப்பிள்ளை பார்க்கும் படலம் எல்லாம் நல்லபடியாக நடந்து முடிந்து விட்டதோடு பெண்வீட்டாருக்கு மாப்பிள்ளையையும் மாப்பிள்ளை வீட்டாருக்கு பெண்ணையும் நன்றாகவே பிடித்துப் போய்விட்டது.

அவர்கள் போட்ட திட்டப்படி தை மாசம் இருபதாம் தேதி நிச்சயம் பண்ணக்கூட நாளும் பேசி விட்டார்கள்.

இதோ விசுவராயர் இப்போதே மேளக்காரருக்கு சொல்ல செருப்பை மாட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார்.

நடுச்சாமம்.

தருமையாநாட்டார் படுக்கையை எழுந்தார். மனசாட்சி என்பது அவர் குரல்வளையை நெறித்துக் கொன்றது. இத்தனை நாளும் அவருக்குள்ளேயே மூண்டு கனன்று எரிந்து கொண்டிருந்த ஒரு பிரச்னைக்கு தன் ரூபத்திலேயே தன்வழியிலேயே ஒரு தீர்வு கண்டாகிவிட்டது. விசுவராயர் பெண்ணால் குலைக்கப்பட இருந்த ஊரின் கௌரவம் ஒரு வழியாய் காப்பாற்றப்பட்டாகி விட்டது. பாவம். அந்த சாம்பசிவம் கமலாவைப் பெண் பார்க்க வந்தபோது அவன் மனசு என்ன பாடுபட்டிருக்கும் அந்த பெண்ணின் கமலாவின் நிலைதான் எப்படியிருந்திருக்கும்? எல்லாம் அவருக்கு தெரிந்த விஷயம்தான்.

ஒரு ஊரின் மானம் காப்பாற்றப்பட இரண்டு நெஞ்சங்களின் ஆசாபாசங்களையெல்லாம் நொறுக்கி விட்டுத்தானே முடிந்திருக் கிறது?

இரண்டு நெஞ்சங்களின் ஆசாபாசங்களைக் காட்டிலும் ஊருக்கு என்ன அத்தனை மவுசு?

ஒரு அடி முன்வைத்த காலை பின் இழுத்துக் கொண்ட விசுவராயரின் போக்கில் மாறுதல் ஏற்பட்டதற்கு இந்த மண்ணின் வாஞ்சைதானே முக்கியமாய்ப் போய்விட்டது.

மண்ணை நேசிக்கிற இவர்களுக்கு மனசை நேசிக்கத் தெரியவில்லை...?

இந்த கலிகாலத்திலும் மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிற நாகரீக காலத்திலும் இப்படியெல்லாம் மனிதர்கள் இருப்பார்களா என்ன?

சாதியில்லை சாதியில்லை என்று பாடினவன் எங்கே தூங்கிப் போனான்? கொடிபிடித்தவன் கொடியை கழற்றி விட்டு எங்கே ஓடிப்போனான்? போராட்டம் பண்ணினவன் அதையெல்லாம் கழற்றிவிட்டு சாதிச்சட்டையைப் போட்டுக் கொண்டு விட்டானா? மைக்குகளின் வழியாய் கதறின வாய்கள் எங்கே? குரல் கொடுத்த தலைவன் எங்கே?

எழுத்தைப் படித்தவனும் சித்திக்கவில்லை. பாட்டைக் கேட்வனும் சிந்திக்கவில்லை. கோஷங்கள் உணர்த்தினதை காதுக்குள் வாங்கி திருந்தியவர் எத்தனை பேர்?

பாடியதும்- பேசியதும் பேனா கொண்டெழுதியதும் விழலுக்கிரைத்த நீரெனவே ஆகிப்போய்

பொற்காலக் கனவுக்காரா மனிதன் ஜால வித்தைக் காரனடா... மந்திரக்காரனவன் மண்ணை அள்ளுவான் சர்க்கரையாக்குவான் சர்க்கரையை மண்ணாகவும் ஆக்குவான். களிமண்ணை எடுத்துப் பிசைந்து கழுதை செய்பவன் அதையே நொடியில் அழித்துவிடட்டு குதிரையாக்கிக் காட்டுவான்.

நீ படித்தபோதும் - பாடலைக் கேட்ட போதும் உன் நெஞ்ச அலைகள் துடித்தெழுந்தனவே... அந்த அலைகளையெல்லாம் எந்த கடலுக்கு அனுப்பிவிட்டாய்? உன்னை எப்படி புரிவது? உன்னிலும் உனக்குள்ளிருப்பவன் யார்?

இப்போது தருமையாநாட்டாரின் மனசை உறுத்திக் கொண்டிருப்பது இதுதான் -

முத்துக்கண்ணுவிசுவராயர் தனக்கிருந்த வீறாப்பை யெல்லாம் விட்டுவிட்டு எவ்வளவு கீழே இறங்கி வர முடியுமோ அவ்வளவு கீழே இறங்கி வந்துதானே சரணம் என்று தஞ்சம் கொள்ள ஆரம்பித்து விட்டார். சரணம் என்று வந்தவருக்கு அடைக்கலம் கொடுப்பதுதானே முறை? அந்த முறையில்தான் தானே தலையிட்டு இந்த சம்பந்தத்தை முடித்துக் கொண்டு விசுவராயர் குடும்பத்து பிரச்சனைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

இவ்வளவு இறங்கி வந்திருக்கிற விசுவராயருக்கு இனியும் தன்னால் ஒரு கெடுதல் நேர்ந்து கொண்டிருப்பது அவ்வளவாய் சரியில்லை என்றுதான் தோன்றியது இவருக்கு செரண்டு நாட்களாய் அவர் மகனைக் காணாமல் தவிக்கிற தவிப்பு தெரியாமலா இருக்கிறது? ஏதோ இந்த பெண் மாப்பிள்ளை பாரப்பதென்கிற விஷயங்களல் ஈடுபட்டுக் கொண்டிருந்ததினால் அந்தக் கவலையை

கொஞ்சம் ஒதுக்கி வைத்திருந்திருப்பார் விசுவராயர். இல்லா விட்டால் ஒரேயடியாய் சஞ்சலப்பட்டு பித்துப்பிடித்தல்லவா போயிருப்பார். இனியும் அவனை ஒரு இடத்தில் போட்டு அடைத்து வைத்திருப்பது அவ்வளவு நல்லதில்லை என்றுதான் இவருக்குத் தோன்றியது. அவனை தற்போதைக்கு தங்களுடைய பிடியிலிருந்து விடுவித்து விட்டால் வெண்ணைதிரண்டு வந்திருக்கிறபோது தாழி உடைந்த கதையாய் ஆய்விடுமோ என்று பயந்தார். மறுபடியும் அவன் ஊருக்குள் பிரச்னைகளை கிளப்புவானோ என்றும் கவலைப்பட்டார். விசுவராயர் வீட்டு கல்யாணம் நிச்சயம் ஆகிறவரை அவனை பாதுகாப்பாய் அடைத்து வைத்திருப்பதில் நியாயமும் இல்லை. ஏதோ ஒருநாள் ரெண்டு நாள் என்று மகனைக்காணாமல் பொறுத்துக் கொண்டிருக்கிற விசுவராயர் பத்துப் பதினைந்து நாளென்று மகனைக் காணாதிருந்தால் மகன் மேலேயோ ஊரார் மேலேயோ சந்தேகம் எழும்பாதா? அவர் இதற்கொரு நியாயம் தேடி போலீஸ் ஸ்டேஷனை தஞ்சம் கொள்ள மாட்டாரா... மீண்டும் இதனால் ஒரு பிரச்னை கிளம்பி நிச்சயப்பட இருக்கிற கல்யாணம் கக்கக்கூட வழி வந்துவிடுமே...

இப்போதே நாட்டாண்மைக்காரர் பெரியவீட்டு நாயக்கரைப்போய் எழுப்பி இதற்கொரு வழிகாண வேண்டும் என்று துடித்தது அவர் மனம் பெண்டாட்டிக்காரியை போய் எழுப்பி தான் நாயக்கர் வீடுவரைப் போய் வருகிறேன் என்று சொல்லிவிட்ட கிளம்பிவிட்டார்.

தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்ததுமே நாய்கள் குரைக்க ஆரம்பித்துவிட்டன. ஏன்தான் இப்படி அதுகள் திருடனைக்கண்ட மாதிரி குரைக்கிறதோ தெரியவில்லை. எவ்வளவு பெரிய தொண்டை எவ்வளவு பெரிய சப்தம்

அந்த நடுச்சாம மௌனத்திதை நாய்க்ள குரைத்து சிதிலப் படுத்துகிறது. தெருக்கோடியிலோ எங்கோ யாரோ ஒருத்தி ஒத்தைக்குரல் வைக்கிறாள். ஒத்தைப் பனைமரத்தின் சரசரப்பும் கூட காற்றைக் கிழித்துக் கொண்டு கீச்சிடுகிறது. நாய்களின் தொடர்ந்த குரைப்பால் யார் தூக்கமோ கெட்டு நாய்களை சத்தம் போடுகிறார் கண்றாவியாக,

விசுவராயர் எழுந்து கொல்லைப்பக்கம் வந்து தொலைத்தால் நாயக்கர் வீட்டுக்கு போவதைப் பார்க்க முடியும். இந்த நடுச்சாமத்தில் நாய்க்கர் வீட்டுக்கு எதற்கு போகிறார் என்று குறுகுறுத்தபடியிருப்பார். அவர் கண்பட்டு விடுவதற்குள் போய்விட வேண்டும் என்று நினைத்துக் கொள்கிறார் இவர்.

நடையில் வேகம் தட்டுகிறது. நாய்களும் குரைத்துக் கொண்டே அவரை பின் தொடர்ந்து செல்கிறது. இவர் நடையின் வேகம் கூடக்கூட அதன் குரைப்புச் சப்தமும் கூடுகிறது.

'யார் பார்த்தாலென்ன' என்ற தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நாயக்கர் வீட்டு கதவைத் தட்டுகிறார்.

நாயக்கரும் இவருடைய வருகையை எதிர்பார்த்து காத்திருந்தததுபோல் படுக்கையை விட்டு எழுந்து வந்து கதவைத் திறக்கிறார்.

"தருமு... எப்டியும் நீ வராமருக்க மாட்டன்னு தெரியும்... சாயந்தரம் கூட நானும் ரெங்கப்பிள்ளையும் பேசகிட்டோம்".

"ஆமா விசுவராயரு வூட்டு காரியத்துக்கு மெனக்கெட்டு நின்னு கிட்டிருந்ததால வரமுடியாமப்போச்சி"

"எப்புடியோ எங்கயோ பூந்து பொறப்புட்டு வந்து கண்ணாலக் காரியத்தை செட்டில் பண்ணிபுட்டே அந்த வகையில சர்த்தான்"

"விசுவராயரு அப்பவே ஒத்துவந்துருந்தா இவ்வளவு கொளப்பத்துக்கும் வளியில்லே"

"ஏய்யா அந்த கோவாலுகுச்சிராயரு பொண்ணுக்கு நம்பளால ஒண்ணும் பண்ணமுடியாது போலருக்க?"

"அதுக்கு ஆரு என்னா பண்ணமுடியும்... படுத்தவனும் கட்டிக்க மாட்டான் வேறபயலும் வரமாட்டான இவ புள்ளயப்

பெத்து வச்சிகிட்ட கொஞ்சிகிட்டிருக்க வேண்டியதுதா... அவளால பாவம் நமக்கு கோவாலுகுச்சிராயரோட பேச்சறுந்துப் போச்சி... இப்ப என்னடான்னா மனுஷன் பேச்சுக்கு ஆளம்புடாம தவிச்சிகிட்டு கெடக்காரு''.

விசுவராயரே பொண்ணுவூடு பாக்க வந்தன்னிக்கி குச்சிராயர நேர்ல கூப்ட்டும் அவர் வரலை''.

“எப்புடி வருவாரு மனசு சஞ்சலப்படாதா?”

“சரி ந்த சாம்பசிவம் பயமேல விசுவராயரு வூட்டு கண்ணாலம் முடியிற வரைக்கும் நாம ஒரு கண்ணா இருக்கணும்''.

“ஆமாமா.. ல்லாட்டி ஆள ஏச்சி நொட்டிபுடுவான்”

“தங்கவேலு சமாச்சாரமா நாம என்னா பண்றது நம்பூரு மாயாண்டிப்பயலையும் இன்னுஞ் செல எளவெட்டுப்பயலு வளையும் நோண்டிவுட்டு அவன கடத்திகிட்டு போவச் சொல்லிபுட்டோம் அவனவனும் அந்தக் காரியத்த பக்குவமா செஞ்சி நம்மகிட்ட சேதியும் வந்து சொல்லிபுட்டானுவ... என்னத் தருந்தாலும் நம்பப் பயலுவ ரொம்ப சுள்ளாப்பான ஆளுங்கதான் மச்சா”

“ல்லாட்டி தங்கவேலுப்பயல அத்தன சீக்கிரத்துக்கு அடக்கிட முடியுமா”

“சரி, இப்ப விசுவராயரு நம்மளோட ஒத்து வந்து கிட்டிருக்காரு அவருக்கும் தொரோகம் பண்ண மனசு கேக்கலை என்னா பண்றது மச்சா?”

“அது புரியாமத்தான் அர்த்தராத்திரியல எந்திரிச்சி வந்துருக்கன்... தங்கவேலுப்பயல எத்தினி நாளக்கித் தான் அடக்கிவச்சிகிட்டு காவகாத்துகிட்டிருக்க முடியும்... நாளாயிட்டே ருந்துச்சுன்னா விசுவராயரு வேற சந்தேகப்பட ஆரம்பிச்சிட மாட்டாரு?”

“ப்பமட்டும் சந்தேகப்படாமருக்காருன்னாருக்கீங்க..? பொண்ணு கல்யாணம் நிச்சியமாவப்போற குஷியில அதுபத்தி கடுசா நெனைக்காமருக்காரு... ல்லாட்டி ஆள்வச்சே தேட ஆரம்பிச்சிடுவாரு...”

“அவுருக்கு சந்தேகம் வலுக்கறதுக்கள்ள நாம்ப அந்தப் பயலை நம்ப புடியிலேருந்து விடுவிச்சிடணும்”

“அப்புடி வுட்டுபுட்டா இஞ்ச வந்து அவன் சும்மாருப்பான்னு என்னத்த கண்டோம்”.

“சும்மாருந்தான்னா பொளச்சிக்கறான் இல்லாட்டி தீத்துபுடுவோம்...”

“நா நெனச்சி முடியல நீங்களே சொல்லிபுட்டீங்களே... அதத்தவிர வேற வளியில்ல தருமு”

“என்ன மச்சா... இதுக்கெல்லாம் ஒங்களுக்குத் தெரயாத யோசனையா... தலக்கிமேல வெள்ளம் போயித்தா சாண்போனா என்னா மொளம்போனா என்னான்னு பாக்குற ஆளுநீங்க... ஒங்க கூடவே இரந்து ஒங்க கொண மணத்த தெரிஞ்சி வச்சிருக்கிற எனக்கு ஒங்க சங்கதி தெரியாது.. கொலையே நடத்திபுட்டா கூட அதையுங் கெட்டியா இறுக்கி மூடிப்புடுவீங்க நீங்க...”

“ஒரு கெட்டத செய்யிறது சொலவம் மச்சா பின்னால செஞ்சத இல்லாம பண்ணுறோம் பாருங்க அதுக்குத்தான் தெறம வேணும்”

“அந்தத் தெறமையெல்லாம் ஒங்களுக்கு இருந்த வாசிதான் நம்பூரு மேலத்தெரு மாயாண்டிக்கொத்தப்பிரியன் அவம் பொண்டாட்டி எவங்கிட்டயோ படுத்து எந்திரிச்சி வந்துட்டான்னு ரோஷம் தாங்கமுடியாம அவள தூக்குல மாட்டிவுட்டு சாவடிச்சான். அந்தக் கொலய எப்புடி தந்தரமா மறச்சீங்க. ஊருபயலுவ ஒர்த்தனும் மூச்சு வுட முடியல வாவச்சிம் பேசல”.

"ல்லாட்டி ஊர்க்காரன் அத்தனபேரையும் வேனுக்குள்ள அள்ளி போட்டுகிட்டு போயிருப்பானுவ போலீஸ்காரனுங்க".

"ஒரு நிமிஷத்துல குடும்பத்தகறாரால அவ தானா தூக்கு மாட்டிகிட்டான்னு கதைய மாத்தி ஊர நம்பவச்சதோட அவளோட பெத்தவுங்களையும் வரச்சொல்லி அத இதப்பேசி சரிப்பண்ணி செத்த ஈரம் காயிரத்துக்குள்ள வெரவள்ளிப்போட்டு கொளுத்தி புட்டு வந்துபுட்டோம் ல்லாட்டி ஊரு நாறிப்போயிருக்கும்"

"சரி அதவேற ஏ இப்ப கெளப்புற... ஆவ வேண்டிய சோலியத்தான் பாக்கணும் ப்ப"

"தங்கவேலுப்பயல இப்ப வுட்டுபுட்டா சங்கட்டமா போயிரும் அவங்கட்டிக்கெடக்குற மாடு. அவுத்து வுட்டா நம்ப மேலயே பாயுவான்"

"ஆமாமா வாஸ்தவந்தான்.. இன்னும் ரெண்டு நாள்ள தங்கச்சிக்காரியோட நிச்சயம் முடிஞ்சிப்போயிரும் அதுக்கு பின்னாடி அவன ஊருக்குள்ள உடுவோம் ப்ப உட்டுபுட்டா நிச்சயத்தையே நிறுத்துனாலும் நிறுத்திபுடுவான் அப்புடிப் பய அவன்"

"விசுவராயருகிட்ட நம்பளப்பத்தி சந்தேகம் எளும்பாதபடி யும் அவன் நெனப்பு வராதபடியும் நாம சேந்து அவுரு புத்திய மாத்திபுடணும்"

"அதுதாய்யா முக்கியம்"

"ந்தப்பாருங்க தங்கவேலுப்பயல சாமான்ய ஆளுன்னு நெனச்சிபுடாதீங்க... பொல்லாப்பயய்யா... தங்கச்சி கல்யாணம் நிச்சியமே ஆனாக்கூட தங்கச்சிய ராவோடு ராவா தூக்கிகிட்டுப் போயி அந்த சாம்பசெவம் பயலுக்கு கட்டிவய்க்க மாட்டான்னு என்னத்தக் கண்டோம்... ந்த விசியத்துல அவன் அப்பன் ஆய்யக்கூட எதுப்பாய்யா"

“அப்பறம்?”

“நாம்பகூடி நிச்சியம் பண்ணிவச்ச கல்யாணம் மாறிப்போச்சுன்னா நாம்பல்லாம் வாகரக் கள்ளன்னு நெஞ்சில தட்டி சொல்லிக்கமுடியாமப் போயிரும்... அடுத்த வூருக்காரன் நம்பளப்பாத்து துப்பிபுடுவான் துப்பி”

“நம்பளுக்கு வாகரத்தான் முக்கியம்.... வாகரக்கி ஒரு களங்கமுன்னா நாம்ப எல்லாரும் நாண்டு கிட்டுத்தான் சாவணும்”.

“அதுக்குத்தான் சொல்றன் அந்தப்பய மீறுனா நாம்பளும் மீறி புடணும்... விசுவராயரு பொல்லாப்பு வந்தாலும் சர்த்தான்”

“மெதுவாப்பேசுய்யா பக்கத்துல கிக்கத்துல நின்னு எவனாச்சிம் ஒட்டுக் கேக்கப்போறான்”

“ஒட்டுக்கேட்டுபுட்டு ஆர்மசுரை புடுங்குவான் சும்மாத்தான் குசுவுட்டு பயமுறுத்தாதீங்க”

“ந்தப் பாருங்க கொலகில மாறி காரியத்துலல்லாம் எறங்குனம்னு நெனச்சா மாயாண்டிப்பயலக் கொஞ்சம் சரிப்படுத்தி வய்க்கணும் அவந்தான் இதுக்கெல்லாம் துணிஞ்சவன்”

“ரெங்கபுள்ளைக்கோ மத்த ஆளுங்களுக்கோ இது தெரியவாணாம்... மாயாண்டிக் கொத்தப்பிரயன கையில போட்டுகிட்டு நாம ரெண்டு பேருந்தான் இதக் கூடியிருந்தே செய்யணும்... சமயம் சரியாருந்தா மாயாண்டிய கொலபண்ணச் சொல்லிபுட்டு பலிய சாம்பசெவத்துமேல தூக்கிப் போட்டுபுட்டு மாயாண்டிய நெராபராதியா ஆக்கிபுடணும்”

“ஒமருக்குகூட நல்ல யோசனையெல்லாம் வர்தே” நாயக்கர் சிரித்துக் கொள்கிறார். அதற்குள் எத்தனை அர்த்தங்கள் மண்டிக் கிடக்கிறதென்று நாட்டாருக்குத் தானே புரியும். பசுத்தோல் போர்த்திய புலியொன்று சொல்கிறார்களே அது நாயக்கருக்கும் தனக்கும் தான் சரியான பதம் என்று பெருமையாக நினைத்துக் கொள்கிறார்.

இதற்குள் கால்கள் ரெண்டும் சூவேறி விடுகிறது... கால்களை அப்படியும் இப்படியுமாய் நீட்டி சூவேறினதை சரிப்படுத்திக்கொண்டு,

"மச்சா, வரட்டா காலுகூட சூவேறிப்போச்சி... நெறையா பேசிப்புட்டோம்... வூர்ல ஒங்க தங்கச்சி வேற இன்னும் மனுஷனக் காணுமேன்னு பொலம்பி தவிச்சிகிட்டு கெடப்பா" என்கிறார்.

"சரிசரி போங்க"

அவர் எழுந்து கொள்கிறார். எழும்ப இருக்கும் இன்னொரு பிரச்னைக்கு சரியா தீர்வு கண்டுவிட்ட நிம்மதி ஒருபக்கம் இருந்த போதிலும் அந்தத்தீர்வுக்காக தாங்கள் செய்யப்போகிற காரியம் உண்மையிலேயே நடுக்கத்தைத் தான் உண்டுபண்ணி விட்டது. பொம்பள செறுக்கிவளால ஊருக்குள்ள என்னவெல்லாம் வர்துபாரு என்று முணுமுணுத்துக்கொண்டே நடக்க ஆரம்பித்தார்.

இப்போதும் கூட நாய்கள் குரைத்துக்கொண்டே அவரைத் துரத்தி வருகின்றன. அவர் வீட்டுக்கு வந்து படுத்த பின்னாலும் கூட தெருவில் நாய்க்குரைப்பு சப்தம் விடாமல் கேட்டுக் கொண்டே தானிருக்கிறது.

அவருக்கு லேசில் தூக்கம் வரவில்லை. மனைவிக்காரி அவரைச் சீண்டிப் பார்க்கிறாள். அவர் அலுத்துக் கொள்கிறார். ஒரு கொலை அனாவசியமாய் நடக்க அந்தத் தங்கவேலுப்பயல் எடம் குடுக்காமல் இருக்கணுமே... தாம் பாட்டுக்கு எது எக்கேடு கெட்டுப் போவட்டுமுன்னு கெடந்துட்டா ஏ நாம இப்படியெல்லாம் யோசிக்கிறோம்.

"என்னங்க....

"ம்".

"வல்ல?...

"ச்சி...

"யா?...

"ஒனக்கு ஒண்ணும் புரியாதுடி... மனுச நெலம தெரியாம நடந்துக்குறப்பாத்தியா இஞ்ச நா செய்யாதத செஞ்சிட்டு அவதிப் பட்டுகிட்டிருக்கன்".

அவள் பேசவில்லை.

வெகு நேரம்வரை படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தபடியே இருக்கிறார் அவர்.

**தடித்தடியாய் ஆம்பிளைகள் பொம்பிளைகள் எல்லாரும் வில் வண்டியிலிருந்து இறங்கி வருகிறார்கள். வெள்ளை சள் ளைக்கோ பட்டு பளபளப்புக் கோ ஒன்றும் குறைச்சலில்லை?**

# 16

இன்றைக்குத்தான் கமலாவுக்கு நிச்சயதார்த்தம்.

முத்துக்கண்ணுவிசுவராயரும் பூரணியும் ஓடி ஓடி வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அவரைப் சேர்ந்த சொந்தக் காரர்களும் உடன்பங்காளிகளும் மற்றும் தருமையா நாட்டார் பெரிய வீட்டு நாயக்கர் ரெங்கப்பிள்ளை கோனார் போன்றோர்களும் விசுவராயர் வீட்டில் கூட ஆரம்பித்துவிட்டனர். வீட்டுக்கு முன்பதாய் ஜனங்கள் குந்திக் கொள்ள தோதாய் சின்னபந்தலாய் போட்டிருந்தார் விசுவராயர். இதையன்றி ஆலோடியிலும் வராந்தாவிலுமாயும் ஜமுக்காளம் விரித்து வைத்திருந்ததோடு, மாப்பிள்ளை வீட்டார் வந்தவுடன் உபசரிக்கத் தேவையான சந்தனம், வெற்றிலை, சீவல் சர்க்கரை பழமென்று ஏகமாய் தயாராகவே தாம்பூலங்களில் வைக்கப்பட்டிருந்தன.

விசுவராயருக்கு தங்கவேலு இல்லாதது என்னவோ போலிருந்தது. அவனைக் கலக்காமல கொள்ளாமல் இந்த நிச்சியம் நடக்கப்போகிறதே இதற்கு அவன் சம்மதிப்பானா...? என்ன இருந்தாலும் வீட்டுக்கு மூத்தப்பிள்ளையை கேட்காமல் காரியத்தில் இறங்கினது தப்புதான் என்று நினைத்துக் கொள்கிறவர் அவன் எங்கப் போயிருப்பான் என்று மனம் கலங்கவும் செய்கிறார், பூரணிக்கும் அப்படித்தான் மகளுக்கு நிச்சியம் ஆகப்போகிறது

என்கிற மகிழ்ச்சி ஒருபக்கம் இருந்தபோதிலும்,தங்கவேலு எங்கபோனான்னு தெரியலையே என்று அவனை நினைத்துக் கொள்ளும் போதெல்லாம் மற்றவர்கள் பார்க்காதபடிக்கு சிணுங்க ஆரம்பித்தாள்.

கமலாவுக்கு நடக்கப்போகிற நிச்சயக்காரியங்கள் பிடித்திருக்கிறது என்றோ பிடிக்கவில்லை என்றோ சரியாக நிர்ணயித்துச் சொல்லமுடியாத ரெண்டுங்கட்டான் நிலைமையாக இருந்ததுதான் வாஸ்தவம்.

சாம்பசிவம் எப்படியும் தன்னைச் சந்தித்து விடுவானென்றும் தன்னை கல்யாணம் செய்துகொள்ள ரகசியமான ஏற்பாடொன்று செய்வானென்று அவள் நம்பியிருந்த நம்பிக்கைக ளெல்லாம் தவிடுபொடியானது போல் அவன் செய்கைகள் இருக்கின்றன. அவன் எப்பவாவது தெருவில் போகும்போதும் கொள்ளும்போதும் கூட வீட்டை அன்னாந்து பார்க்க பயப்பட்டு போகிறான். என்ன இருந்தாலும் ஒரு ஆம்பிள்ளைக்கு எதற்காக காதலிக்க வேண்டும்... காதலித்துவிட்டு ஊருக்குள் அவப்பேரை ஏற்படுத்தினதோடு ஒருத்தியை ரெண்டுங்கெட்டானாக நட்டாற்றில் விடவேண்டும் என்று கோபமாக நினைத்துக் கொள்கிறாள்.

ஆனாலும் சாம்பசிவத்தை எப்படியும் ஒரே ஒரு முறையாவது சந்திக்க வேண்டும் பேசவேண்டும் கூடுமானால் அவனை மணம் செய்துகொள்ள வேண்டும் - அல்லது அவனுடன் எங்காவது ஓடிப்போய் கல்யாணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தவேண்டும் என்கிற ஆவல் பொங்கிப்பொங்கி வருகிறது.

இப்போதெல்லாம் அவளுக்கு அண்ணன்காரனை நினைத்துக் கொள்கிறபோது அழுகை உடைத்துக்கொண்டு வருகிறது. அதுமட்டும் இருந்திருந்தால் இந்த நிச்சயத்தை நடக்க விட்டிருக்குமா? இப்போதும்கூட ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை நிச்சயமே நடந்தாலும் கூட கல்யாணம் நிச்சயம் நடக்கும் என்பதற்கு என்ன உறுதியிருக்கிறது... கள்ளகத்தைப் பொறுத்தவரை மணையில குந்துன பொண்ணு மாத்துப்பட்டு போறதுண்டு அப்படி தனக்கும் நேருமோ... நேர்ந்தால் எத்தனை

சந்தோஷம் என்று நினைத்துக்கொள்கிறவள், ‘அண்ணன் இருந்தா ஊரே எதிர்த்தாலும் வெட்டியே போட்டாலும் கடைசி சொட்டு ரத்தம் இருக்கவரைக்கும் ஊரையை எதுக்கும்... இந்த கல்லுளிமங் கனாட்டம் பயந்து கெடக்காது’ என்று நினைத்துக் கொள்கிறவள், அது ஊர்லருந்தா வீம்புகீம்பு வரும்ன்னு ஊரு ஆளுங்க கெளப்பி கிட்டி போயிருப்பாங்களோ என்றும் நினைக்கிறாள்.

அப்பாகூட நேத்து சாய்ந்தரம் அம்மாவிடம், சாமத்துல தருமையாநாட்டான் நாயக்கன் வூட்டுக்கு எந்திரிச்சி போனவன் ரொம்ப நேரஞ்செண்டுதான் வூட்டுக்கு வந்தான் பூரணி. அந்நேரத்துல நாயக்கன்கிட்ட என்ன பேச்சுன்னுதான் தெர்யல... நம்ப பயலகியலகெளப்பிகிட்டு போயிருப்பானோன்னு எனக்கு ஒரு சந்தேகம் இருந்துகிட்டு இருக்கு... நானும் நம்பபொண்ணு நிச்சியம் நடக்கட்டும் இப்ப ஒண்ணும் கெளாட்டு பண்ண வேண்டாம்ன்னு பொறுமையாருக்கன் என்று சொல்லிக் கொண்டிருந்தார் அவர் நினைக்கிறதும் ஒன்னாருக்கே என்றும் நினைத்துக் கொள்கிறாள்.

ஊரிலிருந்து வந்திருக்கிற சொந்தபந்தங்கள்கூட நிச்சயதார்த்த விசாரிப்பை விட்டுவிட்டு, “எங்க தம்பியக் காணும் எங்க தம்பியக்காணும்” என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிற தோரணையில் ஏற்கனவே துக்கமாய் இருக்கிற அவர்களுக்கு மேலும் மேலும் துக்கத்தை ஏற்படுத்துகிற மாதிரியிருக்கிறது. அவர்களுக்கு பதில் சொல்வதற்குள் போதும் போதும் என்றாய் விடுகிறது.

இப்போது வாசல் பக்கம் ஒரே பரபரப்பு மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்துவிட்டார்கள் போல.

“எல்லாரும் வாங்க... எலலாரும் வாங்க”. என்று ஆனந்தம் பொங்கப் பொங்க கூப்பிடுகிறார்கள் வரவேற்பு ரொம்ப பலமாய் இருக்கிறது.

வீட்டுக்குள் இருந்தபடியே பார்வையை தெருப்பக்கம் திருப்புகிறாள் கமலா.

தடித்தடியாய் ஆம்பிளைகள் பொம்பிளைகள் எல்லாரும் வில் வண்டியிலிருந்து இறங்கி வருகிறார்கள். வெள்ளை சள்ளைக்கோ பட்டு பளபளப்புக்கோ ஒன்றும் குறைச்சலில்லை? அவர்கள் வரும்போதே ஆளையேத் தூக்குகிறவாசனை கமாளிக்கிறது. பெண்களின் கழுத்துகளில் புடிபுடியாய் தங்க நகைகள் டாலடிக்கின்றன!

எண்ணெய் வழிந்துகொண்டு என்னதான் அடித்து அடித்து, துவைத்தாலும் காவிபோகாத வேட்டி கட்டிக்கொண்டு 'ம்மே' யென்று கறுப்பு கறுப்பாய் அழுக்கு வழிகிற நோஞ்சான் கள்ளர்களில்லை இவர்கள். சைப்பிள்ளை மார்கள் மாதிரியோ பிராமணர்களுக்கு அடுத்த ரகத்தில் சொல்லும்படியாய் உடம்பும் மினுமினுப்பும் வெகு அழகாய் தோன்றுகிறது. வாகரை இப்படித்தான் இருக்கும்போல....

'வர்றா பாருங்க பொம்பளைங்க பாப்பாத்தி கணக்கா' சொல்லாத வாய் எது?

'சும்மாச்சொல்லக் கூடாது தருமையா நாட்டாரை சூரப் போர்வளிதான்... புடிச்சாலும் புடிச்சார் புளியங் கொம்பாய்... விசுவராயருக்கு ஏத்த சம்பந்தம் தான்...' சப்புக்கொட்டாத நாக்கு இல்லை.

"அதுதான் ஓ மாமனா... ந்தால தடிச்சபொம்பளைக்கும் பக்கத்தாப்ல வர்தே அதுதான் ஓ மாமியா ஆயி" அத்தனை அலமலப்பிலும் கமலாவிடம் சொல்லிக்கொண்டிருப்பது பூரணிதான்.

தட்டுதட்டாய் வீட்டுக்குள் சீர் வருகிறது. பருசச் சீர். சர்க்கரை, வெத்திலை, பழம், பூ, பட்டு இன்ன பிற இத்யாதிகளுடன் சீர் ரொம்ப லம்தான் போல அவைகளை வைப்பதற்கு வீட்டிற்குள் இடம்தான் போதவில்லை.

கமலாவுக்குத் தோன்றுகிறது - அப்பா நெனச்ச மாறி சூத்து பெருத்த சம்பந்தம்தான் சட்டென்று ஒரு பரவசமும் சூழ்ந்து

கொள்கிறது அவளுக்கு. மாப்பிள்ளை வந்திருப்பாரோ நெஞ்சில் தோன்றிய நப்பாசை அச்ஷணமே விடுபட்டு போயிற்று கள்ளகத்தில் நிச்சயத்துக்கெல்லாம் மாப்பிள்ளைப் பையன் வருகிற பழக்கமில்லை மணையில் குந்தி தாலி கட்டும்போது மட்டும் கண்ஜாடையில மாப்பிள்ளையைப் பார்த்தால்தான் ஆயிற்று.

யாருக்குமே இப்போது தங்கவேலுவைப் பத்தினி கவலையில்லை. எல்லாருமே காரியத்தில்தான் மும்முரமாய் இருக்கிறார்கள். சந்தனம் வெத்திலை பாக்கு - சரக்கரை பழமென்று எல்லாருக்கும் விநியோகிக்கப்படுகிறது.

ஆம்பிளைகளெல்லாம் தெரு வராந்தாவிலும் ஆலோடி யிலும் பந்தலிலுமாய் குந்திக்கொள்ள பெண்டுகள் மட்டும்தான் சீர்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தவர்கள். அவர்களுக்கும் வீட்டுக்குள் ஜமுக்காளம் விரித்து ஆம்பிளைகளுக்க செய்கிற சகலவிதமான மரியாதைகளும் செய்யப்படுகின்றன.

பூவின் மணம் நெஞ்சைக் கிள்ளுகிறது. யார் தலையில் வைத்த பூவோத் தெரியவில்லை.

இந்த ஊர் இளவெட்டுப் பையன்களுக்கு கூட்டத்தில் வந்த இளம் பெண்களைப் பார்த்ததும் நெஞ்சை என்னமோ செய்கிறது. என்னமாய் உடுத்துகிறார்கள் பட்டணத்து நாகரீகப் பெண்கள் மாதிரி.

நைசாய் ஒருபயல் அந்தப் பொண்ணு ஜோர்டா என்று இன்னொருத்தன் காதுக்குள் ஊதுகிறான். அதை அவனும் ஆமோதிக்கிறான்.

கமலாவின் மனசு சிதறுகிறது. அவர்கள்மீது ஒரு பற்று மனசின் ஒரு பக்கத்தில் லேசாய் துளிர்விடுகிறது. அப்படி ஆசையை மனசிலிருந்து முறித்துக் கொள்ள முடியாதபடிக்கு அது இருக்கிறது. பாவம் அந்த சாம்பசிவம் இவர்களையும் இவர்களின் ஆடம்பரங்களையும் பார்த்து வீட்டில் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கின்றானோ தெரியவில்லை.

ஜமுக்காளத்தில் குந்தினதுமே ஜனங்களிடமிருந்து நய்யாண்டி நமுளுக்கெல்லாம் ஒன்றும் குறைச்சலில்லாமல் பேச்சு வருகிறது. அப்படியே அரசியலையும் இஷ்டத்துக்கு விளாசித் தள்ளுகிறார்கள். கட்சித்தலைவர்களின் ரகசியங்கள் அந்தரங்க பிரச்னைகள் எல்லாவற்றிலுமாய் பூந்து விளையாடுகிறார்கள். நாளை இதுதான் நடக்கும் என்று அழுந்த பேசுகிறார்கள். "குச்சிக் காரிமவன் அதுல கொள்ளையடிச்சான்" தேவ்டியாமவன் இதுல கொள்ளையடிச்சான் என்று வேறு தடித்தனமாய் பேசுகிறார்கள். தர்க்கத்தின் நடுவில் பூந்து ஒருத்தர், "என்னாத்துக்கப்பா நாக்கப் புடுங்குறாப்ல பேசிகிட்டிருக்கீங்க... உப்புக்கு ஆவப் போவுதா புளிக்கு ஆவப்போவுதா நம்ப பொளப்ப நாம்பத்தான் பாத்தாவனும்.. ல்லாட்டி நாறிப்போயிரும் ஆவவேண்டிய சோளியப்பாக்காம..." என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஒருத்தர் பந்தாவாய்கரைபோட்ட வேஷ்டி கட்டிக்கொண்டு பவுடர் மணக்க தினபேப்பரை கையில் வைத்துக்கொண்டு அரசியல் ரீதியாக யார் என்ன சொன்னாலும் விடமாட்டேனென்று விளாசிக் கொண்டிருக்கிறார், இந்த மாதிரி இடத்திலெல்லாம் ஒருத்தர் பேப்பர் வைத்திருந்தால் 'பெரிய மனுஷன்' ஆய்விடுவார். ரொம்ப புத்திசாலி போலவும் நினைத்துக் கொள்வார்கள், 'பேப்பர்ல என்னா தம்பி போட்ருக்கான்?' 'தண்ணி எத்தினி அடி?' 'அரசியலெல்லாம் என்னா சொல்லுது?' 'கடன ஒடன தள்ளிக்கானா?' 'வெலவாசி எப்டி?' 'அட நீ ஒண்ணுய்யா பொளப்பத்த கேள்வியெல்லாம் கேட்டுகிட்டு பேப்பர்ல என்னா போட்டிருப்பான் தெரியாது... தெருவுல போன பொம்பளய எரும மாடு மோந்துபாத்துச்சுன்னு எளுதிருப்பான்' இப்படி நச்சா பிச்சாவாய் பேசிக்கொண்டிருப் பார்கள். பேப்பர் வாங்கினவருக்கு ஏண்டா பேப்பர் வாங்கினோமென்றிருக்கும். இந்த மாதிரி விசேஷ இடங்களுக்கு வரும்போதெல்லாம் இனிமேல் பேப்பர் வாங்கி வரக்கூடாது என்று நினைத்துக் கொள்வார்.

வீட்டிற்குள்ளிருந்த பெண்டுகளெல்லாம் கமலாவை சுற்றி கூடிவிட்டார்கள். ஏதோ பத்து இருபது வருஷ பழக்கம்போல ரொம்ப அன்யோன்யமாய் பழகிப் பேசினார்கள். அவள் ஏற்கனவேயே பின்னியிருந்த கூந்தலை அவிழ்த்து மறுபடியும்

பின்னி விட்டார்கள். (இது எதற்கு தெரியுமா அவள் ‘பொய்முடி’ வைத்து தலைபின்னியிருப்பாளோ என்ற சந்தேகத்தின் பேரில்தான்) பூ வைத்தார்கள், பொட்டு வைத்தார்கள், புடவை கட்டி விட்டார்கள், நடக்க விட்டார்கள் இல்லாத கேள்விகளெல்லாம் கேட்டு நச்சரித்து விட்டார்கள். கமலாவுக்கு ரொம்ப தர்ம சங்கடமாய் இருந்தது இதெல்லாம்.

வராந்தாபக்கமிருந்து நாலைந்து இளவெட்டுப் பயல்கள் எக்கி எக்கி வீட்டுக்குள் நோட்டம் போட்டார்கள். புதுப்பெண்ணைக் காணத்தான் அத்தனை அவசரம் எதுக்குத் தம்பி எக்கி எக்கிப் பாக்குறீங்க... கெணத்து தண்ணிய வெள்ளமா அடிச்சிகிட்டு போயிரு... பொண்ணு காலு கும்புட வர்றப்போ நல்லா முளுச்சி முளுச்சி பாருங்களேன் ஆரு வாண்டாங்கப்போறா என்று சொல்லிக் கொண்டிருந்தார் ஒருத்தர்.

காரியங்கள் வேகவேகமாய் நடந்து கொண்டிருந்தன. விசுவராயர், ‘ரொம்ப ரொம்ப பெரிய எடம்தான்’ என்று நினைத்துக் கொண்டவர், நடுவில், ‘நம்பபொண்ணு அவன காதலிச்சா இவன காதலிச்சான்னு ஆரும் வாவுட்டு பேசிறக்கூடாதுடி மவமாயி...’ என்றும் கலங்கிக் கொண்டிருந்தார். இதெல்லாவற்றையும் அமுக்கி விடுவதற்குத்தான் பெரியவீட்டு நாயக்கரும் தருமையா நாட்டாரும் பக்கத்திலிருக்கிறார்களே என்ற தெம்பும் வடவே வந்தது.

ரெங்கப்பிள்ளைகோனார் அக்காடாவென்று ஒரு மூலையில் போய் பதுங்கிக் கொண்டார். நிச்சயத்திற்கு வந்திருக்கிற மேளத்தை ரசிக்கத்தான் போல.

மேளம் வாசிக்க ஒருத்தர் நாகஸ்வரம் வாசிக்க ஒருத்தர் ஒத்துஊத ஒருத்தர் சிஞ்சக்கா போட ஒருத்தர் ஆர்மோனியம் வாசிக்க ஒருத்தர் தலையாட்ட நூறு பேரிந்தும் இதை எவன் ரஸிப்பானென்ற திமிரில் எல்லா பேரும் அரசியல் பேசவோ சொந்தபந்தம் பேசவோ இருக்க அந்த நாகஸ்வரம் வாசிக்கிறவர் எப்பாடுபட்டாவது அவர்களின் கவனத்தையெல்லாம் தங்கள் பக்கம் திருப்பி விடுகிறதென்ற தீர்மானத்தில் வாசிக்கின்றார் மென்னியை பிடித்துக் கொண்டுதான்.

என்னமோ ரெங்கப்பிள்ளைகோனார் மட்டும் ரஸனை புரிந்தவர் மாதிரி தாளத்தை தொடையில் போட்டு ‘ஆஹா ஆஹா’ வென்று தலையை ஆட்டிக் கொண்டே இருக்கிறார். மற்றவர்களெல்லாம், “என்னத்தைக் கண்டு ஆஹா போடுராரு... பயித்தியம் கியித்தியம் இவுருக்கு புடிச்சிருச்சான்னு பாருங்க” என்கிறார்கள். அவர்கள் எனத்தனை கிண்டல் பண்ணின போதிலும் தான் தலையாட்டலை நிறுத்தப் போவதில்லை என்கிற மாதிரி ரெங்கப்பிள்ளை தலையை ஆட்டுகிறார். அந்த ஒருத்தர் தலையாட்டலே தாங்கள் வாசிக்கபோதுமென்று மேளக்காரர்கள் வாசிக்கிறார்கள்.

அவர்கள் தப்பித்தவறிக்கூட ‘ரஸனை’ வந்துவிடக் கூடாது யாருக்கும் என்கிற தீர்மானத்தில்தான் வாசித்துக் கொண்டிருக் கிறார்கள். வாசிப்பு கொஞ்சமாவது யாரையும் வசப்படுத்த வேண்டுமே... மஹூம் அது இந்த யுகத்துக்கு இல்லைசாமி என்றுதான் வாசிப்பு இருக்கிறது.

மேளக்காரருக்கு வயித்தைக்காணோம். விலா எலும்புகள் தான் அடிமாட்டுக்கிருக்கிற மாதிரி இருக்கிறது. பஞ்சடைந்த தலைமயிர் கிழடுதட்டிப்போன முகம் காதுகளில் கடுக்கன் மினுக்கலுக்கும் நெற்றியில் சந்தன ஜவ்வாது பொட்டுக்கொன்றும் குறைச்சலில்லை சட்டையில்லா உடம்பு, கண்கள் ரொம்பத்தான் உள்வாங்கிக் கிடந்ததில் கன்ன எலும்புகள் துருத்திக்கொண்டு தனியாய்த் தெரிகிறது. தவுலை மடியில் வைத்துக் கொண்டு பாச்சா காட்டுகிறார். ‘டும் டும்.. டுடும் டுடும்... டும்டும்... டுடும் டுடும் டும்டும் டுடும் டுடும் டுடும்... டும்டும்...டும் டக்கா டும் டக்கா டும் டக்கா டுடும்..டுடும்...டும்டும் டுடும் டுடும் டும் டும் டகடகடகடக டகடக டும்டும் டுடும் டுடும டும் டும்...’ மேளக்காரர் உடம்பைப் போட்டு ஆட்டுகிற ஆட்டில் சிஞ்சக்கு ஆசாமிக்கு சுராத்து கிளம்பிப் போய் - ச்சை... ஞ்...சக்கு...ச்சை... ஞ்...சக்கு... ச்சை...ஞ்...சக்கு என்று தாளத்துக்கு தட்டுகிறாரா மேளத்துக்கு தட்டுகிறாரா என்று புரியாமல் அவர்பாட்டுக்கு இஷ்டத்துக்கு சிஞ்சா போடுகிறார்.

‘ஹார்மோனி வாசிக்கிறப்பையன் ரொம்பப் பெர்டுசு. அஞ்சாவதோ ஆறாவதோ படிக்க வேண்டிய பயலைக் கெடுத்து

கூட்டிக் கொண்டு வந்து வாசிக்கச் சொன்னால் சரியாய் பெட்டிபோடுவானோ? ' அவன் இசகு பிசகாகவிட்டுவிடுகிற சமயத்தல் சிஞ்சக்கு ஆள் கண்களால் அதட்டி உருட்டி சரியாய் போடச் சொல்வார் - அப்படியும் சரிவராத பட்சத்தில் சடாரென்று சிஞ்சக்கை நிறுத்தி விட்டு அவர் பெட்டி போட்டு காட்டுவார். இந்த மாதிரி சமயத்தில் மேளக்காரர் எரிச்சலாகி சிஞ்சக்கு காரனைக்கிற ரெங்கப்பிள்ளைக்கு அப்போதுதான் அவர்கள் என்னவோ தவறு செய்கிறார்கள் என்று தோன்றும். அந்த ஒத்து ஊதுகிற ஆசாமிக்கு தான் ஒரு பாடுமில்லை என்று ரெங்கப்பிள்ளை நினைத்துக் கொள்வார் அவர்பாட்டுக்கு ஊஊஊஊஊ... ஊஊஊ... வென்று சின்னப்பிள்ளை அழுகிற மாதிரி விட்டு விடடு ஊத வேண்டியது தானே... நம்பள ஊதச் சொன்னாக்கூட ஊதிப்புடலாம் என்று வேறு நினைத்துக் கொள்வார்.

நாயணக்காரர் படு ஜோக்காளி போல, போட்ட சட்டையை கழற்றாமலேயே வாசித்துக் கொண்டிருக்கிறார். வத்தல் உடம்பு. யாராவது நோஞ்சான் ஆசாமியை நினைவுபடுத்திக் கொண்டால் போதும். ஆள் கொஞ்சம் கறுப்பு ஊதி ஊதி கூம்பிப்போன உதடும் தாடையும், விபூதிப்பட்டை சந்தனப்பொட்டு சமாச்சாரத்துக் கெல்லாம் குறைச்சலில்லை. முழுக்கை சட்டையை முக்கால் கை சட்டையாய் போட்டிருக்கிறார் சட்டையைக் கழற்றி விட்டால் சத்தியமாய் குந்திப்பாக்கக்கூட சகிக்காது மேளக்காரர் மாதிரியே இருப்பார் ஏத்தி சீவி நேர் வகிடெடுத்து இதுக்கொன்றும் குறைச்சலில்லை. கல் வைத்த மோதிரம் போட்டிருக்கிறாராம் காட்டி காட்டி ஊதுகிறார்.

ரெங்கப்பிள்ளை என்னவோ நாயணக்காரர் காதுக்குள் தேன் பாய்கிற மாதிரி ஊதப்போகிறார் என்று நினைத்து குந்திக்கிடக்கிறார்.

அவர் பாருங்கள், 'ப்பிப்பிப் பீஈஈ... ஈஈ...பிப்... ப்பீப்பீ..ஈ ப்பிப்பிப்பீபீ ஈஈ...' என்று ஒரு ராகத்தை எழுப்ப ஆரம்பம் செய்வார். அதற்குள் அவருக்கு என்ன தோன்றிவிடுமோ தெரியாது நாயணத்தை வாயிலிருந்து பிடுங்கி வைத்துக் கொண்டு தாளத்தை ரஸிக்கிற மாதிரி ஒரு பத்து நிமிஸத்துக்கு விரல்களை அப்படி இப்படி ஒடித்தும் நீட்டியும் காட்டிக்கொண்டே தலையை ஆட்டுவார்...

மேளக்காரர் இடைவெளியை நிரப்ப அவர் மறுவ குழலெடுத்துஊதுகிறவரை டுடும்...டுடும் டும் டுடும்... டுடும் டுடும். டக்கடகடகடகடகடக டுடும் டுடும் டுடும்டுடும் மென்று தட்டி மறுபடி சாந்தமாகி மேளத்தை அழுத்தி ட்டக்க... ட்டக்க... ட்டக்க... ட்டக்க... ட்டக்க வென்று மெதுவாய் தட்டிக் கொண்டே போய் மறுபடி சீறி டுடும் டுடும் டுடும்...டுடும் டுடும்டுடும் மேன்று ஆவேசம் வந்தவர் மாதிரி உடம்பைப் போட்டு திருகி கிறுக முடிக்க வேர்வை சளசளவென்று ஊத்திப்போகும். இப்போதாவது நாயணக்காரருக்கு மனசு வர வேண்டாம்... இன்னமும் கல்லுப் பிள்ளையார் கணக்காய் குந்திக்கொண்டு விரல் காட்டி தாளம்போட, மேளக்காரர் வெகு கடுப்பாகி உருட்டி உருட்டி விழித்துக்கொண்டே மேளத்தை அழுத்தி தட்டி அவர் நாயணத்துக்காக காத்துக் கொண்டிருப்பார். இப்போதுதான் நாயணக்காரர் நினைப்பு வந்தவராய் மறுவ கொஞ்சம் சுராத்தோடு... ப்பீ... ஈ... ...ஈஈ... பீய... ப்பீ ...பீய்... என்று வாசித்த மறுபடியும் என்னமோ பெருசாய் வாசித்துக் கிழித்த மாதிரி நாயணத்தை வாயிலிருந்து பிடுங்கிவிட்டு விரல்களால் தாளம்போட.... மறுபடியும் மேளக்காரருக்கு கோபம் வந்து சீறுகிறார்... டுடும் டுடும் மென்று, மேளக்காரருக்கு ஦ெண்டு கயிலும் இந்த ஆசாமி யோசித்து யோசித்து ஊதுவார் - உச்சகட்ட ராகம் ஒன்றை வாசக்க தொடுகையில்தான் மூச்சு வாங்கிப் போய் நாயணத்தை வாயலிலிருந்து பிடுங்கி விடுவார். உச்ச ராகத்தில் கராத்துக் கிளம்பினவனெல்லாம் மறுபடி அமுங்கிப் போய் விடுவார்கள். மறுபடியும் உச்சராகம் வரும்போது இந்தத் தடவை சமாளித்து விடுவாரென்று பிராக்கு பார்த்தவன் அரசியல் பேசினவன் ஊர்கதை பேசினவன் எல்லாம் சூத்தைக் கிளப்பிக் கொண்டு கேட்கத் தயாரா கையில்தான் மறுபடியும் அந்த நாயணக் காரர் பழைய குருடி கதையாகிவிடுவார். ரஸனை வந்தவனெல்லாம் மயித்தைப் பிய்த்துக்கொண்டு அழ வேண்டியதுதான். அந்த மேளக்காரர் என்னமோ பெருசாய் அவர் வாசித்துக் கிழித்துவிட்ட மாதிரி உடம்பைப்போட்டு ஆட்டி கீட்டி முறுக்கி கிறுக்கி... தவுலை ஒடிக்கப் பார்ப்பார். சத்தியமாய் இதுக்கு உசிர் கொடுப்பவர் மேளக்காரர்தான்... நாயணக் காரரை நம்பியிருந்தால் நிச்சயத்திற்கு வந்தவரெல்லாம் ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான்.

“விசுவராயரே என்ன ஓய் மேள மிது. கல்யாணத்துக்கு இப்படி மேளம் வச்சீர ஒம்மையே அடிக்க வுட்ருவேன்”.

“அட நீங்க ஒண்ணு மச்சா... நிச்சியத்துக்கு ஜதமோளமா, வய்க்க முடியும்... ஒன்ரையணா மேளம்தான் வய்க்கமுடியு, கல்யாணத்துக்கு வய்க்கிறேன் பாருங்க ஒன்னா நம்பர் மேளமா”

“ஆரய்யா...?”

“திருக்களாவூரு சுப்புரமணியோடயா ஒத்தரு நாதஸ்வரம் வாசிக்க முடியும்”

“ஒஸ்தி செட்டாச்சே”

“அதுலென்னா தாச்சன... நம்பூட்டு கலியாணத்துக்கு திருக்களாவூரு சுப்புரமணியபுள்ள ஒரு நாதஸ்வரம், இன்னொன்னு ஒடையாளூரு கோயிந்தராசு புள்ளையிது தவுலுக்கு வலங்கிமான் சம்முவசுந்தரம், அருத்தூரமங்கலம் பயினிவேலு திருவாளபுத்தூரு கலியமூர்த்தி, திருக்களாவூரு தெச்சிணாமூர்த்திபுள்ள... எப்டி மச்சா செட்டு... சம்மந்தி வூட்டுக்காரவுங்க மூக்குமேல வெரவைக்கணும்”

“பெரிய மேளம்தான்னு சொல்லுங்க...

...விசுவராயன லேசா நெனச்சிற வாணாம்”

“ஆரய்யா அப்புடி நெனச்சா லேசுபட்ட ஆளா நீங்க... தலாண்டு வந்த வெள்ளத்தையே தடுத்து நிறுத்தி புட்டீங்க ன்னமத்தான் மயிரு.. கலியாணத்த ப்பூன்னு ஊதிப்புடுவீங்க ஊதி... மச்சோ ...”

“என்ன மாப்ளே...?”

“ந்தூருக்குள்ள ரொம்பப்பய ஒங்களை ஏமாந்துருவீங்க ஒரு கையி பாத்துபுடலாம்னு பாத்தான் அதுக்கு எடம் வய்க்கல நீங்க”.

கூட்டத்தில் லேசாய் கனைப்புச்சத்தம்... வேறு யார்? தருமையா நாட்டார் தான்!

"நீங்க அப்டி நெனைக்கலையா?"

"ஓய் ஒமருக்கு எப்பவும் குத்தல் பேச்சு கொதறல் பேச்சுத்தான்."

"பேச்சு தெசமாறுது...

"ஆமா... கலியாணத்துக்கு வடபாயசம் போட்டு ஏமாத்தி புடாதீங்க கறிச்சோறு போடுங்கன்னு தான் சொல்லவந்தன்".

"ஏங்கிட்ட ஆட்டுக்கெடா இல்ல நீங்க இருக்கீங்கல்ல... ஆக்கிப்புடுவோம்..."

மீறிக்கொண்டு வழிகிற சிரிப்புடன் ஐயரின் குரல் கிடுகிடுக்கிறது "நிச்சியத்துக்கு டயாச்சி... டயமாச்சி எல்லாரும் இப்டி வந்து குந்துங்க..."

ஒரு வழியாய் தாம்பூலம் மாற்றப்பட்டது வாகரையும் தப்பியது. எல்லாருக்குமே நிம்மதி பெருமூச்சு. ஏனோ கமலா மட்டும் ஒரு மூலையில் நின்றபடி சிணுங்கி சிணுங்கி அழுது கொண்டிருக்கிறாள்.

**ஓ உயிரு தானாப்போவாதுடா ஊரப்பயலுவ போவ வச்சிருவா னுவ... ஆளு எப்ப முண்டுவான் தீத்துக் கட்டலாம்னு தான் பாத்து கிட்டிருக்கான்.**

# 17

தருமையா நாட்டார் எப்பவுமே கொஞ்சம் முன் ஜாக்கிரதைக் காரர். தங்கவேலுவை வீட்டுக்கு விடுகிற சமயத்தில் விசுவராயருக்கும் தனக்கும் ஊராருக்கு மறுபடியும் சிக்கலாகி அந்யோன்யம் கெட்டுப்போகுமோ என்று நினைத்தவர் முன் ஜாக்கிரதையாய் பெரிய வீட்டு நாயக்கரையும் கலந்த பிற்பாடு விசுவராயரைத் தேடிப் போய் தங்கவேலுவை 'கிளப்பிக் கொண்டு' வைத்திருக்கிற சங்கதியைத் தெரிவித்தார்.

இதனால் முத்துக்கண்ணுவிசுவராயர் பெருசாய் அதிர்ச்சி அடைந்து விடவில்லை. அவருக்கு இந்த விஷயம் லேசாய் அரசபுரசலாய் தெரிந்துதான் இருந்தது. அதிர்ச்சியடைந்தவர் மாதிரி தருமையா நாட்டாரிடம் முகத்தைக் காட்டிக்கொண்டார்.

"ஏ இப்டி சேஞ்சீங்க மச்சா... ஏ மவன அடக்கணும்னா எத்தினியோ வலியிருக்குல்ல அதுல ஒண்ண செஞ்சிருக்கலாம்ல்ல போயிம் போயும் பொட்டத்தனமா இப்டி செஞ்சிருக்கீங்களே இது ஒங்களுக்கே நல்லாருக்கா?"

"ல்லாட்டி ஒங்கவூட்டு நிச்சியம் நடந்துருக்குமா செத்த யோசனப் பண்ணிப்பாருங்க... உரே கச்ச கருவாடு வித்துருக்கும்... இந்நேரம். ஒங்க மவன் சும்மாருக்க மாட்டான் ஒங்க மவள வந்தாருகுடிப் பயலுக்கு கட்டிவய்க்க மெனக்கெட்டுகிட்டிருப்

பான்... ஆய்ய தூக்கிகிட்டுப் போயி கூட கட்டிவச்சிருப்பான். அப்புடி ஆயிருந்தா ஒங்க கவுரதையும் ஊரோட கவுரதையும் என்னாவரது மச்சா?... இப்டி ஒரு சம்பந்தத்த தேடிக் கொண்டாந்துருக்க முடியுமா? நாக்குமேல பல்லுபோட்டு ஆரும் பேச முடியுமா? சுண்டிவுட்டு கூப்டணும்.. வாகரையிலேயே ஒஸ்தி வாகரை இது... நா நீங்க நல்லாருக்கணும்னு நெனச்சிதா இந்த சம்பந்தத்த கொண்டாந்தனா அளிஞ்சி போயிரணும்னு கொண்டாந்தனா... ராத்திரிக்கி படுத்துகிட்டு நெனச்சிப் பாருங்க மச்சா நல்லா புரியும்" என்று சற்று பிலக்கவே சத்தம்போட்டு சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் சத்தம்போட்டு பேசுகிறதில் கொஞ்ச் நாயம் இருக்கிற மாதிரிதான் விசுராயருக்கு பட்டது. கல்யாண சமயத்திலும் நடக்கப் போகிற திருவிழாக் காலத்திலும் இவரைப்போய் எதற்காக பகைத்துக் கொள்ள வேண்டும் என்றும், 'ஊருடன் பகைத்தான் வேருடன் கெடும்' என்பதை மனசில் கொண்டும் தான் எதிர்த்துப்பேச வக்கில்லாமல் சும்மாயிருந்து விட்டார். ஆனாலும் தங்கவேலுவை ஊர்விட்டு ஊர் கடத்திக் கொண்டு வைத்திருந்ததில் அவர்மீதும் ஊரார் மீதும் அவருக்குள்ளிருந்த ஆத்திரம் அடிநெஞ்சில் பொங்கித் தளும்பிக் கொண்டுதானிருந்தது.

தருமையாநாட்டார் சொல்லிவிட்டுப்போன மறுநாளே தங்கவேலு வீட்டுக்கு வந்துவிட்டான். ஆதுள் சரியாக சாப்பிட்டானோ கொண்டானோ தெரியவில்லை கன்னம் ஒட்டி காது ஒட்டி பார்க்கவே சகிக்க முடியாதபடிக்கு இருந்தான்.

"ஏங்கூட்ல உசுருருந்தா இந்த ஊருபயலுவளையும், தருமையா நாட்டான், நாயக்கன் மாயாண்டிக் கொத்தப்பிரியன் இந்தப் பயல்களையும் ஒரு கையி பாக்காம போப்போறதுல்ல..." என்றவன், எதுக்குப்பா என்னக் கேக்காம இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சீங்க? என்று கடுமையை முகத்தில் தேக்கிக்கொண்டு கேட்டான்.

"நானா சம்மதிச்சன் விதில்ல சம்மதிக்க வச்சிருக்கு"

“என்னப்பா சூத்துல அடிச்சான் பல்லு போச்சுங்கற கதையா விதி கிதின்னு நன்னூலு பேசுறீங்க... நீங்க இப்புடி சொன்னா நா ஒத்துக்குவானா ஊருப்பய ஒங்கள நல்லா அத இதச்சொல்லி சூரேத்தி வுட்றுக்கான்”.

“நா என்னப்பா அவுங்க சொல்றதெல்லாம் கேக்கறதுக்கு இம்புட்டோண்டு பப்பாவா? சம்பந்தம் எனக்கு புடிச்சிச்சி சரின்னு சொல்லிபுட்டன்”.

“ல்லப்பா அவுனுங்க சரின்னு ஒங்கள சொல்ல வச்சிருக்குறானுவ... நீங்க ஊரு பயலுவளுக்கு பயந்துகிட்டு தான் இந்த சம்பந்தத்துக்கு ஒத்துகிட்டிருக்கீங்க... நீங்க நல்ல சாதிக்கள்ளனாருந்தா நீங்களா தேடிப்போன நெல்லுப்பட்டு சம்பந்தத்தையே முடிச்சிருப்பீங்க... அப்பக்கூட நீங்க பின்வாங்குனது இவுனுங்களுக்கு பயந்துகிட்டுதான்”.

“ல்லடா தம்பி... ஓந்தங்கச்சி அந்த வந்தாருகுடிப்பயகிட்ட பளக்கம் வச்சிகிட்டிருந்ததை கேட்டப்புறம் தான் என்ககு அது புடிக்காமப் போச்சி... ஆயிமேல வேகமாத்தான் அதத் தட்டிக் களிச்சன் இவுனுங்களுக்கு பயந்துகிட்டுல்ல ஓ அப்பாவ அம்புட்டு லேசா எடப்போட்டுராதடா தம்பி... இன்னைக்கும் எனக்கு நெஞ்சுல வலு இருக்கு”

“உம்மையிலேயே ஒங்க நெஞ்சில வலு இருக்குன்னு நீங்க சொல்றது சரின்னா வந்தாரு குடிப்பயகிட்ட நம்ப வூட்டு பொண்ணு பளக்கம் வச்சிகிட்டிருக்காங்கறத்த கேட்டப்புறமும் நீங்க அவுனுக்குத்தான் நம்ப ஆய்ய குடுக்கணும்... ஊரே எயித்தாலும் அனாவசியம்னு நீங்களே அவனுங்கள எயித்திருக்கணும் அத வுட்டுபுட்டு நீங்களும் அவுனுங்களோட சேந்து கூத்தடிச்சிபுட்டீங்க”.

“எலே எலே அதியமா பேசி ஓ அப்பாவ மடயனா ஆக்கிப்புடாதடா அவன் வந்தாருகுடிப்பய... அறுத்துக் கட்டி கள்ளன்... நம்ப வாகரக்கி மனசு ஒப்புமா...? இதுல ஒனக்கு சம்மதமாடா... இந்தக் கல்யாணம் மட்டும் நடந்துச்சுன்னா

அடுத்தாப்ல வாகரையில ஆரு வந்து நம்பவூட்ல குந்தி ஒரு டம்ளர் தண்ணி குடிப்பா ரோசிச்சிப் பாத்துதான் பேசுறியா... சின்னப்புள்ள வுட்ட வெள்ளாம என்னைக்கும் வூடு வந்து சேந்ததுல்ல... கத்துக் குட்டித் தனமா அதஇதப்பேசி என்ன பயித்தியிக்காரனாக்கிப் புடாதடா தம்பி".

"ப்போவ... இன்னம நீங்க எனக்கு அப்பன்னு இல்லாமப் போனாலும் ஒங்களுக்கு நா மவன்னு இல்லாமப் போனாலும் சரி தான் அம்மா மேல சத்தியமா ந்தக் கல்யாணத்த மட்டும் நடக்கவுட்ற மாட்டன்".

"எலே, அப்பன் மவனுக்குள்ள கச்சிகட்டிகிட்டு வீறாப்பா பேசா தடாலே... வுசுறேப்போனாலும் சரின்னு நிச்சியம் பண்ண கால்யாணத்த நடத்தாம வுட்றமாட்டன் ஒனக்கு அம்புட்டு வீறாப்புருந்துச்சின்னா எனக்கு எம்புட்டுருக்கும்"

இப்போது பூரணியும் சும்மாயிருக்கவில்லை தங்கவேலுவின் மேல் ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது "தம்பி, என்னடா பேச்சுப்பேசுற ஆத்தரத்துல என்னா வேணும்ன்னாலும் பேசுறதுன்னு நெனச்சிகிட்டியா ஓந்தங்கச்சிக்கி ஒரு இடத்துல நிச்சியம் பண்ணி பருசமும் போட்டாச்சி இதுக்கு அப்புறம் அவுளுக்கு கல்யாணம் நடக்குற வளியப்பாக்குறத வுட்டுபுட்டு கல்யாணத்த நிறுத்தப்போறன்னு பேசிகிட்டிருக்கியே இது ஒனக்கு அடுக்குமா?.. எலே அதுக்கு வதுலா அவக்கறியக் களிச்சி கூறுபோட்டு ஊருக்குள்ளஏலம்வுடுடா அப்பனாலும் ஓ மனசு நல்லாருக்கட்டும்".

"எம்மா நீ.. பேசுன எனக்கு கெட்டக்கோவம் வரும் லெம்பாடி மவனுங்க என்ன தூக்கிகிட்டுப்போயி அடச்சி வச்சிட்டு வெளிய வுட்றுக்கானுங்க. நீங்க இதுக்கு என்னா பண்ணி கிளிச்சிருக்கீங்க: ...மவன கடத்தி கிட்டு போனானேன்னு ரோசம் வந்துச்சா? எங்க எயித்துக்கேக்கப் போனா நம்ப பொண்ணு கல்யாணம் நடக்குமோன்னு அச்சப்பட்டுகிட்டு வாய மூடிகிட்டீங்க... ஒங்களுக்கு காரியம் முக்கியமாப் போச்சி... எம்மோவ்... என்ன கடத்திகிட்டு போனவன என்னால பாத்துக்க

முடியும்... குச்சிக்காரி மொவனுவள ஒரு கால கைய வெட்டாம வுடமாட்டன்"

"எலே ஒனக்கு இது நல்லால்ல அம்புட்டுதான் நா சொல்லுவன்"

"நீ சும்மாரும்மா... ஆயி வந்தாருகுடிப்பயகிட்ட பளக்கம் வச்சிருந்துச்சிங்குற கதைய பருசம் போட்டு போனவங்கிட்ட சொல்லி கல்யாணத்த நிறுத்துவன்".

"ஏண்டா தம்பி உயிரோடருக்குறது ஒனக்கு புடிக்கலையா?"

"சாம்பசெவத்துக்கு தங்கச்சிய கல்யாணம் பண்ணி குடுத்து புட்டுத்தான் நா சாவுவன் அம்புட்டு லேசுல ஏ உயிரொண்ணும் போயிராது"

"ஓ உயிரு தானாப்போவாதுடா ஊரப்பயலுவ போவ வச்சிருவானுவ... ஆளு எப்ப முண்டுவான் தீத்துக் கட்டலாம்னு தான் பாத்துகிட்டிருக்கான்"

"நீயும் அப்பாவும் அருவாள தூக்கிகிட்டு வந்து அதுக்கு முன்னாடி என்ன கொன்னு போட்றுங்க ஏ உயிரு போனதுக்கப் புறம் ஒங்க இஷ்டப்படியும் ஊருப்பய இஷ்டபடியும் கல்யாணம் நடக்கட்டும்"

"பயித்தியக்காரப் பயமாறி ஒளராதடா... ஆயி கல்யாணத்துக்கு ஆவ வேண்டிய காரியம் எம்புட்டோருக்கு அதப் போயிபாரு போ"

"ஏ மூஞ்சிக்கி நேரா நிக்காம போம்மா எட்டி... அப்பாரு கணக்கா பேசிகிட்டிருக்க... ரோட்டுக்குப் போன வன ஆளவுட்டு தூக்கிகிட்டுப் போனானுங்க... அத என்னான்னு கேக்க அக்குசு மசுறுல்ல பேச்சுப் பேசிகிட்டா நிக்கிற... குச்சிக்காரி மவனுவள எனக்கு தெம்புருந்தா நா பாத்துக்குறன் நீ போ"

"தம்பி, நீ அவனுவள பாக்குறப்ப பாக்கலாம்.. இப்ப ஆயி சோறுபோட்டு வச்சிருக்கு வந்து தின்னு... வாப்பா ராசால்ல"

பூரணி அவனை எத்தனைதான் வருந்தி வருந்தி அழைத்தும் அவனுக்கு மனசு இறங்கினதாக இல்லை. கோபம்தான் மூள்கிறது. "பூரணி, அவன் பூச்சிகாட்டி கிட்டு நிக்கிறான் நீ அதுக்கு ஏத்தாப்ல பேசிகிட்டிருக்கத வுட்டுபுட்டு வேலயப்போயி பாரு" என்கிறார் விசுவராயர் கோபமாக கண்வர் சொல்வதையும் ஏற்காமலிருக்க முடியவில்லை ரெண்டுங்கெட்டானாக தடுமாறி நிற்கிறாள்.

தங்கவேலு நெஞ்சில் கொண்டிருந்த ஆத்திரத்தின் அளவுக்கு பரிவும் கொண்டிருந்தான். அப்பாவையும் அம்மாவை யும் அதிகம் பேசிவிட்டோமோ என்று தோன்றுகிறபோது அவனுக்கு அழுகை முட்டிக்கொண்டு வருகிறது. அழுகையினூடே ஆத்திரமும் வருகிறது மூலையில் பாயைப் போட்டு படுத்துக் கொண்டான். தட்டில் போட்ட சாப்பாடு ஆறிப்போய் வெகுநேரமாகி விட்டது. கமலாவையும் சாம்பசிவத்தையும் எப்பாடு பட்டாவது ஒருமுறை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும் அந்த சந்திப்பின் மூலமாக அவர்களின் பழக்கத்திலும் வலு ஏற்பட்டும் அவர்களது எண்ணமும் தன் எண்ணமும் ஈடேறும் என்று நினைத்துக் கொண்டவன் அந்த திட்டத்தை கமலாவிடம் எப்படி சொல்வதென்றும் யோசித்துக் கொண்டிருந்தான். இப்போது மனசிலிருந்து கொஞ்சம் பாரம் இறங்கினமா திரியிருந்தது. தன்னுடைய திட்டத்தின் மூலம் ஊரரால் தனக்கு ஏற்படப்போகும் கதியைப் பற்றியும் நினைக்கிற போது பயம் அள்ளுகிறது. தெருவைப் பார்க்கிறான். ஒரு கூட்டம் இவர்களின் சம்பாஷணைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்து விட்டு செல்கிறார்கள் போல இருக்கிறது. நிச்சயம் இவர்களால் தனக்கு ஒரு ஆபத்து இருக்கிறது என்பதை உணர்கிறபோது குப்பென்று வியர்த்துப் போகிறது. தன்னை ஆள்வைத்து கடத்திக் கொண்டு போனவர்கள் வேறு என்றுதான் செய்ய மாட்டார்கள் கணம் கணமாய் மனசு நடுங்கிக் கொண்டிருந்த போதிலும். தான் கொண்டிருந்த திட்டங்களையும் செய்யப்போகும் செயல்களைப் பற்றியும் வலுவாகத்தான் சிந்தித்துக் கொண்டிருந்தான். இதில் அவன் கொஞ்சம் கூட சிதறவில்லை.

பூரணி அவனை கெஞ்சிக் கெஞ்சிப் பார்த்துவிட்டு அடுப்படிப்பக்கம் போய்விட்டாள். அப்பாவும் கூட எங்கோப் போய்விட்டார். தூணோரம் நின்றபடி தன்னால் தானே இவ்வளவும் என்று நினைத்து விசும்புக் கொண்டிருக்கிறாளே அவள்தான் கமலா.

நல்ல இருட்டு.

அப்போதுதான் வானத்தில் நட்சத்திரங்கள் கண்சிமிட்ட ஆரம்பித்திருந்தன. ஆள் நடமாட்டங்களும் வாகனங்கள் போன்ற இத்யாதிகளின் நடமாட்டமும் வெகுசாய் குறைந்திருந்த நேரம்.

அகஸ்த்மாத்தாக ரோட்டுப்பக்கம் வந்த பெரிய வீட்டு நாயக்கரின் பிடியில் வசமாய் மாட்டிக் கொண்டவர் தருமையா நாட்டார்தான். நேத்தையிலிருந்தே அவரைப் பார்க்க வேண்டு மென்று நாயக்கர் ரொம்பத்தான் துடித்துக் கிடக்கிறார். இவருக்கு ஊரில் ரொம்ப கடுசான வேலை போல. தங்கவேலை ஆட்கள் விட்டுவிட்டார்களே வீட்டுக்கு வந்துவிட்டானே என்னாயிற்று ஏதாயிற்றென்று ஒரேயடியாய் கவலை பிடித்துப்போய் கிடக்கிறார். நாட்டாரும் போய் அவனைப் பற்றிய தகவல்களைச் சொல்ல வில்லை. மற்ற மற்ற ஆட்கள் மூலமாக அவனைப்பற்றி தெரிந்து கொண்டிருந்தும் கூட அவருக்கு பூரணமாகப் படவில்லை. நாட்டாரின் மூலமாக சங்கதிகளை தெரிந்து கொண்டால்தான் ஆயிற்றென்று கிடக்கிறார். இதோ அவர் எதிரே நாட்டார்.

“என்ன மச்சான் கண்டுக்காமப் போறீங்க... இருட்டுல ஆருன்னு தெரியலையா? அதுக்குள்ளயா கண்ணவிஞ்சிப் போச்சி... ரொம்பதான் தங்கச்சிகிட்ட சீண்டி கிட்டிருக்காதீங்க...”

“ஆரும் சீண்டலை... எப்பவாச்சும் நெனப்புலவந்தா கிட்டப் போவன்”.

“பாத்தியா அதனால தான் ஒனங்கு கண்ண விஞ்சிப் போச்சி நா ஒக்காள சீண்டி எம்புட்டோ வருசமாச்சி கிட்டக்கப்போனா களுத கணக்கா ஒதப்பா... அதனால தான் இப்பக்கூட மானத்துல பூத்துருக்க நச்சத்தெரத்த எண்ணி காட்டுவன்”

“சரி சரி இல்லங்குறா... என்னமோ நெனப்புல போனதுல நீங்கருந்ததை கவனிக்கல என்றவர் சுற்று முற்றும் பார்த்துவிட்டு சற்று குரலை அழுத்திச் சொல்கிறார், இப்பக்கூட நீங்க ரோட்டுப் பக்கம் வந்த சேதி தெரிஞ்சிதான் இஞ்ச வந்தன்” என்கிறார்.

“நாளு நெருங்கிருச்ச திருளாவேல ஆயிகிட்டிருக்கா?”

“பெரமாதமா நடந்துகிட்டிருக்கு... வரவேண்டிய வசூலு பாக்கியெல்லாம் கூட கிட்டத்தட்ட வந்துட்டு”

“திருளாவ ஜோரா நடத்திபுடணும்... ஆட்ட பாட்டம் உண்டா?”

“கொறவன் கொருத்தி... மேளக்கச்சேரி”

“அது போதும்... கோயில்ல சுண்ணாம்பு கிண்ணாம்பு வர்ணம் கிர்ணம் பூச வேண்டியது பாக்கிருந்தா சொச்சம் கிச்சம் வய்க்காம செஞ்சிபுடுங்க”

“சரி”

“கோவாலுகுச்சிராயன் கூடமாட நிக்கிறானா?”

“அந்த ஆளு வூட்டவுட்டு வெளிக்கெளம்புறதயே நிறுத்தி புட்டாரு”

“நல்லதாப்பபோச்சி... விசுவராயன் மவன் தங்கவேலு பய எப்டிய்யாருக்கான்?”

“அவனப்பத்தித்தான் சொல்ல வந்தன்”.

“என்னா மச்சா?”

“அவன வெளியிலவுட்டது தப்பாப்போச்சி மச்சா”.

"யா?"

"அந்தப் பய வூட்டுக்கு வந்ததிலேருந்து வூட்ட ரெண்டு பண்ணிகிட்டு நிக்கிறானாம் தங்கச்ச வந்தாருகுடிப் பயலுக்கு கட்டி வச்சுருவன்னு ஒத்தக்கால்ல நிக்கிறானாம்"

"அப்பறம்?"

"பருசம போட்டுபுட்ட போனவனுக்கு தங்கச்சிய குடுக்க மாட்டானாம்".

"இவங்கெடக்கான் மயிரு அவன் எத்திப்புடுவான் எத்தி".

"அது நம்பளுக்குத் தெரியும் இந்தக் கூத்தியாருக்கு தெரியுமா?"

"சரி அப்பங்காரன் ஒண்ணும் சொல்லலையா?"

"அவுரு என்னா சொல்லக் கெடக்கு அந்தப்பயல் ஆயிப் பேச்சையும் கேக்கல் அப்பன் பேச்சையும் கேக்கல தங்கச்சிக்காரி அவனோட பளக்கம் வச்சிருந்தா இவனோட பளக்கம் வச்சிருந்தான்னு பருசம் போட்டவங்கிட்ட சொல்லி கல்யாணத்த நிறுத்திப்புடுவானம்"

"இப்புடி ஒரு கத நடந்தா ஓ பொட்டிய கிளிச்சி புடுவான் பருசம் போட்டவன்"

"அவன் வூட்டு கல்யாணம் நடந்து முடியிற வரைக்கும் அவன வெளியவுட்டது தப்பாபோச்சி மச்சா"

"ஆருய்யா உடுறேன்னா... நீதான பெருசா விசுவராயன் தயவு வேணுமுன்னு ஒத்தக்கால்ல நின்ன அதுக்காவத்தான் வுட்டுச்சி"

“இப்ப அனுபவிக்க வேண்டியிருக்கு கடிக்க வந்த பாம்ப அடிச்சி உசுரோட உட்டா அது சும்மாருக்குமா நல்லா கரவங்கட்டிகிச்சி ஒங்க தலைக்கும் ஏந் தலைக்கும் எப்ப அருவா வரும்ன்னுருக்கு”

“சரி இதுக்கு என்னா பண்றது?”

“எனக்கு ஒண்ணும் புரியில... இன்னம தங்கவேலு பயல ஆரவுட்டும் அம்புட்டு லேசா கௌப்பிகிட்டு போயிர முடியாது... எப்பவும் ஜாக்ரதையாத்தான் இருப்பான்”

“மொதல்ல வந்தாரு குடிப்பயல தீத்துக்கட்டணும் ல்லாட்டி ஊரவுட்டு அப்புறப்படுத்தணும்”.

“அவன் ஒரு அப்ராணிப்பய மச்சான் வயசுக் கோளாறு தெரியாத்தனமா விசுவராயன் மவகிட்ட பளக்கம் வச்சிபுட்டான்”

“என்னாய்யா அவன் மேல இம்புட்டு அக்குசு திடீருனு ஒனக்கு.. அன்னிக்கி தெருவுல நின்னுகிட்டு நாறடிச்சீர் என்னா சொக்குபொடி போட்டான்?”

“நீங்க ஒண்ணு மச்சா... அதெல்லாம் ஒண்ணுமுல்ல முந்தா நாளு திருளாவுக்கு வசூலு பண்றதுக்காவ அவன் வூட்டுக்குப் போனன்”

“ம்”

“திருளான்னிக்கி மினியாண்டவனுக்கு கெடா ரெண்டையும் வெட்டி ஊருக்கே கறிச்சோறு போடப் போறானாம்!”

“இதென்னா மச்சா கூத்தாருக்கு...? கல்யாணத்துக்கு ஊரு விருந்து போடத்தான ஆடு வளத்தான்... திடீருனு மினியாண்டவனுக்கு யா வெட்றான்?”

“தங்கவேலுப்பய என்னாத்தான் முண்டிகிட்டு நின்னாலும் விசுவராயன் பொண்ண கட்டமுடியாதுன்னு தீர்மானம் பண்ணிபுட்டான்”.

“அப்பறம்?”

“ஆடு ரெண்டும் முத்திப்போயி கவுச்சடிச்சிப் போச்சி... இன்னம வுட்டுவச்சா கறி மெல்ல முடியாமப் போயரும்னு அவசரப் பட்டுதான் ஊருக்கு கறிச்சோறு போடப்போறான்”.

“நீ புரிஞ்சிகிட்டது அம்புட்டுதான்... விசுவராயன் பொண்ணு தனக்கு இல்லன்னு ஆனப்புறம் வேற எந்தப் பொண்ணயும் கல்யாணம் பண்ணப் போறதுல்லங்குற அர்த்தத்துலதான் நம்பல்லாருக்கும் கறிச்சோறு போடப் போறானா?”

“எப்புடியோ என்னா கண்றாவியோ திருளான்னிக்கி நம்ப எல்லாருக்கும் கறிச்சோறுக்கு பந்திக்கி முந்திக்குவோம்... கொளுப்பேறுன ஆடு கறி ரொம்ப நல்லாருக்கும்”.

”ரெண்டு ஆடு பத்தாதுய்யா இன்னம் ரெண்டு கெடாசேத்து வெட்டச்சொல்லுங்க”

”சொல்லிபுட்டா போச்சி”

”ஊருக்குள்ள ஒத்தரையும் ஒதுக்காம கிதுக்காம அவனவுட்டே விருந்துக்கு கூப்ட்ற சொல்லுங்க”

”சரி”

”ஏ மச்சா எனக்கு ஒரு சந்தேகம்”

“என்னா?”

“தங்கவேலுப்பய அவங்கிட்ட பொண்ண தர்றன் கிர்றன்னு சொல்லி கறிவிருந்த நிறுத்திப்புட மாட்டான?”

“ஊருக்குள்ள இம்புட்டு நடந்துகிட்டிருக்கு இதுக்கப் பறமும் அவன் விசுவராயன் மவள கட்டிப்பானா? அப்புடியே கட்டிபுட்டாலும் உயிர் தரிச்சிருவானா?”

“தங்கவேலு வலாட்றத நிறுத்தலான்னா அந்தக் கதிதான ஆவ்போவுது”

“மாயாண்டிக் கொத்தப்பிரியங்கிட்ட நல்ல அருவாளா ஒண்ணு வாங்கி குடுத்துங்க”

“இன்னம யோசிக்கறதுல அர்த்தமுல்ல ... நம்ப மானத்தயும் வாகரயோட கெவுறதயயும் காப்பாத்தணும்னா இதான் வளி. ஊருக்குள்ள ஒரு கொலவுளுந்தா தான் மித்தப்பயலும் நாளக்கி இந்தமாறி காரியங்களச் செய்யமாட்டான்”

“மச்சா அந்தாலப் பாருங்க ஆரோ வர்றாப்லருக்கு”

“ஆரு?”

“தங்கவேலுப்பயத்தான்”

“எதுக்கு இப்ப வர்றான்?”

“தெர்யல”

“அவங்கிட்டக்க வர்றதுக்குள்ள நாம்ப இப்டி குறுக்கால பூந்து வூட்டப்பக்கம் போயிரணும் அடிப்பட்ட பாம்பு கடிக்காம வுடாது”.

"என்னாய்யா ஒரேடியா குசுவுட்டு பயமுறுத்துற மயிராண்டி நம்பள என்னா பண்ணிபுடுவான் கிளிச்சிர மாட்டன் கிளிச்சி".

"அதுக்கு முன்னாடி அவன் நம்பள கிளிச்சிபுட்டா நாம்ப எப்டி அவன கிளிக்கிறது...?"

"அதுஞ்சரி தான்....

"ந்த பாரியோவ் ன்னம பயல ப்டியே வுட்டுகிட்டு இருக்கப் புடாது தீத்துகட்டுனாத்தான் நம்பளுக்கு நிம்மதி"

"சரிசரி சட்டுனு போங்க கிட்டக்க அவன் வந்துட்டா சங்கட்டமாப் போயிரும்."

இப்போதும்கூட அவர்களிருவருக்கும் பதறல் நிற்க வில்லை. எந்த சமயத்திலும் எதுவும் நடக்கலாம் என்கிற மாதிரி நினைத்துக் கொண்டு போகிறார்கள். அந்த இருட்டிலும் நடையில் வேகம் தட்டுகிறது. பின்னால் அவன் வருகிறானா கொள்கிறானா என்று பார்க்கக்கூட அப்போதைக்கு அவர்கட்கு தெம்பு போதவில்லை. கட்டியும் முட்டியும் கல்லும் முள்ளும் உண்மையிலேயே அவர்களுக்கு காலுக்கு மெத்தென்று தானிருக்கின்றன.

**அடிக்கிறவனும் கொட்டுகிறவனும் ஊதுகிறவனும் வட்டமாய் நிற்கிறார்கள் அவர்களைச் சுற்றிதான் ஜனங்கள் மொத்தமும். ஒரொருத்தனுக்கும் ஓரடி நீளத்துக்கு தலைமயிர் பம்பல் விட்டுக்கொண்டு காடாய் மண்டி கிடக்கிறது.**

# 18

காத்தாயி அம்மன் கோயில் வர்ண விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு செகஜோதியாய் இருந்தது. ஊரில் உள்ளவர்களும் சுத்தப்பட்ட வட்டாரங்களிலிருந்தும் ஜனங்கள் ஏகமாய் திரண்டு வந்துவிட்டனர். கோயிலினுள் நிற்க முடியாதபடிக்கு கூட்டம் பொங்கி வழிகிறது. காளை வாகனமொன்றில் அம்மன் வீதியுலாவுக்காக வெகு அலங்காரத்துடன் காட்சி தருகிறாள். காளை வாகனத்தில் அம்மனா? கேள்வி எழுகிறதில்லையா, பெரும்பாலான கிராமக் கோயில்களில் சுவாமி புறப்பாடுக்கென்று வாகனங்கள் இருப்பதில்லை. அடுத்தவூர் கோயில்களில் உள்ள வாகனத்தைத்தான் திருவிழா சமயத்தில் இரவல் வாங்கிவர வேண்டும் இரவல் தருகிறவர்கள் எந்த வாகனத்தை இரவல் தருகிறார்களோ அதில்தான் சுவாமி புறப்பாடு. சிங்கவாகனத்தில் முருகன் கூட பயணம் செய்வார் என்னசெய்வது விதி அப்படியென்றால்! கோயிலுக்கும் பக்கத்திலிருந்த பெரிய திடலொன்றில் 'குறவன் குறத்தி ஆட்டம்' படு அமர்க்களமாக நடந்து கொண்டிருக்கிறது. அம்மனின் முன்பு ஐயரும் தீப்பந்தம் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களும் லைட்டு தூக்கிக்கொண்டிருக்கிறவர் களையும் தவிர சுத்தமாய் ஈகாக்காய் இல்லை. எல்லா ஜனங்களுமே குறவன் குறத்தி ஆட்டத்தைப் பார்க்கத்தான் கூடிக் கிடக்கிறார்கள்.

இக்கூட்டத்தோடுகலந்தபடிக்கு தருமைய நாட்டாரும் பெரியவீட்டு நாயக்கரும் முத்துக்கண்ணு விசுவராயரும் ரெங்கப் பிள்ளைகோனார், கணேசகோனார் போன்றவர்களும் கூட இருக்கிறார்கள்.

தேர்ந்த பாடகர் ஒருத்தர் பாடும் கச்சேரிக்கோ படாபடா ஆட்கள் செய்யும் நாகஸ்வர கச்சேரிக்கோ இல்லாத கூட்டமொன்று இந்த குறவன் குறத்தி ஆட்டத்துக்கு கூடிக்கிடக்கிறதென்றால் கிராமாந்தரங்களில் இப்படிப்பட்ட ஆட்டத்துக்குத்தான் மவுசு அதிகம் பத்து மைல் சுத்து வட்டாரங்களிலிருந்தும் கூட ஆட்கள் வரும் போழக்குடி கணேசய்யர் சங்கீதம் என்றால் கச்சேரியில் பத்துப் பதினைந்து கெழட்டு முண்டங்கள் தான் குந்தி கேட்பார்கள். அதுவும் நாழியாக ஆக 'என்னடா எருமமாடு கத்துற மாதிரியிருக்கு' என்று சொல்லிவிட்டு எழுந்துபோய் விடுவார்கள் ஐயர் மட்டம் கூடவந்த ஆட்களோடு சரி சரி சரி கமகமகம பதபதபத நிஸ நிஸ நிஸ என்று படிக் கொண்டிருப்பார்.

இப்போது கூடிக்கிடக்கிற கூட்டமெல்லாம் அம்மனுக் காகவா குறவன் குறத்திக்காகவா என்றொரு கேள்வி எழுந்தால் ரெண்டாவதை அழுத்திச் சொல்லிவிடலாம் அம்மனை வைத்து குறவன் குறத்தி - குறவன் குறத்திக்காக அம்மன் புறப்பாடு.

விற்பனைக்கு வந்திருந்த பட்டாணிக்கடலைக்காரன் பழ வண்டிக்காரன், பலூன்காரன், மிட்டாய்காரன் எல்லாருமே இந்த கும்பலில்தான்.

நாயக்கருக்கும் நாட்டாருக்கும் நடுக்கம். ரெங்கப் பிள்ளைக்கோனார் இதிலெல்லாம் சூரப்பேர்வழி ஆயிற்றே ஒரு கவலையில்லாமல் ஆட்டத்தை ரசிக்க தயாராகி விட்டார். அவர்களால் ரசித்தும் ரசிக்கமுடியாமலுமாய் இருக்கிறது.

இத்தனை நாளாய் தங்கவேலுவால் தங்களுக்கு ஏதும் விபரீதம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து கிடந்த தொன்றும் நடந்து விடவில்லை. இந்தக் கூட்டத்தைப் பயன்படுத்தி அசால்ட்டாக இருக்கிற சமயம் பார்த்து பின்னால் பொறடியில் ஒரு போடு

போட்டால் தலை துண்டாய் போய்விடும் அடிப்பட்ட பாம்பு கடிக்கிற மாதிரி. அப்படியெல்லாம் ஒன்றும் நடந்துவிடாதபடிக்குத் தான் அவர்கள் இருவரும் பலமான பாதுகாப்பாய் மாயாண்டி கொத்தப்பிரியனையும் மற்றவர்களையும் தயார்படுத்தி வைத்திருக்கிறபோது என்ன கவலை?

கொஞ்சநாளாய் தங்கவேலு எங்கே போகிறான் என்ன திட்டம் போடுகிறான் என்றெல்லாம் சுத்தமாய் கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஆனாலும் நிச்சயம் பண்ணி வைத்திருக்கிற கல்யாணத்தை நடத்த விடாமல் தடுப்பதற்கு தன்னால் எத்தனை கைங்கர்யம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து கொண்டிருக்கிறான் என்று மட்டும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. சாம்பசிவமும் தங்கவேலுவும் அடிக்கடி சந்திப்பேர்படுத்திக் கொண்டிருக்கிறார்களாம். கமலாவும் சாம்பசிவமும் கூட சந்திக்கிறார்களோ என்னவோத் தெரியவில்லை.

ஊராரின் மேலுள்ள ஆத்திரத்தையெல்லாம் தன் வீட்டாரின் மேலேயே காட்டிக் கொண்டிருக்கிறானாம் தங்கவேலு. அப்பாவையோ அம்மாவையோ அவனுக்கு சுத்தமாய் பிடிக்க வில்லையாம். சதாநேரமும் சண்டையும் சச்சரவுதானாம். நிச்சயம் பண்ணிவிட்டு போயிருக்கிறவர்களுக்கு கூட அவனுடைய தங்கை இன்னொருத்தனுடன் என்ன சங்கதியெல்லாம் தெரிந்திருக்குமோ என்றும் பேசிக் கொள்கிறார்களாம். விசுவராயர் பத்திரிகை அடித்து ஊரெல்லாம் விநியோகம் செய்துவிட்டார். மாப்பிள்ளை வீட்டு பத்திரிகை இன்னும் அச்சடிக்கபடவில்லை என்று பேச்சு நடக்கிறது. ஏதோ அவர்கள் இந்தக் கல்யாணத்தில் அக்கறை செலுத்தாதது மாதிரி நடந்து கொள்கிறார்களாம், தங்கவேலுவால் அவனுடைய தங்கச்சியின் ரகசியம் வெளிச்சப்பட்டிருக்குமோ என்று நினைக்கக் கூட வகையிருக்கிறதாம். ஒரு மண்ணும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

சாம்பசிவம் சுவாமிபுறப்பாடு முடிந்ததும் விடிகாலை நாக்கு அல்லது ஐந்து மணி சுமாருக்கு ஏழு மினிக்கும் இளைய மினிக்கு ரெண்டு கெடாவும், மதுரை வீரனுக்கு ஒரு கெடாவும், சங்கிலி கருப்பனுக்கு ஒரு கெடாவும் மொத்தம் நான்கு ஆட்டு கிடாக்கள்

காவு கொடுக்கப் போகிறான். நாயக்கர் விருப்பப்படி அவன் ஏற்கனவேயே முடிவு செய்திருந்த ரெண்டு ஆட்டு கிடாய்களோடு கூடவே ரெண்டு கிடாக்களும் வெட்ட துணிந்து விட்டான். நான்கு கிடாக்கள வெட்டினால் தான் ஊர் ஜனத்துக்கு கறிச்சோறு போடமுடியும். நாளை மத்தியானம் திருவிழா முடிந்த கையோடு ஊர் விருந்து அவன் வீட்டில்.

சாம்பசிவம் குறவன்குறத்தி ஆட்டத்தைப் பார்க்க கூட வராமல் அந்த வேலைகளில் தான் மும்முரமாய் இருந்து கொண்டிருக்கிறான். ஜனங்கள் பேசிக்கொள்கிறமாதிரி கமலா சாம்பசிவம் சந்திப்பு ரகசியமாய் இருந்திருக்கும் பட்சத்தில் இப்போதைக்கு அவன் ஊர் ஜனத்துக்கு கறிச்சோறு போட நியாயமில்லை. எப்படியோ ஊர்க்காரர்களிடம் அதை இதைச் சொலலி விருந்தை நிராகரித்திருப்பான் இப்போது மும்மரமாய் அவன் நடத்துகிற காரியங்களைப் பார்த்தால் அவர்கள் சந்திப்பு ஒன்றும் நடந்திருக்காது என்றுதான் தோன்றுகிறது. ஒருவேளை இப்படியெல்லாம் ஊர்க்காரர்களை நம்பவைத்து சந்திப்பை ஏற்படுத்தி அவளை கௌப்பிக்கொண்டு போகக்கூடத் துணிவானோ என்னமோத் தெரியவில்லை எப்படியிருந்தாலும் அவர்கள் விஷயத்தில் ஒரு கண்ணாய் இருக்க வேண்டியதுதான் என்று நாயக்கர் நினைத்துக் கொள்கிறார். தங்கவேலுவால் தங்களுக்கு ஏதம் விபரீதம் நேர்ந்து விடாதிருக்க தங்களுக்கு எத்தனை பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்களோ அத்தனை பாதுகாப்பு கமலா விஷயத்தில் செலுத்த வேண்டுமென்று நாட்டார் வேறு நாயக்கரை தூண்டி விட்டுக் கொண்டேயிருக்கிறார்.

தங்கவேலுவை தீர்த்துக்கட்டக்கூட மாயாண்டிக் கொத்தப் பிரியனிடம் நாயக்கர் யோசனை சொல்லிவிட்டார். அதற்கான சமயத்தைத்தான் மாயாண்டிக் கொத்தப் பிரியனும் எதிர்பார்த்து கொண்டிருக்கிறான் மாயாண்டிக் கொத்தப்பிரியனுக்கு இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கெல்லாம் ஊரே கூடி பொறுப்பெடுத்துக் கொள்ளும் என்றும் மாயாண்டிக்கு தைரியம் சொல்லிவிட்டார். அதனால் தானோ என்னவோ மாயாண்டி எப்போது பார்த்தாலும் அருவாளும் கையுமாகவே காட்சி தருகிறான்.

நாயக்கரோ நாட்டாரோ கூடிப்போடும் இப்படிபட்ட திட்டங்கள் யாவும் விசுவராயருக்கோ பூரணிக்கோ தெரியாது என்பது நிஜம் என்னதான் மகன்மீது ஆத்திரம் இருந்தாலும் தன் மகனுக்கு இப்படி ஒரு கதி நேரப்போவதை விரும்புவார்களா என்ன?

இதோ குறவன் குறத்தி ஆட்டம் தொடங்கி விட்டது. எல்லாரும் அதிகமான உற்சாகத்தில் இருக்கிறார்கள்.

அடிக்கிறவனும் கொட்டுகிறவனும் ஊதுகிறவனும் வட்டமாய் நிற்கிறார்கள் அவர்களைச் சுற்றிதான் ஜனங்கள் மொத்தமும். ஒரொருத்தனுக்கும் ஒரடி நீளத்துக்கு தலைமயிர் பம்பல் விட்டுக்கொண்டு காடாய் மண்டி கிடக்கிறது. தலை மயிரில் என்றைக்கு எண்ணை பூசினானோ தெரியாது எல்லாம் பழப்புத் தட்டிப்போய் பிசுக்குப் பிடித்து கிடக்கிறது. ஆனாலும் சுருள் சுருளான முடி நாகஸ்வரம் ஊதுகிறவனைத் தவிர மித்தவன் யாரும் சட்டைப்போடவில்லை. ஆனால் எல்லாருமே வேஷ்டிக்கு மேல் ஒரு துண்டை அனாவசியமாய் கட்டியிருக்கிறார்கள். எல்லாருக்கும் இருக்கிற உற்சாகத்தைப் பார்க்கிறபோது ஓரொருத்தனும் சூரப்புலி கணக்காய் இருக்கிறான். அடிக்கிற அடியில் கேட்கிறவன் செவுலை கிழிப்பானோ அடிக்கிற தவுலை கிழிப்பானோ தெரியாது அப்படி ஒரு உற்சாகமது. எல்லார் கைகளுமே பரபரக்கிறது அடிக்கத்தான். அந்தால ஒருத்தன் ஆரம்பித்துவிட்டான்.

‘டும் டும்டும் டுடும்டுடும்டுடும் டும்டும்டும்’

அடுத்தவன் சும்மாயிருப்பானா...? அவன் பங்குக்கு.

‘பூம்பூம்... பூம்பூம்பூம்... பூம்பூம்...

இன்னொருத்தன் எகிறிக்கொண்டு, டிங் டிக்கு டிக்கு டிங்டிக்கு டிக்கு டிக்கு டிங்டிக்கு டிக்கு டிக்கு...

இன்னொருத்தன் பாய்ந்து கொண்டு,

'கித்... கித்தா... கித்தா... கித்கித்கித்கித்தா... இப்ப எல்லாரும் சேர்ந்து கொண்டு...' 'நகநகநகநகநகநகநகநகநக...' வென்று தட்டி கிடுகிடுக்கிறது. இப்போது எல்லார் தலை முடியும் மேலே தாவி கீழே குதித்து தாளத்துக்கேத்த தாளம் போடுகிறது. இப்போது பூம்பூம்காரன் நரம்பு பிஞ்சிப்போகிற மாதிரி, 'ப்பூம்...பூம்... ப்பூம்பூம்... டிக்கி டிக்கி டிக்கிடி டிக்கி டிக்கி டிக்கி டிக்கிடி டிக்கி.. ப்பூம்பூம்... ப்பூம்பூம்' என்று இழுக்கிறான். ஆரம்பித்தானய்யா நாயணக்காரன் 'பிப்பி பிப்பி பிப்பி பிப்பீ... பிப்பி பிப்பி பிப்பீ...' என்று அவன் ஊதுகிற வேகத்துக்கு கிட்டேப் போனால் மொகரை மூணாய்ப் போய்விடும். அம்புட்டு கடுசாய் பூமியைப் பார்த்து ஊதுகிறான். சடாரென்று வானத்தைப் பார்த்து ஊதுகிறான். அப்படியே ஒரு சுழிப்பு பக்கவாட்டில் மேற்கே கிழக்கே அப்புறம் கிறுக்கு கொண்டவன் மாதிரி சுத்தி சுத்தி இத்றகுள் நாகஸ்வரக் குழாய் வழியாய் நாலு குடம் எச்சல் ஊத்துகிறது. எடுப்புலயே தட்டுகிறவனுக்கும் கொட்டுகிறவனுக் கும் முழிப்பிதங்கிப்போய் மூணு கொடம் வேர்வை ஊத்துகிறது. இதெல்லாம் ஒருவழியாய் நின்றதற்கப்புறம் குறவன் கோமனத்தைக் கட்டிக்கொண்டு வட்டத்தை சுத்திசுத்தி வந்து ஜனங்களை அகலப்படுத்துகிறான் சரியான குறவன் அவனுக்கென்றே அமைந்த அரிதாரம் பாசிமணி ஊசிமணி சலங்கை எல்லாமும், குறவனுக்கு ஆள் வேணுமே - கூப்பிடுகிறான்

' ஏ ..............................கொறத்தீ.....................'

'யா..............................மச்சோ,..........................

'வாடி ஏங் கத்திரிக்கா........

'வர்றேன் ஏங் கொத்தரங்கா......

வந்தாளய்யா அவள் கூட்டத்துக்குள்ளிருந்துதான் துள்ளி வருகிறாள். இப்பத்தான் எல்லாருக்கும் உடம்பில் சூடு, தட்டுகிறவனை ஆர்கண்டா கொட்டுகிறவனை ஆர்கணடா அத்தனை கண்ணும் அவள்மீதே. உடம்பிலே கொஞ்ச துணிதான் இடுப்பிலே முழங்காலுக்கும் மேலேத் தெரிய ஒரு பாவாடை எல்லாத்திலுமே ஜிகினா ஜொலிக்கிறது. முகம் நிறைய அரிதாரம்.

உதட்டுக்கு சிவப்பும் கண்ணுக்கு மையும் நெந்திக்கு பொட்டும் வைத்துக் கொண்டு ஆடறாபாருங்கள் ஆடத் தெரியாதவனுக்கும் ஆட்டம் வருகிறது. ஆள் சும்மா நாலடிக்குத்தான் இருக்கிறாள். நல்ல வாலிப்பான உடம்க்காரி போன வருஷம் தான் வயசுக்கு வந்தாளோ என்னமோ அது ரெண்டும் எலுமிச்சங்காய் பெருசுக்கு. ஆடுகிறாள், பாவாடை குடை ராட்டினம்போல் சுத்த உள்டிராயர் எல்லாருக்கும் அப்பட்டமாய் தெரிய கொலேர் சிரிப்பு குதிக்கிறாளா, பறக்கிறாளா, பாய்கிறாளா, தாவுகிறாளா, எம்புகிறாளா பந்து கணக்காய் என்ன வித்தை பண்ணுகிறாள்? முதுகை வளைக்கிறாள், தோளை ஒடிக்கிறாள், இடுப்பை குலுக்குகிறாள் கைகைள நீட்டி கீட்டி பாவனை பண்ணுகிறாள். பையன்கள் சொக்கிப் போகிறார்கள் கிழவன்களுக்கும் அந்த கதிதான் இப்போது அவளுக்கு தோதாய் குறவன் ஆட அவள் ஆட தட்டுகிறவனுக்கும் கொட்டுகிறவனுக்கும் சூத்துகிழிகிறது. ‘போடு அசக்கு டப்பா... அசக்கு டப்பா... அசக்கு டப்பா ...’ ஒருத்தரை ஒருத்தர் இடித்துக் கொண்டும் புடித்துக் கொண்டும் எல்லாரையும் சூடேத்துகிறார்கள். ஒரு வழியாய் ஆட்டம் முடிந்த பின் பாட்டு, பாட்டோடு ஆட்டம், ‘சந்தையில மீனு வாங்கி புள்ள, ...சலசலன்னு கொளம்பு வச்சி, கொத்தமல்லி பந்தலன்னு இப்ப குத்துராண்டி டப்பாங்குத்து...’ என்று பாடிமுடித்ததுதான் தாமதம் தாளக்கார னெல்லாம் சேர்ந்து, ‘சளக்சளக்சளக்... சளக் சளக்சளக்... சளக்சளக்சளக்... கென்று தட்டி முடித்ததும் குறவன் பாடுகிறான். இப்படியே ஆட்டம் நீண்டு போகிறது. பொம்பளைகளெல்லாம் கொலேர்’ என்று சிரித்துக் கிடக்கிறார்கள். அம்மன் அனாதையாய் தெருவில் நிற்கிறது ஐயர் ஆட்டத்தை பார்க்க முடியாமலும் தூக்கத்தை கட்டுப் படுத்தமுடியாமலுமாய் இருக்கிறார். லைட்டுகள் காத்தில்லாமல் பவர் குறைந்திருக்கிறது.

ஒரு வழியாய் ஆட்டமும் அம்மன் புறப்பாடும் விடியற்காலை ஐந்துமணி சூருக்குத்தான் முடிகிறது. கோயிந்தா போட்டு அம்மனை கோயிலினுள் தூக்கிக் கொண்டு போய் இறக்கி வைத்துவிட்டு அம்மன்கோயில் கதவை சாத்துகிறார்கள். அடுத்து ஆட்டுக்கிடா வெட்டு படலமாதலால் அம்மனுக்கு கவுச்சி பிடிக்காதில்லையா அதனால்தான்!

இப்போது ஆட்டுகிடா வெட்டுபடலம் தொடங்கிறது.

இளையமுனீஸ்பரன் எதிரிலிருந்த திரிசூலத்தில் மூன்று எலும்மிச்சைப்பழம் செருகப்பட்டுள்ளது. அரைத்தன்னை மர உயரத்துக்கிருக்கிற இளைய முனீஸ்பரனுக்கு அவன் உயரத்துக்கு எலும்பிச்சைப்பழ மாலையும் ரோசாப்பு மாலையும் போட்டு செகஜோதியாய் இருக்கிறது. அவனைப் பார்க்கவே குழந்தைகளுக்கு பயமாக இருக்கிறது. சில பெரியவர்களுக்கும்கூட அந்தகதிதான். காலடியில் போட்டு மிதித்துக் கொண்டிருக்கிற மனிதத்தலை. ஒரு கையில் கத்தி இன்னொரு கையில் கேடயம் கண்களை விரைத்துக் கொண்டிருக்கிற பதுவிசான முகத்தில் சிங்கப் பற்கள் ரெண்டும் வெளியேத தெரிகிற கம்பீரம்.

இதோ அவன் முன்பதாக சாம்பசிவத்தின் பலி கொடுக்க வேண்டிய ஆட்டுக்கிடா கழுத்தில் பூப்போட்டு மஞ்சள் தண்ணீர் தெளித்து தயாராய் நிற்கிறது. பூசாரி வெட்ட வேண்டிய வீச்சருவாளுடன் அவரும் அந்த மினியாண்டவன் கணககாய் கண்களை விரைத்துக் கொண்டு அருவாளை தூக்கி வெட்டத் தயாராய் இருக்கிறார்.

அதோ ஆட்டுக்கிடாவின் தலை ஒருபக்கமாகவும் முண்டம் ஒரு பக்கமாகவும் விழுகிறது. பீய்ச்சி அடித்துக் கொண்டிருக்கிற ரத்தம் தரையை நனைக்கிறது. முண்டம் மட்டும் துடித்துக் கொண்டிருக்க தலை ‘ப்பே’ ஆகிவிட்டது. பூசாரி அவசர அவசரமாய் ஓடிப்போய் கெடாவின் கால் ஒன்றை அதன் முட்டியுடன் நறுக்கி அந்தக்காலை தனியாய் கிடந்த தலையின் வாயைப்பிளந்து குறுக்கு வசத்தில் வைக்கிறார். இப்போது மறுபடியும் ஆட்டுக்கிடா வெட்டு படலம். ஒவ்வொரு கவுச்சிசாமிக்கும் ஒவ்வொரு கெடா. மொத்தம் நான்கு கெடாக்களுக்க இன்றைக்கு முழித்த நேரம் சரியில்லை. எல்லாம் அம்பேல் ஆகிவிட்டது.

சாம்பசிவத்தின் வீட்டு முன்பதாக கறிச்சோறு சாப்பிட ஊர் ஜனமே திரண்டுவிட்டது. குடிக்கிற ஆசாமிகளெல்லாம் எல்லை மீறி குடித்துவிட்டு மிகைப்பட்ட நடிப்போடு தெள்ளுதமிழ் பேசிக்

கொண்டிருக்கிறார்கள். அண்ணன் தம்பி முறைக்காரர்களெல்லாம் மாமன் மச்சான் முறை கொண்டாட ஆரம்பித்தார்கள். மாமன் மச்சான் முறைக்காரர்களெல்லாம் அண்ணன் தம்பி முறைக்காரர்களானார் கள். பத்து நாட்களுக்கு முன்பிருந்தே சாம்பசிவம் போடப் போகிற கறிச்சோத்தை நினைத்து நினைத்து ஏக்கப்பட ஆரம்பித்து விட்டார்கள். ஊராத நாக்கு இல்லை. பாவம் கோபால்குச்சி ராயரும் முத்துக் கண்ணுவிசுவராயரும் அவர்கள் இருவர் குடும்பத்தார் மட்டும்தான் இந்த விருந்துக்கு வரவில்லை. மற்ற எல்லார் குடும்பமுமே ‘உள்ளேன்ய்யா’ தான்.

தெரிநது தான் சாம்பசிவம் நாலு கெடா வெட்டினான். இவர்கள் இருக்கிற நிலையைப்பார்த்தால் இது போதுமோ போதாதோ. இந்தப்பெரிய விருந்துக்கு கமலா வராமல் போனாளே என்ற வருத்தம்தான் சாம்பசிவத்தை வாட்டிக் கொண்டிருக்கிற விஷயம். கமலா அவன் திருமண விருந்துக்காக வெட்டுபட வேண்டிய கெடாக்கள் இப்படி அனாவசியமாய் வெட்ட வேண்டிய சூழ்நிலையாகி விட்டதே என்று வருத்தப்படுகிறான். கறிச்சோறென்றதும் என்னமாய் நாக்கை தொங்கப் போட்டுக் கொண்டு வந்துவிட்டார்கள். இப்போது இவர்களுக்கு சாதி உறுத்தவில்லையோ? எல்லாரும் பங்காளிமுறை கொண்டாடாதது தான் பாக்கி மற்றப்படி ஒட்டோ ஒட்டோ என்று ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மட்டும் என்றைக்குமில்லாத கரிசனம் இந்த சாதிக்கெட்டப்பயல் மேல் எப்படி உண்டானது இவர்களுக்கு? கறிச்சோறு படுத்துகிற பாடோ... கறிச்சோத்தை சாப்பிட வருவதற்கு முன்னுமல்லவா பார்த்திருக்க வேண்டும் அப்போது மூளையை எங்கே வைத்துக் கொண்டிருப்பார்கள்?

எப்படியோ கறிச்சோறால் சாதி இல்லவே இல்லை.

இந்த கட்சித்தலைவர்களெல்லாம் ஏன்தான் தொண்டையை கிழித்துக்கொண்டு “சாதி இல்லை சாதி இல்லை” என்று கத்துகிறார்களோ தெரியவில்லை. இப்படி கறிச்சோறு போட்டால் போதும் இல்லாத சாதி இல்லையென்றே ஆகிவிடும்.

பெரிய பெரிய வாழை இலைகளில் கறிச்சோறு பரிமாறப்பட்டு விட்டது.

பெரிய தலைகள் எல்லாரும் முதல் பந்திக்கு சாப்பிட எழுந்து வீட்டுக்கள் போகிறார்கள். இலைகளை பார்க்கவே ஆசை கொள்கிறது. கறியிலேயே எத்தனை கறிவகைகள் கறிவருவல், கறிபிரட்டல், கறிஉருண்டை, கறிகோலா, கறிபொடுமாசு, எலும்புக் குழம்பு கொளுப்பேறிய ஆட்டுக்கும் அதற்கும் கறியை சாப்பிட்டு விட்டு கை கழுவினால் போகாது துணியால் துடைத்தால் தான் பிசுக்குப்போகும்.

சாம்பசிவம் தர்பார்பண்ணுகிறவன் மாதிரி நின்றுகொண்டு அந்த இலையில் அதை வை இந்த இலையில் இதை வை என்று சொலலிக் கொண்டிருந்தான்.

எல்லாரும் இலையில் குந்துகிறார்கள்.

சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் சாம்பசிவம். இந்த இடத்தில் தனக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டுமென்றுதான் அவன் துணிச்சலாய் இருக்கிறான். இத்தனை நாளுமாய் அவனுக்குள் பொங்கிக் கொண்டிருந்த கோபமெல்லாம் உடைத்துக் கொண்டு பிரவாகமாய் சீறி வருகிற மாதிரி அது இருகிறது.

“மாமா.... சாம்பசிவம்தான் கூப்பிட்டான்.

பெரியவீட்டு நாயக்கரையும் தருமையாநாட்டாரையும் ஊரில் முக்கால்வாசிப் பேர்களையும் மாமா முறை வைத்து கூப்பிட்டுத்தான் அவனுக்குப் பழக்கம். அவன் அப்படி கூப்பிடும் முறைக்காரர்களெல்லாம் இங்கே பந்தியில் குந்தியிருக்க அவன் யாரைக் கூப்பிடுகிறான் என்று புரியாமல் பந்தியில் இருந்த அத்தனை பேருமே சாப்பிட சோத்தில் வைத்த கையை எடுத்து விட்டு அவனை அன்னாந்து பார்த்தார்கள். திட்டமாய் அவன் யாரைக் கூப்பிடுகிறான்?

ஏனோ அவன்முகம் இப்போது இறுகிப்போய் ரத்தமாய் சிவக்கிற மாதிரி எல்லாருக்குமே இருக்கிறது.

"ஆர கூப்ட்ட? - பெரியவீட்டு நாயக்கர் கேட்கிறார்."

"ஒங்க எல்லாரையும் தான்."

"எல்லாரையுமா?...

"ஆமா எல்லாரையும த்தான் கூப்ட்டன்"

"எதுக்குடாப்பா... மாமனுங்களுக்கு பணம் கிணம் வய்க்கப் போறியா... யார்ராப்பா பந்தியில பணம் வச்சாத்தான் சாப்டுவன்னு ஆராச்சும் சொன்னீங்களா?"

"அப்புடியெல்லாம் ஒண்ணுமுல்லையே... மாப்ளக்கி கல்யாணமா நடந்துருக்கு பந்தியில பணம் வச்சி சாப்ட"

"பின்ன எதுக்கு கூப்ட்ட?"

"ஒண்ணுமுல்ல... பந்தியில எல்லாரும் சாப்ட குந்திட்டீங் களே... இப்ப ஏ எளப்பமான சாதியப்பத்தி நெனச்சிகிட்டு ஒருவேள எல்லாரும் சாப்டாம கொள்ளாம எந்திரிச்சிப் போயிருவீங்க ளோன்னு பயந்து போய்தான் கூப்ட்டன்".

பதுவிசாய்த்தான் அவன் சொல்லிக்கொண்டிருக்கிறான் என்றாலும் நெஞ்சில் ஓங்கி அடித்த மாதிரி இருந்தது அது. நாயக்கர் யாரும் காணாத விதத்தில் நாட்டாரின் தொடையைக் கிள்ளி 'பய எங்க வர்றான் பாத்தியா' என்கிறார் மெல்லமாக.

"புரியிது"

"என்னா?"

"ஏ வூட்டுக்கு சாதில ஒசந்தவங்க எல்லாரும் வந்துருக்கீங்களே சாப்புர்றத்துக்கு சாதி பாக்கலையான்னு கேக்கப் போறான்."

"சரி கேட்டான்னா என்ன சொல்வீங்க?"

"இஞ்ச போட்றுக்க சோத்த ஆரும் திங்கப்புடாதுன்னு சொல்லிபுட்டு எலையில வாடிச்சிறுக்க சோறு பூராத்தையும் அவனவுட்டே திங்கச்சொல்லி அடிப்பன்"

"மாட்டன்னா?"

"மாயாண்டிக் கொத்தப்பிரியன் மத்தத கவனிச்சிக்குவான்"

"சாம்பசிவம், என்னாத்துக்கு ஒனங்கு இப்ப திடீருன்னு இந்த சந்தேகம்?"

"சோறு திங்கிறத்துக்கும் சாதி பாத்துட்டீங்கன்னா ஆக்குனது பூரா ஆரவுட்டு திங்கச் சொல்றுதுன்னு நா தவிக்கனுமுல்லியா..."

"சோத்துலல்லாம் என்னாடா சாதிமயிரு கெடக்கு... கொளுப் பேறுன ஆட்டவெட்டி சோத்த போட்டுபுட்டு திங்கபேற சமயத்துல நட்டுவம் பேசிகிட்டிருக்க இஞ்ச என்னடான்னா வச்சிருக்க சாராயம் கிர்ர்ருன்னு ஏறிகிட்டிருக்கு" மயாண்டி சொல்கிறான்.

"நானா பாக்குறன் நீங்கதான் பாக்குறீங்க"

"சரி இப்ப எதுக்கு ஒனக்கு இந்தப் பிரச்சனை?" - நாயக்கர்.

"சொல்றன்னு தப்பா நெனச்சிக்கப்படாது பெரிய வூட்டு காரவுங்க"

"சொல்லு"

"சாப்பாட்ல சாதிபாக்காத நீங்க மித்ததுலயும் பாக்காமருந்துட்டா என்னா?"

"எலே சாம்பசிவம் நீதான் பேசுறியா இல்ல தங்கவேலுப்பய ஒன்ன இப்டி பேச வச்சிருக்கானாடா?"

"ஆரும் பேசவய்க்கல நானாத்தான் பேசுறன்"

"மச்சா, என்ன இப்ப அந்த மயிராண்டி கிட்டப்போயி பெருசா பேசிகிட்டிருக்கீங்க... படவா நல்லி எலும்ப படிக்கப்போற நேரத்துல நய்யாண்டி பேசிகிட்டிருக்கான்... எந்தரிச்சி வந்தன்னா முதுவுத்தோல உரிச்சிபுடுவன் பந்தியில் குந்தியிருக்க நிலையிலேயே நாக்கைத் துருத்திக்கொண்டு ஒருத்தர் சத்தம் கொடுக்கிறார். மீசை துடிக்கிறது"

"முண்டாதீங்க அண்ணே.. நானும் மாமாவும் பெருசா என்னத்த பேசிபுட்டோமுன்னு துள்ளிகுதிச்சு கிட்டு வர்றீங்க... அண்ணனுக்கு எலையில வச்சிருக்க நல்லிபத்தல"ன்னா சொல்லுங்க கொண்டாரச் சொல்றன் கேட்டு வாங்கிச்சாப்டுங்க.

"எலே துமுரடியாவா பேசுற... வந்தன்னா சூத்துக் கறி பிஞ்சிப் போயிரும்".

"சரி மாப்ள... நா அவங்கிட்ட பேசிகிட்டிருக்கப்ப நீங்க யா முண்டிமுண்டிகிட்டு வர்றீங்க... நீங்களும் அவனும் பாத்துக்கறன்னா சொல்லுங்க நாங்க ஒதுங்கிக்கிறோம்" நாயக்கர்.

"என்னத்த மாமா நா பெருசா பேசிபுட்டன். இவுருக்கு கோவம் வர்து..." - சாம்பசிவம்.

"சரி அவன் ஒண்ணும் பேசலையாம் நீங்க சூத்தும் வாயும் பொத்திகிட்டு கம்முனுருங்க மாப்ள நா பேசிக்கிறேன்... சொல்லுடா சாம்பசெவம் நீ இப்ப என்னா சொல்ல வர்ற?"

"நா ஒண்ணும் சொல்ல வர்ல... மாமாவும் ஊராரும் வேணும் வெளையுமுனு நெனச்சித்தான் ரெண்டு கெடா பத்தாதுன்னு நாலு கெடா வெட்டி கறிச்சோறு போட்ருக்கன்"

"சரி ஆருடா இல்லன்னு சொல்றா... வெயில சோத்த போட்டுபுட்டு திங்கவுடாம அடிச்சிகிட்டிருக்க என்னா காரணம்?"

"அச்சச்சோ அப்புடியெல்லாம் ஒண்ணுமுல்ல மாமாவ்... நீங்கள்ளாம் மனம் ஒப்பி சாப்டணும்னுதான் இம்புட்டு கெடா வெட்டுனன்... எனக்கு இந்தூருல எந்த அங்காளி பங்காளிருக்கான் நா இம்புட்டு கெடா வெட்ட".

"பங்காளியப்பய இல்லாட்டி என்னாடா... பறப்பய கூடயா இல்லாமப் போயித்தான்... அவன் கூப்ட்டு சாப்ட சொல்ற"

"சரி அவன் சாப்ட்டாத்தான் என்ன மாமா அவனும் மனுஷந்தான..."

"ஆருடா சொன்னா மாடு உரிக்கிறப்பயல மனுஷன்னு?"

"நாஞ்சொல்றன் அவன் மனுஷன் அவன் மனம் ஒப்பி மாடு உரிக்காட்டி இஞ்ச நாறில்லப் போயிரும்."

"நாறுனா வாசம் புடிச்சிக்க"

"ஒங்களுக்கு வராதா?"

"ஏ நாட்டார் மச்சா... என்ன அங்குட்டு பெராக்கு சாப்பாட்ல குறியா... பய சொல்றான கேட்டீங்களா... நாற்ர வாசன நம்பளுக்கு வராதான்னு கேக்குறான்...?"

"பையனுக்கு ஆரு குடுத்த எடம்னு தெரியலையா முதுவுத்தோலு ரொம்பத்தான் அரிச்சிகிட்டிருக்காம்... எலே அப்டியா?"

"நாயத்தச் சொல்லப்போனா கேட்டுகிட்டு பேசுங்க நய்யாண்டி பேசுனா எப்டி?"

"யாருடா நய்யாண்டி பேசுறவன்... சாப்ட ஆரமிச்சிருந்தா இந்நேரம் மோரு சோறுல்ல தின்னுகிட்டிருக்கணும்... சாப்பாடு ஆறிப்போயி ஈ மொக்கிது... நீ என்னான்னா கூத்தடிக்கிற"

"நா ஒண்ணும் கூத்தடிக்கல... நீங்க தான் அடிக்கிறீங்க... மாமாவ்... சாதியே இல்லாதப்ப சாதிக்குள்ளயே சாதி வேறப்பாக்குறீங்க"

"ஆர்டா இல்லன்னா?"

"நாந்தான்"

"எலே....

"பின்ன என்ன மாமா... பொஸ்தகத்துல படிக்கல... நாடாவம் பாக்கல... சினிமாலகூட பேசுதே... தலைவருங்கமைக்கு வச்சி வேற சொல்றாங்க..."

"அம்புட்டும் பொய்யிடா ஊர ஏமாத்தச் சொல்றான்... ஒன்ன மாறி ஆளுங்கள பித்துக்குளி பயலாக்குறான்... சாதி உண்டுடா...!"

"மாமாவ்...

"சாதி உண்டுடா...

"மாமாவ் துமுரடியா சொல்லாதீங்க... தலைவருங்க கண்டா ஒங்க நாக்க அறுத்துபுடுவாங்க."

"அவங்கெடக்காண்டா மயிராண்டி நானும் இந்த கிராமத்துக்கு தலைவன்தான் சொல்றன் கேட்டுக்க சாதி உண்டுடா... சாதி உண்டு மாடறுககுற பறயங்குள்ள எத்தன சாதின்னு தெரியு

மாடா... குளிவெட்ற பள்ளங்குள்ள எத்தன சாதிருக்குன்னு ஒனக்குத் தெரியுமாடா... தலைவனும் தலைவன் அவனுக்கென்னாத்தடா மசுரத்தெரியும... அப்பன் பாட்டன் பாட்டனுக்கும் பாட்டங்காலத் துலயே சாதிய ஏ பிரிச்சி வச்சன் தெரியுமா... எல்லாம் ஒரு வகையில அடங்கனுமுன்னுதான் நானும் நீயுமா சாதிய பிரிச்சிவப்சோம். ஏ மேல கோவப்பட்டு ஆவாதுடா தம்பி. நா இம்புட்டோண்டு கடுவு இன்னிக்கி ஒன்னாறி ஆளுங்க துமுரடியா பேசப்பேசத்தான் அது வளந்து கிட்டிருக்கு சாதியப்பத்தி தெரியாதவனுக்கெல்லாம் தெரியவச்சிபுட்டான்... எலே மயிரு ஆரு என்ன பேசுனா என்னாடா கள்ளன் கள்ளந்தான், பள்ளன் பள்ளந்தான் பாப்பான் பாப்பான்தான் போடா மயிரு".

"இப்டியெல்லாம் துமுராபேசி இல்லாத சாதிய இருக்குன்ன நம்பவச்சிர முடியாது மாவோவ்... ஆட்டிபுடுவான் ஆட்டி... இன்னிக்கு ஒலகம் பூரா சாதி அளிஞ்சி கிட்டு வர்றத்த கண்ணால பாக்காமயாருக்கீங்க.. அன்னிக்கி பஸ்ஸுல குந்துன பறையன் ஐயாவ கண்டுகிட்டா எந்திரிச்சி எடங்குடுத்தான் இப்ப குடுப்பானா? அன்னிக்கு தெருவுக்குள்ளார நடக்கவே ஆர் என்னா சொல்ல முடியும்... இதெல்லாத்தையும் தலைவரும் கச்சியும் தான் மாத்திருக்கு மறுக்கமுடியுமா மாமாவ்.."

"தோசிப்பயல... இப்டியெல்லாம் சப்பக்கட்டு வச்சிப்பேசி சாதிய இலலாம ஆக்கிப்புடலாம்னுட்டு மட்டும் பாக்காத... அது ஒரு நாளும் முடியாதுடா தம்பி"

"மாமாவ் நாக்கடக்கிப்பேசுங்க... ஒண்டிக்காரன்னு நெனச்சிகிட்டு வாயில வந்ததல்லாம் பேசாதீங்க... நானும் ஆம்பளத்தான் ஒங்களமாறி ரோஷம் உள்ளவந்தான்... ஏ ஒடம்புலயும் நல்ல ரத்தம் ஓடுது"

"படவா என்னடா சொல்றான் ஒதைங்கடா அவன"

"ஆசருந்தா அதச்செய்யிங்க.. ஆனா இல்லாத சாதிய இருக்குன்னு மட்டும் நம்பாதீங்க."

பந்தியில குந்தியிருந்த அத்தனைபேரும் எழுந்து அவன் மீது பாய்கிறார்கள். இத்தனை நேரமும் நாயக்கரின் கட்டளைக்காகத் தான் பொறுமையாக காத்துக் கொண்டிருந்தது போல் இருக்கிறது அது. இலைகளில் பரிமாறப்பட்ட பறிச்சோறு சிதறுகிறது. அவன் கத்துகிறான். அவனது தாயார் பதஸ்ட்டத்தோடு ஓடி வருகிறாள், "ஏம் புள்ளய வுட்றுங்க... ஏம் புள்ளய ஒட்றுங்க".

"கம்னாட்டி எம்புட்டு துமுருருந்தா என்னுகிட்டயே நின்னு பேசுவான் எலே ரொம்ப அடிச்சிபுடாம வுட்டுபுட்டு வாங்கடா செத்துப்போயிருவான்."

"சாவட்டும் நாளக்கி பாலு தெளிச்சிபுடுவோம்... இந்தப்பயல உசுறோட வுடப்புடாது"

"ஆமாண்டா போடா... ஒண்டிக்காரப்பயல ஊரு பயலே சேந்து அடிச்சான்னு பேருவரும் வாகரக்கி இது அளகா... இவன வுட்டுபுட்டு வாங்கடா அடிக்க வேண்டியப் பய இன்னொருத்தன் இருக்கான் அவனல்ல தீத்துக்கட்டணும் நாயக்கர் சொல்லிவிட்டு வெரசாய் கிளம்புகிறார்,"

"கறிச்சோறு ஆசையில வந்தம் இஞ்ச என்னடான்னா...

"கவலப்படாதடா மாப்ள ஒனக்கு கறிச்சோறு தான வேணும்.. நாட்டார் மச்சா, இன்னிக்கு வூட்டுக்கு ஒரு கெடா புடிச்சாந்து மினியாண்டவனுக்கு வெட்ட ஏற்பாடு பண்ணுங்க... கெடா இல்லாதவங்களுக்கு நா காசுபோட்டு வாங்கித்தாரேன்... மினியாண்டவனுக்கு நாலு கெடா வெட்டுனா போறுமாய்யா... ஒரு கெடையாடே காவுகேக்குறான் இன்னிக்கே அம்மன் தோப்புக்குள்ள அம்பது ஆட்டோட கறி வேவனும் மீந்துப் போனக் கறிய உப்புக்கண்டம் போட்டுத் திம்பம் நாயக்கர் ஆருன்னு நெனச்சான் வந்தாருகுடிப்பய... ம்ம். சூட்டோடு சூடா காரியம் ஆவனும்."

"நாயக்கர் ரொம்பத்திமிராக பேசிக்கொண்டே செல்வது சாம்பசித்தின் காதில் விழாமல் இல்லை... போங்கடா நாய்ங்களா

வந்தாரு குடிப்பய ஆருன்னு காமிக்கிறேன் என்று சொல்வது போல் அவர்களைப் பார்க்கிறான் கோபம் வெறியாகிறது. பற்களை கடிக்கிறான். ரத்தமும் வலியும் அவனுக்கு பொருட்டாய் தோன்றாதது மாதிரியிருக்கிறது".

"சாதியாபாக்குறீங்க... எலே இந்த ஊருக்குள்ள கமலாவோட நாவாளத்தான் போறன் மீசவச்ச ஆம்பளன்னா அப்பப்பாருங்கடா... வந்தாரு குடிப்பய ஆருன்னு அப்பத்தான் தெரியும்"

தங்கவேலுவை எப்பாடுபட்டாவது உடனடியாய் சந்தித்துவிட வேண்டுமென்று நினைத்துக்கொள்கிறான். அதே வெறியோடு வெளியேறிப் போகிறான். அடிப்பட்ட பாம்புக்கு கோபம் கொறட்டில்.

ஆக்கிய கறிச்சோறு தரையில் நாசமாய் கிடக்கிறது. தாயார் காரிகல்லாய் நிற்கிறாள்.

நாயக்கரின் திட்டப்படி இன்றைய தினத்தில் வீட்டுக்கு ஒரு ஆட்டுக்கெடா என்ற விகிதத்தில் இளைய முனீஸ்பரனுக்கு காவு கொடுக்கப்பட்டது. பூசாரிக்கு நல்ல வேட்டை தலைக்கறி அவருக்கல்லவா? இளைய முனீஸ்பரனுக்கு எதிரே ரத்தக்குளம்.

அம்மன் தோப்பில் ஆடுகளை உரித்து அங்கேயே கறிசமைத்து கறிச்சோறு சாப்பிட்டார்கள் ஊரார்கள்.

இந்தக் கூத்தில் விசுவராயரும் இருந்தார்.

ஒதுக்கப்பட்ட கோபால்குச்சிராயரும் சாம்பசிவமும் தங்கவேலுவையும் தவிர மித்தபேருக்கு கறிச்சோறு.

'நாயக்கர்ன்னா நாயக்கர் தான்' - சொல்லாத வாய் இல்லை.

"வந்தாரு குடிப்பய செத்த நாளிக்குள்ள ஆக்குன கறிச்சோறை சாப்டவுடாம கூத்துக்கட்டி அடிச்சான.... இப்ப என்னடா சொல்லுவான்... வாகரக்காரன் நெனச்சதச் செய்வான்னு

தெரியாமப் போச்சு கம்னாட்டிக்கி... எலே இன்னம இந்த ஊருக்குள்ள அடுத்தக் காவு ஆட்டுக்கெடா இல்லடா... அவந்தலையோ அந்த தங்கவேலுப்பய தலையோ தான்...?"

கறிச்சோறை சுவைத்துக்கொண்டிருந்த முத்துக் கண்ணு விசுவராயருக்கு அந்த சொல் நெந்திப் பொட்டில் அடித்த மாதிரி யிருக்கிறது. கையிலெடுத்த சோத்துருண்டையை விழுங்காமல் அவனைப் பார்க்கிறார். மாயாண்டி கொத்தப்பிரியன் குடித்துவிட்டு கண்மண் தெரியாமல் உளறிக் கொண்டிருக்கிறான்.

குடித்துவிட்டு உளறுகிறான் என்று நினைத்துக் கொண்டு மறுபடியும் சாப்பிட ஆரம்பிக்கிறார் விசுவராயர்.

**லேசாய் வளை குலுங்க அவனுக்கு சிலிர்க்கிறது. துன்பமே பறந்தது போலிருக்கிறது. மூங்கில் தோப்பில் இருந்து குயிலோசை யொன்று விட்டு விட்டு கேட்கிறது.**

# 19

வாய்க்கால் வரண்டுபோய் கிடக்கிறது. முன்னொரு நாள் கமலாவை இதே இடத்தில் சந்தித்தபோது குடமுருட்டி வாய்க்காலின் இரு கரையினையும் தழுவித் தளும்பியோடிக் கொண்டிருந்த தண்ணீர் இப்போது சுத்தமாய் இல்லை. வாய்க்காலினுள் மணலும் வண்டலும் களிமண்ணும் சேர்ந்து ஈரப் பசையெழும்பிக் கிடக்கிறது. தாக்குருத்துகள் மட்டுமே உள்ள வயல்களிலிருந்து ஈனஸ் வரத்தில் அரிக்காடை கள் கத்துகின்றன. சூரியப்பந்து மேற்கு வானில் மறைந்து வெகுநேரமாகி விட்டது. ரோட்டில் ப்பபப்பபே... ப்பபப்பபே... ப்பபப்பபே.... வென்று செம்மறி ஆட்டு கூட்டமொன்று போவதை பின் தொடர்ந்து, 'ஹே ரிய்யாவ்... ஹேஹே ஹே ரிய்யாவ்' வென்று குச்சிகளை ரோட்டில் தட்டி ஆடுகளை ஓட்டிக்கொண்டு போகும் கீதாரிகள். அவர்களைத் தொடர்ந்து கடக்கடக் கென்று வரும் பாரம் சுமந்த வண்டிகள். வண்டியைப் பின்தொடர்ந்து கனத்த ஜோடுகளோடு தண்டட்டி ஆட நடந்துவரும் இடைச்சிகள், மாசி தொடங்கினவுடன் மறுபடியும் பிழைப்புக்காக ராமநாத புரத்திலிருந்து தஞ்சை மண்ணை நோக்கிவரும் அவர்கள் மண்ணை விட்டு கிளம்புவது ஆடி ஆவணியில் வாய்க்கால்களில் தண்ணீர் வந்த பிற்பாடுதான். அது நாள்வரை அவர்களக்கு இந்தமண்தான் தாய்பூமி.

மாலைநேர பூஜைவேளை போல காத்தாயி அம்மன் கோயில்மணி ஒலித்துச் சிதறுகிறது. எங்குபார்த்தாலும் ஓங்கி

வளர்ந்த நாணற்புதர்கள். சற்று பயம் கலந்த அச்சத்தை தரக்கூடிய அமைதி.

அதோ கமலா கையில் பையுடனும் பதஸ்டமான முகத்துடனும் ஓடிவந்து வாய்க்காலினுள் மறைந்து கொள்கிறாள். ஏற்படக்கூடிய எந்த முடிவுக்கும் துணிந்தே அவள் இங்கு வந்திருக்கிறாள் என்று சொல்ல வேண்டும். இன்னும் சற்று நேரத்திற்குள்ளாக இங்குவரும் சாம்பசிவத்துடன் அவள் ஓடத் தயாராகி விட்டாள். ஓடிப்போய் அவனுடன் மனைவியாகவும் வாழத் தயாராகி விட்டாள்.

எப்படி வந்தது சாம்பசிவத்துக்கும் கமலாவுக்கும் இப்படி ஒரு துணிச்சல்? தங்கவேலு கொடுத்த உற்சாகம் தான். ‘தன் தங்கை இன்னொருத்தருடன் உறவு கொண்டிருக்கிறாள்’ என்ற விஷயத்தைக் கூட கமலாவை நிச்சயம் பண்ணிவிட்டுப்போன இடத்திற்கு லெட்டர் எழுதிப் போட்டுவிட்டான் தங்கவேலு. இதனால் ஊரில் மீண்டும் புகைச்சல் கிளம்ப ஆரம்பித்தது. தங்கவேலுவின் வேலை தான் என்று அவர்களுக்கு புரியவும் ஆரம்பித்தது.

மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் தருமையாநாட்டாரை வசமாய் பிடித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள் இப்படிப்பட்ட எடத்துலருந்து எதுக்காவ சம்பந்தம் கொண்டாந்தீங்க... ஆன செலவுக்கும் மான பங்கத்துக்கும் ஒங்கள ஒரு வளி பண்ணாம வுடமாட்டம் என்று அவர்கள் வேறு கச்சிபோட ஆரம்பித்தார்கள். நாட்டார்போய் நாயக்கர் காலை பிடித்துக் கொண்டார். இது ஒங்களுக்கு மட்டும் நேர்ந்த அவமானமில்ல மச்சான் ஊருக்கும் தான்... இதுக்கெல்லாம் காரணமான தங்கவேலுவையோ சாம்பசிவத்தையோ கண்டதுண்டமாக்கி புடுங்க நாயக்கர் சாவியை முடுக்கிவிட்டார். மாயாண்டிக் கொத்தப்பிரியன் நாயக்கர் சொன்னதற் கெல்லாம் தன்னை தயார்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டான்.

விசுவராயர் இடிந்தே போய்விட்டார் தங்கவேலை தானே வெட்டிப்போட்டுவிட வேண்டும்போல் கோபம் உண்டாகி விட்டது. எத்தனை செலவு பண்ணி காரியம் முடியப்போகிற

நேரத்தில் பயல் இப்படி ஒரு காரியம் பண்ணி விட்டானே. அவனைக் கண்டால் கடித்துத்துப்பி விடுவார்போல ஆத்திரம் கொள்ள ஆரம்பித்தார்.

தங்கவேலுவோ சாம்பசிவமோ ஊரில் புகைச்சல் கிளம்ப ஆரம்பித்ததற்கும் பின்னால் ஊரில் தலைகாட்டாமல் பதுங்கிப் பதுங்கித்தான் வாழ ஆரம்பித்தார்கள் எங்கே சாப்பிடுகிறார்கள். எங்கே தங்குகிறார்கள். எங்கே தூங்குகிறார்கள். இப்படிப்பட்ட ேள்விகளுக்கெல்லாம் பதில் யாருக்குத் தெரியும்?

மாயாண்டிக் கொத்தப் பிரியன் எப்போது பார்த்தாலும் அருவாளும் கையுமாகத்தான் அலைந்து கொண்டிருக்கிறானாம். கண்களில் விளக்கெண்ணை போட்டுக் கொண்டுதான் அவர்களை தேடுகின்றானாம். அப்பாகாரரர் பித்துப்பிடித்தேப் போய்விட்டா றாம். மகள் கல்யாணம் தேங்கிப்போனது ஒருபுறம், தங்கவேலு எங்கேயிருப்பான் என்ற கவலை மறுபுறம். பூரணி சாப்பிடுவதுமில் லையாம் தூங்குவதுமில்லையாம் சதாநேரமும் அழுகிற முகமும் புலம்புகிற வாயுமாகத்தானிருக்கிறாளாம். இதெல்லாம் தங்கவேலு யார் மூலமோ தெரிந்து கொண்ட விஷயங்கள்.

தங்கவேலுவும் சாம்பசிவமும் எங்கேயிருக்கிறார்கள் என்ற சங்கதியெல்லாம் கமலாவுக்கு மட்டும் தான் தெரியும். தங்கவேலு தான் ஊரைவிட்டுப் போவதற்கு முன்பதாக அந்த ரகசிங்களை கமலாவிடம் சொல்லி விட்டுப்போனதோடு ஒருநாளைக் குறிப்பிட்டு துணிமணிகளோடு அந்திசாயும் நேரத்தில் குடமுருட்டி வாய்க்காலில் பதுங்கியிருக்கும்படியும் அந்த நேரத்தில் சாம்பசிவம் உன்னை வந்து சந்தித்து அமைத்துவருவான் என்றும் தைரியம் சொல்லிவிட்டுப் போயிருந்தான்.

அதன்படிதான் கமலா இதோ குடமுருட்டி வாய்க்காலினுள் சாம்பசிவத்தின் வரவுக்காக பதுங்கிக் காத்திருக்கிறாள்.

கமலா தன் உயிரையே வெறுத்துவிட்டுத்தான் இந்த இடத்திற்கு வந்திருக்கிறாள் என்று சொல்ல வேண்டும் அப்பா எங்கோ வெளியில் போயிருந்த சமயமாகப் பார்த்து பூரணிக்கும்

தெரியாமல் ஒரு பையில் தனக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்துக் கொண்டு வந்துவிட்டாள்.

நேரம் ஆக ஆக தன்னைக் காணாமல் அம்மா தேடிக் கொண்டு இப்படி வந்துவிடுவாளோ என்ற பதஸ்டம் ஒரு புறம். தான் பையுடன் கிறம்பி குடமுருட்டி வாய்க்காலுக்கு வரும்போது தன்னை யாரும் பார்த்திருப்பார்களோ என்ற நடுக்கம் ஒருபுறம் சாம்பசிவம் இன்னமும் வறாத கவலை மறுபுறம்.

சில்லென்று வீசுகிற வசந்தக்காற்றிலும் உடம்பு தெப்பலாய் நனைந்து போயிருக்கிறது. ஆனாலும் அந்த வேதனை தான் நினைத்த சாம்பசிவத்துக்கே மனைவியாகப் போகிறோம் என்ற சந்தோஷப்பில் ரணப்படுத்தாதது மாதிரியிருந்தது.

சுற்றிலும் பார்வையை ஓடவிடுகிறாள்.

யாரும் இல்லாதது மாதிரியிருக்கிறது. தனக்கும் தெரியாமல் யாரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ என்று வேர்க்கவும் செய்கிறது.

அந்தி வேளையின் அமைதியில் கோபால்குச்சிராயர் வீட்டுப் பக்கமிருந்து பெண்குரல் ஒன்று ஐயோ அம்மா... ஐய்யோ அம்மா... வென்று அலறிக்கொண்டிருக்கிற சப்தம் கேட்கிறது. கூர்ந்து உணர்கிறபோது அது நீலாவின் குரல் மாதிரியல்லவாயிருக் கிறது. திடீரென்று அவளுக்கென்ன வந்தது என்று இவள் நினைத்துக் கொண்டிருந்த போதுதான் சாம்பசிவம் வந்தான்.

அவனைப்பார்த்த ஷணத்தில் அவளது பதஸ்ட்டங்களும் கவலைகளும் எங்கோ பறந்துபோய் விட்டதுபோல் தானிருக்கிறதே ஒழிய அது இன்னும் முற்றுமாய் நீங்காதது மாதிரிதான் இருக்கிறது.

அண்ணன்கூட வந்திருக்குமோ என்றும் நினைத்துக் கொள்கிறாள்.

"கமலா...

-அவள் பேசவில்லை பொய்க்கோபத்துடன் அவனை ஊடுருவுகிறாள். முகத்தில் அழகு பொங்குகிறது.

இதையெல்லாம் ரசிக்கிற மனோபாவம் அவனுக்கு இல்லாததால் அவன் முகம் இறுகிக்கிடக்கிறது. ஆன்ாலும் அவளைச் சந்தித்த சந்தோஷத்தின் சாயல் அவன் முகத்திலும் லேசாய் தென்படத்தான் செய்கிறது.

"பேசமாட்டியா?"

"சொல்லு கமலா கோபமா?"

லேசாய் வளை குலுங்க அவனுக்கு சிலிர்க்கிறது. துன்பமே பறந்தது போலிருக்கிறது. மூங்கில் தோப்பில் இருந்து குயிலோசை யொன்று விட்டு விட்டு கேட்கிறது.

"ஆமா கோபந்தான்"

"எதுக்கு?"

"தெருவுல போறப்ப வர்றப்பக்கூட எங்க வூட்ட அன்னாந்து பாக்காமப் போனீங்களே அவ்வளவு பயமா?"

"ஆமா பயம்தான்"

"ஒரு ஆம்பளக்கி இப்புடி பயம் கூடாது... இப்பருக்க துணிச்சல் அப்பவுமுல்லருந்துருக்கணும்"

"பயந்தது ஒனக்காவத்தான் கமலா... என்னால ஒனக்கு ஒரு ஆபத்தும் வந்துடக்கூடாதுன்னுதான்"

"துணிச்சல் பத்தாத ஆம்பள ஒருத்திய நெனைக்காமருந் துருக்கணும்"

“எனக்கு தெரியாமப்போச்சு... ஆமா இப்ப எந்த துணிச்சலோட இஞ்ச வந்த கமலா?”

“எங்க அண்ணனும் நீங்களும் ஒங்க உயிரையே வெறுத்து எனக்காவ இந்த ஊருக்குள்ள அஞ்சி அஞ்சி வாள்றப்ப எனக்கு மட்டும் உயிர்மேல ஆசவருமா மச்சா...”

அப்புடியென்ன ஏஉயிரு கருப்புட்டியில வச்சி முடிஞ்சிருக்கு நானும் துணிஞ்சிபுட்டேன்.

அவன் பேசவில்லை. யாரும் பார்ப்பார்களோ பார்த்துவிட் டார்களோ என்ற சந்தேகங்களின் காரணமாக உடம்பு வியர்க்கிறது.

“அண்ணன் வர்தா மச்சா?”

“ரெண்டு பேருமாத்தான் வந்தம்... யார் கண்ணிலும் படல... அதோ அந்தப் பக்கத்தால ஒண்ணன் வந்து கிட்டிருக்காரு”.

“அச்சச்சோ.. அதமட்டும் தனியாவுட்டு ஏ இப்டி வந்தீங்க...? மாயாண்டிக்கண்ணுலயோ மித்த ஆர்கண்ணுலயோ ஆப்ட்டா சும்மாவுட மாட்டாங்களே...”

“அப்புடி ஆருபாக்கப்போறா... கவலப்படாத கமலா”

எனக்கென்னமோ பயமாருக்கு... மாயாண்டிப்பய எப்ப பாத்தாலும் அருவாளும் கையுமாத்தான் திரிஞ்சிகிட்டிருக்கான்... ஏங் கல்யாணம் நின்னுப்போனதுல ஊரே அல்லோல கல்லோலப் பட்டுப் போயிருக்கு... எங்க அப்பா எங்க அண்ணனக்கண்டா கடிச்சிதுப்பிப்புடுவாரோ இல்ல ஒனக்குத் தாண்டா ஏ உயிரு அபயமுன்னு உயிர வுட்டுடு வாரோத் தெரியாது... பித்து கொண்டு திரிஞ்சிகிட்டிருக்காரு... ஊருக்காரங்க அத்தன பேரும் எங்க அப்பாவ எடுத்துப்புடுற மாதிரி பாத்துகிட்டிருக்காங்க... இம்புட்டுலயும் நா அண்ணம் பேச்சக்கேட்டு ஒங்கக்கூட ஓடிவர வந்துருக்கன்.

கோபால்குச்சிராயர் வீட்டுப்பக்கமிருந்து சற்று நேரத்திற்கு முன் கேட்ட குரல் வலுக்கிறது. நீலா அவஸ்தை பட்டுக் கொண்டிருக்கிறாள் போல என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள் கமலா,

"என்ன சத்தம் கமலா?"

"நீலாவுக்கு என்னமோத் தெரியல"

"எனக்கு தெரியும்"

"என்னா?"

"புள்ள பெக்குது போலருக்கு குபீரென்றொரு சிரிப்பு. இருவருக்குமேத்தான் ஷணத்தில் துன்பங்கள் உடைந்து போனதுபோல் -"

"அவள ஆர் கெடுத்துருப்பான்னு தெரியுமா?"

"தெரியும்...

"ஆருமச்சா...?"

இப்ப வேண்டா கமலா... சொன்னா ஓங்க வாகர நாறிப் போயிரும்."

"சும்மாச் சொல்லுங்க...

"கேசு...

"அதாரு கேசு...

"பள்ளக்கேசு...

"மச்சா...!"

"இதான் ஒங்க வாகரையோட யோக்கிதி... நீலாவும் அந்தப் பயலு எத்தினியோ தடவ சந்திச்சி பேசுனத நா கண்ணால பாத்துருக்கன் ஆர்கிட்ட சொல்றதுன்னு எனக்குள்ளயே மூடிகிட்டன்".

அவளுக்கு நெஞ்சு வெடிக்கிறது இப்படியும் ஒரு பெண் அதுவும் வாகரைப்பெண் துணிவாளா... அதில் இருந்து அவள் மீளமுடியாதது போல் இருக்கிறாள்.

"கமலா...

"ம்... அவள் சிந்தனை உடைகிறது.

"எனக்கு நெடுநாளா ஒரு சந்தேகம்"

"சொல்லுங்க."

"வாகரக்கள்ளன்னா என்னா... மித்தக்கள்ளனுக்காவ அவுங்க எதுல ஒஸ்த்தி?"

"வாகரக் கள்ளனுங்க கெளரவம் பாப்பாங்க. கெளரவத்துக் காவ எதையும் செய்வாங்க. வயல்ல போயி வேல செய்ய மாட்டாங்க. அத மட்டம்ன்னு நெப்பாங்க.. சதா வெள்ளயும் சள்ளையுமாகத்தான் இருப்பாங்க... பொம்பளைங்கள வூட்டவுட்டு வெளியவுட மாட்டாங்க... வயப்பக்கமோ வாய்க்கப்பக்கமோ பொம்பளைங்கள பாக்கவே முடியாது. மித்தக்கள்ளனுங்க இப்புடியில்ல... ஆம்பளைங்களும் பொம்பளைங்களும் வயல்ல போயி வேல செய்வாங்க.. இதுக்கெல்லாம் போயி அவுங்க கெளரவம் பாக்கறதுல்ல. உழைப்பு ஒண்ணுதான் அவுங்களுக்கு மூல தனம். அதனால தான் வாகரக்கள்ளனுங்க மித்தக்கள்ளன மட்டமா நெனைக்கிறாங்க."

"இம்புட்டுதானா?"

“இன்னும் எம்புட்டோருக்கு அத்தினியும் சொல்ல நேரமுல்லியே...”

“ஔக்கிற கள்ளன் எளப்பக்கள்ளன்... கவுரவுத் துக்காவ ஊர ஏமாத்தரக் கள்ளன் நல்லக் கள்ளன்... நல்ல கூத்து கமலா.”

“அறுத்துக்கட்டிக்கள்ளன்னா ரொம்பமோசம்ன்னு நெனப்பாங்க.”

“ஆமா சின்னவயசுல அறுத்துப்போன அவள மறு எடத்துல கட்டிகுடுத்து வாழ வய்க்கிறது குத்தம். அவள கட்டிக்குடுக்காம யாருக்கும் தெரியாம ஊருமேலப் போயி நாற வய்க்கிறது நல்லது... நல்லாருக்கு ஒங்க வாகரயோட நாயம் கமலா... ந்தாலப்பாரு ஒங்க அண்ணங்கூட வந்துட்டாரு.”

கமலா அவன் காட்டிய திசையைப் பார்க்கிறாள். தங்கவேலு அப்போதுதான் தூரத்தில் வருகிறான் இவர்களைப் பார்த்துவிட்டு காட்டாமணக்குச் செடியோரம் மறைவாக நிற்கிறான். சொந்தத் தங்கச்சியை அந்நியனுடன் சந்திக்க விட்டு பார்த்துக் கொண்டிருக்கிறானென்றால் அதற்கு எத்தனை மன உறுதி வேண்டும்! கமலாவுக்கு அவனைப்பார்க்கிறபோது பாவமாகவிருந்தது தன் ஒருத்தியின் ஆசாபாசங்கட்காக அது தன்னுடைய சௌகரியங்களையும் இன்பங்களையும் துறந்துவிட்டு ஊராரிடத்திலும் அப்பாவினடத்திலும் எத்தனை வெறுப்பை சம்பாதித்துக் கொண்டு விட்டது. தன் உயிரையே வெறுத்துக் கொண்டு விட்டுத்தானே அது இங்கே வந்து கொண்டிருக்கிறது கமலாவுக்கு புல்லரிக்கிறது. அவள் சிந்தனைகளை போக்கடிக்கிற விதத்தில், “கமலா” என்கிறான் சாம்பசிவம்.

“ம்”

“என்னால வூட்டவுட்டுக் கெளம்பி வர்றோமுன்னு ஒனங்கு சங்கட்டம் ஒண்ணுமுல்லியே”

“இப்புடி பித்துக்குளித்தனமா கேள்வி கேக்கறப் பத்தான் எனக்கு சங்கட்டமாருக்கு மச்சா.”

“பின்ன இருக்காத?”

“இருக்கும்தான் அதுக்காவ மனசுல ஒன்னு முடிவெடுத்து புட்டா மாத்திக்க முடியுமா?”

“கமலா....

“மச்சா... என்னால இந்த ஊருப்பயலுங்ககிட்ட எத்தன தொல்லப்படடுப் போயிட்டீங்க... கறிச்சோறன்னிக்கி நல்ல அடிச்சி புட்டாங்களாமே?”

“உயிர வாங்காதது தான் பாக்கி மித்தத செஞ்சிட்டாங்க... இன்னுங்கூட தோள்பட்டையில வலியிருக்கு கமலா”

தூரத்தில் ஏதோ சப்தம் கேட்கிற மாதிரியிருக்கிறது. பேச்சை நிறுத்திவிட்டு உற்று உணர்கிறார்கள். ஒன்றும் தெரியவில்லை. இருவருக்குமே வேர்க்கிறது. யாரும் பார்த்துவிடக் கூடமெனறு வாய்க்காலின் மறைவோரமாக குந்துகிறார்கள். அதோ தங்கவேலுகூட இன்னும் மறைவோரம் நின்று கொண்டிருக்கிறது தெரிகிறது. அவனும்கூட எங்கிருந்தோ கேட்ட சப்தத்தைக் கேட்டு சுற்றுமுற்றும் பார்க்கிறான்போல தெரிகிறது. கோபால் குச்சிராயர் வீட்டுப்பக்கமிருந்து வந்த குரலும்கூட விட்டு விட்டுக் கேட்கிது.

மரணபயம் என்கிறார்களே அது இப்போதுதான் அவர்களுக்கு வந்தது போலிருக்கிறது. ஒன்றும் பேசத் தோன்றவில்லை. தூரத்தில் கேட்டசப்தம் வரவர பெரிதாகிக் கொண்டே வருகிற மாதிரியிருக்கிறது.

“கமலா, பொளுதடஞ்சிருச்சி... இன்னம ஆரும் பாக்கத் தோது இல்ல சட்டுனு கௌம்பு போயிருவம்... ஒண்ணனும் நம்ப போறத்தக்கண்டு பின்னால வந்துடுவாரு”

இப்போது தங்கவேலு நின்று கொண்டிருந்த பக்கமாய் சற்றுமுன் கேட்டகுரல் வலுத்து சீறுகிறது. இருவரும் புறப்படுவதை விட்டு அங்கே பார்த்தபோதுதான் -

மாயாண்டிக் கொத்தப்பிரியன் வீச்சருவாளைத் தூக்கிக் கொண்டு தங்கவேலை நோக்கி வேகமாய் ஓடி வருகிறான். அவனுக்கும் பின்னால் இன்னும் ரெண்டு மூன்று பேர்கள்கூட வெறியோடு ஓடிவருகிறார்கள்.

'அண்ணன் இங்கே வந்தது எப்படி அவர்களுக்குத் தெரிந்திருக்கும்?'

கமலா இங்கிருந்தபடியே ரொம்ப பதஸ்ட்டத்தோடு, "யண்ணா... மாயாண்ப்பய ஒன்ன அருவாள தூக்கிகிட்டு வெட்ட வர்றாண்ண... ஓடிரு... யண்ணே ஓடிருண்ணே...." அவள் சொல்லி முடிக்கவில்லை.

தங்கவேலு, "எலே மாயாண்டி ஓடிவராதடா... நாயக்கன் பேச்சக்கேட்டு எதுவும் பண்ணிபுடாதடா... ஒனக்குத்தாண்டா பின்னால ஆவத்து... என்ன ஒண்ணும் செஞ்சிபுடாதடா எலே மாயாண்டி... எலே... மாயாண்டி ...மாயா... யே யம்மாவ்...

தங்கவேலுவின் குரல் சட்டென்று அடங்கிப்போன மாயம் மாயாண்டியின் வீச்சருவாளுக்கு தங்கவேலுவின் கழுத்து தீனியானதனால்தான்!

கமலா சாம்பசிவம் கண்ணெதிரே வெட்டுபட்டு விழுந்தது தங்கவேலுவின் தலையேதான்! அந்த மங்கிய ஒளியிலும் கூட சீறிக்கொண்டு வந்தரத்தத்தை அவர்கள் இருவருமே பார்த்தார்கள்.

இளைய முனீஸ்பரனுக்கும் எதிரே வெட்டுப்பட்ட ஆட்டைப்போல் தங்கவேலு! தலை தனியாய் முண்டம் துடிக்கிறது.

கமலாவுக்கு எங்கிருந்துதான் வந்ததோ ஆங்காரம் கொண்டு வந்த பையை கீழே போட்டுவிட்டு "ஐயோ... ஐயோ... ஐயோ...

ஐயோ... ஐயோ.. ஐயோ... ஐயோ... ஐயோ... தலையில் அடித்துக்கொண்டு ஓடுகிறாள்.

மாயாண்டிக் கொத்தப்பிரியனும் அவனுடன் வந்த மற்றவர்களும் வெட்டிய அருவாளுடன் தலை தெறிக்க ஓடுகிறார்கள் -

“யண்ணே... ஏ யண்ணே... என்னால ஒன்ன வெட்டி புட்டானுவளே யண்ணே... ஓ வாள்க்கைய நாசமாக்கிப் புட்டானுவளே யண்ணே ஐயோ ஐயோ... ஐயோ...”

“ஏ ஆசைக்காவ நீ பாத்த, ஓ ஆசையில மண்ணள்ளித் தூவிப் புட்டானுவளே யண்ணே... இன்னம நா ஆரவந்து அண்ணன்னு கூப்டுவன... எலே... ஒங்களுக்கு ஏ அண்ணன் உசுரோட சாதி யாடா முக்கியமாப் போச்சி அப்புடி சர்தியில என்னாத்தடா கண்டீங்க?... ஏங் கதைக்காவ ஒங்கதைய முடிச்சிபுட்டானுவளே யண்ணே... பாவிங்களா நீங்க நல்லாருப்பீங்களாடா... எலே நீங்க நல்லாருப்பீங்களாடா...?”

அவளின் அவலக்குரல் அந்தப் பகுதியையே கிடுகிடுக்க வைக்கிறது.

சாம்பசிவம் இதுநாள்வரை தனக்கு ஏற்படாத ஒரு வெறியுடன் வெட்டுப்பட்ட உடலையோ கமலாவையோ பார்க்காமல் மாயாண்டிக்கொத்தப்பிரியனையும் மற்றவர்களையும் பிடிப்பதற்காக ஓடிக் கொண்டேயிருக்கிறான் - அவர்கள் இவன் கையில் அகப்பட்டால் -

தங்கவேலுவின் முண்டம் அடங்கி ஓய்ந்து மரக் கட்டை போல் ஆய்விட்டது. வானத்தில் நிலவும் நட்சத்திரமும் துலக்கமாய் பூத்துவிட்டன.

“மச்சா... நீங்க ஓடாதீங்க மச்சா அந்தப்பாவி கையில அருவா வச்சிருக்கான் ஒங்களையும் வெட்டிப்புடுவான் ஓடாதீங்க மச்சா...” அவனைத் துரத்தி அவள் ஓடுகிறாள்... அவள்

கூப்பிட்டதோ அல்லது அவள் சொன்னதோ அவன் காதுகளுக்கு கேட்டால் தானே-

இருட்டில் ஏதோ தடுக்கி கீழே விழுகிறாள் மயக்கம் வருகிற மாதிரி கிறுகிறுக்கிறது. பிரக்ஞையிழக்கிற மாதிரியும் இருக்கிறது. எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு கத்துகிறவள் மீண்டும் வெறியுடன் வெட்டுப்பட்ட உடல் அருகே வருகிறாள்.

ஊரில் பாதிபேருக்கு மேல் இப்போது அங்கே கூடிக் கிடக்கிறார்கள். இன்னமும் கூட ஓடி வருபவர்களும் உண்டு.

"ஏ... நாயக்கரே... ஓம் பேச்சக்கேட்டுத்தான அந்த மாயாண்டிப் பயல் எங்க அண்ணன வெட்டுனான். இப்ப ஒங்கையால என்னையும் வெட்டுடா ஒங்களுக்கு சாதியும் சாதியால ஊரோட கெவுரதயும்தான் முக்கியம்ன்னா ஓங் கையால என்னையும் வெட்டுடா.. ஏ அண்ணனே போயித்தப்ப இன்னம எனக்கு இந்த உசுரு வாணாம் சட்டுனு வெட்டுடா".

"சும்மா நிறுத்துடி பசப்புக்காரி. அளந்தெடுத்தா மூணுசான் முளுசா இல்ல ஒன்னால இந்த ஊரோட கெவுரத போவ நாங்க வுட்றுவமா...? அண்ணங்காரனையும் அறுத்துக்கட்டிப்பயலையும் எங்க ஒளிச்சி வச்சிருந்த?... அவனுங்கள அந்தப்பக்கமா ஒளிச்சி வச்சிபுட்டு இந்தப் பக்கமா நீ ஓடிப்போவலாம்னு பாத்தியாடி செறுக்கி மொவள... இத நடக்க வுட்றுவமா... பொட்டக்களுதக்கி இம்புட்டு துமுருருந்தா எங்களுக்கு எம்புட்டுருக்கும்?... ஒண்ணனால நடக்கருந்த கல்யாணம் நின்னுப்போச்சி... இன்னொரு வாகரக்காரன் எங்கமூக்க நல்லா ஒடச்சிபுட்டு போயித்தான்... இது நடக்கணுமா? தருமையா நாட்டான் நெததம் நெத்தம் என்னவருமோ ஏது வருமோன்னு நாண்டு நாண்டு செத்துகிட்டிருக்கான்... இஞ்ச என்ன டான்னா நீ அறுத்துக்கட்டிப் பயலோட ஓடிப்போவப் பாத்த... எட்டியே... ஒண்ணனும் வந்தாரு குடிப்பயலும் இந்த ஊருக்குள்ள காலெடுத்து வச்சப்பயே... பாத்துருந்த ஆளு ஏங்கிட்ட வந்து சொல்லிருச்சிடி... அதுக்கப்பறமாத் தான் மாயாண்டிக் கொத்தப்பிரியனும் மத்தவனும் இஞ்ச அருவாள தூக்கிகிட்டு ஓடி வந்தான்... அறுத்துக்கட்டி

கள்ளங்கூட ஓடத்துணுஞ்சியே நீ சரியான வாகர கள்ளச்சியாடி...? த்தூ... நாயே... ந்தபாருடி... வாகரயோட கெவுரதைக்காவ இப்ப ஒரு கொல நடந்துருக்கு... அதுக்கு பங்கம் வந்தா ஓம்போது கொலக்கூட நடக்கும் ஆர்ரா அங்க; இவன குளிதோண்டி பொதைங்கடா... மித்தத நா பாத்துக்கறன். எலே நீலமேவம், நீ இவள இளுத்துகிட்டு வாடா பூன கண்ண மூடிகிட்டா ஒலகம் இருட்டாப் போயிருச்சின்னா நெனக்சிக்குமாம்... அந்த மாறில்லருக்கு கதை. அறுத்துப்டுவன் அறுத்து. இளுத்தாங்கடா இவள..." நாயக்கர் சொல்லிவிட்டு வெரசாய் கிளம்புகிறார்.

கமலாவின் கண்கள் அப்பாவையும் அம்மாவையும் தேடுகிறது. அவர்களுக்கு இங்கே நடந்துவிட்ட கொலை தெரியாதா?

தெருவில் கூட்டமாய் அவர்கள் போகிறபோது நாரசமாய் அந்த சேதிவந்து அவர்களைத் தாக்குகிறது-

"கோபாலுகுச்சிராயருமவ நீலா புள்ள பெத்து புட்டா... ஆம்பளப்புள்ள... ப்பத்தான்".

கல்லாய் நிற்கிறார் நாயக்கர். நாட்டாருக்கும் மற்றவர்களுக் கும்கூட அந்த கதிதான். இழுத்துக்கொண்டு வருகிற கமலாவின் செருமல் சப்தம் பெரும் சோகத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

"என்ன கூத்து மச்சா இது?" - நாட்டார்.

"ஊரு மானத்துக்காவ ஒருகொல பண்ணிபுட்டு வந்த கையோட இப்புடி ஒரு அக்குருமமா?" நாயக்கர்.

"என்ன கேடோ தெரியலியே.. ஊருக்குள்ள ஒரு உசுரு போன கையோட இன்னொன்று மொளச்சிருக்கு".

"ஏ மச்சா, புருஷன் இல்லாதவ புள்பெத்துருக்கா அடுத்த வூருக்காரன் பரியாசம் பண்ணமாட்டான்?"

"யாம் பண்ணமாட்டான்... இந்தப் புள்ளயால ஏற்படருந்த கறைய அண்ணங்காரன கொன்னு போக்கடிச்சம்... இந்தக் கறைய எப்புடி களுவறதுன்னு தெரியலையே மச்சா?"

"கோபாலுகுச்சிராயனையோ புள்ளப்பெத்தவளையோ கொன்னாக்கூட தீர்ற கதையில்ல இது ரோசிச்சி சொல்லுங்க."

"என்னத்த ரோசிக்கருக்கு குட்டிசுவத்துல மோதிகிட்டு செத்தாக்கூட ஊருகற போவாது வாகரக்கி இப்புடி ஒரு சோதன வரக்கூடாது மச்சோ."

"அந்தாலப்பாருங்க மேற்கால என்னமோ சத்தம்!"

"என்னுன்ன பாருங்க மச்சா"

"முத்துக்கண்ணுவிசுவராயரு கத்தியும் கையுமா கடுசா வந்துகிட்டிருக்காரு."

"அவுருக்கென்னாய்யா வதுலு சொல்றது?"

"அவர் வர்ற கடுசப்பாத்தா நம்பகிட்ட வதுலு கேக்க வர்றதா தெரியல... ரெண்டு பேரையும் தீத்துக் கட்டத்தான் வர்றமாறிருக்கு".

"எதுக்காவத் தீப்பாரு... அவருக்கு மட்டும் சாதி முக்கியமுல்லியா?... ஊரோட கெவுரத முக்கியமுல்லியா... அப்புடி என்னாய்யா மவன உசுரு பெருசாப்போச்சி?"

"நம்ப ரெண்டுபேரும் பேசிகிட்டிருக்க பேச்சப் போயி அவுருகிட்ட சொன்னா எடுபடுமா...? நம்பள காத்துக் கணுமுன்னா எங்காச்சும் ஓடுங்கமச்சா... அந்தால விசுவராயரு கிட்டக்க வந்துட்டாரு"

“ஒரேடியா குசுவுட்டு பயமுருத்தாத... அப்புடி என்னா விசுவராயன் கொம்பன்... அவங்கிட்ட மல்லுக்கு நிக்க முடியாது? ...இம்புட்டு ஆளும் எதுக்குருக்கான் தீத்து கட்டுன்னா தீக்குறான்”

“கத்தியும் கையுமா வந்துகிட்டிருக்க மனுஷங்கிட்டப் போயி மல்லுக்கு நிக்கிறதா?... போக்கத்தப்பேச்சு பேசாதீங்க மச்சா இந்த சமயத்துலப்போயி அவருகிட்ட சாதியப்பத்தியோ சாதிக்குள்ள சாதிபத்தியோ ஊரோ கெவுரதயப்பத்தியோ யெல்லாம் வாவச்சி பேசமுடியுமா? சட்டுனு வாங்க மச்சா எங்காச்சும் ஓடுவம்”

“வாகரயோட கெவுரத?”

“சும்மா பேசாதீங்க... வாகரயோட கெவுரத இந்த ஊருக்குள்ள வயசுவந்தப்பொண்ணு வந்தாரு குடிப்பயலோட பளக்கம் வச்சிகிட்டப்பயும் புருஷனில்லாதவ புள்ள பெத்துகிட்டப் பயுமே காத்தோடப் போயிருச்சி... இன்னும் என்னா கெவுரத... வாகர வாங்க மச்சா சட்டுனு”

“நாட்டார... ப்ப இந்தச் செறுக்கிய என்னாப் பண்றது?”

“நடுத்தெருவுல வுட்டுபுட்டு ஓடுங்க.”

சீறிக்கொண்டு வருகிற விசுவராயரிடம் கமலா சொல்கிறாள் “யப்போவ்... யப்போவ் நம்ப அண்ணன வெட்டி புட்டுட்டானுவ யப்போவ்... கொடமுருட்டி வாய்க்காப்பக்கம் நம்ப அண்ணன் வெட்டிப்போட்ட முண்டம் கெடக்குப்போவ்...”

“ஆயி... ஏ ஆயி... ஏம் புள்ளிய வெட்னவன சும்மா வுடமாட்டாயி. ஒன்ன நடுத்தெருவுல நிறுத்துனவன நா சும்மா வுடமாட்டாயி.... எலே நின்னுங்கடா... ஓடாம நின்னுங்கடா... நல்ல சாதிக்கள்ளனாருந்தா எயித்து நின்னுங்கடா...”

முத்துக் கண்ணாவிசுவரராயர் அவர்களைப்பின் தொடர்ந்து ஓடுகிறார். எதற்கும் துணிந்துதான் -

கமலா பதஸ்டத்தோடும் பீதியோடுமாய் தெருவில் நிற்கிறாள் நிலாவின் பட்டப்பகல வெளிச்சம் துலக்கமாய்.

பூரணிக்கு இப்போதுதான் விஷயம் தெரிந்தது போல,அலறி அடித்துக்கொண்டு தலைவிரிகோலமாய் ஓடி வருகிறாள். "ஏ... ராஜா... ஏந்த தங்கமவனே ...ஏஞ் செல்ல மவனே... என்னவுட்டு போயித்தியா... டா... ஏ... ராஜா.. ஆயி ஏ ஆயி... ஓங்கத இப்டியாயி ஆவணும்.. அப்பாவு கூப்டாயி... ஓடாதீங்கன்னு சொல்லாயி... அண்ணன் வெட்னமாறி அவரையும் வெட்டிப்புடுவானுவ கூப்டாயி ஏ ஆயி... அப்பாவ கூப்டாயி... ஒண்ணன எங்காயி வெட்டி போட்றுக்கானுவோ...?"

தெருவில் ஒரே களேபரம்!

குழந்தைகள் பீதியால் விளையாட்டை மறந்து நிற்கின்றன.

ஆடு மாடுகள் மிரட்சியால் கட்டுத் தறிகளை அறுத்துக் கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடுகின்றன.

பயத்தால் பெண்கள் குலை நடுங்கலுடன்.

கதவைச் சாத்திக்கொண்டு வீட்டுக்குள் நுடங்கியிருப்பவர் களும் உண்டு.

ஓரிடத்தில் மனிதக்குவியல்.

எல்லாருக்கும் மரணபயம்!

எல்லார் முகங்களிலுமே ரத்தவெறி...

தடிக்கம்பும் அருவாளும் பறக்கிறது...

கத்தியும் கற்களும் சீறிப்பாய்கின்றன.

'புடிங்கடா அவன... வுடாதீங்கடா அவன... வெட்டுங்கடா அவன' குரல்கள் - கோரக்குரல்கள் வெறியோடு கூடிய குரல்கள் அழுகைக் குரல்கள் கெஞ்சல் குரல்கள் எல்லாமும் கலந்த குரல்கள் -

நிலவின் அற்புதமான ஒளி சிந்தும் குளுமையும் இளம் தென்றல் காற்றின் இனிமையும் தவழும் ரம்மியமான நேரத்தில் சூழ்ந்த அமைதியையும் ரிதத்தையும் அனுபவிக்க வேண்டிய அந்தக் கிராமம் ரத்தப்போருக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டது.

சீறிப்பாயும் வேங்கைகளின் வெறியினும கடுமையான சாதி வெறி கொண்டலையும் இந்த மனிதர்களின் மத்தியில் அமைதியும் அன்பும் கருணையும் எப்போது திரும்பும்?

ஊர்க்கோடியில் தெரியும் காத்தாயி அம்மன் கோயிலுக்கும் பக்கத்தில் அரைத்தென்னைமர உசரத்துக்கு விரைத்த கண்களும், வெளித்தெரியும் சிங்கப்பற்களும் ஒரு கையல் அருவாளும் மற்றொரு கையில் கேடயமும் காலுக்கடியில் மனிதத்தலையை அறுத்து மிதித்தபடி தீப்பிழம்பாய் ஊர்க்காவல் காட்கும் அந்த கவுச்சிசாமி இளைய முனீஸ்பர தேவதைக்கு அறுபட்ட ஆட்டுத்தலைகள் போதாதென்று மனிதத்தலை காவு கேட்கிறதா!-?

அதுதான் விதியென்றால் மனிதன் ஆட்டுக்கறிச் சோறை மறந்து விட்டு மனுஷக் கறிச்சோறல்லவா கேட்பான்?

இப்படித்தான் விதி நேருமென்றால் அது இந்த தேவதைக்கும் பொறுக்குமோ?

எக்குத்தப்பாய் அகப்பட்டுக் கொண்ட நாயக்கரின் மீது தனக்கிருந்த பலத்தையும் வெறியையும் ஒன்றாய் திரட்டிக்கொண்டு மீசை புடைத்தெழும் கத்தியுடன் பாய்கிறார் முத்துக்கண்ணு விசுவராயர்.

பூரணி வெட்டுப்பட்டுக்கிடக்கும் மகனைப்பார்க்க வெறி கொண்டோடுகிறாள் குடமுருட்டி வாய்க்கால்பக்கம்.

கமலா இத்தனை களேபரங்களின் இடையிலும் மாயாண்டிக் கொத்தப்பிரியனையும் மற்றவர்களையும் துரத்திக் கொண்டோடிய சாம்பசிவம் வருகிறானா என்று தான் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

# மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY



Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to YOU!

மின்நூல் ஆக்கம் : தமிழ் நேசன்